எம்மா

கழக வெளியீடு

எம்மா

கழக வெளியீடு: கஉஎக

எம்மா

(EMMA)

★

மூலம்:

ஜேன் ஆஸ்டின்

சுருக்கத் தமிழாக்கம்:

கு பரமசிவன், எம் ஏ

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி - 6 சென்னை - 1
1966

குமாரசாமி பிள்ளை பரமசிவன் (1933)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 Nov. 1966

O111,3LAU,E
31N66

O111,3L75,E
31K6

TAMIL NADU ARCHIVES
EGMORE, MADRAS-600 008
111581

Jane Austin's
EMMA

Appar Achakam, Madras-1

பதிப்புரை

மேனாட்டு இலக்கியங்களுள் தரமான படைப்புக்கள் பல உண்டு. அவற்றுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துத் தமிழ் மொழியில் வடித்துத் தந்து தமிழ் மக்கள் அவற்றைக் கற்றுப் பயன்பெறுமாறு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தின்பாற்பட்ட முயற்சியில் இந்நூலும் ஒன்று. ஆங்கிலந் தெரிந்தவர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வந்த அந்நூல்களை அம்மொழியறியாத தமிழ் மக்களும் அறிந்து பயனடைய வேண்டுமென்பதே எங்கள் நோக்கமாகும்.

'எம்மா' என்னும் இந்நூல் ஜேன் ஆஸ்டின் என்ற ஆங்கிலப் பெண்மணியால் இயற்றப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் அவர். மதகுருவின் மகளாகத் தோன்றிய அம்மையார் பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர். அதனால், குடும்பச் சூழலை மையமாகக் கொண்டு கதை எழுதுவதில் தலைசிறந்து விளங்கினார். அவருடைய படைப்புக்கள் அனைத்தும் வாழ்க்கையில் அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவையே. அதன் பொருட்டே படித்தவர் அனைவரும் அவர் நூல்களைப் பெரிதும் விரும்புகின்றனர். அவர் தம் வாழ்க்கையில் அனுபவித்து வந்த உணர்ச்சிகளையே கதையாக வடித்துள்ளார். அவருடைய வாழ்க்கையையறிந்து கொள்ள அவர் தம் படைப்புக்களே பெரிதும் துணை செய்கின்றன.

'எம்மா' செல்வமிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஒரு பெண். அன்பாலும் பண்பாலும் அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்தவள். தன்னுடைய செல்வத்தையும் செல்வாக்கினையும் துணையாகக் கொண்டே தான் நினைப்பவைகளை யெல்லாம் முடித்து விடலாம் என்று எண்ணுகிறாள் எம்மா. இருப்பினும் உள்ளத்தின் உறுதியைக் குலையவிடாது காத்துத் தனக்கென ஒரு வழியை வகுத்துக் கொள்கிறாள் அவள்.

படிப்பதற்குச் சுவையான கதையமைப்பைக் கொண்டது இந்நூல். மூலநூலில் உள்ள சுவை சிறிதும் குறையாத வகையில் மொழி பெயர்த்துத் தந்தவர் திரு கு. பரமசிவம், எம். ஏ., அவர்களுக்குக் கழகத்தின் நன்றி உரித்தாகுக.

இதுவரை இந்த வரிசையில் நாற்பதுக்கு மேற்பட்ட நூல்கள் தமிழாக்கித் தரப்பட்டுள்ளன. அவற்றை யெல்லாம் வாங்கி இவ்வகையிற் எங்களை ஊக்குவித்துவரும் பெருமக்கள் இதனையும் ஏற்றுப் போற்றுவார்களென உறுதியாக நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

"கூர்த்த மதியும் ஆன்ற மனமும் கொண்டு பரிவுணர்ச்சியும் வஞ்சப்புகழ்ச்சியும் இணைந்து வர இளம் உள்ளங்களின் உணர்வுகளை நுணுக்கமாக விளக்கி வரைந்த ஜேன்" எனத் திறனாய்வாளர்கள் போற்றிக் கூறுமளவு அழகாகவும் சுவையாகவும் எழுதும் ஆற்றல் பெற்று விளங்கியவர் ஜேன் ஆஸ்டின்.

இவர் திறனாய்வாளர்களில் பெரும்புகழ் பெற்றுச் சிறப்புற்ற சுவையாளர் என்றும் பாராட்டப் பெற்றவர். ஆங்கில இலக்கிய உலகுக்கு ஆறு புதினங்களை அளித்தவர். 'தற்பெருமையும் தப்பெண்ணமும்' என்ற அவரது நூலை அறியாதார் இலக்கிய உலகில் இருத்தல் இயலாது. அவர்தம் நூல்களில் ஒன்றுதான் 'எம்மா'

பிறரைப் பற்றித் தவறாக மதிப்பீடு செய்து அம் மதிப்பீடுதான் உண்மையானது எனக் கருதும் எம்மாவை நினைக்கும்போது நெஞ்சம் அவளுக்காக இரங்குகிறது. திருமணத்தை வேட்காதவளாய்ப் பிறர்க்கு எளிதில் 'முடிச்சுப் போடுபவளாய்' விளங்கும் எம்மா, தன்னையறியாமலே நைட்லியைக் காதலிப்பதை அறியும்போது இன்பம் பிறக்கிறது. பிறர் மனங்களையும் துருவிக் காணும் ஆற்றலுடன் திகழ்வதாகத் தன்னைப்பற்றி எண்ணித் தன் தோழியை மணக்க விடாமல் தடுக்கும் எம்மாவை உன்னும்போது உள்ளம் நடுங்குகிறது. இறுதியில் எம்மா தடுத்தவரையே ஹேரியட் மணப்பதை அறிந்து அகம் மகிழ்கிறது. மெல்லமெல்லத் தன்குறைகள் உணர்ந்து, அவற்றைத்

திருத்தி எம்மா உயர்வதைக் கண்டு உவகை ஊற்றெடுக்கிறது, இலக்கிய உலகமும் இன்பியல் புதினம் ஒன்றைப் பெறுகிறது.

அவ்விலக்கியத்தை அருந்தமிழில் ஆக்கி அளித்திருக்கும் ஆசிரியர் திரு. கு. பரமசிவன் எம். ஏ. மொழி பெயர்ப்புத் துறைக்குப் புதியவர் அல்லர்; மொழிபெயர்ப்பும் அவருக்குப் புதியது அன்று. சுருக்கத் தமிழாக்கம் என்றாலும் முதன்னூலை முடிந்தவரை படிப்பவர்க்கு உணர்த்த வேண்டுமென்னும் துடிப்பு ஆசிரியர்க்கு மிகுதியாக இருக்கிறது என்பதை நூல் நுவல்கின்றது. பொருள் பொதிந்த வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ள ஆசிரியர், வழக்கிலில்லா இலக்கியச் சொற்களையும் சுவை படக் கையாண்டுள்ளமை குறிப்பிடப்பட வேண்டியவற்றுள் ஒன்று.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த நூலிற்கு, என்பால் கொண்ட அன்பால், என்னை முன்னுரை வரையப் பணித்த பேராசிரியர்க்கு எனது நன்றி.

பேராசிரியர் போன்றாரைப் பயன்படுத்தி, அன்னார்க்கு உற்றுழி உதவி உறுபொருள் கொடுத்து ஊக்குவித்து உயர்ந்த நூற்களை வெளியிடும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பாராட்டற்குரியது. வளர்க அதன் தமிழ்த்தொண்டு.

மதுரை - 2
21—11—1966

கோ. நடராசன் எம். ஏ.
[மொழி பெயர்ப்பாசிரியரின் மாணவர்.]

உள்ளுறை

			பக்கம்
1.	மணமும் மாறுதலும்		1
2.	குடும்பச் செய்திகள்		8
3.	புதிய தோழி		12
4.	திட்டம் பிறந்தது!	....	17
5.	நண்பர்கள் கருத்து	...	25
6.	ஓவியக் காதல்	....	29
7.	கடிதமும் கலக்கமும்	....	35
8.	அத்தானின் சீற்றம்	...	41
9.	விடுகவித் தலைவர்	....	48
10.	வாயாத வாய்ப்பு	...	54
11.	குடும்ப விருந்து	....	60
12.	"தவறான கருத்து"	...	65
13.	இருவர் துடிப்பு	...	72
14.	காதலி எவள்?	....	76
15.	சோர்வும் கவலையும்	...	83
16.	நோயும் மருந்தும்	....	87
17.	நிறைவுடை இளம்பெண்	...	90
18.	அதிர்ச்சியைத் தாங்குதல்	...	93
19.	தடுமாற்றங்கள்	....	106
20.	வாராதவன் வந்தான்!	....	110
21.	இரண்டாம் சந்திப்பு	....	116
22.	ஐயங்கள் முளைத்தன!	...	121

		பக்கம்
23.	மகிழ்வித்த பண்	... 131
24.	"நல்லூழ் இல்லாதவள்"	... 138
25.	பாதிரியின் மனைவி	... 144
26.	ஓர் ஐயந் தெளிதல்	 150
27.	அஞ்சற் சிறப்பு	... 154
28.	நடன விருந்து	... 161
29.	அழகும் ஆண்மையும்	... 169
30.	தொடர்பு யாது?	... 173
31.	பழத் தோட்டம்	 179
32.	மலைப் பயணம்	... 185
33.	உதவியும் மறுப்பும்	 192
34.	உண்மை வெளிப்படல்	... 200
35.	தன்னை யுணர்ந்தாள்!	 206
36.	தவிப்பு	... 215
37.	பொன்னான அரைமணி	... 220
38.	மாற்றுத் திட்டம்	... 228
39.	செய்தி பரவுதல்	... 235
40.	திருமணங்கள்	... 239



1. மணமும் மாறுதலும்

அழகும் அறிவும் செல்வமும் வாய்ப்பான மனையும் மகிழ்வான மனப்பாங்கும் உடைய எம்மா, வுட்ஹவுஸ் வாழ்வின் வளமெல்லாம் ஒருங்கே பெற்றவளாய்த் தோன்றினாள். இவ்வுலகில் ஏறத்தாழ இருபத்தோராண்டுகள் வாழ்ந்து விட்டாள். அவளுடைய தந்தையான ஹென்றி ஒரு செல்வந்தர்.

எம்மா அவருடைய இரு பெண்களுள் இளையவள். தமக்கை இசபெல்லாவின் திருமணத்துக்குப் பிறகு பல காலமாக வீட்டுத் தலைவியாய் விளங்கியவள். அவளுடைய தாய், நெடுங்காலத்துக்கு முன்பே இறந்து போயினாள்.

தாயன்பிற்குப் பெரிதும் இணையான அன்புடன் வளர்த்தவள் தாதியாய் வாய்த்த ஓர் இளம்பெண்ணான அன்னா டெய்லர். அவள் எம்மாவுக்கு அன்புத்தாதியாக அமைந்ததோடு அறிவு புகட்டும் ஆசிரியையாகவும் விளங்கினாள். அவள் எம்மாவுடன் அவ்வீட்டிலேயே வாழ்ந்து வந்தாள். அவள் தாதியாக விளங்கியதைவிடத் தோழியாகவே அதிகமாகப்

பழகினுள். எம்மா பெரியவளாகி விட்டதால் அன்று தான் திருமணஞ் செய்து கொண்டு வாழ எண்ணித் திரு வெஸ்டான் என்பவரை மணந்து கொண்டாள். அன்று அன்னுவின் மணநாள். அவளைப் பிரிய நேரிட்டதே எம்மாவுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியது. இவ்வன்புத் தோழியின் மணநாளன்று மாலையில் எம்மா துன்ப நினைவினில் மூழ்கினுள். மணச் சடங்கு முடிந்து மணமக்கள் தம்மில்லத்திற்குச் சென்றனர். எம்மாவும் தந்தையும் அன்னுவைப் பிரிந்து தனித்திருந்து உண்ண நேர்ந்தது. தந்தையோ வழக்கம்போல் உண்டபின் உறங்கத் தலைப்பட்டார். எம்மா மட்டுமே அமர்ந்து, தான் இழந்ததனைக் குறித்து எண்ணலானுள்.

மணவினை தோழிக்குப் பல்லாற்ருனும் இன்பமே தருவதாய்த் தோன்றிற்று. மணமகன் வெஸ்டான் பொதுவான இயல்பும், திடீர்ச் செல்வமும், பொருத்தமான பருவமும் இனிய குணமும் உடையவர். தன்னலத்தை மறந்து, தோழமையை மதித்து, எம்மாதான் இவ்விருவரையும் இணைக்க விரும்பி முயன்ருள். எனினும் அன்னுவின் பிரிவு ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு மணி நேரத்திலும் உணரப்படுவதொன்றெனவ அவள் அறிந்தாள்.

இம்மாறுதலை எம்மா எவ்வாறு தாங்குவாள்! அவளுடைய தோழி அரைக்கல் தொலைவிலேயே வாழப் போகிருள் என்பது உண்மையே. ஆயினும் அரைக்கல் தொலைவில் வாழும் வெஸ்டானின் மனைவிக்கும், வீட்டோடேயே யிருந்த அன்னுவுக்கு மிடையேயுள்ள வேறுபாடு மிகப் பெரிதென அவள் உணர்ந்தாள். அவள் தன் தந்தையிடத்துப் பேரன்

புடையவளே. அவர் அவளுக்குத் தக்க பேச்சுத் துணையாகார்—விளையாட்டுப் பேச்சாயினும் சரி; அறிவு நலங்கனியும் சொல்லாடலாயினுஞ் சரி.

அன்றியும் பருவ வேறுபாடு (இத்தனைக்கும் ஹென்றி இளம்பருவத்திலேயே மணந்தவருமல்லர்) அவர்தம் உடலமைப்பாலும் பழக்க வழக்கத்தாலும் மிகுதிப்பட்டுத் தோன்றிற்று. அவர் வாழ்நாளெல்லாம் நோயால் வலுவிழந்தவராயே விளங்கினுர். பருவத்தாலன்றிப் பழக்க வழக்கத்தாலேயே அவர் மிக முதியவரானுர். அவர்தம் அன்புள்ளத்தையும் அமைதியான குணத்தையும் கண்டு பலரும் அவரை விரும்பினர். ஆயினும் அவரது திறமை மட்டுமே எக்காலத்தும் அவர்க்குத் தோழர் பலரைத் தேடித் தந்திராது.

எம்மாவின் தமக்கை திருமணத்துக்குப் பின் லண்டனிலேயே—பதினுறுகல் தொலைவிலேயே—வாழ்ந்தாளாயினும் அன்ருட உறவாடலுக்கு உதவாள்.

ஹார்ட்ஃபீல்டு மாளிகையிலும் சரி, ஹைபரிச் சிற்றூரிலுஞ் சரி, ஹென்றியும் அவர் குடும்பத்தாரும் முதன்மை பெற்றவர்கள். அனைவரும் இவர்களை எதிர்நோக்கியவரே. எம்மாவொடு பழகியவர் பலர்; ஆயினும் அன்னுவின் இடத்தை அரை நாளேனும் நிரப்புதற்குத் தக்கவர் எவருமிலர்.

எம்மா நெடுமூச் செறிந்தாள். தந்தை விழித்துக் கொண்டார். அவரைத் தேற்றுவதற்காகவேனும் மகிழ்ச்சியை வெளிக்காட்ட வேண்டியவளாயினுள், அவள். அவரோ தம் சொந்த மகளின் திருமணத்

தால் விளைந்த பிரிவையே இப்போதும் மறக்க வியலாதவராய் விளங்கினர். அன்னு தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் திருமணத்தால் துன்பத்தைத் தேடிக் கொண்டாள் என நினைக்கலானர் அவர். இத்தகைய நினைவுகளை விலக்குவதற்காக எம்மா தன்னலியன்ற மட்டும் மகிழ்ச்சி பொங்க உரையாடலானள்.

"அளியள், அன்னு! அவள் மறுபடியும் இங்கு வரமாட்டாள் என நினைக்கிறேன். ஏன்தான் வெஸ்டான் அவளை மணக்க நினைத்தாரோ!" என்றார் ஹென்றி.

"நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்ள மாட்டேன், அப்பா! வெஸ்டான் மிகவும் நல்லவர். நல்ல மனைவியைப் பெறுதற்குத் தக்கவர். அன்னு எந்நாளும் நம்முடனேயே வாழ்ந்து என் விந்தையான போக்குகளையெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டுமா! அவளுக்கென்று சொந்த வீட்டினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாவா?"

"அவளுக்குச் சொந்த வீடு! அதனல் அவளுக்கு என்ன பயன்? இவ்வீடு அவளுடைய வீட்டைவிட மும்மடங்கு பெரிது. அன்றியும் உன் போக்கு ஒரு போதும் விந்தையானதன்று."

"அடிக்கடி நாம் அவர்களைப் போய்ப் பார்க்கப் போகிறோம். அவர்களும் நம்மைப் பார்க்க வருவார்கள். திருமணமான அவர்களை நாம் போய் விரைவில் பார்க்க வேண்டும்."

அவர்களுடைய உரையாடல் ஒருவருடைய வரவால் தடைப்பட்டது. வந்தவர் முப்பத்தேழு

ஆண்டினராய ஜார்ஜ் நைட்லி என்பவர். அவர் அக் குடும்பத்தின் பழம்பெரும் நண்பர் மட்டுமல்லர்; இசபெல்லாவின் கணவர்க்குத் தமையனெனும் முறையில் நெருங்கிய உறவினருமாவர். ஹைபரியினின்று ஒருகல் தொலைவில் வாழ்ந்த அவர் அடிக்கடி ஹார்ட்ஃபீல்டுக்கு வருவார். அவரது வருகையால் ஹென்றி சிறிது நேரம் மனவெழுச்சியுடையவராய் இஸபெல்லாவைப்பற்றியும் அவள் குழந்தைகளைப் பற்றியும் உசாவினர். இஃது ஓய்ந்தபின், "அடடா! என் வாழ்த்துதலைத் தெரிவிக்க மறந்தேனே! உங்கள் மகிழ்ச்சி எத்தகையதா யிருக்குமென உணர்ந்ததாலேயே வாழ்த்துரையை விரைந்து வழங்க முற்பட்டிலேன். எல்லாம் நல்லபடி முடிந்ததா? எல்லீரும் எவ்வாறு நடந்து கொண்டீர்கள்! மிகுதியாய் அழுதவர் எவர்?" என்றார் ஜார்ஜ். அன்னு திருமணமாகிப் புக்ககம் சென்றதையே அவர் அவ்வாறு கேட்டார்.

"அளியள் அன்னு! வருத்தத்திற்குரியதுதான்" என்றார் ஹென்றி.

"அளியள் அன்னு என்று சொல்வதைவிட அளியர் ஹென்றி, அளியள் எம்மா என்றுதான் நான் கூறுவேன். எவ்வாருயினும் உங்கள் இருவரை மகிழ்விப்பதிலும் ஒருவரை மகிழ்விப்பது அன்னுவுக்கு எளிதன்றோ?"

எம்மா விளையாட்டாகக் குறுக்கிட்டுப் பேசினள்: "ஆமாம். அதிலும் அந்த இருவருள் ஒருவர் 'பிய்த்துப் பிடுங்குபவரா'யிருக்கையில் மூன்றுமவர் மேல்தாம். அப்படித்தானே நினைக்கிறீர்கள்! அப்பா இல்லையெனில் அப்படித்தான் சொல்லியிருப்பீர்கள்!"

"உண்மைதான். சிலவேளைகளில் நானும் எப்படிப் 'பிய்த்துப் பிடுங்கு'பவனாகி விடுகிறேன்!" என்றார் ஹென்றி.

"ஐயோ அப்பா! நீங்கள் 'பிய்த்துப் பிடுங்குவ'தாகச் சொன்னேன் என்று நினைக்கிறீர்களா! இல்லை. ஜார்ஜ்தாம் உங்களைச் சொல்வாரா! என்னைத்தான் குறித்தேன். அவருக்கு என்னைப்பற்றிக் குறை பேசிக்கொண்டேயிருக்கவேண்டும். எல்லாம் விளையாட்டு. நாங்கள் இப்படித்தான் எப்போதும் ஒருவரைப்பற்றியொருவர் மனத்திற் பட்டதைப் பேசுவோம்."

உள்ளபடியே எம்மாவிடம் குற்றங்குறை காண்பவராய மிகச் சிலருள் ஜார்ஜ் ஒருவர். அவளிடமே அவற்றையெடுத்துரைப்பவர் அவர் ஒருவரே. இந்நிலை எம்மாவுக்குப் பிடிக்காத ஒன்றே. தந்தைக்கும் பிடிக்காதென்பதனை அவள் அறிவாள்.

"இத்தகைய தோழியின் பிரிவை எம்மா பொறுத்துக்கொள்ள இயலாதுதான். ஆயினும் இத்திருமணம் அன்னாவுக்குப் பெரிதும் நன்மை யளிப்பதென அவள் அறிவாள். அன்னாவின் தோழி எவளும் இத்திருமணத்தால் மகிழ்ச்சியடையத்தான் வேண்டும்" என்றார் ஜார்ஜ்.

"எனக்கு இதில் மகிழ்ச்சியில்லை என்று கூறுவேனா? நான்தான் அவ்விருவரையுமே இணைத்தேன். எத்தனையோ பேர் வெஸ்டான் இரண்டாம் முறை மணக்கமாட்டார் என்றார்கள். நான்காண்டுகளுக்கு முன்பே நான் இவ்விருவரையும் இணைப்பதெனக் கருதினேன்."

ஹென்றி குறுக்கிட்டு, "மற்றவர்க்கு நன்மை செய்யக்கூடுமாகில் தன்னைப்பற்றி நினைப்பவளே அல்லள்... ஆயினும் எம்மா! இனியேனும் நீ இணை சேர்ப்பதில் ஈடுபடாதே" என்றார்.

"இன்னும் ஒன்றே ஒன்றுதான். எல்டானுக்காக அளியர் எல்டான்! அவருக்கு ஒரு மனைவியை நான் தேடவேண்டும். அவர் ஓராண்டுக்காலம் இவ்வூரில் பாதிரியாய் வாழ்ந்தும் தனியராய் உள்ளார். இன்று அவர் மணமக்களின் கைகளைப் பிணைத்து வைத்தபோது, தமக்கும் இவ்வாறு செய்வதற்கு எவருமில்லையே என நினைப்பவர் போலத் தோற்றமளித்தார். நான் எல்டானை மதிக்கிறேன். இவ்வொரு வழியிலேயே நான் அவருக்கு உதவுதல் கூடும்."

"எல்டான் அழகிய இளைஞர். நல்லவருமாவார். அவரை மதிக்கிறேன். அவரை ஒரு நாள் நம்முடன் விருந்துண்ண அழைப்பதே நீ அவருக்குச் செலுத்தும் மதிப்பாகும். ஜார்ஜ்கூட அவ்விருந்தில் கலந்து கொள்வார்."

"மகிழ்ச்சியோடு ஏற்பேன். அதுவே சிறந்தது. எம்மா! அவரை விருந்திற்கழை. சிறந்த மீனும் கோழியும் தெரிந்தெடுத்துப் பரிமாறு. ஆயின் மனைவியைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பினை அவர்க்கே விட்டுவிடு. இருபத்தாறு, இருபத்தேழு ஆண்டினனான மனிதன் தன்னைத் தானே பேணிக் கொள்வான். உறுதியாய் நம்பு" என்றார் ஜார்ஜ்.

2. குடும்பச் செய்திகள்

ஹைபரியில் மதிப்பிற்குரிய குடும்பத்துள் ஒன்றில் தோன்றியவர் வெஸ்டான். அவர் நன்கு பயின்றவரே; இளம்பருவத்திலேயே சொத்துரிமை பெற்ற காரணத்தால் தம்முடன் பிறந்தவர்கள் ஈடு பட்ட அடக்கமான துறைகளெதிலும் மனஞ்செலுத்தாதவராய்த் தம் வட்டத்திலெழுப்பப்பட்ட படையிற் சேர்ந்தார்.

கேப்டன் வெஸ்டான் பலராலும் விரும்பப்பட்டார். படை வாழ்வில்தான் அவரும் குமாரி சர்ச்சிலும் அறிமுகமாயினர். யார்க்ஷையரில் ஒரு பெருங்குடியில் பிறந்த அவ்விளம்பெண் அவரைக் காதலித்தது எவருக்கும் வியப்பளிக்கவில்லை—அவளுடைய அண்ணனையும் அண்ணியையும் தவிர.

குமாரி சர்ச்சில் தக்க பருவமெய்தியவளாதலாலும் தன் சொத்துக்களில் - குடும்பச் சொத்துக்களில் அவை மிகச் சிறிய பகுதியேயாயினும் - முழு உரிமை பெற்றவளாதலாலும் அவளுக்கும் கேப்டன் வெஸ்டானுக்கும் திருமணம் நிகழ்ந்தது. பெரிதும் வருந்திய அண்ணன் திருவாளர் சர்ச்சிலும் அண்ணியும் தக்க முறையில் அவளை விலக்கிவைத்தனர். பொருந்தா அத்திருமணம் பெரிதும் இன்பந்தரவில்லை. வெஸ்டானின் மனைவியாக வாய்த்தவள் அண்ணனை எதிர்த்து மணம்புரிந்தாளாயினும், அண்ணனது சீற்றத்துக்கு இரங்கினாள்; முன்னைய குடும்பப் பகட்டினை மறந்திலள். அவர்கள் தம் வருவாய்க்கு மேலேயே செலவழித்தனர். ஆயினும் முன்னைய வாழ்வுக்கு நிகரில்லை என்றெண்ணினாள்

அவள். கணவன்மீது கொண்ட காதல் நீங்கவில்லை எனினும் அவள் வெஸ்டானின் மனைவியாகவும் குமாரி சர்ச்சிலாகவும் ஒரே நேரத்தில் திகழ விரும்பினாள்.

வெஸ்டான்தான் இத் திருமணத்தால் பேரிழப் பெய்தியவர் என்பது நாளடைவில் வெளியாயிற்று. மூன்றாண்டுகளுக்குப் பிறகு மனைவி யிறந்தபோது, வெஸ்டான் முன்னினும் ஏழையாகவும் ஆண் குழந்தையான ஃபிராங்கை வளர்க்க வேண்டியவராகவும் ஆயினர். குழந்தையால் ஓரளவு உடன்பாடு ஏற்பட்டது. திருவாளர் சர்ச்சில் மகப் பேறிலாதவர்; நெருங்கிய உறவினர் எவரது குழந்தையும் இல்லை. ஆதலின் ஃபிராங்கை வளர்க்கும் பொறுப்பினை ஏற்றார்.

வெஸ்டான் படையிலிருந்து விலகித் தொழிலில் ஈடுபட்டார். ஏற்கெனவே அவருடன் பிறந்தவர்கள் தொழில் புரிந்தது நல் வாய்ப்பாயிற்று. ஆதலின் தொழிலிலும் சமூக நிகழ்ச்சிகளிலும் பதினெட்டு இருபது ஆண்டுகளை மகிழ்ச்சியாய்க் கழித்தார் அவர். ஹைபரிக் கருகாமையில் ரண்டால் மாளிகையை விலைக்குப் பெற்றார். அன்றைவையொத்த எளிய பெண்ணேயாயினும் மணப்பதற்கும் தம் தோழமையுள்ளத்துக்குத் தக்கவகையில் சமூக வாழ்க்கை நடத்துவதற்கும் இது தேவையன்றோ? இவ்வாறு அவர் செல்வந் திரட்டியதோடு மாளிகையையும் மனைவியையும் பெற்றார். அவருடைய சொத்துக்களெல்லாம் அவருக்கே யுரியவை. மகன் ஃபிராங்க் சர்ச்சிலின் வளர்ப்புப் பிள்ளையாய் உரிய பருவத்தில்

அன்னாருடைய சொத்துக்களைப் பெறுவான் என்பது தெளிவாயிற்று தம் உதவியை எதிர்பார்ப்பான் எனத் தந்தை நினைத்துமறியார். அவர் ஆண்டிற்கொரு முறை லண்டனில் தம் மகனைக் கண்டு அளவளாவுவார். அவர் தம் மகனைப் பற்றி அன்பாய்ச் சொல்லியவற்றால் ஹைபரிமக்களும் அவனை எண்ணிப் பெருமை கொண்டனர். அவன் தந்தையைப் பார்க்க வருவான் என அடிக்கடி பேசினர். வருகை ஒருபோதும் நிகழ்ந்திலது.

தந்தையின் திருமணத்தையொட்டி அவன் வருவான் என எதிர்பார்த்தனர். அவன் தன் சிற்றன்னைக்குக் கடிதம் எழுதியது இந்நம்பிக்கையை வளர்த்தது. சிலநாள் வரை ஊரெங்கும் அக்கடிதத்தைப் பற்றிய பேச்சே அடிபட்டது.

அக்கடிதம் அன்னாவின் உள்ளத்தே இளைஞன் ஃபிராங்கைப்பற்றி நல்லெண்ணத்தை ஏற்படுத்தியது. அவள் தனக்குக் கிட்டிய நல்வாய்ப்பினை யெண்ணி மகிழ்ந்தாள். நண்பரைப் பிரிய நேர்ந்தது ஒருபுறம் துன்புறுத்தியது. 'எம்மாவின் பண்பு நலன் எளியதா! அவள் மற்றை யெந்தப் பெண்ணிலும் மேலாக நிலைமையைச் சமாளித்துக் கொள்வாளே!' அன்னா பலமணி நேரம் தன்நிலைமையை யெண்ணி நன்றியுணர்வோடு விளங்கினாள். சில கணங்களே வருந்தினாள். அவளுடைய மகிழ்ச்சி முறையானதாகவே எம்மாவுக்குப் பட்டது. தன் தந்தை "அளியள் அன்னா" என ரண்டால் மாளிகையினின்று பிரியும்போதெல்லாம் குறிப்பிட்டதுதான் வியப்பாய்த் தோன்றிற்று. "ஐயோ! அளியள் அன்னா! நம்

மோடு தங்குவதற்கே பெரிதும் மகிழ்ந்திருப்பாள்" என்பார் அவர்.

அன்னா மீண்டும் வந்திலள். அவளுக்காக இரங்குவதும் நின்றிலது. அண்டையயலிலுள்ளார் வாழ்த்துரைகள் ஓய்ந்தன. ஹென்றிக்குப் பெருந்துன்பம் நல்கிய திருமணக் 'கேக்'கூட முழுவதும் தின்று தீர்க்கப்பட்டது. அவரது வயிறு சத்துணவைச் செரிக்காது. தம்மினும் மற்றவர் வேறுபட்டவர் என அவர் ஒருபோதும் கருதியவரல்லர். அவர் திருமணக் 'கேக்'கே வேண்டாம் என்றார். அது பலனற்றுப் போகவே, "கேக்"கைத் தின்பதனைத் தடுக்க முயன்றார். மருத்துவர் பெர்ரியைக் கலந்து பேசினார். அளவோடு தின்றாலொழியப் பலருக்கு ஒவ்வாதது அது என்றார் மருத்துவர். இக்கருத்துரையை வருவோர் போவோரிடத்துத் தெரிவித்த பிறகு கூட அவர்கள் கேக்கைத் தின்றனர். பெர்ரியின் மக்கள் 'கேக்' துண்டுகளோடு எந்நேரமும் காட்சியளிப்பதாய் ஒரு வதந்தி ஊரிற் பரவிற்று. ஹென்றி அதனை ஒருபோதும் நம்பியவரல்லர்.

3. புதிய தோழி

ஹென்றி தமக்கேயுரிய தனி முறையில் தோழமையை நாடினார். தம் நண்பர்கள் போந்து தம்மைக் காணவேண்டுமென்பது அவரது ஆவல். நெடுநேரம் விழித்திருப்பதும் மிகப்பலரோடு உண்டலும் அவரை நடுங்க வைப்பன. ஆதலின் அவரது போக்கினை யுணர்ந்த சிலரேயன்றிப், பலரும் அவரோடு பழகுதல் இயலாததாயிற்று. அவ்வப்போது எம்மாவின் முயற்சியால், 'பொறுக்குமணிகள்' சிலரோடு உண்ணும் வாய்ப்பினை அவர் பெற்றார்.

நெடுங்காலமாகவே அவர்மீது உண்மையான மதிப்புக் கொண்டவர்களாய வெஸ்டானும், அன்னாவும், ஜார்ஜும் அவரைக் காணப் போந்தனர். எல்டான் வேண்டா வெறுப்பாகவே தனியாய் வாழ்ந்தவர்; ஹென்றி மாளிகையின் சிறப்புக்களும் கூட்டமும், அவர்தம் மகளது குறுநகையும், தமது வெறுந்தனிமையினை விலக்கினாற் கிட்டுமெனக் கண்டவர் எல்டான்.

இவர்களைத் தவிர இரண்டாவது குழு ஒன்றும் போந்தது. அவர்களுள் பேட்ஸ் அம்மை, அவள் மகள், காடார்ட் அம்மை ஆகிய பெண்மணிகள் மூவரும் ஹார்ட்ஃபீல்ட் மாளிகையினின்று அழைப்புக் கிட்டினால் ஓடோடி வருபவர்கள். அடிக்கடி அவர்கள் வந்து சென்றதனால், ஹென்றி கூட அவர்களை ஏற்றிவருவதும் திருப்பி விடுவதும் தம் வண்டிக்காரனுக்கோ குதிரைகளுக்கோ தொல்லையாய்க் கருதினாரல்லர். ஆண்டிற் கொரு

முறை நிகழ்ந்திருக்குமேல் அவர் இதனைப் பெருந் துன்பமாய்க் கருதியிருப்பார்.

ஹைபரியில் முன்னாள் பாதிரியொருவரின் மனைவியாய பேட்ஸ் அம்மை தொண்டு கிழவி. கணவனை யிழந்த அவள், மணமாகாத தன் பெண்ணுடன் எளிய வாழ்வு நடத்தினாள். மகள் பெயரும் பேட்ஸ் தான். அவளது இளமைப் பருவம் குறிப்பிடத் தக்க வகையில் எதுவுமின்றிக் கழிந்தது. இப்போது நடுத்தரப் பருவத்தினை அவள் தன் தளர்ந்த தாய்க்குப் பணிவிடை செய்வதிலும் குறைந்த வருவாயை நிறைந்த அளவுக்கு ஈடுகட்டுவதிலும் கழித்தாள். அவள் புன்மைப் பொருள் பற்றிக்கூடப் பன்மை பன்மையாய்ப் பேசுவாள். இவ்வியல்பு எளிய செய்திகளையும் வம்பற்ற வம்பளப்புக்களையும் நாடிய ஹென்றிக்கு மிகவும் ஏற்புடையதாயிற்று.

காடார்ட் அம்மை ஒரு பள்ளித் தலைவி. அப்பள்ளி இளம் பெண்கள் ஏராளமான பொருளைக் கொட்டித் தம் உடல்நலத்தைக் கெடுத்து வீண் பகட்டினைக் கற்றுக் கொள்ளும் புதிய கொள்கைகள், புதிய அமைப்புக்கள் ஆகிய அடிப்படையில் அமைந்ததன்று. உள்ளபடியே பழைமையினூறிய பள்ளி. ஆகவே அப்பள்ளி பெரும் புகழைப் பெற்றது, முற்றும் தக்கதே யாகும்.

இவர்களைத்தாம் தன்னால் அடிக்கடி திரட்ட முடியுமென உணர்ந்தாள் எம்மா. தந்தையை மகிழ்விக்கக் கூடியமையால் இவ்வாற்றலை யெண்ணி மகிழ்ந்தாள். தன்னைப் பொறுத்தவரை, அன்னாவின்

பிரிவிற்குத் தக்கதொரு மாற்று இல்லையெனவுங் கண்டாள்.

ஒருநாட் காலை இத்தகைய தொரு மாலைப் பொழுதினை யெதிர் நோக்கி அவள் இருந்தபோது, காடார்ட் அம்மையிடமிருந்து ஒரு குறிப்பு வந்தது. மிகப் பணிவான முறையில், **ஹேரியட் ஸ்மித்தை** அழைத்து வரக்கூடுமா என வினவியிருந்தாள் இவ்வம்மை. இது வரவேற்கத்தக்கதே. பதினேழாண்டினளாய ஹேரியட்டை எம்மா பார்த்தால் இனங் கண்டு கொள்வாள். ஹேரியட்டின் அழகினால் நெடுங்காலமாகவே அவளோடு தொடர்பு கொள்ளக் கருதினாள். ஆகவே சிறப்பான அழைப்பிதழ் சென்றது. மாளிகைத் தலைவியாய இளம் பெண் மாலைக் காலத்தை யெண்ணி மாழ்கத் தேவையில்லாமற் போயிற்று.

ஹேரியட் ஸ்மித் யாரோ ஒருவரின் மகள். பல்லாண்டுகட்கு முன் யாரோ ஒருவர் அவளைக் காடார்ட்டின் பள்ளியிற் சேர்த்தனர். காசில்லாமல் உழைத்துப் படித்த அவளைப் பற்றிப் பொதுவாகத் தெரிந்தவை மிகச்சில. ஹைபரியிற் கிட்டியவர்களையன்றி வேறெந்த நண்பருமற்றவர்களாகவே அவ்விளம்பெண் தோற்றமளித்தாள்.

மாலைப் போது கழிதற்குள்ளாகவே, எம்மா அவளுருவத்தைப் போலவே அவளது பழக்க வழக்கத்தையுங் கண்டு மகிழ்ந்தாள். அவளது நட்பினை வளர்க்க முடிவு செய்தாள்.

ஹேரியட்டின் உரையாடலில் அறிவுத்திறமேதும் தோன்றி எம்மாவைக் கவர்ந்து விடவில்லை.

ஆயினும் அப்பெண்ணின் பேச்சு மொத்தத்தில் எம்மாவைப் பிணிப்பதாய் விளங்கிற்று. முனைப்பேதுமின்றி, இடமறிந்து தக்க மதிப்புக்காட்டி, மாளிகைக்குத் தன்னை அழைத்ததுபற்றி மிகு நன்றியுரைத்துத், தான் பழகியறிந்தவற்றினும் பன்மடங்கு உயரிய முறையில் திகழ்ந்த ஒவ்வொரு பொருளின் தோற்றத்திலும் மெய்யாகவே கவரப்பட்டவளாய், அவள் பேசினாள். அதுகண்ட எம்மா அவளது நல்லுணர்வினைப் போற்றி அவளை ஊக்குவிக்க முடிவுசெய்தாள். 'ஹேரியட்டின் இளநீலக்கண்களும் எழிற் சிறப்புக்களும் ஹைபரியின் இழிகுடியினர் தொடர்பில் வீணாகலாகுமா? ஏற்கெனவே அவள் பெற்ற தோழமை அவளது தகுதிக்குக் குறைந்த தன்றோ? அவள் அணிமைக் காலத்திற் பிரிந்து விட்ட நண்பர்கள் நல்லவரேயாயினும் அவளுக்குப் பொல்லாங்கு செய்பவரே. அவர்கள்தாம் **மார்ட்டின்** குடியினர்; ஜார்ஜின் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்திருப்பவர்கள். **டான்வெல்** வட்டத்தில் செழிப்பாக வாழ்பவர்கள். ஜார்ஜ் அவர்களை உயர்த்திப் பேசுவார். ஆயினும் அவர்கள் முரடர்களாகவே, நாகரிக மற்றவர்களாகவே இருத்தல் வேண்டும். சிறிதளவு அறிவும் நடையுடையும் பெற்றால் முழுமையுறக்கூடிய ஓரிளம் பெண்ணிற்கு அவர்கள் தக்க நண்பராகார். நான்தான் அவளைக் கண்காணித்து முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். நான்தான் அவளைத் தீய தொடர்புகளினின்று விலக்கி நல்ல கூட்டத்திற்கு அறிமுகப்படுத்த வேண்டும். நான்தான் அவளுடைய கருத்துக்களையும் நடையுடைகளையும் உருவாக்க வேண்டும் - இவ்வாறெண்ணினாள் எம்மா.

ஹேரியட்டின் இளநீலக்கண்களின் அழகிலீடு பட்டும் அவளோடு உரையாடியும், இடையில் மேற்குறித்த திட்டங்களை உருவாக்கியும் வந்த எம்மா நேரம் விரைவாய்க் கழிந்ததனை உணர்ந்தாள். உணவு பரிமாறப்பட்டது. விருந்தினரது தயக்கம் மறையும் வகையில் வற்புறுத்திக் கோழித்துண்டங்களையும் பிறவற்றையும் உண்பித்தாள்.

இத்தகைய வேளைகளில் ஹென்றியின் உள்ளத்தே பெரும் போராட்டம் நிகழும். அவரது இரவுணவான கஞ்சி வயிற்றுக்குப் போதாது. விருந்தில் படைக்கப்படுவதனைக் கண்டு வருந்துவார். விருந்தோம்பு மியல்புடைய அவர் விருந்தினரது உடல் நலத்தைக் காக்கக் கருதியவராய், அவர்கள் தம்மைப் போலவே நீர் மிகுதியுங் கலந்த கஞ்சியினை ஒரு சிறு குவளையளவு பருக வேண்டுமென்று மன உளைச்சலின்றி எடுத்துரைப்பார்.

தந்தை தம் விருப்பப்படி பேசுதற்கு எம்மா விட்டுவிடுவாள். ஆயினும் விருந்தினர்க்கு நிறைவளிக்கும் வகையில் உணவு படைப்பாள். குறித்த இந்நாளிரவு விருந்தினரை மகிழ்ச்சியுடையவராயனுப்பிவைப்பதில் அவள் தனியின்பங் கண்டாள். எம்மா ஹைபரியில் மிக்க சிறப்புப்பெற்ற ஒருத்தி. அவளோடு அறிமுகம் பெறுதல் மகிழ்ச்சிக்கிணையாகப் பரபரப்பும் அளிப்பதே. எளிய நன்றி மறவாத இளம்பெண் ஹேரியட், எம்மா தன்னை நடாத்திய அன்பான முறை குறித்தும் தன்னோடு மெய்யாகவே கைகுலுக்கியது குறித்தும் பெரிதும் மகிழ்ந்து, நன்றி நிறைந்த உள்ளத்தோடு பிரிந்து சென்றாள்.

---

4. திட்டம் பிறந்தது!

ஹேரியட் ஹார்ட்ஃபீல்டுக்கு அடிக்கடி வந்து போவது விரைவிலேயே அன்றாட நிகழ்ச்சியாயிற்று. எம்மா அவளை அடிக்கடி வருமாறு அழைப்பதிலும் ஊக்குவிப்பதிலும் விரைந்து செயற்பட்டாள். அவர்களது தொடர்பு நெருங்க நெருங்க ஒருவர் மற்றவரை எண்ணி மனநிறைவு கொள்ளலாயினர்.

ஹேரியட் கூர்த்த மதிபடைத்தவளல்லள் என்பது உறுதி. ஆயினும் அவள் இனிய பணிந்து போகும் இயல்பும், நன்றியுணர்வும் உடையவளாய் விளங்கினாள். பகட்டென்பது அவளிடம் அறவேயில்லை. தன்னால் மதிக்கப்பட்டவர் எவராயினும் அவர் சொற்படி நடத்தற்கு விருப்பமுடையவளாயிருந்தாள் அவள். மொத்தத்தில் தனக்குத் தேவையான ஒருத்தியாக எம்மா அவளை மதித்தாள். நன்றி, பாராட்டு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிற்குரிய ஒருத்தியாகவே அன்னா இருந்தாள். ஹேரியட்டோ எம்மாவின் உதவியை நாடுபவளாய், அன்புக்குரியவளாகினாள். அன்னாவைப் பொறுத்த மட்டில் எம்மா எதுவும் செய்ய வேண்டியதில்லை. ஹேரியட்டுக்கோ எல்லாஞ் செய்ய வேண்டும்.

ஹேரியட்டுக்கு உதவும் முயற்சியில் முதலாவதாக அவளுடைய பெற்றோரைப்பற்றி யறிய முற்பட்டாள், எம்மா. ஆயின் ஹேரியட் எதுவுஞ் சொல்லவியலாதவளாயிருந்தாள். அவள் கூர்ந்து நோக்கும் இயல்பினளல்லள். காடார்ட் அம்மை அவளிடஞ் சொல்லத் துணிந்தவற்றை மட்டுமே கேட்டு

அப்படியே நம்பியதோடமைந்தாள். மேற்கொண்டு ஏதும் வினவியவளல்லள்.

காடார்ட் அம்மை, ஏனை யாசிரியைகள், மாணவிகள், பள்ளிச் செய்திகள்—இவையே உரையாடலின் பெரும்பகுதியா யமைந்தன. மார்ட்டின் குடும்பத்தினரோடு அவள் பழகியிராவிடில் இவையே முழுப் பகுதியா யிருந்திருக்கும். அவள் அக்குடும்பத்தோடு இரு திங்கள் மகிழ்ந்து வாழ்ந்தவளாதலின் அவர்களைப்பற்றிய நினைவு அவளுள்ளத்தே நிறைந்தது. அவர்களைப்பற்றியும் பேசலானாள். எம்மா அவளது வாயாடித்தனத்தை ஊக்குவித்தாள்.

தொடக்கத்தில் எம்மாவுக்கு வியப்பே ஏற்பட்டது. அக்குடும்பத்தை நன்கறியத் தலைப்பட்டபோது பிறவுணர்வுகள் முளைத்தன. உரையாடலில் நல்லியல்பு உடையவனாகக் குறிக்கப் பெற்ற ராபர்ட் மார்ட்டின் மணமாகாத இளைஞனென்பது வெளிப்பட்ட போது, அவனது விருந்தோம்புதலாலும், அன்பாலும் தன் தோழிக்கு இக்கட்டு நேர்ந்திடுமோ என்றையுறலானாள், எம்மா. ஹேரியட்டைக் கண்காணிக்காவிடில், அவள் தன்னைத்தானே சேற்றில் அமிழ்த்திக் கொள்வாளென்றும் எண்ணலானாள்.

இத்தகைய உய்விக்கும் நோக்குடன் எம்மாவின் கேள்விகள் உட்பொருளிலும் எண்ணிக்கையிலும் மிகுந்தன. ஹேரியட் ராபர்ட்டைப் பற்றி மிகுதியாய்ப் பேசுமாறு தூண்டினாள், எம்மா. அவ்விளம் பெண்ணோ இளைஞனைக் குறித்துப் பேசுதற்குச் சிறிதும் தயங்காதவளாய், அவனோடு நிலவில் உலவியது, மாலையில் விளையாடியது, அவனது நல்லெண்ணம்,

உதவி ஆகியவைகளை எடுத்துரைத்தாள். "ஒருநாள் வாதாம்பருப்பு எனக்கு மிகவும் பிடிக்குமென்றேன். எனக்குச் சில வாதாம்பருப்புக் கொணர்வதற்காக அன்று அவர் மூன்றுகல் தொலைவு சென்றார். இப்படி எல்லாவற்றிலுமே அவர் மிகவும் தாராள மனப்பான்மையுடையவர்" என்றாள் அவள்.

"அவரது தோற்றம் எப்படியிருக்கும்?"

"அதுவா! அப்படியொன்றும் அழகில்லை... ஆமாம் அழகில்லைதான். அவரை முதலில் மிகச் சாதாரணமானவரென்றே நினைத்தேன். இப்போது அப்படியில்லை. அவரை நீங்கள் பார்த்ததேயில்லையா? அடிக்கடி ஹைபரிக்கு வருகிறாரே!"

"ஐம்பது முறை பார்த்திருப்பேன் - இன்னாரென்று அறிந்து கொள்ளாமல். குடியானவ இளைஞர் எவரும் என் ஆர்வத்தைத் தூண்டுபவருள் கடைப்பட்டவரே. இன்னும் ஓரிரு படி கீழ்ப்பட்டவராயின் தோற்றச் சிறப்பு எனக்கு ஆர்வ மூட்டியிருக்கும். அவரது குடும்பத்துக்கு ஏதேனும் ஒருவகையில் உதவ முடியுமென நம்பியிருப்பேன்."

"அவர் உங்களை யறிவார். பார்த்தால் இன்னாரெனக் கண்டுகொள்வார்."

"அவரது பருவம் யாதாயிருக்கும்?"

"கழிந்த ஜூன் எட்டாம் நாளில் அவர் இருபத்து நான்காண்டினரானார். என் பிறந்த நாள் ஜூன் இருபத்துமூன்றாம் நாள்.

"இருபத்து நான்குதானா? இல்வாழ்வில் ஈடுபட மிகவும் இளம்பருவம். இன்னும் ஆறாண்டுகள்

கழிந்தபின், சிறிது கைப்பொருளுண்டாயின், தகுதிக்கேற்ற ஓரிளம் பெண்ணை அவர் தெரிந்தெடுத்தல் நலமாகும்.''

"ஆறுண்டுகளுக்குப் பிறகா! அவர் முப்ப தாண்டினராவாரே!''

"ஆமாம். அதுதான் பெரும்பாலான ஆடவர் மணக்கத் துணிவதற்குத் தக்க காலம். சொத்திற் குரிமையுடையவரல்லராயின், அந்தப் பருவத்தில் தான் மணப்பதற்குத் தகுதியுடையவராகலாம். அவர் எப்போது மணப்பாராயினும் நீ அச்சிக்கலில் மாட்டிக்கொள்ளாதே. அவருடன் பிறந்த பெண்டிர் கல்வியறிவுடையவராதலின் விலக்கற்குரியவரல்லர். ஆயின் அவர்தம் மனைவியோடு தொடர்பு கொள்ள லாமா? நீ உயர்குடிப் பிறந்தவளென்பதில் சிறிதும் ஐயமின்று. உன்னுலியன்றமட்டும் எல்லாஞ் செய்து குடிப் பெருமையைக் காப்பாற்றவேண்டும்.''

"ஹார்ட்ஃபீல்டு மாளிகைக்கு நான் வந்து போகும்வரை, நீங்கள் என்னிடம் இரக்கம் செலுத் தும் வரை, எவரும் எனக்கு ஏதும் செய்ய முடியாது.''

"நல்லினஞ் சேர்தலின் வல்லமையை நன் குணர்ந்துள்ளாய் ஹேரியட்! ராபர்ட்டின் மனைவி ஏதேனும் ஒரு குடியானவனின் கல்வியறிவற்ற மக ளாகவே வாய்ப்பாள். அவளோடு நீ தொடர்பு கொள்ளாமலிருக்கவேண்டுமேயென்றுதான் கவலைப் படுகிறேன்.''

"அப்படி நிகழாது. கல்வியறிவோ, நற் பழக் கமோ இல்லாத எவளையும் ராபர்ட் ஒருபோதும்

மணக்கமாட்டார். இருப்பினும் உங்கள் கருத்திற் கெதிர் சொல்லக் கருதுகின்றிலேன். அவருடைய மனைவியின் தொடர்பினை நாடேன் என்பது உறுதி.''

இவ்வுரையாடலின் போக்கில் எம்மா தன் தோழியைக் கூர்ந்து நோக்கினாள். காதல் அறிகுறி எதுவும் தோன்றித் திகைப்பூட்டவில்லை. ஹேரியட் டின் பாராட்டிற்குரிய முதல் ஆடவனாய் அவ்விளை ஞன் விளங்கினான். அப்பால் வேறெதுவும் பிடிப் பில்லையென்றே எம்மா நம்பினாள்.

மறுநாளே டான்வெல் சாலையில் அவர்கள் நடக்கையில் ராபர்ட்டைக் கண்டனர். அவன் மதிப் புக் கனிய எம்மாவை நோக்கினான். பின் அவ ளுடைய தோழியைக் கண்டதால் தனக்கேற்பட்ட மனநிறைவைத் தணிக்காமற் காட்டினான். அவனை உற்றுநோக்கக் கிட்டிய இவ்வாய்ப்பினைக் குறித்து எம்மா வருந்தினாளல்லள். முன்னேக்கிச் சில அடிகள் சென்றபின் நின்று அவள் அவனை நோக்கலானாள். அவனோ ஹேரியட்டோடு உரையாடி நின்றான். அவ னது தோற்றம் தூயது; மற்றப்படி எத்தகைய சிறப்புமற்றது. உயர்குடியினரோடு ஒப்பிடப்படில், அவன் ஹேரியட்டின் மனத்திற் பெற்ற இட மனைத்தையும் இழக்கவேண்டியவனே. ஹேரியட் நாகரிகத்தை யுணராதவளுமல்லள். ராபர்ட் நாக ரிகம் இன்னது என்றே யறியாதவனாய்த் தோற்ற மளித்தான்.

எம்மாவைக் காக்கவைக்க விரும்பாதவராய் அவ்விருவரும் சில நிமிடங்களே உரையாடினர். பின் ஹேரியட் புன்னகை தவழும் முகத்தோடும் படபடக்

கும் அகத்தோடும் எம்மாவிடம் ஓடோடிப் போந்தாள்.

“எம்மா! அவரைப்பற்றி யாது கருதுகிறீர்கள்? நீங்கள் எதிர்பார்த்தபடி இருக்கிறாரா? மிகச் சாதாரணமா?” என்றாள் அவள்.

“ஐயமின்றி மிகச் சாதாரணந்தான். மொத்தத்தில் அவரது நாகரிகக் குறைபாட்டினை நோக்குகையில் ஈதொன்றும் பெரிதில்லை.”

“ஆமாம். அவர் ஜார்ஜைப் போன்றவரல்லர். ஜார்ஜைப்போல நடையோ தோற்றமோ இல்லாதவர்.”

“ராபர்ட்டை அவரோடு ஒப்பிடுவது தரமன்று. ஜார்ஜைப்போல் நூற்றிலொருவரிடம் தாம் நாகரிகர் என்பது எழுதி ஒட்டியதுபோல் தெரியும். அவர் மட்டுந்தாமா நீ அணிமையிற் பழகிய நாகரிகர்! வெஸ்டனும் எல்டனும் இல்லையா? ராபர்ட்டை அவர்களோடு ஒப்பிட்டுப் பார்.”

“பெரும் வேறுபாடுதான். வெஸ்டன் கிழவரல்லரோ?”

“ராபர்ட் இப்போதே கொச்சையாகவும் பச்சையாகவும் இருக்கிறார்; வெஸ்டனின் பருவத்தில் எப்படியிருப்பாரோ?”

“சொல்ல முடியாதுதான்.”

“ஒருவகையில் எல்டன் ஜார்ஜையும் வெஸ்டனையும்விட உயர்ந்தவர். அவர் தங்கமான குணமும் கலகலப்பாகப் பேசும் இயல்பும், உதவுகிற

நோக்கமும் உடையவர். அவர் எப்போதாவது ஏதாவது விரும்புகிறார் எனில் அஃது உன்னை மகிழ்விப்பதே. அன்றைக்கு அவர் உன்னைப்பற்றிச் சொல்லியவற்றை உன்னிடம் சொன்னேனா?”

இதைத் தொடர்ந்து எம்மா தான் எல்டனின் ‘வாயைக் கிண்டி’ வரவழைத்த சில புகழுரைகளைத் தங்குதடையின்றி விளங்கக் கூறினாள். ஹேரியட் நாணினாள்; புன்முறுவல் பூத்தாள்; “எல்டன் மிகவும் நல்லவர் என்றுதான் எப்போதும் நான் நினைப்பதுண்டு” என்றாள்.

ஹேரியட்டின் உள்ளத்திலிருந்து குடியானவ இளைஞனை விரட்டுவதற்குப் பொருத்தமான ஆளென எம்மா எல்டனையே தெரிந்தெடுத்தாள். இவ்வினை மிகச் சிறந்ததென அவள் கருதினாள். எல்லாருமே இவ்விருவரையும் இணைக்கக் கருதுவரென்றும், இணைத்துப் பேசுவரென்றும் அஞ்சலானாள். எனினும் ஹேரியட் முதன்முதலாக ஹார்ட்ஃபீல்டுக்குப் போந்த அன்றே திட்டமிட்டுவிட்டதால் திட்டக் காலத்தைப் பொறுத்தவரை தனக்கு நிகர் எவருமிலர் எனத் தேறினாள்.

எல்டனின் நிலைமையும் தக்கதாகவே தோன்றிற்று. இழிதொடர்பு ஏதுமற்ற உயர்குடியினர் அவர். ஆயினும் ஐயப்பாட்டிற்குரிய ஹேரியட்டின் பிறப்பினைக் குறித்துத் தடையெழுப்புதற்கு உறவினர் - குடும்பத்தார் - எவரையும் பெறாதவர். அவர் ஹேரியட்டை அழகிய இளம்பெண் என மதிப்பவர். (இவ்வாறு எம்மா தனக்குத்தானே உறுதியளித்தாள்) இவ்வடிப்படையில் அடிக்கடி ஹார்ட்ஃபீல்

டில் கூடிப் பேசவைத்தால் அவர் 'வழிக்கு வருவார்'. ஹேரியட் தரப்பில், அவரால் விரும்பப் படுவதே பெரும் சிறப்பாகவும் வலிய கருவியாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை. மனநிறைவே கொள்ளாத பெண்களைத்தவிர, எந்தப் பெண்ணும் விரும்பக் கூடிய இனிய இளைஞரே எல்டான். அப்படியிருக்கையில் தனக்காகவா தாம் பருப்புக் கொணர்ந்த ராபர்ட் மார்ட்டினைக் கண்டு களிப்படைகிற ஒரு பெண், எல்டானின் பாராட்டிற்கு அடிமையாக மாட்டளா என்ன!

---

5. நண்பர்கள் கருத்து

ஒருநாள் ஜார்ஜ் அன்னுவிடம் "எம்மாவுக்கும் ஹேரியட்டுக்கு மிடையேயுள்ள பிணைப்பினைக் குறித்து நீ என்ன நினைக்கிருயோ! அறியேன். அது தீயதென்றே நான் கருதுகின்றேன்" என்ருர்.

"வியப்பாயுள்ளதே! எம்மா ஹேரியட்டுக்கு நன்மையே செய்வாள். அவளது ஆர்வத்துக்குரிய புதுப்பொருள் என்ற முறையில் ஹேரியட்டும் எம்மாவுக்கு நன்மையே செய்வாள். தனிமையில் வாழ்ந்து பழகிவிட்டீர்கள். அதனுல் தோழமையின் மதிப்பினை அறியீர்கள். தோழியொருத்தியின் கூட்டுறவில் ஒரு பெண் எத்துணை ஆறுதல் பெறுகிருள் என்பதனை எந்த ஆணும் மதிப்பிட முடியாது. எம்மாவின் தோழியாக வாய்ப்பவள் எவ்வளவு உயர்ந்தவளாயிருக்க வேண்டுமோ அவ்வளவு ஹேரியட் உயர்ந்தவளல்லள். ஆயின் அவளைக் கல்வியறிவுடையவளாக்குதற்கு எம்மா விரும்புகிருளாதலின் தானும் மிகுதியாய் நூல்களைக் கற்பாள்."

"அக் குடும்பத்திலேயே அறிவுக்கூர்மையுடையவளாய் அவள் இருப்பதால்தான் பயனற்றுப் போனுள். பத்தாண்டினளாய் இருக்கையிலேயே பதினேழாண்டினளாய அவள் தமக்கை விடை சொல்ல முடியாக் கேள்விகளுக்கெல்லாம் அவள் விடை பகரவல்லவளாயிருந்தாள். பன்னிரண்டாண்டினளாயது முதலே எம்மா வீட்டுத் தலைவியாகிய தோடன்றி உங்களுக் கெல்லாம் தலைவியாக்கப்பட்டாள்."

"நான் தாதியா யிருத்தற்குத் தகுதியற்றவள் என்பதுதான் எப்போதும் உங்கள் எண்ணம்."

"ஆமாம், நீ மனைவிக்கு மிகப் பொருத்த மானவள். செவிலிக்கு அறவே பொருத்தமற்றவள். நீ எம்மாவுக்கு உன் ஆற்றலுக் கேற்ற வகையில் கல்வியறிவு ஊட்டவில்லை; அவளிடமிருந்து நல்ல கல்வி பெற்றாய். மணவாழ்வுக்கு அடிப்படையாகிய, சொந்தக் கருத்துக்களை யடக்கிக் கொள்ளல், ஏவியவாறு செயற்படுதல் ஆகியவற்றை நீ அவளிடம் கற்றுக் கொண்டாய். நல்லதொரு மனைவியைத் தெரிந்தெடுத்துரைக்குமாறு வெஸ்டான் என்னிடம் கேட்டிருப்பாராயின் நான் அன்று எனும் பெயரையே உறுதியாய்க் கூறியிருப்பேன்."

"நன்றி."

"முன்னுணர்ந்தோ, உய்த்துணர்ந்தோ கூறு தலில் எம்மாவைப் போல் பேரறிவுத் திற னுடையேன் என்று வேடம் போடுகின்றிலேன். ஹேரியட் தானுக ஒன்றுமறியாதவள், எம்மாவை எல்லாமறிந்தவளென எதிர்பார்ப்பவள். அவளின் செயலெல்லாம் முகமனு யமைபவை. திட்டமிட்டுச் செய்யாதன ஆதலினுலேயே மிகவும் தீயவை. ஹேரியட் இத்துணை தாழ்ந்தவளாய்க் காட்சி யளிக்கையில், தான் இன்னும் கற்கவேண்டுவ துண்டென எம்மா நினைக்கவுஞ் செய்வாளோ? இத்தொடர்பால் ஹேரியட் நாகரிக முடையவ ளாய் மாறுவாள். தன் பிறப்பாலும் சூழ்நிலையாலும் எவரோடு வாழ்கிருளோ அவர்களது கூட்டுற

வையே வெறுப்பவளாவாள். எம்மாவின் கொள்கை கள் மனவுறுதியைத் தருவனவல்ல; தன் தரத்துக் குரிய பல சூழ்நிலைகளோடு ஒட்டி வாழுமாறு எப்பெண்ணுக்கும் கற்பிப்பனவுமல்ல. அவை வெறும் மெருகூட்டுவனவே"

"எத்துணைச் சிறு குறைபாடுடையவளாயினும் எம்மா மிகவுஞ் சிறந்தவள். அவள் எவரையுந் தவருன வழியில் அழைத்துச் செல்லாள். தெளியாக் குழப்பமேதும் விளைவிக்கமாட்டாள். எம்மா ஒரு முறை பிழைபடலாம்; ஆயின் நூறு முறை சரியான வற்றையே செய்வாள். அவளிடத்தில் மெய்யாகவே எனக்கு ஈடுபாடு. அவளுக்கு யாது நேருமோ?"

"திருமணமே செய்து கொள்ளப்போவதில்லை யென்று அவள் எப்போதும் சொல்லிக் கொள்கிருள். அது பொருளற்றது. அவளது கருத்தினைக் கவரக் கூடியவன் எவனையும் கண்டிலளோ என்னவோ! எனக்கு ஒரேயோர் ஆசை. எம்மா காதலில் சிக்க வேண்டும். தன் காதல் ஒருதலையாய்ப் போய் விடுமோ என்றையுறவேண்டும். அத்தகைய நிலை அவளுக்கு நலம் பயக்கும். ஆயின் அவளைக் கவர வல்லவர் எவரும் இப்பகுதியில் இல்லையே. அவளும் அரிதாகவே வீட்டைவிட்டு வெளியிற் செல்கிருள்."

"ஹென்றியை நினைக்கும்போது, அவள் எவரை யுப் காதலிக்கா திருக்க வேண்டுமெனவே விரும்பு கிறேன். இன்றைய நிலையில் எம்மா திருமணஞ் செய்ய வேண்டுமெனப் பரிந்துரைக்கமாட்டேன்"

உண்மையில் அவளும் அவள் கணவரும் கொண்டிருந்த கருத்தினை மறைக்கவே அவள் முயன்றாள். எம்மாவின் எதிர்காலம் பற்றி அவர்கள் ஏற்கெனவே ஆவலுடன் பேசினர். ஆயினும் தம்மீது பழியேதும் விழலாகாதெனக் கருதினர். ஆகவே ஜார்ஜ் பேச்சினை மாற்றிய போது அன்று மகிழ்ந்தாள்.

6. ஓவியக் காதல்

ஹேரியட்டின் கருத்தினை நல்லதொரு வழியில் திருப்பியதுபற்றி எம்மா சிறிதளவும் ஐயங்கொண்டிலள். 'எல்டான் குறிப்பிடத் தக்கவகையில் அழகிய தோற்றமும் இனிய இயல்புகளும் உடையவர்' என ஹேரியட் முன்னினும் பன்முறை உணரத் தலைப்பட்டதே காரணம். இவ்வுணர்வினை வளர்ப்பதற்கேற்ற வகையில் அவ்வப்போது பொருத்தமாகவும் குறிப்பாகவும் எல்டானின் சிறப்புக்களை எடுத்துரைக்க எம்மா தயங்கினாளல்லள். இதனால் விரைவிலேயே தன் தோழியினுள்ளத்தில் தேவையான அளவு விருப்பத்தை வளர்த்துவிடலாமென அவள் நம்பினாள். எல்டான் ஏற்கெனவே காதலிக்கத் தொடங்கிவிட்டார்; அல்லது அவ்வழியில் விரைவாக முற்படுகிறார் என்று எம்மா உறுதியாகக் கருதினாள். அவள் ஹேரியட்டைப் பற்றி அடிக்கடி பாராட்டிப் பேசினார். ஏதேனும் குறையிருக்குமாயினும் காலப்போக்கில் நிறைவாகிவிடுமென்று உணர்ந்தாள் அவள்.

ஒருநாள் எல்டான், "ஹேரியட்டுக்குத் தேவையானவற்றையெல்லாம் செய்துவிட்டாயே! அவள் உன்னிடம் வந்தபோது அழகிதான். ஆயினும் அவளுக்கு நீ ஊட்டியுள்ள கவர்ச்சிகள், இயற்கையளித்தவற்றினும் எண்ணிலடங்கா அளவு சிறந்தவை" என்றார்.

"ஏதோ அவளுக்கு உதவினேன் என்று மதிக்கிறீர்களே! அதுவே மகிழ்ச்சிதான். ஹேரியட்

குடத்து விளக்காயிருந்தாள். வெளியிலெடுத்தேன். அவ்வளவுதான். ஏற்கெனவே அவள் கள்ளங்கபடற்றவளாயும் இனிய குணத்தால் வரும் இயல்பான எழிலுடையவளாயும் விளங்கினாள்.''

''ஐயமின்று'' இதைச் சொல்கையில் வெளிப்பட்ட பெருமூச்சும் உணர்ச்சியும் காதலர் ஒருவரின் தன்மையை மிகுதியும் உணர்த்தின.

மற்றொரு நாள் எம்மா திடீரென ஹேரியட்டின் உருவத்தை ஓவியமாக்க விரும்பியபோது, எல்டான் ஒத்துப்பேசிய முறையும் அவளை மகிழ்வித்தது. அறையினின்று ஹேரியட் வெளியேறிய பின் எம்மா சொன்னாள்: ''இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன் 'பார்த்து வரை'வதில் பெரிதும் விருப்பங் கொண்டிருந்தேன். நண்பர் பலரது உருவத்தை வரைந்துள்ளேன். ஒன்றில்லாவிடில் மற்றொன்று குறுக்கிட்டதால், வெறுப்புற்று அம்முயற்சியை விட்டுவிட்டேன். ஹேரியட் ஆற இருந்து தோற்றம் நல்குவளாயின், இப்போது மீண்டும் முயல்வேன்.''

''என் வேண்டுகோள். அப்படியே செய். மிக்க மகிழ்ச்சியாயிருக்கும். உன் ஓவியங்களை நான் அறியேனா? அவ்வளவு அறிவிலியென மதித்து விட்டாயா?''

எம்மா நினைத்தாள்: 'ஆமாம். நல்ல ஆள்தான். ஓவியக்கலைபற்றி உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. என் ஓவியங்களைக் குறித்துக் களிவெறி கொள்வதாய் நடிக்க வேண்டா. உங்கள் களிவெறியையெல்லாம் ஹேரியட்டின் முகத்தோற்றத்துக்கே விட்டு வையுங்கள்.'

ஹேரியட் மீண்டும் விரைவிலேயே அறைக்குள் புகுந்தாள். திட்டம் உடனேயே வெளியிடப் பெற்றது. ஏனையிருவரும் ஆர்வத்தோடு வற்புறுத்துகையில் அவ்விளம் பெண்ணின் தடையேதும் நிலைத்து நிற்கவில்லை. உடனடியாய் வேலையிலிறங்க விழைந்த எம்மாதான் முன்னுளில் வரைந்த சிற்றோவியங்கள், அரையுருவங்கள், முழுவுருவங்கள் முதலியவற்றை வெளியிலெடுத்தாள்—எந்த அளவில் ஹேரியட்டை வரைவதென மூவரும் முடிவு செய்யலாமெனக் கருதியவளாய்.

எம்மா ஓவியத்திறனைக் குறித்துத் தன்னைத் தானே ஏமாற்றியவளல்லள்; மற்றவர்கள் ஏமாறுவதனை விரும்பாதவளும் அல்லள். தன் தகுதிக்கு மீறிப் புகழப்படுதலைக் குறித்து வருந்தியவளும் அல்லள்.

அவளது ஒவ்வோர் ஓவியமும் சிறப்புக்குரியதே. எவ்வளவு குறைபட முடிக்கப் பெற்றிருந்ததோ அவ்வளவு சிறப்புடையதாயும் விளங்கிற்று. குறைவாயிருப்பினும் நிறைவாயிருப்பினும் அவளுடைய நண்பர்களின் மகிழ்ச்சியும் பாராட்டும் ஒரே அளவில் தான் இருந்தன. அவ்விருவரும் தம்மை மறந்த நிலையில் இருந்தனர். எம்மா தான் இறுதியாய் வரைந்த தன் அத்தான் ஜான் நைட்லீயின் உருவத்தைக் காட்டி, ''அவரை உட்கார்த்திவைப்பதே பெரும்பாடாயிற்று. அவர் ஏதோ பெருஞ்சலுகை யளிப்பவர் போல நடந்து கொண்டார். இசபெல்லாவோ அவரது தோற்றம் சரியாய் விழவில்லையென்றாள். என்னால் பொறுக்கவியலவில்லை. இனி

எவரைப் பார்த்தும் வரைவதில்லையென முடிவு செய்தேன். ஆயின் இப்போது ஹேரியட்டுக்காக - எனக்காக - என் முடிவிற்கு மாறாக வரையப் போகிறேன். இன்றைய நிலையில் கணவன் - மனைவியாக எவரும் இல்லையே!" என்றாள்.

எம்மா கூறிய இறுதித் தொடரை எல்டான் திருப்பிச் சொல்கையில் 'இன்றைய நிலையில்' என்பதற்கு அழுத்தங்கொடுத்து உணர்ச்சியோடு பேசினார். அப்போதே அவரையும் ஹேரியட்டையும் தனித்திருக்க விட்டுவிட்டுச் செல்லலாமா என்றெண்ணத்தலைப்பட்டாள் எம்மா. ஆயின் ஓவியத்தை முடிக்க வேண்டுமே! அவர்களது காதற்சூளுரை சற்றுப் பொறுக்க வேண்டியதுதான் என முடிவு செய்தாள்.

ஹேரியட் நாணத்தோடும் முறுவலோடும் அமர்ந்தாள். 'ஓவிய'ரின் இமைகொட்டாப் பார்வையில் அவள் இளமையின் இனிய கலவையாய்த் தோற்றமளித்தாள். ஆயின் எல்டான் தன் பின்னேயமர்ந்து ஒவ்வொரு கோட்டினையும் கூர்ந்து நோக்கியதால், எம்மாவுக்கு வேலையேதும் ஓடவில்லை. இடையறாது கூர்ந்து நோக்குதற்கு ஏற்புடையதோர் இடத்தைத் தெரிந்தெடுத்தமை பற்றி எல்டானை உள்ளுக்குள் பாராட்டினாளாயினும் எம்மா அதற்கு முடிவு கட்ட வேண்டியவளானாள். தங்கள் வேலையில் சோர்வேற்படாதிருக்கும் வகையில் அவர் ஏதேனும் படித்துக் காட்டலாமேயென்றாள். எல்டான் மிக்க மகிழ்ச்சியோடொப்புக்கொண்டார். ஹேரியட்

செவிமடுக்கலானாள்; எம்மா மனவமைதியோடு வரையலானாள்.

எம்மா ஹேரியட்டின் உருவப் படத்தை வரைதல்

அந்நாள் வரைந்து முடித்த பகுதி எம்மாவுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. முடிவில் அஃது ஓர் அழகிய ஓவியமாய் - ஒருத்தியின் அழகிற்கும் மற்றொருத்தியின் கைத்திறனுக்கும், இருவர் தம் நட்பிற்கும் அழியா நினைவுச்சின்னமாய் அமையுமென அவள் பெரிதும் நம்பினாள்.

மறுநாளும் ஹேரியட் ஓவியத்திற்காகத் தோற்றமளிக்க வேண்டுமென முடிவு செய்தனர். எல்டான் தாமும் கலந்து கொள்வதற்கும் 'படித்துக் காட்டுவதற்கும்' ஒப்புதல் வேண்டினார்.

மறுநாளும் இவ்வாறே இன்மொழிகள் பணிவுகள், வெற்றி, மனநிறைவு ஆகியவை நிகழ்ந்தன. ஓவியம் விரைவில் உருப்பெற்றது. அதனைக்

கண்ணுற்றவரனைவரும் மகிழ்ந்தனர். எல்டானோ இடையருக் களிவெறியில் மிதந்தார்; எவரேனும் குறைகூறினால் ஓங்கி மறுத்துரைத்தார்.

அடுத்து அவ்வோவியத்துக்குக் 'கண்ணாடி' போடுவது தேவையாயிற்று. அஃது உடனடியாக லண்டன் மாநகரிற் செய்யப்படவேண்டும். நிசம்பர்த் திங்களாதலின் இசபெல்லா பனியில் வீட்டை விட்டு வெளியே செல்வதனை ஹென்றி நினைத்துப் பார்ப்பதற்கும் ஒவ்வார். இத்துன்பம் எல்டான் கேள்விப் பட்ட அளவிலேயே விலகிற்று. அவர் ஓவியத்தை லண்டனுக்கு எடுத்துச் செல்வதென்றும், பொருத்தமான சட்டத்தைத் தெரிந்தெடுத்துக் கொடுத்துக் கண்ணாடி போடச்சொல்வதென்றும் முடிவு செய்தனர்.

ஓவியத்தைப் பெற்றபோது, "எத்தகைய விலை மதிப்பற்ற செல்வம்!" என்றார் எல்டான் - பெருமூச்சுடன்.

'இவர் எதற்கும் முந்துவதைப் பார்த்தால் காதலிப்பவராய்த் தோன்றவில்லையே! உம்...காதலிப்பதில் நூறுவேறு வழிகள் இருக்கும் போலும்! அவர் நல்லிளைஞர். ஹேரியட்டுக்கு மிகப்பொருத்தமானவர். அவர் பெருமூச்சு விடத்தான் செய்கிறார். ஏங்கித் தவிக்கிறார். நான் தலைவியாயிருப்பினும் தாங்கிக் கொள்ள முடியாப் பாராட்டுரைகளையெல்லாம் வழங்குகிறார். தோழியெனும் முறையில் கூட என்னை மிகுதியும் பாராட்டுகிறார். ஹேரியட்டுக்காக என்னிடம் இம்முறையில் நன்றி செலுத்துகிறார் போலும்' எனச் சிந்தித்தாள் எம்மா.

---

7. கடிதமும் கலக்கமும்

எல்டான் லண்டனுக்குச் சென்ற அந்நாளிலேயே எம்மா தன் தோழிக்கு மேலும் உதவுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. மாலையில் இரண்டாம் முறையாக ஹேரியட் ஹார்ட்ஃபீல்ட் மாளிகைக்குப் போந்தபோது பதற்றமும் துடிப்பும் மிக்கவளாய்த் தோன்றினாள். வழக்கத்துக்கு மாறாக நிகழ்ந்த ஏதோ ஒன்றினை அவள் சொல்ல விரும்பினாள் என்பது புலப்பட்டது. அரைநிமிடத்தில் எல்லாம் வெளியாயின. ராபர்ட் அவளைக் காணப் போந்தாராம். அவள் அப்போது வீட்டில் இல்லை. அவளுக்கென ராபர்ட்டின் தங்கைகளுள் ஒருத்தி ஒரு பொட்டலம் அனுப்பியிருந்தாள். அதை அவர் கொடுத்துச் சென்றார். பொட்டலத்தைப் பிரித்த போது அவர் அவளுக்கு எழுதி வைத்த கடிதமொன்றினைக் கண்டாள். தம்மை அவள் மணக்குமாறு வேண்டியிருந்தார். வியப்பு மிகுதியால் அவள் செய்வதியலாதவளாயினாள். அவளது மகிழ்ச்சியையும் தடுமாற்றத்தையும் கண்ட எம்மா தன் தோழியைக் குறித்து வெட்கங் கொண்டாள்.

"கடிதத்தைப் படித்துப் பாருங்களேன்" என வற்புறுத்தினாள் ஹேரியட்.

அவ்வற்புறுத்துதல் எம்மாவுக்கு வருத்தமேயளிக்கவில்லை. அவள் கடிதத்தைப் படித்தாள்; வியப்புற்றாள். அவள் எதிர்பார்த்ததினும் சிறந்த நடையில் அஃது எழுதப்பெற்றிருந்தது. தோழியின் கருத்தினை ஆவலோடு எதிர்பார்த்த ஹேரியட்

"சரி...சொல்லுங்களேன்! கடிதம் நன்ருயிருக்கிறதா? மிகவும் சிறியதோ?'' என்ருள்.

"உள்ளபடியே நல்ல கடிதந்தான். எல்லா வற்றையும் நினைத்துப்பார்க்கையில், அவருடைய தங்கைமாருள் ஒருத்தி எழுதிக்கொடுத்திருப்பாளோ என்றையுறுகிறேன். ஆயின் நடை ஒரு பெண்ணுக் குரியதாகவும் இல்லை. அவர் கெட்டிக்காரர் தாம். பேனவைக் கையிலெடுத்தால் அவர் தம் கருத்துக்களை இயல்பாக வெளியிடற் கேற்ற தக்க சொற்களைக் கண்டுபிடித்து விடுகிருரே! நான் எதிர்பார்த்ததை விட நன்முறையிலே எழுதப்பெற்ற கடிதந்தான்'' என்று எம்மா கடிதத்தைத் திருப்பிக் கொடுத்தாள்.

"இப்போது என்ன செய்வது?''

"என்ன ஐயப்பாடு உனக்கு! இதற்கு விரை வாகப் பதில் எழுதவேண்டியதுதான்''

"அது சரி. என்ன எழுதுவது! அருமை எம்மா! நீங்கள்தாம் அறிவுறுத்தவேண்டும்.''

"சே. சே. பதில் முழுதும் உனக்குரியதாகவே இருக்கவேண்டும். உன் கருத்தினை ஐயப்பாடோ தயக்கமோ இன்றித் தெளிவாகப் புலப்படுத்து. உன்னல் நேரிடவிருக்கும் பெரிய மன வருத்தத்தைத் தணிக்கத் தக்க முறையில் ஆறுதலும் நன்றியும் கூறு. அவரது ஏமாற்றங் குறித்து வருந்துவதாக எப்படி எழுத வேண்டும் என்று யாரும் உனக்குச் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லையே!''

"அப்படியானல் அவரை மணக்க நான் மறுத்து விடவேண்டும் எனக் கருதுகிறீர்களா?''

"அதனிலேயே நீ ஐயுறுகிருயா! மன்னித்துக் கொள். இத்தனை காலமும் நான் உன்னைத் தவருகப் புரிந்து கொண்டுள்ளேன். விடையின் நோக்கத்தி லேயே உனக்கு ஐயப்பாடு நேர்கிறதா! எச்சொற்க ளில் உன் கருத்தை வெளியிடுவது என்பது பற்றித் தான் என் உதவியை நாடுகிருயென நினைத்தேன்.''

ஹேரியட் வாளாவிருந்தாள்.

எம்மா தொடர்ந்து சொன்னுள்: "இணக்கமான முறையில் விடை எழுதக் கருதினுய் போலும். உன் உள்ளத்துணர்வுகளுக்கேற்ப நீ முடிவு செய்ய வேண்டிய ஒன்று, இது.''

ஹேரியட் கடிதத்தைக் கூர்ந்து நோக்கியவாறே "அவர் என்னை இவ்வளவு விரும்பினுரென நினைத்தி லேன்'' என்ருள். சில நொடிகள் எம்மா வாளாவிருந் தாள். பின், கடிதத்துப் புகழுரை எங்கே தோழியை மிகுதியும் மயக்கிவிடுமோ என்றஞ்சியவளாய்ப் பேசலானுள்: "நான் ஒரு பொதுவான விதியைக் கொண்டுள்ளேன். ஒரு பெண் சரியெனச்சொல்வதற் குத் தடுமாறுவாளாயின் உடனேயே 'மாட்டேன்' என மறுத்து விடவேண்டும். திருமணமென்பது அரைமனத்தோடோ, ஐயப்பாட்டுடனே இக்கட் டினுல் மேற்கொள்ளக்கூடியதொரு நிலையன்று. தோழி-உன்னினும் மூத்தவள்-எனுந்தகுதியில் இம் மட்டேனும் உன்னிடஞ் சொல்வது என் கடமை. உன் உள்ளத்தைக் கலைக்கவோ மாற்றவோ முயல் கிறேன் என நினைத்துவிடாதே.''

"சே. அப்படி யில்லை. நீங்கள் என்னிடம் அளவு மீறி அன்பு காட்டுகிறீர்கள். எதனைச் செய்தால்

நல்லது என்றுமட்டும் அறிவுரை வழங்குவீர்களாயின்- அஃதாவது நான் சொல்லப் புகுந்தது-மணக்க மறுத்துவிடவேண்டுமென்கிறீர்களா?''

''வேண்டுமென்ருே வேண்டா என்ருே இவ்வுலகமே கிடைப்பதாயினும், உனக்கு அறிவுரை வழங்கமாட்டேன். வேறெவரையும் விட ராபர்ட்டே சிறந்தவரென மதிக்கிருயா? உன்னேடு பழகியவருள் எல்லாம் அவரே மிகவும் இனிய இயல்பினர் என நினைக்கிருயா! அவ்வாருயின் தயக்கமின்றி அவரை ஏற்றுக்கொள். ஏன் கன்னம் சிவக்கிறது? இப்போது எவரேனும் உன் நினைவில் எழுகின்றனரா? ஐயோ ஹேரியட்! உன்னை நீயே ஏமாற்ருதே! நன்றியோ இரக்கமோ உன்னை அழுத்தி விடாமற் பார்த்துக்கொள்... இப்போது எவரை நினைத்தாய்?''

அறிகுறிகள் மிகவுஞ் சார்பாக இருந்தன. விடையளிப்பதற்கு மாருக ஹேரியட் குழம்பியவளாய் மறுபுறம் முகத்தைத் திருப்பினுள். கடிதம் அவளது கையிலிருந்தது. எனினும் அவள் அதனை எந்திரம் போல் சுழற்றலானுள். எம்மா பரபரப்புடன் அவளது முடிவை எதிர்பார்த்தாள். இறுதியில் சற்றுத் தயக்கத்தோடு ஹேரியட் சொன்னுள்: "உங்கள் கருத்தைச் சொல்லமாட்டேன் என்கிறீர்கள். நானுகவே சரியெனப்பட்டதைச் செய்தல் வேண்டும். இப்போது முடிவு செய்து விட்டேன். ராபர்ட்டை ஏற்க மறுப்பேன். சரியென நினைக்கிறீர்களா?''

''முற்றிலுஞ் சரி; நீ சிறிது தயங்கிய போதுகூட, என் உணர்வுகளை நான் எனக்குள்ளேயே வைத்துக் கொண்டேன். இப்போது உன் திடமான முடிவை

வெளியிட்டுவிட்டாய். அதனுல் அதைப் பாராட்டுவதில் எனக்குச் சிறிதும் தயக்கமில்லை. நீ அவரை மணக்க முற்பட்டிருந்தால், நான் என் தோழியை இழந்திருப்பேன். ராபர்ட்டின் மனைவியை நான் ஒரு போதும் போய்ப் பார்த்துப் பேசுவது நடவாது.''

''நான் அதை நினைத்தும் பார்க்க வில்லையே! அவ்வாருயின் அது கொடுந்துன்பமாகிவிடுமே! நல்லவேளை, தப்பினேன். உங்களோடு பழகுவதாற் கிட்டும் மகிழ்ச்சியையும் பெருமையையும் உலகில் வேறெதன் பொருட்டும் விட்டுவிடமாட்டேன். அவரை மணக்க மறுப்பதென உறுதியாக முடிவு செய்து விட்டேன். எப்படி மறுப்பது? என்ன எழுதுவது?''

அவளுக்கு உதவியே தேவையில்லை என எம்மா வலியுறுத்திப் பேசினுளாயினும் ஒவ்வொரு சொற்றொடரையும் உருவாக்குவதில் உதவினுள். கடிதம் எழுதிமுடித்து முத்திரை யிட்டு அனுப்பி வைத்த பின்னரே, 'இனி ஹேரியட்டுக்கு இக்கட்டேதுமில்லை' என்று எம்மா கருதினுள். அன்று மாலை முழுதும் ஹேரியட் சோர்ந்து காணப்பட்டாள். இத்தகைய வருத்தம் இயல்பானதே என எம்மா கருதினுள். தான் தோழியின்மீது கொண்ட அன்பினை யெடுத்துச் சொல்லியும், எல்டானைப்பற்றிய பேச்சினைத் தோற்றுவித்தும் தோழியின் துன்பத்தைப் போக்க முயன்ருள்.

எல்டானைப்பற்றிய நினைவுகள் மகிழ்வூட்டின. ஆயினும் சிறிது நேரத்துக்குப்பின், ஹேரியட் மறுபடியும் ராபர்ட்டை யெண்ணி மனமுருகலானுள்.

"என் கடிதம் அவரிடம் போய்ச் சேர்ந்திருக்கும். அவர்கள் எல்லாரும் என்ன செய்து கொண்டிருப்பார்களோ! அவர் வருந்தினல் அவர்தம் தங்கையரும் வருந்துவர்... அவர் அவ்வளவாக என் கடிதத்தைப் பொருட்படுத்த மாட்டார் எனவே கருதுகிறேன்.''

''நம் நண்பர்களுள் இங்கில்லாதவர் வேறு சிலரைப் பற்றிப் பேசுவோமே! இதே நேரத்தில் ஒரு கால் எல்டான் உன் படத்தைத் தம் தாயாரிடமும் தங்கைகளிடமும் காட்டியிருப்பார். படத்தைவிடப் யாவை பன்மடங்கு அழகி எனச் சொல்லிக்கொண்டிருப்பார். அவர்கள் ஆறேழு முறை வற்புறுத்திக் கேட்டபிறகே உன் பெயரை அவர்களிடம் தெரிவிப்பார்."

ஹேரியட் முறுவலித்தாள். அவளுடைய முறுவல்கள் பல்கிப் பெருகின.

---

8. அத்தானின் சீற்றம்

சில கிழமைகளாகவே ஹேரியட் ஒவ்வொரு நாளின் பெரும் பகுதியையும் ஹார்ட்ஃபீல்ட் மாளிகையிலேயே கழித்தாள். அவளுக்கெனத் தனியறைகூட ஒதுக்கப்பட்டது. சில நாட்களேனும் முழுமையாய் அவள் தங்க வேண்டுமென்பது முடிவாயிற்று. ஒருநாட் காலையில் அவள் காடார்ட் அம்மையிடம் சொல்லிவிட்டு வருவதற்காகச் சென்றிருந்தாள்.

அந்நேரத்தில் ஜார்ஜ் மாளிகைக்குப் போந்து ஹென்றியுடனும் எம்மாவுடனும் சற்று உரையாடினர். ஹென்றி உலவச் செல்ல வேண்டியவராயினர். செல்லுமாறு மகள் வற்புறுத்தினள். ஜார்ஜும் தூண்டினர். விருந்தினரை வீட்டில் வைத்துவிட்டுத் தாம் வெளியே போவதற்குத் தயங்கிய ஹென்றி பல வாறாக மன்னிப்புரைகள் வழங்கினர். இத்தகைய நடைமுறையெதிலும் நம்பிக்கையற்றவராய ஜார்ஜ் 'நறுக்குத் தெரித்தாற்போற்' பேசினர்.

"நானும் ஒரு நொடியில் வெளியே போகிறேன். நீங்கள் விரைவிற் செல்வதே நல்லது. உங்கள் மேலங்கியை எடுத்து வருகிறேன்.''

ஒருவாறு ஹென்றி உலவச் சென்ருர். 'ஒரு நொடி'யில் தாமும் போவதற்கு மாருக, ஜார்ஜ் மேலும் 'வம்பளக்க' விரும்பியவர்போல் மீண்டும் இருக்கையில் அமர்ந்தார். ஹேரியட்டைப்பற்றிப் பேச்செடுத்ததோடு பாராட்டுரைகளும் வழங்கினர்.

"நீ அவளைத் திருத்தி விட்டாய். பள்ளிச் சிறுமி போல் அவள் ஓயாமல் சிரித்ததெல்லாம் இப்போது நின்றுவிட்டது. அவளால் உனக்கு நற்பெயர் தான்."

"நன்றி. வேண்டுமிடத்துப் பாராட்டுரை எல்லாரும் வழங்குவதிலர். அதுவும் உங்களிடமிருந்து அடிக்கடி பாராட்டுக் கிடைத்து என்னைத் திணற அடிக்கச் செய்வதுமில்லை."

"இன்னும் சிறிது நேரத்தில் அவள் வந்து விடுவாள் இல்லையா?"

"எப்போதோ வந்திருக்க வேண்டும்."

"அவளைத் தடுப்பதற்கு யாதோ ஒன்று நிகழ்ந்திருக்கும். உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும். உன் தோழி தனக்கு நன்மையளிக்கக் கூடிய தொன்றனை விரைவிற் கேள்விப்படுவாள்."

எல்டான் ஏதேனும் குறிப்பாய்ச் சொல்லியிருப்பார் என நம்பி எம்மா மகிழலானாள். எல்டான் ஜார்ஜின் நட்பினையும் அறிவுரையையும் நாடுபவர் என அவள் அறிவாள்.

ஜார்ஜ் தொடர்ந்து சொன்னார். "ஹேரியட் விரைவிலேயே திருமணப்பேச்சினைச் செவிமடுப்பாள். அதுவும் முற்றிலும் எதிர்பாராத ஒருவர் அவளை மணக்க முன் வருவார். அவர் ராபர்ட்தாம். அவர் தாம் இத்துணை இளம் பருவத்தில் மணவாழ்வில் ஈடுபடலாகுமா என்றும், அவர் தெரிந்தெடுத்த பெண்ணைப் பற்றி என் கருத்து யாதென்றும் என்னைக் கலந்து பேசுதற்குப் போந்தார். ஒருகால் அவள் அவரைவிடச் சமூகத்தில் உயர் வட்டத்தில் பழகுவ

தால் அவர் இவ்வாறு ஐயுற்றிருக்கலாம். நேற்று அவர் அவளிடம் பேசியதாய்த் தோன்றவில்லை. இன்று அவர் காடார்ட் அம்மையின் இல்லத்துக்குப் போந்திருத்தல் கூடும்.

அவர் இத்தனை பேசிய போதெல்லாம் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்ட எம்மா, "ஏன்! அவர் நேற்றே பேசினாரல்லர் என்று எப்படி யறிவீர்கள்? நீங்கள் என்னிடம் கூறியவற்றுக்குப் பதிலாக, நான் சிலவற்றைச் சொல்கிறேன். அவர் நேற்றே பேசி விட்டார்; அஃதாவது எழுதினார். ஆயின் மறுக்கப் பட்டார்" என்றாள்.

இதனை இருமுறை செவிமடுத்தபிறகே ஜார்ஜ் நம்பினார். வியப்பாலும், மனக்குறையாலும் முகஞ் சிவந்த அவர், சீற்றத்தோடு எழுந்து நின்றார்; "அவ்வாறெனில் அவள் நான் கருதியதனைவிடப் படு முட்டாள். அவள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்?"

"ஐயோ; கொடுமை! ஒரு பெண் மணக்க மறுப்பது ஆணுக்கு எப்போதுமே புரியாத புதிர் தான். எவன் மணக்க முன் வந்தாலும் ஒரு பெண் ஆயத்தமாயிருப்பாளென்றே அவன் நினைக்கிறான்."

"உளறல்... எம்மனிதனும் இவ்வாறு கருதுவதில்லை. ஹேரியட் ராபர்ட்டை மணக்க மறுக்கிறாளா! பித்துக் கொண்டனளோ! ஒருகால் நீ தவறாகப் புரிந்து கொண்டிருப்பாய்."

"அவள் எழுதிய விடையை நான் கண்ணுற்றேன்."

"ஒருகால் நீயே அதை எழுதியுமிருப்பாய். எம்மா! இஃது உன் வேலைதான். அவள் அவரை ஏற்க மறுக்குமாறு நீ தானே வற்புறுத்தினாய்?"

"அப்படியே இருப்பினும், நான் தவறேதும் செய்து விட்டதாக மதிக்கின்றிலேன். ராபர்ட் கண்ணியம் வாய்ந்த இளைஞர்தாம். ஆயின் அவர் ஹேரியட்டுக்கு நிகராவர் என ஒப்புக்கொள்ளமாட்டேன்."

"ஹேரியட்டுக்கு நிகரில்லையா! ஆமாம். அவர் ஹேரியட்டுக்கு நிகரில்லைதான். அவளைவிட அறிவிலும் தரத்திலும் உயர்ந்தவர். எம்மா! நீ அப்பெண் மீது கொண்ட பற்றுதல் உன் கண்ணை மறைக்கிறது. ராபர்ட்டைவிட உயர்ந்தவள் என உரிமை கொண்டாடுவதற்கு அவளிடம் குடிப்பிறப்போ, இயல்போ, கல்வியோ ஏதேனும் உண்டா?...இத் திருமணத்தால் விளையும் நன்மையெல்லாம் அவளுக்கேயென உணர்ந்தேன். அவளது நல்லூழைப் பலரும் போற்றுவர் என ஐயமற நம்பினேன். நீ கூட மனநிறைவு கொள்வாய் என உறுதியாயிருந்தேன்."

"இந்த எம்மாவைப் பற்றி நீங்கள் அறிந்தது அவ்வளவுதானா! நினைப்பதே எனக்கு வேடிக்கையாயுள்ளது. ஒரு குடியானவரை என் நெருங்கிய தோழிக்குப் பொருத்தமான கணவர் என நானா நினைப்பேன்!"

"கழிந்த கோடைக் காலத்திற்கூட அவள் ராபர்ட் குடும்பத்தோடு மகிழ்ந்திருந்தாளே! அப்போதொன்றும் அவள் இவ்வுயர்வெண்ணங் கொண்டிலளே! இப்போது அவளுக்கு இவ்வெண்ணம் வந்துளது எனில் நீ கொடுத்ததுதான். நீ அவளுக்குத் தோழியில்லை. எம்மா."

"பதினேழாம் ஆண்டினில் - வாழ்வில் புகும் பருவத்தில் - முதன்முதலாய்த் தன்னை மணக்க முற்பட்ட ஒருவரை அவள் ஏற்றிலள் என்பதற்காக அவளைக் குறைவுபடப் பேசலாகுமா?"

"ஹேரியட் அழகிதான். ஆயினும் மணவாய்ப்புக்கள் அவளுக்குப் பெருகிவரப் போவதில்லை. நீ யாது கூற முற்படினும் அறிவுடை மாந்தர் முட்டாள் மனைவியரை நாடுவதில்லை. குடிப் பிறப்பாளர், பிறப்பு வரலாறறியாத இத்தகைய பெண்ணோடு தம்மைத் தொடர்பு படுத்த விரும்பமாட்டார்."

"அத்தான்! இத்துறையில் இருவேமும் பெரிதுங் கருத்து மாறுபாடுடையோம். ஆதலின் விட்டு விடுவோம். ஒருவரையொருவர் சீற்றங்கொள்ளச் செய்வதில் பயனில்லை. ஆயின் அவள் ராபர்ட்டை மணப்பதற்கு நான் இடங்கொடுப்பது நடவாது. அவர் அவள் தோழிகளின் தமையன். அவளை மகிழ்விக்க வருந்தி முயன்றார். அவரினும் சிறந்தவர் வேறெவரையும் கண்டிராத காரணத்தால் அவளும் அவரைப் பொருத்தமானவரெனக் கருதியிருக்கலாம். இப்போது நிலைமை மாறியுள்ளது. உயர்குடிப் பிறந்தார் எவர் என அவள் அறிவாள். கல்வியும் பண்பும் வாய்ந்த உயர்குடிப் பிறந்தவர் தவிர வேறெவரும் ஹேரியட்டை யடைய வாய்ப்பில்லை."

"உளறல், வெறும் உளறல். ராபர்ட்டின் பண்புகளில் அறிவுண்டு; நாணயமுண்டு; நற்பாங்குண்டு.

அவர்தம் மனத்தில் ஹேரியட் புரிந்து கொள்ள முடியாத உண்மையான உயர்குடிச் சிறப்புண்டு.''

எம்மா ஏதும் விடையளித்திலள். தனக்குச் சிறிதும் தொடர்பில்லை என்பது போன்று தோற்றமளிக்க முயன்றாள். உள்ளுக்குள் அவள் பரபரக்கலானாள். ஜார்ஜ் தன்னைவிட்டுச் செல்லமாட்டாரா என நினைக்கலானாள். பொதுவாக அவர் சீர்தூக்குந் திறன் மிக்கார். அத்திறனில் நம்பிக்கையுடைய அவள், இப்போது அது தனக்கெதிராய் இருத்தலைக் கண்டு உள்ளூற நடுங்கினாள்.

அவர் தொடர்ந்து சொன்னார்: ''ராபர்ட்டின் இழப்புப் பெரிதன்று. இணை சேர்ப்பதில் உனக்குள்ள ஈடுபாட்டினை நீ மூடி மறைப்பதில்லை. ஏதோ கருத்து—திட்டம்—வைத்திருப்பாய். நண்பனென்ற முறையில் குறிப்பாய்ச் சொல்வேன். எல்டான் எனில் உன் உழைப்பெல்லாம் வீணேயாகும்."

எம்மா நகைத்து ஒதுக்க முயன்றாள்.

அவர் மேலும் சொன்னார்: ''என்னை நம்பு. எல்டான் ஒத்துவர மாட்டார். அவர் நல்லவர். ஹைபரியில் மதிப்பிற்குரிய பாதிரியார். பொருந்தா மனைவியைத் தெரிந்தெடார். அவர் உணர்ச்சி வயப்பட்டுப் பேசுவார்; ஆயின் அறிவு வயப்பட்டே செயல் புரிவார். அவர் தம் தங்கைகளின் தோழிகளாய இளம்பெண்களைப் பற்றி ஆர்வத்தோடு பேசக் கேட்டுள்ளேன். அப்பெண்களுள் ஒவ்வொருத்தியும் இருபதினாயிரம் பவுனுக்குரியவள்.''

"எல்டான் ஹேரியட்டை மணக்க வேண்டுமென முயன்றிருப்பேனாயின், நீங்கள் கூறியவை என்

கண்களைத் திறக்கப் பயன்படும். ஆயின் இப்போதைக்கு ஹேரியட்டை நானே வைத்திருக்க விழைகிறேன்.''

''போய் வருகிறேன்'' என்ற ஜார்ஜ் எழுந்து விரைவாய் வெளியேறினார். அவர் பெரிதும் சீற்றங் கொண்டார். 'நான் ஒப்புதலளித்த பிறகன்றோ அவ்விளைஞன் ஏமாற்றத்துக்குள்ளாயினான்? அதனால் நானே அவ்வேமாற்றத்துக்குக் காரணமானேனே! இக்குழப்பத்தில் எம்மாவுக்கும் பெரும்பங்கு உள்ளதே!' என்றெண்ணிச் சீறினார் அவர்.

எம்மாவும் ஒருவகைச் சீற்ற நிலையிலேயே இருந்தாள். ஆயின் அவள் பெரிதும் சோர்ந்திலள். காலக் கழிவும், ஹேரியட்டின் வருகையும் அவளுக்குப் புத்துணர்ச்சி யளித்தன. ஹேரியட் மீண்டு போந்த போது ராபர்ட்டைப் பற்றி நினைத்திலள்; எல்டானைக் குறித்துப் பேசினாள்:-''மருத்துவர் பெர்ரி தடுத்துங் கேளாமல், எல்டான் லண்டனுக்குச் சென்றார். உலகில் எத்தகைய பொருள் கிடைப்பினும் தம் பயணத்தைக் கைவிடார் என்றும், மற்றவர் பொறாமை கொள்ளக் கூடிய வகையில் தமக்கொரு நற்பணி கிட்டியுள்ளது என்றும் கூறினார். எவளோ காதலி ஒருத்தியிருத்தல் வேண்டுமெனப் பெர்ரி முடிவு கட்டினார். எல்டானிடமே கூறினார். அவர் சிரித்தவாறே சென்றுவிட்டார். இச்செய்திகளையெல்லாம் மற்றோர் ஆசிரியையாகிய நாஷ் அம்மை என்னிடம் கூறினாள். எல்டானால் தெரிந்தெடுக்கப்பட்ட பெண் உலகிலேயே மிக்க நல்லூழ் வாய்க்கப்பெற்றவள் என்றும் அவள் சொன்னாள்.''

9. விடுகவித் தலைவர்

ஜார்ஜ் எம்மாவோடு பூசலிடலாம். அவள் தன்னோடு பூசலிடல் முடியாத ஒன்று. அவர் அவளிடம் சினங்கொண்டாராதலின் வழக்கத்துக்கு மாறாகப் பலநாள்வரை ஹார்ட்ஃபீல்டை எட்டிப்பார்த்திலர். மறுபடி அவர்கள் கண்டுபேசிய போதும், அவரது கடுகடுத்த பார்வையே அவர் அவளை மன்னித்திலர் என உணர்த்திற்று. அவள் வருந்தினாள்; ஆயின் இரங்கினாளல்லள்.

விரைவிலேயே எல்டான் மீண்டார். ஓவியம் சட்டம் போடப் பெற்று வரவேற்பறையில் மாட்டப் பட்டது. அவர் எழுந்து நின்று அதனை நோக்கினார். எதிர்பார்த்தபடி நெடுமூச்சுடன் அரைகுறைத் தொடர்களால் பாராட்டுரை வழங்கினார். ஹேரியட்டின் உணர்வுகளும் நெருங்கிய உறவாக வளரலாயின. எல்டானோடு ஒப்பிட்டு நோக்குதற் கன்றி வேறெவ்வகையிலும் தன் தோழியின் உள்ளத்தே ராபர்ட்டின் நினைவெழுந்திலது என்று எம்மா நன்கறிந்தாள்.

எம்மா தன் தோழியின் உள்ளத்தைக் கல்வியாலும் உரையாடலாலும் பண்படுத்த விழைந்தாள். பல நூல்களின் முதற்படலமே கற்கப்பட்டன. எஞ்சியவை மறுநாளைக்கென ஒதுக்கப்பட்டன. நூல்களைக் கற்றலினும் உரையாடல் எளியதாகவும், தோழியின் நல்லூழைக் குறித்துக் கற்பனை செய்து மகிழ்வதற்கு வாய்ப்பாகவும் விளங்கிற்று. ஹேரியட்டின் இலக்கியக் கல்வியாகவும், மாலைக் காலப் பொழுதுபோக்காகவும் விளங்கியது, பலதரப்பட்ட

விடுகவிகளையும் தொகுத்து ஓர் ஏட்டில் எழுதுவது தான்.

எம்மா தன் நினைவாற்றலைத் தோழிக்கு உதவுதவில் பயன்படுத்தினாள். ஹென்றி அவ்விளம் பெண்களின் கல்வியில் நாட்டமுடையவராயிருந்தார்; பலமுறை உதவவிழைந்து நினைவு கூர முயன்றார். அனைவருமறிந்த தொரு விடுகவி நீங்கலாய் வேறெதுவும் அவரது நினைவில் எழவில்லை.

ஹைபரியின் அறிவுடைப் பெருமக்களின் உதவியை யெல்லாம் நாடவேண்டுமென்பது எம்மாவின் விருப்பமன்று. அவள் எல்டான் ஒருவரின் உதவியையே நாடினாள். அவர் தம் உள்ளத்தை யொருக்கப் பெரும் பாடுபட்டார். ஆண்மைக்குப் பெருமை தருவதும் பெண்டிரைப் பாராட்டுவதும் தவிரப் பிறிதெதுவும் தம் வாயாற் சொல்லலாகாதென அவர் முயன்றார். இறுதியில் அவர் மகிழ்ச்சிப்பெருக்குடன் நினைவு கூர்ந்து உரைத்த ஒரு விடுகவியும் ஏற்கெனவே அப் பெண்டிரின் ஏட்டினில் இடம் பெற்று விட்டதாய் இருந்தது.

“நீங்களாகவே ஒன்று புனையுங்களேன்! அஃது உங்களுக்கு எளிய செயலே” என்றாள் எம்மா.

தாம் இதுகாறும் ஏதும் எழுதியதில்லையென அவர் மறுத்தாராயினும் மறுநாள் அவர் ஒரு தாளுடன் போந்தார். தம் நண்பரொருவர் அவரால் பெரிதும் விரும்பப்பெற்ற இளம் பெண்ணுக்கு எழுதியனுப்பியதென்றுரைத்து அவர் ஒரு விடுகவியடங்கிய தாளைக் கொடுத்தார். பேசிய முறையாலேயே, அக்கவி அவர் எழுதியதென எம்மா உணர்ந்

தாள். அவர் சென்றபின் அவள் தன் தோழியிடம் அதனைக் கொடுத்து, "அமைதியாய்ப் படித்துப்பார். அஃது உனக்காகவே உன்னைப் பற்றி எழுதப்பட்டது என்பதில் ஐயமின்று. அவர் உன்னை விரும்புகிறார். விரைவிலேயே அவ்விருப்பத்தை வெளிப்படக் காட்டுவார். உன்னைக் கண்ட நாள் முதலே, நான் என்ன முடிவு செய்தேனோ, அதற்கேற்பவே அவரது மனநிலை தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளது' என்றாள்.

"நீங்கள் எது சொன்னாலும் நடந்து விடுகிறது. நான் கற்பனை செய்திருக்கவும் இயலாது. என் தகுதிக்கும் அப்பாற்பட்டது இப்பேறு. அவர் நினைத்தால் எவளை வேண்டுமாயினும் மணக்கலாமே!...உள்ளபடியே இக்கவி எனக்காக எழுதப் பட்டதுதானா?"

"நான் அதுபற்றி ஐயுறேன். ஐயுறுதலையும் என் செவியாற் கேட்கமாட்டேன். இக்கவி நாடகத்திற்கு முன்னுரை போலவும் படலத்திற்குக் குறிக்கோள் போன்றும் அமைந்துளது. இதைத் தொடர்ந்து உலகியலையொட்டிய 'உரைநடை'யும் பிறக்கும்."

ஹேரியட் கவியைக் கூர்ந்து நோக்கினாள். பல ஒப்பீடுகள் அவளுள்ளத்தே தோன்றி நிறைவளித்தன. தொடர்ந்து, கன்னஞ் சிவக்க அவள் சொன்னாள்: "எல்லாரையும் போலப் பொது வகையில் பொது அறிவு பெற்றிருப்பதனால், உட்கார்ந்து, சொல்ல வேண்டியவற்றைச் சுருக்கமாய்க் கடிதத்தில் எழுதுவது வேறு; இது போற் கவிகளும், விடுகவிகளும் எழுதுவது வேறு."

ராபர்ட்டின் கடிதத்தை இதைவிட எப்படி அடியோடு புறக்கணித்து விட முடியும்! எம்மா பெரிதும் மகிழ்ந்தாள்.

சற்று நேரத்தில் ஹென்றி அங்குப் போந்தார். எம்மா அவரிடம் அக்கவியைப் படித்துக் காட்டினாள். அவருக்குப் பிடித்தமான வகையில் நிறுத்தித் தெளிவாக இரண்டு மூன்று முறை படித்துக் காட்டினாள். ஒவ்வொரு பகுதிக்கும் அவ்வப்போது விளக்கங் கூறினாள். அவள் எதிர்பார்த்தவாறே அவர் பெரிதும் மகிழ்ந்தார். கவியின் இறுதியில் இடம் பெற்ற பாராட்டுரை அவரைக் கவர்ந்தது.

இதனையொட்டி யெழுந்த பேச்சினில் அவர் இசபெல்லாவை நினைத்தார். "அவள் அடுத்த கிழமையில் இங்கிருப்பாள். அவள் வந்து எத்தனை காலம் கழிந்துவிட்டது! கழிந்த ஈஸ்டர் பண்டிகையின் போது வந்தாள். சில நாட்களே தங்கினாள். மாப்பிள்ளை வழக்கறிஞராயிருப்பது மிகவுந் தொல்லை தான். அளியள் இசபெல்லா! நம்மிடமிருந்து பறிக்கப் பட்டாள்! அவள் வரும்போது அன்னா இங்கில்லை என்றறிவாளாயின் பெரிதும் வருந்துவாள்" என்றார்.

"வருந்துவாளோ இல்லையோ, வியப்புற மாட்டாள்."

"அன்னாவின் திருமணத்தைப் பற்றிக்கேள்விப் பட்டபோது நான் மிகவும் வியப்புற்றேன்."

"இசபெல்லா வந்திருக்கும் போது, நாம் வெஸ்டனையும் அன்னாவையும் விருந்திற்கழைக்க வேண்டும்."

"நேரம் இருந்தாற் செய்வோம். அவள் ஒரு கிழமைதானே தங்கப் போகிறாள்!"

"அதிக நாள் அவர்கள் தங்க முடியாதது வருந்தற்குரியதே."

"அவர் தாம் விரைந்து திரும்பவேண்டுமென்றால், அவளும் ஏன் போக வேண்டும்? எம்மா! நான் எப்படியேனும் முயன்று, அவளையும் குழந்தைகளையும் இங்கு அதிகநாள் தங்கச் செய்வேன்."

"நடவாது. கணவரைப் பிரிந்து இசபெல்லா இங்கிருக்க ஒவ்வாள்." இது மறுக்க வியலா உண்மையே. கசப்பாக இருந்ததேனும் ஹென்றி பெருமூச்செறிவதன்றி வேறு செய்வதறியாதவரானார். அவரது துன்பத்தை யுணர்ந்த எம்மா பேச்சினை வேறு கிளையில் திருப்பலானாள்.

"அக்காவும் அத்தானும் வரும்போது, ஹேரியட்டும் இங்கிருக்க வேண்டும். இவள் அக்குழந்தைகளைக் காண மகிழ்வாள்."

"அந்தச் 'சின்னஞ்சிறியது'களுக்குத்தான் இங்கு வரவேண்டுமென எத்தனை ஆவல்!"

அந்நாட் காலையிலேயே 'விடுகவி' த்தலைவர் மறுபடியும் அங்குப் போந்தார். ஹேரியட் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். எம்மா வழக்கமான முறுவலுடன் வரவேற்றாள். அவளது கூரிய பார்வை, அவரது வருகைக்கான நோக்கத்தைப் புரிந்துகொண்டது. 'பகடை உருட்டியாயிற்று; பலனை யறிந்து கொள்வதுதான் அவரது நோக்கம்' என்பது விளங்கிற்று. அவர் பொதுவாக உரையாடி விடை

பெற்றுப் புறப்படும் சமயத்தில் எம்மா விடுகவித் தாளை அவரிடம் கொடுத்து, "நாங்கள் இக்கவியைப் படித்துப் பெரிதும் மகிழ்ந்தோம். ஹேரியட் ஏட்டினில் வரைந்து கொண்டாள். முதல் எட்டு வரிகளையே நகலெடுத்தோம். உங்கள் நண்பர் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டாரென நினைக்கிறேன்" என்றாள்.

யாது கூறுவதென்றறியாதவரானார் எல்டான். குழப்பமுற்றவராய் ஏதோ 'பெருமை'யென முணுமுணுத்தார். ஏடு மேசை மீது பிரிந்து கிடப்பதனைக் கண்ணுற்றவராய் எடுத்துக் கருத்துடன் ஆராயலானார்.

எம்மா முறுவலித்தவாறே, "உங்கள் நண்பரிடம் மன்னிக்கச் சொல்லுங்கள். இத்துணை நல்ல கவி ஓரிருவர் மட்டுமே யறிந்ததாக விளங்கலாமோ?" என்றாள்.

பேசுகையில் பன்முறை தயங்கினாரேனும் எல்டான் சொன்னார்: "சொல்வதில் என்ன தயக்கம்! ஆமாம்...சொல்வதில் என்ன தயக்கம்!...என்னைப் போலவே என் நண்பரும் சிறிதளவேனும் உணர்வாராயின், அவரது சிறிய கவியூற்று எத்துணைப் பெருமை பெற்றுளது எனக்கண்டு, இதனைத் தம் வாழ்நாளின் மிகச் சிறப்பான நேரமென மதித்திடுவார்."

இதனைச் சொல்லியவுடனேயே எல்டான் புறப்பட்டுச் சென்றார். அவர் நல்லியல்புகளுடையவரே யாயினும், அவரது பேச்சினில் தென்பட்ட ஒருவகைப் பகட்டு எம்மாவுக்குச் சிரிப்பூட்டியது. அவள் அவ்வுணர்வினை அடக்க முடியாதவளாய் உருக்கத்தையும் உயரின்பத்தையும் தன் தோழி தனிமையில் துய்க்குமாறு விட்டுவிட்டு அறையினின்று ஓடோடி வெளியேறினாள்.

---

10. வாயாத வாய்ப்பு

திசம்பரின் இடைப்பகுதியினில் குளிர் மிகுதி யில்லை. ஹைபரிக்கு வெளியே சற்றுத் தொலைவில் வாழ்ந்த ஓர் எளிய குடும்பத்தைப் பார்வையிடும் அறக்கடமை எம்மாவுக்கு வாய்த்தது. அவள் தன் தோழி ஹேரியட்டுடன் புறப்பட்டாள்.

வழியில்தான் பாதிரியார் இல்லம் அமைந் திருந்தது. அவர்கள் அதனைக் கூர்ந்து நோக்கிய வாறே பைய நடந்தனர். எம்மா குறிப்பிட்டாள்: "அதோ! அங்கேதான் உன் விடுகவி ஏட்டுடன் விரை வில் ஒருநாள் போகப் போகிறாய்."

"அடடா! எவ்வளவு அருமையான வீடு! எத்துணை அழகு!" என்றாள் ஹேரியட்.

தன்தோழி அவ்வீட்டிற்குள் புகுந்ததே யில்லை யென்றும், அதனைப் பார்ப்பதற்கு மிகுதியும் ஆவல் கொண்டுள்ளாள் என்றும் எம்மா அறிந்தாள். இவை அவளது காதற்குச் சான்றுகளேயென அவள் மதித் தாள். எனினும் மாளிகையினுள் நுழைதற்குத் தக்க காரணமேதும் புலப்பட்டிலது. சில கண அமைதிக் குப்பின் ஹேரியட் சொன்னாள்: "என் அருமை எம்மா! நீங்களும் விரைவில் மணஞ்செய்து கொள் வீர்களில்லையா? உங்கள் அழகென்ன சாதாரணமா?"

எம்மா நகைத்தபின் விடையளித்தாள்: "நான் அழகாயிருப்பதுமட்டும், மணம் புரியுமாறு என்னைத் தூண்டிவிடாது. மற்றவர்களும் - குறைந்த அளவு, மற்றொருவரேனும் - அழகாயிருப்பதனை நான் காண வேண்டுமே! இதுகாறும் நானறிந்தவர்களை விடப்

பன்மடங்கு மேலான ஒருவரை நான் காண வேண்டுமே! ஒருகால் நான் காதலிற் சிக்கியிருப் பேனாயின், நிலைமை வேறாயிருந்திருக்கும்! ஆயின் நான் ஒருபோதும் காதலித்தறியேன். அஃது என் இயல்புமன்று. செல்வத்தை வேண்டேன்; செய் தொழிலை வேண்டேன்; சிறப்புக்களை வேண்டேன்."

"அவ்வாறாயின் பேட்ஸ் அம்மைபோல் முதிய கன்னியாவீர்களோ!"

"அவளைப்போல் நுண்ணறிவற்ற கிழவியாய் மாறிவிடுவேன் என நினைப்பேனாயின், மறுநாளே மணந்து கொள்வேன். ஆயின் எங்களிருவர்க் கிடையே மணமாகா நிலை தவிர வேறெதுவும் ஒப்புமை இராதென்பது உறுதி."

"அதனால் என்ன? நீங்களும் முதிய கன்னியாகத் தானே ஆவீர்கள்?"

"ஏழைக் கிழவியாக மாட்டேன். வறுமைதான் மணமில்லா முதுமையை மக்கள் வெறுக்குமாறு செய்துவிடுகிறது. அறக்குறைந்த வருவாயுடைய பெண் தனி வாழ்க்கை நடாத்துவளாயின் எள்ளற் குரிய சிடுசிடுப்புக் கிழவியாயிருப்பாள். பெருஞ் செல்வமுடைய பெண்ணோ, தனித்து வாழினும் பல ராலும் மதிக்கப்படுபவளாவாள்."

"முதுமைப் பருவத்தில் எப்படிப் பொழுது போக்குவீர்கள்?"

"இருபத்தோராண்டினை விட நாற்பதைம்பது ஆண்டினில் வேலையில்லாமை பற்றிய உணர்வு ஏன் மிகுதியும் எழவேண்டும்? ஒரு பெண்ணிற் குரிய

வேலைகள் இப்போதிற் போலவே அப்போதும் கைகொடுக்குமே! மருகரும் மருகியும் இருப்பரே! மருகி ஒருத்தி எப்போதும் என்னுடன் இருப்பாள்.''

"நீங்கள் பேட்ஸ் அம்மையின் மருகியை அறிவீர்களோ?''

''அவள் ஹைபரிக்கு வரும்போதெல்லாம் நாங்கள் பழகவேண்டியவர்களாகிறோம். அவளது பெயரை (ஜேன் ஃபேர்ஃபேக்ஸ் என்று) கேள்விப்படும் போதெல்லாம் எரிச்சல் பிறக்கிறது. அவளிடமிருந்து வரும் ஒவ்வொரு கடிதமும் நாற்பது முறை படிக்கப்படுகிறது. அவள் தன் சிற்றன்னைக்கு ஏதேனும் சிறுபொருளையனுப்பி விடிலோ, ஒரு திங்களளவும் அதுவே பேச்சாகி விடுகிறது. ஜேன் நன்றாய் வாழவேண்டுமென விரும்புகிறேன். ஆயின் அவளது பேச்சு என்னைக் கொல்லுமளவு வதைக்கிறது.''

அவர்கள் இவ்வாறு உரையாடிய வண்ணம் வழி நடந்தனர். சந்தின் வளைவினைக் கடந்தபோது எல்டான் கண்ணிற் பட்டார். மிகவும் நெருங்கிக் கொண்டிருந்தாராகலின் எம்மா, ''ஹேரியட்! துன்புறுவோர்க்கு ஆறுதலும் ஊக்கமும் அளிக்குமாயின், இரக்கம் தன் முதன்மையான பணியைச் செய்து விட்டதெனலாம்'' என்பதன்றி வேறேதும் சொல்ல முடியாதவளானாள்.

ஹேரியட் ''ஆமாம்'' என்பதற்குள்ளாகவே எல்டான் அவர்களை யணுகிவிட்டார். ஏழைகளின் துன்பமும் தேவைகளும் பற்றியே உரையாடல் பிறந்தது. எளியோரைக் கண்டு ஆறுதல் கூறவே

கிளம்பிய அவர் தம் பயணத்தை ஒத்திவைத்து விட்டு அவர்களோடு வழிநடக்கலாயினார்.

'இத்தகைய அறப்பணியினூடே ஒருவரையொருவர் காணுதல் இருவரிடையேயும் காதலை மிகுதியும் வளர்க்கும். காதலை வெளியிடுதலும் நிகழலாம் - நான் இங்கில்லாமற் போனால்! நான் வேறெங்கேனும் சென்றிருக்க மாட்டேனா!' என நினைத்தாள் எம்மா.

அவர்களை விட்டுச் செல்லக்கருதிய எம்மா, சாலையினின்றும் ஓர் ஒற்றையடித் தடத்தில் பிரிந்து செல்லலானாள். இரு நிமிடத்திற்குள்ளாக எம்மாவைச் சார்ந்திருந்தே பழக்கப்பட்ட ஹேரியட் அவளைப் பின் தொடர்ந்தாள். எல்டானும் அவ்வாறே செய்யலானார். இது தகாதென வுணர்ந்த எம்மா குனிந்து தன் காலணியை இறுகக் கட்டுபவளைப் போல் நடித்தாள். அவ்விருவரையும் முன்னே செல்லுமாறு வேண்டினாள். தான் விரைவில் அவர்களை எட்டிப் பிடிப்பதாய்க் கூறினாள். அவர்கள் உரையாடியவாறே முன்னே சென்றனர். எம்மா தன்னாலியன்ற அளவும் காலந்தாழ்த்தினாள். அச்சமயம் ஒரு குடிசையினின்று சிறுமியொருத்தி குவளையுடன் வெளிப்பட்டாள். ஹார்ட்ஃபீல்டினின்று கஞ்சிபெற்று வரக்கிளம்பிய அச்சிறுமியுடன் உரையாடியவாறே நடத்தல் இயற்கையாகவே படுமன்றோ? எம்மா அம்முறையிற் காலங்கடத்த முயன்றாள். சிறுமியோ விரைவாய் நடந்தாள். ஆகவே சிறிது நேரத்திற்குள் எம்மா மற்றையிருவரை யணுகிவிட்டாள்.

எல்டான் ஆர்வத்தோடு ஏதோபேச, ஹேரியட கருத்தாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆயின் அவர் பேசியது முதல்நாள் தாம் கலந்து கொண்டதொரு விருந்தினைப் பற்றியே யென்றறிந்த போது எம்மா ஏமாற்ற மடைந்தாள். அப்போதும் 'இதைத் தொடர்ந்து ஏதேனும் காதற்பேச்சு வெளிப்பட்டிருக்கும். நான் இன்னும் சற்றே காலந் தாழ்த்திருக்க வேண்டும்' என்றெண்ணினாள் எம்மா.

அவர்கள் அமைதியாய் நடந்து, பாதிரி மாளிகையை மறுபடியும் அணுகினர். மற்றை யிருவரும் காணாதபோது, எம்மா தன் காலணியின் சிறு கயிற்றில் ஒரு பகுதியை அறுத்தெறிந்தாள். எல்டானின் மாளிகையினின்று 'நாடா'வோ சிறு கயிறோ பெறும் நோக்கத்துடன் அங்குப் புகுதல் வேண்டுமென்றாள்.

எல்டான் பெருமகிழ்ச்சியோ டிணங்கினார். மூவரும் மாளிகையுட் புகுந்தனர். எம்மா அவ்வீட்டுப் பணிமகளுடன் உரையாடலில் ஈடுபட்டாள். எல்டானும் ஹேரியட்டும் பக்கத்தறையில் பேசிக்கொண்டிருந்தனர். ஊடே யிருந்த கதவு எம்மா எதிர் பார்த்தவாறு அடைக்கப்படவில்லை. பத்து நிமிடம் எம்மா பணிமகளுடன் பேசியபோதும் பலனில்லை. இனியும் காலந்தாழ்த்த இயலாதவளாய் அவள் மற்றை யிருவர் முன் சென்றாள். 'காதலர்' இருவரும் சாளரத்தருகே நின்றனர். எம்மா தன் திட்டத்தின் வெற்றி குறித்து மகிழலானாள். ஒரு நொடிதான். ஆயின் பின்னரே அவர் 'குறிப்பிட்ட செய்தி'யைச் சொன்னாரல்லர் என்பது தெரிந்தது. அவர் ஆர்வத்

தோடும் இன்பத்தோடும் ஹேரியட்டிடம் உரையாடினார். அவர்கள் போவதனைப் பார்த்து வேண்டுமென்றே பின் தொடர்ந்ததாகக் கூடச் சொல்லி யிருக்கிறார். குறிப்புக்களும் சிறு சிறு ஆண்மைப் பேச்சுக்களும் தவிர வேறேதும் காதற் பேச்சு நிகழ்ந்திலது.

'மிகவும் எச்சரிக்கையுடையவர் போலும்! தமக்கு வெற்றியுறுதி யெனப் புலப்படும் வரை பையப்பையத்தான் அடியெடுத்து வைப்பார்' என்றெண்ணினாள் எம்மா. அவளது ஒப்பற்ற திட்டத்தால் எதுவும் நடைபெறவில்லையெனினும், அவ்வாய்ப்பு அவ்விருவருக்கும் பெருமகிழ்ச்சியினை வழங்கிற்றென்றும் அவர்களைத் திருமணம் வரை அழைத்துச் செல்லுமென்றும் எண்ணி அவள் தன்னைத் தானே பாராட்டிக் கொண்டாள்.

---

11. குடும்ப விருந்து

இப்போது எல்டான் அவரது போக்கினில் விடப்பட வேண்டியவரே. அவரது மகிழ்ச்சியைக் கண்காணிப்பது எம்மாவால் இயலாதது. அவள் தமக்கையும் குடும்பத்தாரும் வருவது, எதிர்பார்க்கப் பட்ட நிலைமாறி நடைமுறை நிலையாகிவிட்டது. அன்றியும் சிலரைப் பொறுத்தமட்டில் நாம் எவ்வளவு செயற்படுகிறேமோ அவ்வளவு அவர்கள் தமக்காகச் செயற்படுவதிலர்.

இசபெல்லாவும் குடும்பத்தாரும் ஹார்ட்ஃபீல்டுக்கு நெடுநாளைக்குப் பின் போந்தனர். ஹென்றி அவர்களது பயணத்தில் இடையூறுகள் நேரலாமோ என அஞ்சினர். அப்படியேதும் நிகழவில்லை. ஜானும் இசபெல்லாவும் ஐந்து குழந்தைகளும் திறமை சான்ற தாதிகள் சிலரும் நலமே ஹார்ட்ஃபீல்டை அடைந்தனர்.

இசபெல்லா மெல்லிய—அமைதியான—இயல்புகளுடைய அழகிய இளமடந்தை; 'கொழுநன் தொழுதெழுபவள்;' குழந்தைகளை உயிரென மதிப்பவள்; தந்தை தங்கை ஆகியோரிடம் பேரன்பு கொண்டவள்.

ஜான் நெடிய உருவும் கூரிய மதியும் படைத்தவர்; ஒதுங்கிப்போகும் இயல்புடையவராதலின் பலரை மகிழ்வித்திடக் கற்றவரல்லர். சிறப்பாகக் 'கொழுந்தியா'ளின் பாராட்டிற்கு உரியவரல்லர். அவரது எக்குற்றமும் அவளது பார்வைக்குத் தப்புவதில்லை. அவரால் இசபெல்லாவுக்குச் சிறு

தீங்கு நிகழினும் - இசபெல்லாவே உணராமற் போயினும் - எம்மா உணர்ந்து வருந்துவாள். அவர் தம் மாமனாரிடம் மதிப்பும் பொறுமையுமின்றிப் பேசிய முறையே எம்மாவுக்குப் பெருங்குறையாய்ப் பட்டது. இத்தனைக்கும் அவர் தம் மாமனாரிடம் பெருமதிப்பு உடையவரே. எனினும் சிலவேளைகளில் விட்டுக் கொடுக்காமற் பேசிவிடுவார்.

வந்தவரெல்லாம் ஒருவழியாய் அமர்ந்து இளைப்பாறினர். ஹென்றி பெருமூச்சுடன் தலையையாட்டியவாறு அணிமையில் மாளிகையில் நிகழ்ந்த மாறுதலைக் குறித்துப் பேசினர்: "அளியள், அன்னா! வருத்தமளிக்கும் செய்தி."

"அவளை அடிக்கடி பார்ப்பீர்களா, அப்பா?" என அக்கறையுடன் உசாவினுள் இசபெல்லா.

ஹென்றி தயங்கினர்: "நான் விரும்புகிறபடி அடிக்கடி பார்க்க முடிவதில்லை" என்றார்.

எம்மா குறுக்கிட்டாள்: "என்ன அப்பா! அவளுக்குத் திருமணமான பிறகு ஒரே ஒருநாள்தான் அவளைப் பார்த்திலோம். மற்றப்படி ஒவ்வொரு நாளும் காலையிலோ, மாலையிலோ வெஸ்டனையோ அன்னாவையோ இருவரையுமோ, இங்கோ அவர்களது மாளிகையிலோ பார்க்கத்தானே செய்தோம்! அப்பா! நீங்கள் இப்படி வருத்தத்தோடு பேசினால், அக்கா நம்மைப்பற்றித் தவருக நினைத்துவிடுவாள்."

"ஆமாம்....ஆமாம். அளியள் அன்னா! நம்மைப் பார்க்க அடிக்கடி வரத்தான் செய்கிருள். மறுக்கின்றிலேன். ஆயின் மறுபடியும் போய் விடுகிருளே!"

"போகாவிடில் வெஸ்டான் பாடு திண்டாட்டமன்றோ!"

ஜான் இடைமறித்தார்: "ஆமாம், வெஸ்டானின் மகன் எங்கிருக்கிறான்? திருமணத்திற்கு வந்திருந்தானா?"

எம்மா விடையளித்தாள்: "இதுகாறும் வந்திலர். திருமணத்துக்குப் பின் வருவாரெனப் பெரிதும் எதிர் பார்த்தார்கள்."

ஹென்றி சொன்னார்: "அவனது கடிதத்தைப் பற்றிச் சொல்லவில்லையே, அம்மா! அவன் அன்னைவுக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கடிதம் எழுதினான். மிகவும் அழகிய—சிறப்பான—கடிதம். அவளே என்னிடம் காண்பித்தாள். அவனே எழுதினானோ என்னவோ! சொல்வதியலாது. அவன் சிறுபிள்ளை தானே?"

"அட அப்பா! அவர் இப்போது இருபத்து மூன்றாண்டெய்தியவர்."

"இருபத்து மூன்றா! உண்மையாகவா! நான் நினைக்கவேயில்லையே! அவன் தாய் இறந்தபோது அவன் இரண்டேயாண்டினன்தான். காலம் எப்படிப் பறக்கிறது!..."

ஜார்ஜும் அன்றிரவு அவர்களோடு உண்ணுவதென ஏற்பாடாகியிருந்தது. மைத்துனர்க்குரிய மதிப்பினை வழங்குவதேயன்றி அவரை வரவழைப்பதில் எம்மாவுக்குத் தனி மகிழ்ச்சி தோன்றிற்று. அணிமையில் நிகழ்ந்த கருத்து மாறுபாட்டினை நினைத்தாள் அவள். இப்போது

மறுபடியும் நண்பர்களாகிவிடலாமென நம்பினாள். உறுதியாகத் தவறு அவளுடையதன்று. அவரோ தாம் தவறியதாக ஒப்புக்கொள்ளமாட்டார். விட்டுக் கொடுப்பதென்பது நடவாது. இருவரும் தாங்கள் சண்டையிட்டதனை மறந்துவிட்டவர்போல் நடப்பதற்குக் காலம் வந்துவிட்டது.

ஜார்ஜ் மாளிகையுட் புகுந்தபோது எம்மா தன் தமக்கை மகளைக் கையில் வைத்துக் கொண்டிருந்தாள். ஏதும் நடவாதது போன்று அவர் அமைதியாகக் குழந்தையை அவளிடமிருந்து எடுத்தார். இருவரும் உரையாடலாயினர்.

"ஆடவரையும், மகளிரையும் பொறுத்தமட்டில் நம் கருத்துக்கள் மாறுபடலாம். இக்குழந்தைகளைப் பொறுத்தவரை நாம் ஒரு போதும் பிணங்குவதில்லையே!" என்றாள் அவள்.

"இயற்கையோடொட்டிய முறையில் கற்பனைக்கும் வீணாவல்களுக்கும் இடமளிக்காமல் நீ பெரியவர்களையும் இக்குழந்தைகளைப் போலவே மதிப்பிடுவாயாயின், நம்மிடையே என்றும் பிணக்கம் விளையாது."

"ஆமாம். நம் பூசலெல்லாம் என் பிழையினாலேயே நிகழ்கின்றன!"

"உண்மைதான். நீ பிறந்தபோது எனக்குப் பதினாறாண்டுகள்."

"இருபத்திரண்டாண்டுகள் கழிந்தபின்னும் என் அறிவு உங்கள் அறிவினை எட்ட இயலாதோ?"

"இன்னும் உன்னைவிடப் பதினாறாண்டுகள் மூத்தவன்தானே! உன்னைப் போல் அழகிய இளம் பெண்ணுமல்லேன்; செல்லப்பிள்ளையுமல்லேன். சரி. விட்டுத் தள்ளு. பூசல் எதற்கு?"

"நல்ல நோக்கத்தைப் பற்றிய மட்டில், நாம் இருவர் செய்ததும் சரியே. ஒன்றே ஒன்றுமட்டும் சொல்லுங்கள். ராபர்ட் அப்படியொன்றும் மிகுதியாக ஏமாற்றமடைந்து விட வில்லையே?"

"அவனைவிட மிகுதியாக ஏமாற்றமடைந்தவன் எவனுமிலன்."

"பெரிதும் வருந்துகிறேன்."

இவ்வாறு இவ்விருவரும் பிணக்கினை ஒழித்த நேரத்தில் ஜான் அங்குப் போந்தார். ஆங்கிலேயர்க்கே யுரிய வழக்கமான முறையில்—உள்ளன்பு வெளித் தெரியாத அமைதியான முறையில்—'அண்ணா! நலமா?' வும் 'தம்பி' நலந்தானே!'யும் தொடர்ந்தன.

இரவில் ஹென்றி தம் அருமை இசபெல்லாவுடன் உரையாடும் நோக்கத்தினராய்ச் சீட்டாடுதலையும் கைவிட்டார். அவரும் இசபெல்லாவும் ஒரு குழுவாகவும், அண்ணன் தம்பியர் இருவரும் ஒரு குழுவாகவும் அமர்ந்து உரையாடலாயினர்.

தந்தையும் மகளும் மகிழ்வும் இரங்கலும் ஆர்வமும் அன்பும் பொங்கப் பேசி இன்புற்றனர். அண்ணனும் தம்பியும் தம் தொழில்களைக் குறித்துச் சொல்லாடினர். குறிப்பாக அண்ணனே பேச்சினில் ஈடுபாடுடையவராதலின் மிகுதியும் பேசினார்.

எம்மா இரு குழுவினரிடையேயும் மாறி மாறிக் கலந்து கொண்டாள்.

12. தவறான கருத்து

இசபெல்லாவைவிட இன்புற்ற உயிரெதுவும் இவ்வுலகில் இருந்திராது. ஹார்ட்ஃபீல்டில் தங்கிய அந்தப் பத்து நாளில் ஒவ்வொரு காலையிலும் அவள் தன் ஐந்து குழந்தைகளுடனும் நண்பர்களைக் காணச் சென்று விடுவாள்.

மாலையிற் பொதுவாக அவர்கள் நண்பர்களைக் காண்பதிலர். ஒரேயொரு நாள் மாலையில்தான் வெளியிற் செல்ல நேர்ந்தது. அதுவும் கிருஸ்துமஸ் இரவில் வெளியில் உண்பதனைத் தவிர்க்க முடியவில்லை. வெஸ்டான் வற்புறுத்தவே அவர்கள் ரண்டால் மாளிகையில் உண்பதற்கு இணங்கினர். ஹென்றிகூட அதனை நடைபெறக் கூடியதே என ஏற்றார்.

ஹேரியட், எல்டான், ஜார்ஜ் இவர்களின் நெருங்கிய வட்டாரத்தினர் ஆகியோரே அழைக்கப் பெற்றனர். ஹென்றியின் பழக்கத்துக்கும் விருப்பத்துக்கும் எல்லாவகையிலும் மதிப்பளித்ததால் மிகச் சிலரையே அழைத்து, இரவில் நெடுநேரம் விழித்திராமல் விருந்தினை முடிப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது.

ஹென்றி வெளியில் உண்பது—அதுவும் திசம்பர் 24ஆம் நாளிரவு உண்பது—ஆகிய இப்பெரு மகிழ்ச்சிக்கு முதல்நாள் மாலையில் ஹேரியட் ஹார்ட்ஃபீல்டுக்குப் போந்திருந்தாள். திரும்பிச் செல்கையில், 'நீர்க்கோவை' யால் பெரிதும் துன்புற்றவளாய்க் காணப்பட்டாள். அவள் காடார்ட்

அமமையின் தொண்டினைப் பெரிதும் நாடியதாலேயே எம்மா அவளைப் போக விடுத்தாள். ஆயினும் மறுநாட்காலையில் எம்மா அவளைப் பார்க்கச் சென்றாள். அவள் ரண்டாலுக்கு வருவது இயலாதென்பது முடிந்த முடிபாய்த் தெரிந்தது. அவளது தொண்டை 'கட்டி' யிருந்ததோடு சுரத்தாலும் வருத்தம் பெற்றவளானாள். காடார்ட் அம்மை கண்ணுங்கருத்துமாய்ப் பேணினாள். மருத்துவர் பெர்ரியைப் பற்றிய பேச்சும் அடிபட்டது.

எம்மா தன் தோழியுடன் நெடுநேரம் தங்கினாள். காடார்ட் அம்மை தவிர்க்க முடியாத சமயத்தில் வெளியிற் செல்ல நேர்ந்தபோதெல்லாம் எம்மா தன் தோழிக்குத் தொண்டாற்றினாள். அவளது நிலையையறிந்தால் எல்டான் எத்துணைத் துன்பத்திலாழ்வார் என்றெடுத்துரைத்து, அவளது மனத்துக்கு ஊக்கமளித்தாள். எனவே எம்மா விடை பெற்றுப் பிரிந்த போது, ஹேரியட்டின் உள்ளத்தே ஓரளவு ஆறுதல் நிறைந்தது.

எம்மா வெளிப்பட்டுச் சில அடி நடப்பதற்குள்ளாக எல்டானே எதிர்ப்பட்டார். அவரும் ஹேரியட்டைப் பார்க்கப் புறப்பட்டனர் போலும். இருவரும் அவளைப்பற்றிப் பேசியவாறே நடந்தனர். சற்றைக்கெல்லாம் ஜானும் தம் மூத்த மக்கள் இருவருடன் அவர்களோடு சேர்ந்து கொண்டார்.

எம்மா தன் தோழியின் நோயை விளக்கினாள். எல்டானோ பெரிதும் அதிர்ச்சியுற்றவராய்த் தோற்றமளித்தார். "தொண்டை கட்டலா! தொற்று நோயில்லையே!... உன் தோழியைப் பேணுவது

போலவே உன்னையும் பேணிக் கொள். இக்கட்டெதிலும் தலை கொடாதே. மருத்துவர் அவளைப் பார்த்தாரோ?"

தானேதும் அச்சமில்லாதவளாய எம்மா தக்க முறையில் அவரது அச்சத்தைப் போக்கினாள். அவரிடத்தே ஓரளவு துடிதுடிப்பு இருக்கவேண்டியதின்றியமையாததே என்றுணர்ந்த அவள் அத்துடிதுடிப்பினைப் பெருக்கவே விழைவாளேயன்றி யடக்க முயல்வாளோ?

சிறிது நேரத்துக்குப்பின் அவள் சொன்னாள்: "கடுங்குளிராயுள்ளதே! பனியும் பெய்யலாம். வேறெவ்விடமாயினும், பிறர் எவராயினும் இன்று வெளியிற் செல்ல இணங்கமாட்டேன். அப்பா ஏற்கெனவே முடிவு செய்து விட்டார். வெஸ்டானுக்கும் அன்னாவுக்கும் பெருத்த ஏமாற்றமாகி விடும். அதனாலேயே குறுக்கிட விரும்புகின்றிலேன். உங்கள் குரல் ஏற்கெனவே கரகரப்பாயுள்ளது. நீங்கள் இன்றிரவு வீட்டிலேயே தங்கி, ஓய்வெடுத்துக் கொள்வதுதான் நலம்."

எல்டான் யாது செய்வதென்றறியாதவராய்க் குழம்பினார். அவ்வழகிய இளம் பெருமாட்டி தன்னிடம் அக்கறை காட்டியதால் மனநிறைவு கொண்டார். அவளது அறிவுரையை மறுக்கத் துணிந்திலர். ஆயினும் விருந்திற்குப் போகாதிருப்பக் கிஞ்சிற்றேனும் விரும்பினாரல்லர். எம்மாவோ தன் சொந்தக் கருத்துக்களில் மூழ்கியவளாய் அவரது பேச்சுக்களைச் சரிவரக் கேட்டிலள். அவரையும் தெளிந்த நோக்குடன் பார்த்திலள். அவர், "கடுங்

குளிர். ஆமாம். கடுங்குளிர்தான்" என முணுமுணுத்ததனைக் கேட்டு மகிழ்ந்தாள். அவரை ரண்டாலுக்கு வராமல் தடுத்து விட்டதாய் முடிவு கட்டினாள்.

"உங்கள் முடிவு தக்கதே. நாங்கள் வெஸ்டானிடம் உங்கள் சார்பில் மன்னிப்புக் கேட்டுக் கொள்வோம்" என்றாள்.

அவள் பேசி முடிப்பதற்குள், ஜான் பணிவுடன் எல்டானைத் தம் பெட்டி வண்டியில் வருமாறு அழைத்தார். பின்னவரும் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் இணங்கினார். ஆக அது முடிந்துபோன கதையாயிற்று. அக்கணத்தில் எல்டானின் அழகிய முகத்திற் புலப்பட்ட மகிழ்ச்சி வேறெந்த நேரத்தும் காணப்பட்டதில்லை. அவரது புன்முறுவலும் இத்துணை பரவலாயிருந்ததில்லை.

எம்மா தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்: 'இது மிகவும் விந்தையே! ஹேரியட்டை நோயால் வாட விட்டுவிட்டு, அவர் தோழர் கூட்டுறவை நாடுகிறாரே! பெரும்பாலும் ஆடவரிடையே-மணமாகாத இளைஞரிடையே-விருந்துண்டலில் இத்தகைய ஆர்வம் உண்டு போலும். எல்டான் மதிப்பிற்குரிய நல்லிளைஞரே; ஹேரியட் மீது பெருங்காதல் கொண்டவரே. இருப்பினும், விருந்திற்கு அழைக்கப்படும் போது மறுக்கமுடியாதவர் போலும். காதல் என்பது எத்துணை விந்தையானது!'

விரைவிலேயே எல்டான் அவர்களைப் பிரிந்து சென்றார். அவர் ஹேரியட்டைக் குறித்துப் பேசிய

போது தென்பட்ட ஏக்கவுணர்வு அவள் அவர்பாற் கொண்ட மதிப்பினை உயர்த்திற்று.

சிலநிமிட அமைதிக்குப்பின் ஜான் பேசத் தொடங்கினார்: "அவர் உன்னிடத்தில் பெருநாட்டமுடையவராய்த் தோன்றுகிறார்."

எம்மா வியப்பாற் புன்னகை பூத்தவளாய்ச் சொன்னாள்: "என்னிடத்திலா! எல்டானின் அன்பிற்குரியவள் நானெனக் கருதுகிறீர்களா?"

"அக்கருத்து ஏற்பட்டதென்பதனை மறுக்கவில்லை எம்மா! இதற்கு முன் உனக்கு இவ்வெண்ணந் தோன்றிற்றே இல்லையோ! இனியேனும் இதுபற்றி நினைத்துப்பார்."

"எல்டான் என்னைக் காதலிக்கிறாரா! என்ன விந்தையான கருத்து!.....உங்கள் கருத்துத் தவறானது. எல்டானும் நானும் நண்பர்கள். வேறொன்றும் எங்களிடையே இல்லை."

சூழ்நிலையை அரைகுறையாக அறிந்து கொள்வதால் விளையும் தடுமாற்றங்கள், மற்றவர்களைச் சரியாக எடைபோடத் தெரிந்தவர்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்பவர்கள் செய்யுந் தவறுகள் ஆகியவற்றைப்பற்றி எண்ணியவாறே எம்மா வழி நடந்தாள். தான் ஏதோ குருடிபோலவும் ஒன்றுமறியாதவள் போலவும் எண்ணித், தனக்கு அறிவுரை வழங்க முற்பட்ட தன் மைத்துனர் செயலால் அவள் மகிழ்ந்தவளுமல்லள்.

குளிர் அதிகமாகிய போதுகூட ஹென்றி தம் பயணத்தைத் தள்ளிவைக்க முற்பட்டிலர். அவர்

இசபெல்லாவுடன் தமக்குரிய பெட்டி வண்டியில் ஏறினார். எம்மா தன் மைத்துனருடன் அவரது வண்டியிற் புறப்பட்டாள். மைத்துனர் இத்தகைய குளிரில் வெளியிற் செல்ல விரும்பினாரல்லர். "இத்தகையதொருநாளில், தங்கள் சொந்த வீட்டைவிட்டு, மக்கள் தன்னைக் காண்பதற்காக வெளியில் வர வேண்டுமெனக் கேட்பவன் தன்னைப்பற்றியே மிகவுயர்வாக மதிப்பவனாகத்தான் இருக்கவேண்டும்" என்றார் அவர். அவருக்குப் பழக்கப்பட்ட முறையில் எல்லாவற்றுக்கும் 'ஆமாம்' போடவும் எம்மா முற்பட்டிலள்; மறுத்துரைக்கவும் துணிந்திலள். வாய் திறவாமலிருக்கவே முடிவு செய்தாள்.

அவர்கள் ரண்டாலை யடைந்தனர். எல்டான் நொடியில் புன்முறுவலோடு அவர்களை அணுகினார். அவருடைய மகிழ்ச்சியையும் பணிவுரைகளையும் கண்ட எம்மா, ஒருகால் அவர் ஹேரியட்டைப் பற்றி நற்செய்தி யேதேனும் அறிந்திருப்பாரோ என்றெண்ணலானாள்.

"காடார்ட் அம்மையிடமிருந்து நான் கேள்விப்பட்ட செய்தி, எதிர்பார்த்த அளவு இன்பந்தருவதாயில்லை. 'அப்படியேதா னிருக்கிறாள்' என்றுதான் அறிந்தேன்" என்றாள் எம்மா.

அக்கணமே எல்டானின் முகம் தொங்கிற்று. அவர் கரகரத்த குரலிற் சொன்னார். "ஆமாம்...நான் உடைமாற்றிக்கொண்டு புறப்படுமுன் அவ்வம்மையாரில்லத்துக்குத்தான் போயிருந்தேன். ஹேரியட் அப்படியேதானிருக்கிறாள் என்று கேள்விப்பட்டேன். பெரிதும் வருந்தினேன். காலையில் அவளுக்குக் கிடைத்த அருமருந்திற்குப்பின் தேறியிருப்பாள் எனவே எதிர்நோக்கினேன்."

எம்மா முறுவலித்த பின் சொன்னாள்: "நான் போய்ப் பார்த்தது அவளது மனநோய்க்கு ஓரளவு பயன்பட்டிருக்கலாம். கட்டிய தொண்டையை வயப்படுத்தி மாற்றுவதற்கு என்னாலும் இயலாது. மருத்துவர் பெர்ரி அவளைப் பார்த்திருப்பார். நாளைக் காலை நமக்கு நற்செய்தி கிட்டும். எனினும் இப்போது துடி துடிப்பு எழாமற் போகவில்லை. விருந்திற்கே எவ்வளவு பெரிய குறை!"

"ஆமாம்...உண்மைதான...அவள் இல்லாதது ஒவ்வொரு கணத்திலும் நினைக்கப்படும்."

இவ்வாறு கூறியதும், தொடர்ந்து பெருமூச் செறிந்ததும் மதிக்கத்தக்கனவே. ஆயின் அதிகநேரம் நீடித்திருக்க வேண்டும். அரைநிமிடத்திற்குள், அவர் மற்றைச் செய்திகளைக் குறித்து மகிழ்வு பொங்க உரத்த குரலில் பேசத்தலைப்பட்டது கண்ட எம்மா ஏமாற்றமடைந்தாள். விருந்து நினைவுகளில் ஹேரியட் அறவே மறக்கப்பட்டு விட்டாள் போலும்.

13. இருவர் துடிப்பு

வெஸ்டானின் மாளிகைக்குள் புகுமுன், ஆடவர் இருவரும் தத்தம் முகத்தோற்றத்தை மாற்றிக் கொள்வது தேவை. எல்டான் புன்முறுவலைக் குறைக்க வேண்டும்; ஜான் கூட்ட வேண்டும். எம்மா இயற்கையாய்த் தான் இருந்தவாறே மகிழ்ச்சியோடு தோன்றினால் போதும். அவளுக்கு அவ் விருந்து உள்ளபடியே களிப்பினைத் தந்தது. அன்னாவின் பார்வை, முறுவல், குரல் அத்தனையுமே எம்மாவுக்கு நன்றியுரைத்தன. ஆதலின் எல்டானின் விந்தைப் போக்கினையோ, பிற துன்பச் செய்திகளையோ இயன்றமட்டும் நினைக்காமலிருப்பதென எம்மா முடிவு செய்தாள்.

ஹேரியட் நீர்க்கோவையால் வாடுஞ்செய்தி ஏற்கெனவே பரவிவிட்டது. ஹென்றி முன்னதாகவே போந்து அவ்வரலாறு, தம்வரலாறு முதலியவற்றையெல்லாம் சொல்லிவிட்டார். அதுகாறும் அவரோடு உரையாடிய அன்னா, விருந்தினர் பிறரும் வந்து சேரவே, எழுந்து, தன்னருமை எம்மாவை வரவேற்றாள்.

எல்லாரும் அமர்ந்தனர். எல்டானைச் சற்றே மறக்கத் திட்டமிட்ட எம்மா, அவர் தன் பக்கத்தில் அமர்ந்திருப்பது கண்டு வருந்தினாள். பக்கத்தில் உட்கார்ந்ததனோடு அமைந்தாரா அவர்! அடிக்கடி தம் மகிழ்முகத்தை அவள் பார்வையிற் படுமாறு நீட்டினார்! சமயம் நேரும்போதெல்லாம் அவளை ஆர்வத்தோடு விளித்துப் பேசினார்! 'ஒருகால்

அத்தான் கருதியது போன்றிருக்குமோ? இவர் ஹேரியட்மீது வைத்த அன்பினை என்பால் திருப்பத் தொடங்குதலும் கூடுமோ? சே, மோசம்! தாங்க முடியாது!' என்றெண்ணினாள் எம்மா. எனினும் தன்பொருட்டாக அவரிடம் சீறிப்பேசுதலும் இயலாது. ஹேரியட்டுக்காக - இனிமேலும் எல்லாம் ஒழுங்காக மாறிவிடலாம் எனும் நம்பிக்கையில் - அவள் பணிவாய்ப் பேசுதல் வேண்டும்; பேசினாள். கடினமான பணிதான் - அதுவும் மற்றவர்கள் முதன்மையான தொன்றினைக் குறித்து உரையாடியபோது! வெஸ்டான் தன் மகனைக் குறித்து யாதோ கூறினார்! 'என் மகன் ஃபிராங்க்' என்பனபோலச் சில தொடர்கள் செவியில் விழுந்தன. எல்டானை ஓயவைப்பதற்குள் அப்பேச்சு முடிந்துவிட்டது. அவளாக மீண்டும் பேசுவது நன்றாயிராது.

எம்மா திருமணமே செய்யக் கூடாதென முடிவு பூண்டவள்தான். எனினும் ஃபிராங்கின் பெயரிலே-அவனைப்பற்றிய நினைவிலே-யாதோ ஒன்று அவளைக் கவர்ந்தது. அதுவும் வெஸ்டானின் திருமணத்துக்குப் பின், தான் எப்போதாவது மணப்பதாயின், அவனே பருவத்திலும் குணத்திலும் தரத்திலும் தனக்கேற்றவன் என எம்மா அடிக்கடி நினைப்பாள். அவனைப் பார்க்க வேண்டுமென்றும் வேட்கையுண்டு. நேரிற் காணின் அவன் இனிய இயல்புடையவனாகவும் தன்னை ஓரளவு விரும்புபவனாகவும் இருப்பான் என அவள் திண்ணமாய் நம்பினாள். தன் நண்பரெல்லாம் தன்னையும் அவனையும் இணைத்துக் கற்பனை செய்வரென உணரும் போதெல்லாம் மகிழ்வடைந்தாள்.

இத்தகைய உணர்வுகளிடையே, எல்டானின் அன்புச் சொற்கள் காலத்திற்கு அறவே ஒவ்வாதன வாயின. அவள் உள்ளுக்குள் புழுங்கினளாயினும் புறத்தே அடக்கமாய்த் தோற்றமளித்தாள். விரைவிலேயே எல்டானிடமிருந்து விடுதலை கிடைத்தது உண்ணும்போது எம்மா வெஸ்டானின் அருகாமையில் அமர்ந்தாள். எதிர்பார்த்தவாறே, அவர் தமக்குக் கிட்டிய முதல் வாய்ப்பிலேயே அவளிடம் சொன்னார்: "உன் அழகிய தோழி ஹேரியட்டும் என் மகனும் இங்கிருந்தால் முழு நிறைவாயிருக்கும். மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். நீ கேட்டாயோ இல்லையோ! பதினைந்து நாளில் ஃபிராங்க் வந்து சேர்வான். இன்று காலையில்தான் அவனது கடிதம் வந்தது."

எம்மா தக்க மகிழ்ச்சியுடன் விடையளித்தாள். "அவரைக் கண்டு பழகத் துடிக்கும் அன்னவும் உங்களைப் போலவே பெருமகிழ்ச்சி யடைவாளே!" என்றாள்.

"மகிழத்தான் வேண்டும். ஆயின் அவள் இவ்வருகை முன்போல ஒத்திவைக்கப்பட்டுவிடும் என்று நினைக்கிறாள். எனக்குச் சிறிதேனும் ஐயமில்லை. நான் இப்போது இங்கே யிருப்பது எத்துணை யுறுதியோ ஜனவரி இறுதிக்குள் ஃபிராங்க் இங்கே வந்துவிடுவதும் அத்துணை உறுதிதான்."

எம்மாவுக்கு இப்பேச்சுப் பெரிதும் மகிழ்ச்சியளித்தது. உண்டபின், வரவேற்பறைக்குள் புகுந்தவுடனேயே அவள் அன்னவிடம் இதுபற்றிப் பேசலானாள்.

"அவரைப்போல நான் அளவற்ற நம்பிக்கை யுடையவளல்லேன். ஒன்றும் நிகழாமற் போய் விடுமோ என அஞ்சுகிறேன்" என்றாள். அன்ன தொடர்ந்து அவள் அருகாமையிலிருந்த இசபெல்லாவிடம் விளக்கலானாள்.

அவளோடு தனியே பேச முடியாமைபற்றி வருந்தினாள் எம்மா. அவ்வாறு பேசினால் நிறையச் செய்தி கிட்டியிருக்கும். இசபெல்லாவின் முன்னிலையில் சொல்லத் துணியாதவற்றை யெல்லாம் அப்போது அன்ன சொல்வாளே!

சிறிது நேரத்தில் ஹென்றியும் வரவேற்பறையுட் புகுந்தார். மதுவையோ வம்புப் பேச்சுக்களையோ விரும்பாத அவர், தம் 'அருமை' இசபெல்லாவுடன் அமர்ந்து உரையாடலானார்.

ஆகவே எம்மா தான் பேசத் துடித்ததனை அன்னவிடம் பேசலானாள்: "வருவது உறுதியில்லையென நினைக்கிறாயா! வருந்துகிறேன்."

"அவன் தரப்பினில் தயக்கமிராது. சர்ச்சில் குடும்பத்தினர் தாம் அவனைத் தம்முடனேயே வைத்துக்கொள்ளப் பெரிதும் விரும்புகிறார்கள்."

"இளம் பெண்ணாயின், அவள் விரும்புகிறவர்களை யணுகாமல் தடுத்துவைத்துத் தொல்லை செய்யலாம். ஓர் இளைஞர் தம் தந்தையோடு ஒரு கிழமை தங்குதற்கு விரும்புவராயின் எவராலும் தடுக்க முடியுமோ?"

"சர்ச்சில் குடும்பத்தினரின் இயல்புகளை உணராமற் பேசுகிறாய். அவன் அத்தை வெறும் முரண்டுக்காரி. அவளது விருப்பப்படியே யாவும் நடக்கும்."

———

14. காதலி எவள்?

ஹென்றி தேநீர் பருகியவுடனேயே புறப்படுதற்கு ஆயத்தமாயினார். மற்றவர்கள் அவ்வறையுட் புகுந்தனர். எல்டான் தாம் அளவிலா மனவெழுச்சியுடன் முதலிற் போந்தார். எம்மாவுக்கும் அன்னாவுக்குமிடையே எவரும் அழையாமலேயே அமர்ந்தார்.

ஃபிராங்க்கின் வருகைபற்றிக் கேள்வியுற்றதால் மனவெழுச்சியோடிருந்த எம்மா, எல்டானின் அணிமைத் தவறுகளை மறக்கவும் முனைந்தாள். அவர் எடுத்த எடுப்பிலேயே ஹேரியட்டைப் பற்றிப் பேசியதனால் புன்முறுவலோடு செவிமடுக்கவும் தலைப்பட்டாள். நொடியில், அவர் கவலைப்பட்டதெல்லாம் ஹேரியட்டைப் பற்றியன்று, எம்மாவின் தொண்டை கட்டிக் கொள்ளக்கூடாதே என்றுதான் அஞ்சினார் என்பது விளங்கிற்று. அவர் எர்மாவைக் குறித்து ஆர்வத்தோடு பேசியதனைத் தடுப்பதற்கும் வழியில்லை. அவள் துன்புற்றாள். அரிதின் முயன்று தன் சீற்றத்தை யடக்கினாள். அவரே அன்னாவைத் தம் துணைக்கு அழைத்தார். "ஹேரியட்டிற்கு நேரிட்டுள்ளது, தொற்று நோயன்று என்பது திண்ணமாய்த் தெரிகிறவரை இவள் அவ்வீட்டிற்குப் போகாமல் தடுப்பதில் எனக்கு உதவமாட்டீர்களா? எனக்கு நீர்க்கோவை ஏற்படலாகாதென, என்னை வீட்டிலிருக்குமாறு வற்புறுத்தினாள் இவள். தான் மட்டும் இத்தொண்டை நோய்க்கிரையாகாமல்

இருப்பதாய் உறுதி கூற மறுக்கிறாளே! இது முறையா? நீங்களே சொல்லுங்கள்."

எம்மா எதுவும் பேச இயலாத அளவு சீற்றங் கொண்டாள். எல்டானை 'முறைத்து'ப் பார்த்தாள். அப்பார்வையால் அவருக்குப் புத்திவரும் என நினைத்தாள். எழுந்து தன் தமக்கையருகே போய் அமர்ந்து கொண்டாள்.

தன் பார்வையின் பலனை அறியக்கூட அவள் வாய்ப்புப் பெற்றிலள். ஜான் அறைக்குள் போந்து வெளியே பனி பெய்வதாய்க் கூறினார். ஹென்றி கவலைப்படலானார். அன்னாவும் எம்மாவும் அவரைத் தேற்றினர். ஜானோ, அவரைத் துன்புறுத்துவதில் மகிழ்ச்சியுடையார் போல் "இத்தகைய காலநிலையில் வெளியே கிளம்பினீர்களே! உங்கள் துணிச்சலைப் பாராட்டுகிறேன். நள்ளிரவுக்குள் நாமெல்லாம் இடையூறின்றி ஹார்ட்ஃபீல்டை அடைவோம் என நம்புகிறேன்" என்றார்.

வெஸ்டான், "பனிபெய்வதனை ஏற்கெனவே அறிவேன். சொன்னால் ஹென்றி நடுங்குவாரே யென்றுதான் வாளாவிருந்தேன்" என்றார்.

வழக்கம்போல் எம்மாவின் கருத்துரையை நாடினார், ஹென்றி. அவள் அவரைத் தேற்றினாள். இசபெல்லாவோ குழந்தைகளை மாளிகையில் விட்டு வந்தவளாதலின், தாங்கள் இங்கே தங்கநேர்ந்தால் விளைவு யாதாகுமோ என்றஞ்சலானாள். "இப்போதே புறப்பட்டால் போய்ச் சேர்ந்துவிடலாம்; அப்படியே ஏதாவது நேரினும் இறங்கி நடப்பேன்" என்றாள் அவள்.

ஜான் பனிபெய்வதாய்க் கூறியவுடனேயே, பார்க்க வெளியிற் சென்ற ஜார்ஜ் மீண்டு போந்தார். அவர்கள் வீடுபோய்ச் சேர்வதில் எத்தகைய இடையூறும் நேராது என்றார். ஏற்கெனவே அச்சமூட்டப் பெற்ற ஹென்றி, அங்கிருக்கும் வரை அமைதி பெறுபவரல்லர். ஆகலின் விரைவாய் வண்டிகள் பூட்டப்பட்டன.

இத்தகைய சூழ்நிலையில் முந்திக்கொள்கிற ஹென்றி இப்போது ஜார்ஜ், வெஸ்டான் ஆகியோருதவியால் முதலிற்போய் வண்டியிலேறினார். தொடர்ந்து இசபெல்லா ஏறினாள். தாம் அவர்களோடு போந்தவரல்லர் என்பதனை மறந்தவராய் ஜானும் தம் மனைவிக்குப்பின் அவ்வண்டியிலேயே ஏறிவிட்டார். விளைவாய் எம்மா இரண்டாவது பெட்டி வண்டியில் ஏறியபோது எல்டானும் ஏறினார். முறைப்படி வண்டிக்கதவு அடைக்கப்பட்டது. பயணத்தினை அவர்களிருவரும் 'தனிமை' யிற் கழிக்க நேர்ந்தது. அன்றைய ஐயப்பாடுகளில் எதுவும் நேர்ந்திருக்கவில்லையெனில், அப்பயணம் எம்மாவுக்கு மகிழ்ச்சியளித்திருக்கும். அவள் அவரிடம் ஹேரியட்டைப்பற்றிப் பேசியிருப்பாள். இப்போதோ 'ஏன் பயணப்பட்டோம்' என்றெண்ணினாள். வெஸ்டான் மனமுவந்து வழங்கிய மதுவினை மிகுதியாய் எல்டான் குடித்தாரென்றும், ஏதாவது உளற முற்படுவாரென்றும் அவள் உறுதியாய் நினைத்தாள். அவர் தம் பேச்சினையும் போக்கினையும் தன்னால் இயன்ற மட்டும் கட்டுப்படுத்துவதற்காக, மிக்க அமைதியான முறையில் பனியிரவின் கொடுமைபற்றிப் பேச முற்பட்டாள். அவள் பேசத்தொடங்கியபோது வண்டி மாளிகைப்புறவாயிலைக் கடந்து முதல் வண்டியினை நெருங்கிற்று. அவள் கைகளை எல்டான் பற்றினார். வாய்ப்பினைப் பயன்படுத்தி, ஏற்கெனவே அவள் நன்கு அறிந்தவற்றைத் - தம் காதலுணர்வுகளை - வெளியிடலானார். அவள் மறுத்தால் உயிர்விடுவதாயும் புலம்பினார். தயக்கமோ நாணமோ இன்றி ஹேரியட்டின் காதலர் எல்டான் எம்மாவின் காதலர் எனப்பறை சாற்றினார். அவள், அவரது பேச்சினைத் தடுக்க முயன்றாள். பலனில்லை. அவள் சினங்கொண்டாள். அப்போதைய மனநிலையில் தன்னையடக்கிக் கொள்வதே தக்கதென்று உணர்ந்தவளாய்ப் பாதிவேடிக்கையாகவும் பாதி வினையாகவும் அவரது 'அரைகுறைத் தெளிவி'ற்கு ஏற்பப் பேசலானாள்.

"திகைப்புறுகிறேன். என்னிடமா இப்படிச் சொல்கிறீர்கள்? உங்களையே மறந்தீர்களா? என்னை என் தோழியென மதித்தீர்களா? ஹேரியட்டிடம் உங்கள் தூதாக எதனையும் சொல்வேன். ஆயின் இனியும் இவ்வாறு பேசாதீர்கள்."

"ஹேரியட்டா! தூதா! என்ன சொல்கிறாய்?"

"ஐயோ, எல்டான்! இது விந்தையான போக்குத்தான்! ஒரேயொரு காரணந்தான் எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் உங்கள் நிலையிலில்லை."

உண்மையில் எல்டான் குடித்த மது அவர் தம் உணர்வுகளை ஊக்குவித்ததேயொழிய அறிவினைக் குழப்பவில்லை. அவளது ஐயப்பாடு முறையற்றதென மறுத்தார். அவர் தொடர்ந்து தம் காதல் மிகுதியை எடுத்துக் கூறி அவளது அன்பான பதிலை நாடினார்.

"என் திகைப்பு எடுத்துச் சொல்ல முடியாத அளவு பெரிது. கழிந்த ஒரு திங்களாக நீங்கள் ஹேரியட்டோடு பழகியமுறை கண்டபின், இத்தகைய தடுமாற்றத்தை நினைத்தும் பார்த்திலேன்."

"யாது சொல்கிறாய்! என் வாழ்நாளிலேயே ஒருபோதும் நான் ஹேரியட்டை நினைத்தறியேன். உன் தோழியென்ற முறையிலன்றி அவளை நான் மதித்ததில்லை. உன் தோழி என்ற முறையிலன்றி அவள் இருந்தாலும் இறந்தாலும் நான் கவலைப்பட்டிரேன். அவள் வேறேதும் கற்பனை செய்திருப்பாளாயின் அவளுடைய விருப்பங்களே தவற்றுக்குக் காரணம். நான் உன்னைத் தவிர யாரையும் நினைத்ததில்லை என உறுதி கூறுகிறேன்."

இதனைக் கேட்டபோது எம்மா என்ன நினைத்தாளோ! சொல்வதியலாது. உடனே விடை சொல்ல முடியாதவளாயினள். அவ்விரு கண அமைதியைத் தமக்கு இணக்கமாய்க் கருதிய எல்டான் அவளது கையைப் பற்றமுயன்றவாறே, "அருமை எம்மா! இவ்வாய்வாளாமை, நீ என் கருத்தினை முன்பே ஏற்றுக்கொண்டதாய் உணர்த்துகிறது" என்றார்.

எம்மா இரைந்தாள்: "இல்லை. அப்படியேதும் பொருளில்லை. இக்கணம் வரை, உங்கள் நோக்கத்தைத் தவறாகப் புரிந்துகொண்டேன். என் தோழி ஹேரியட்டிடம் நீங்கள் கொண்ட பற்று, அவளை நாடியது, (நாடியதாகவே நினைத்தேன்) எல்லாம் எனக்கு மகிழ்ச்சியளித்தன. உங்கள் நாட்டம் வெற்றிபெற உளமார வாழ்த்தினேன்.

உள்ளபடியே நீங்கள் அவளைப்பற்றி நினைக்கவேயில்லையா?"

"ஒருகாலும் இல்லை. உறுதி. அவள் தன் தகுதிக்குரிய இடத்தில் வாழ்வாளாயின் பெரிதும் மகிழ்வேன். ஒவ்வொருவருக்கும் ஒரு தரம் உண்டன்றோ? என் தரத்துக் கேற்ற மணவினை நிகழாதென்று கவலைப்பட்டாலன்றோ நான் ஹேரியட்டையணுக வேண்டும்? நான் ஹார்ட்ஃபீல்டுக்கு வந்ததெல்லாம் உன்னைக் காண்பதற்கே. எனக்குக் கிட்டிய ஊக்கம்...."

"நானா ஊக்கமளித்தேன்! உங்கள் கருத்து முற்றிலும் தவறானது. என் தோழியை மதித்தவரெனவே உங்களைக் கருதினேன். இப்படி முடிந்ததும், நன்மையே. நீங்கள் உணர்கிற தரத்தையெல்லாம் ஹேரியட் உணர்ந்தறியாள். ஆதலின் இத்தகைய நிலை நீடித்திருக்குமாயின், அவள் உங்கள் நோக்கத்தைத் தவறாக உணர்ந்திருப்பாள். இப்போதைய நிலையில் ஏமாற்றம் ஒருதரப்பானதே; நெடுநாள் நிலைத்தும் இராது. அணிமையில் மணந்துகொள்ளும் கருத்து எனக்கு இல்லை."

விடையேதும் சொல்லமுடியாதபடி எல்டான் சினங்கொண்டார். வண்டியெப்போது நின்றதெனவும் அவர்கள் உணர்ந்திலர். எல்டான் வீட்டிற்குமுன் நிற்கவே, அவர் இறங்கி ஏதும் பேசாமற் சென்றார். அவர்க்கு வணக்கஞ் சொல்லாமலிருக்கக் கூடாதெனவுணர்ந்த எம்மா வணக்கம் தெரிவித்தாள். அவர்

பதிலுக்கு விறைப்பாகவும் மிடுக்குடனும் வணக்கந் தெரிவித்த பின், வீட்டினுள் மறைந்தார். எம்மா

வண்டி எல்டான் வீட்டின்முன் நின்றது

விரித்துரைக்க முடியா எரிச்சலுடன் ஹார்ட்ஃபீல்டை யடைந்தாள்.

—

15. சோர்வும் கவலையும்

உள்ளபடியே சோர்வளிக்கும் நிலைமைதான் அது! அவள் விரும்பியவெல்லாம் வீணாயினவே! ஹேரியட்டுக்குத்தான் எத்தனை பெரிய இடி! அவள் மட்டும் அவரை ஹேரியட் விரும்புமாறு செய்திரா விடில், எதனையும் தாங்கிக் கொள்வாள். ஆயின் அளியள் ஹேரியட்!... அவர் ஒரு போதும் ஹேரியட்டைப் பெரிதாக நினைத்ததில்லையென்றாரே! அவள்தான் ஒன்றினை முடிவு கட்டி விட்டு நிகழ்ச்சிகளையெல்லாம் அக்கருத்திற்குச் சார்பாய்த் திரித்துப் பொருள் கொண்டாளா? அவருடைய பேச்சும் போக்கும் அவ்வளவு தடுமாற்றமும், ஐயப்பாடும் உடையனவாய் இருந்திருக்கும். இல்லையேல் அவளாவது தவறாக எடைபோடுவதாவது! அணிமைக் காலத்தில் அவர் அவளிடம் தேவையற்ற அளவு அதிக அன்புடன் பேசினார் என்பது உண்மையே! ஆயின் அஃது அவரது போக்கு எனவே, அவள் ஒதுக்கினாள். ஹேரியட்டின் தோழியென்ற முறையில் அவர் தன்னை நன்றியுணர்வோடு மதிப்பதாகவே கொண்டாள்.

முதல் தடவையாகக் 'காதல் எண்ணம்' இருக்கக் கூடும் என்ற கருத்தினைத் தோற்றுவித்தவர் ஜான் தாம். அவ்வண்ணன் தம்பிகள் கூர்த்த அறிவினர் என்பதனை மறுக்க வியலாது. ஜார்ஜ் முன்னொரு முறை "எல்டான் தம் தரத்திற்குக் கீழ்ப்பட்ட மண மகளை ஏற்க மாட்டார்" என்று அவளை எச்சரித்தாரே! அவளைவிட அவர் மற்றவர்களை

எவ்வளவு நன்ருகப் புரிந்துகொண்டிருக்கிருர்! இத்தகைய நினைவுகள் அவளை வருத்தின. ஆயினும் எல்டான்மீது சிறிதேனும் இரக்கம் பிறக்கவில்லை. அவர் தம்மை மேம்படுத்தவும் செல்வராக்கவும் மட்டுமே விரும்பிஞர். முப்பதாயிரம் பவுன் சொத்துரிமையுள்ள எம்மா அவர் எதிர்பார்த்தபடி எளிதிற் கிட்டவில்லையெனில், விரைவிலேயே இருபதாயிரமோ பத்தாயிரமோ உள்ள வேறெவளையேனும் மணக்க முயன்றிருப்பார்!

அவள் அவரை ஊக்குவித்தாளாமே! அவருடைய கருத்துக்களை அறிந்து, நோக்கத்தை ஏற்று, மணக்க ஒப்புகிருளாமே! அவளும் தாமும் ஒரே தரத்தினர்—மன நிலையினர்—என நினைத்தாரோ! அவள் தோழி தம் தரத்துக்குக் கீழ்ப்பட்டவள் என்றெருதுக்கிய அவர், அவளைத் தம் தரத்திலும் உயர்ந்தவள் என உணராமற் போனதேன்?

ஒருகால் அவர் அவளைவிட அறிவிலும் திறமையிலும் எத்துணைக் கீழ்ப்பட்டவர் என்பதனை உணராதவராயிருக்கலாம். ஆயின் செல்வத்திலும் தரத்திலும் அவள் பன்மடங்கு உயர்ந்தவள் என உணர்ந்திருக்க வேண்டுமே! அவள் அவரிடம் நடந்துகொண்ட முறையே—மதிப்பாகவும் பணிவாகவும் நடந்துகொண்ட முறையே—அவரையொத்த எளிய அறிவினர் தங்களை ஊக்குவிப்பதெனக் கொள்வதற்கிடமளிப்பது என உணர்ந்தாள் அவள். அவளே அவரது நோக்கத்தைப் பிழைபட உணர்தல் கூடுமாயின் தந்நலத்தாற் கண்ணிழந்த அவர் அவளது நோக்கினையும் தவருகப் புரிந்திருக்கலாமே! அவள்

பெரிதும் வெட்கியவளாய், இனி இத்தகைய செயல்களில் ஈடுபடுவதில்லையென முடிவு செய்தாள்.

அவள் பேச்சிஞல் தானே ஹேரியட் இவரைக் காதலிக்கத் தலைப்பட்டாள்! இருவருக்கும் அன்புண்டு என்று அவள் வலியுறுத்திச் சொல்லியிராவிடில் ஹேரியட் காதலித்திருக்கவே மாட்டாள்...உம்....அவள் ராபர்ட்டை விலக்குமாறு செய்ததோடு எம்மா விலகியிருக்க வேண்டும். எஞ்சியவை காலப்போக்கினிற் சூழ்நிலைகளால் உருவாகியிருக்கும். ஐயோ, அளியள் அப்பெண்! இன்னுஞ் சிறிது காலம்வரை அவளுக்கு மன அமைதியே இராது. அவள் மட்டும் இதனைப் பெரிய ஏமாற்றமாகக் கொள்ளாவிடில், அவளுக்குப் பொருத்தமான ஒருவரைத் தெரிந்தெடுத்து விடலாமே! எம்மா தன் 'பழைய வழி'யிற் செல்லும் மனப்போக்கினையுணர்ந்து வெட்கமடைந்தாள். அவள் ஹேரியட்டிடம் எப்படி விளக்கஞ் சொல்வாள்! ஹேரியட்டின் துன்பம் எவ்வளவு கொடிது! எதிர்காலத்தில் இருவரும் எவ்வாறு கூடிப் பேசுவர்? இத்தகைய கவலைகளுடனேயே அவள் உறங்கச் சென்ருள். தான் அறவே தவறிவிட்டதாய் உணர்ந்தாள்.

மறுநாட்காலையில் அவள் எழுந்தபோது, கிருஸ்துமஸ் நாளாயினும் தேவாலயத்துக்குக் கூடச் செல்லவியலாதவகையிற் பனி பெய்தது. தொடர்ந்து சில நாட்கள் இவ்வாறே அவள் வீட்டிற்குள் சிறைப்பட்டவளாஞள். கடித வழியிலன்றி ஹேரியட்டோடு தொடர்பு கொள்வதற்கில்லை. எல்டான் வாராதிருப்

பதற்கும் பிற காரணங்களைப் புனைந்துரைக்கத் தேவையில்லை.

அத்தகைய பனியிலும் ஜார்ஜ் ஒருவர்தாம் வழக்கம் போல் அம்மாளிகைக்கு வந்துபோதலை நிறுத்தினரல்லர்.

காலத் தாழ்ச்சியால் அப்போது கிட்டிய ஆறுதலும் மகிழ்ச்சியும் பெருநம்பிக்கை யூட்டின. எனினும் எப்போதேனும் ஒரு சமயத்தில் ஹேரியட்டுக்கு விளக்கம் சொல்லியாக வேண்டுமே யென்ற கவலை எம்மாவை வாட்டிற்று.

16. நோயும் மருந்தும்

ஜானும் இசபெல்லாவும் ஹார்ட்ஃபீல்டில் நெடுநாள் தங்கினரல்லர். ஹென்றி தம் மகளையும் பேரர்களையுமேனும் தங்குமாறு வற்புறுத்தினார். ஆயினும் எல்லோருக்கும் விடைகொடுத்தனுப்ப வேண்டியவரானார். அளியள் இசபெல்லாவின் ‘தலைவிதி’ குறித்து வழக்கம் போல் நொந்துகொள்ளலானார்.

அவர்கள் சென்ற அன்று மாலையிலேயே எல்டானிடமிருந்து ஹென்றிக்கு ஒரு கடிதம் வந்தது. மறுநாட் காலையிலே அவர் ‘பாத்’துக்குப் புறப்படுவார்; நண்பர்கள் சிலரது வற்புறுத்தலால் அவ்வூரிற் சில கிழமைகள் கழிப்பார்; நேரில் விடைபெற்றுச் செல்ல வியலாமைக்கு வருந்துகிறார்—இவைதாம் அக்கடிதச் செய்திகள்.

எம்மா வியப்பும் மகிழ்ச்சியும் எய்தினாள். இந்நேரத்தில் எல்டான் வெளியூர் செல்வதுதான் மிகவும் பொருத்தமான செயல். அவ்வாறு திட்டமிட்டமை பற்றி அவரைப் பாராட்டினாள். ஆயினும் அந்நெடுங் கடிதத்தில் தன்னைப்பற்றி ஒரு சொல்லேனும் எழுதாதது பற்றி வருந்தினாள்.

இனியும் ஹேரியட்டிடமிருந்து செய்தியை மறைத்தலாகாது என எம்மா முடிவு செய்தாள். ‘‘நீர்க்கோவை’ யிலிருந்து தேறிவிட்ட அவளது மற்றொரு ‘நோயை’யும் அவ்விளைஞர் திரும்பிவருவதற்குள் தீர்த்துவிட வேண்டும். ஆகவே எம்மா மறுநாளே காடார்ட் அம்மையின் இல்லத்துக்குச்

சென்றாள். கடினமானதேயாயினும் செய்தியை எடுத்துரைக்கும் நோன்பினை நிறைவேற்ற முற்பட்டாள். வெட்கம் 'பிடுங்கித்தின்றது.' ஹேரியட் துன்பச் செய்தியை நன்கு பொறுத்துக் கொண்டாள். எவரையும் பழித்திலள்; தன்னையே தாழ்த்துரைத்தாள். அவளது வஞ்சனை யற்ற மனப்பான்மையே ஒவ்வொரு செயலிலும் தென்பட்டது. அவள் மாலை மாலையாய்க் கண்ணீர் வடித்தாள். அது கள்ளமற்ற உள்ளத்தின் பெருங்கவலையின் விளைவாயே தோன்றிற்று. எம்மா தன் உள்ளத்தாலும் அறிவாலும் இயன்றமட்டும் ஆறுதலளித்தாள். தங்களிருவரில் ஹேரியட்டே சிறந்தவள் என அப்போது உணரவுஞ் செய்தாள். நுண்ணறிவும் திறமையும் தனக்கு வழங்க முடியா நன்மையையும் மகிழ்ச்சியையும், தான் ஹேரியட்டைப்போல் இருக்க முயல்வதிலேயே பெற்றுவிடலாமென நினைத்தாள். இத்தனை காலங் கழிந்தபின், இப்போது எளிமையாய் - அடக்கமாய் - வாழத் தலைப்பட முடியாதே! இனியேனும் வாழ் நாளில் ஒருபோதும் கற்பனைகளுக்கு இடமளிக்காமல், பணிவாகவும் புத்திசாலித்தனமாகவும் நடந்து கொள்வதென முடிவுசெய்தாள். தந்தையைப் பேணுவதற்கு அடுத்தபடி, ஹேரியட்டின் நலனைப்பாதுகாப்பதனைத் தனது கடமையாய்க் கொண்டாள். அவளைத் தன் மாளிகைக்கு வரவழைத்துத், தடுமாற்றமின்றி அன்பினைச் சொரிந்தாள். நூல்களாலும் உரையாடலாலும் ஹேரியட்டிற்குப் பொழுது போக்கு அளிக்கவும், எல்டானைப் பற்றிய நினைவுகளை அகற்றவும் பாடுபட்டாள். அவர் திரும்புவதற்குள், ஹேரியட்டின் உள்ளம் தேறிவிடும்; மீண்டும் இருவரும் காண நேர்ந்தாலும், உணர்ச்சிகளைக் காட்டாமல்-வளர்த்துக் கொள்ளாமல்-பழகுதல் கூடும் என எம்மா நம்பினாள்.

இப்போதுகூட ஹேரியட் அவரை ஒப்புயர்வற்ற தோற்றமும் நல்லியல்பும் உடையவராகவே மதித்தாள். இம்மதிப்பு நெடுங்காலம் நிலைத்திராதெனவே எம்மா கருதினாள். எல்டான் மீண்டு வரும்போது ஹேரியட்டிடம் புறக்கணிப்பாகவே நடந்து கொள்வாராயின், அவள் அவரைக் காண்பதிலோ, நினைப்பதிலோ இன்பங்காண்பது நடவாது. மூவரும் ஒரே ஊரில் நிலைத்துவிட்டது மூவருக்குமே துன்பம்தான். ஒருவரையொருவர் கண்டுதான் ஆக வேண்டும்; வென்றுதான் ஆகவேண்டும்.

காடார்ட் அம்மையின் பள்ளியாசிரியைகளும் உயர் வகுப்பு மாணவிகளும் எல்டானைச் சிறப்பாகப் போற்றுவர். ஆதலின் அங்கிருக்கும் போதெல்லாம் ஹேரியட்டின் துன்பம் மிகும். ஹார்ட்ஃபீல்ட் மாளிகையில்தான் அவரைப்பற்றிக் கசப்பான உண்மைகளும் பேசப்பட்டன. நோய்தொற்றிய இடத்தில்தானே மருந்தும் கிடைக்க வேண்டும்!

17. நிறைவுடை இளம் பெண்

ஃபிராங்க் வந்திலன். குறித்தகாலம் வந்தபோது, அன்னாவின் ஐயப்பாடு சரியாயிற்று. அவன் வாராமையை யுணர்த்தும் கடிதமே போந்தது. கணவனைவிட அன்னாதான் பெருத்த ஏமாற்றமடைந்தாள். அவர் அரைமணிநேரம் திடுக்கிட்டமர்ந்தார். பின் தம் மகன் இரண்டு மூன்று திங்களுக்குப்பின் வருவதும் நல்லதே யென்று அமைதி கண்டார்.

ஃபிராங்க் வராததுபற்றிக் கவலைப்படக்கூடிய மனநிலையில் எம்மா இப்போது இல்லை. அமைதியாய் ஒதுங்கியிருக்கவே அவள் விரும்பினாள். ஆயினும் மற்றவரெதிரில் வழக்கம் போல் தோற்றமளிப்பதும், தங்கள் நட்பிற்குத் தக்கபடி அன்னாவிடம் இந்நிகழ்ச்சி பற்றிப் பேசுவதும் விரும்பத்தக்கனவே யல்லவா?

ஃபிராங்க் வராததுபற்றி ஜார்ஜிடம் முதன் முறையாய் எடுத்துரைத்தவள், எம்மாதான். சர்ச்சில் குடும்பத்தினர் அவனைத் தடுத்தது பற்றிக் குறைப் பட்டுக் கொண்டாள்.

"தன் தந்தையைக் காணவேண்டுமென உண்மையாகவே ஃபிராங்க் விரும்பினால், கண்டிருக்க முடியும். இருபத்து நான்கு ஆண்டினன் இதுகூடச் செய்ய முடியாதவனா!" என்றார் அவர்.

"எளிதாய்ச் சொல்லிவிட்டீர்கள். உங்களுக்கு நீங்கள் தாம் அரசர். மற்றவர்களை நட்பி வாழ்கிறவர் நிலையை நீங்கள் அறியமாட்டீர்கள்."

"சிறிது காலத்துக்கு முன்னர் அவன் வேமத்துக் குப் போந்திருந்தான். விரும்பினால் அவன் "அக்

குடும்பத்தைப் பிரிந்து செல்லமுடியும் என்பதற்கு இதுவே சான்று."

"ஒருவரது சூழ்நிலையை நன்கறிந்து கொள்ளாமல், அவரது நடத்தையை மதிப்பிடுவது முறையன்று."

"உன்னருமை நண்பன் வெறுங் கோழை. முதன் முதல் அக்குடும்பத்தினர் தன் தந்தையைப் பழிக்க முயன்றபோதே எதிர்த்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருப்பானாயின், இப்போது தடங்கல் ஏதும் நிகழ்ந்திராது."

"அவரைப் பற்றி நம்மிடையே கருத்தொற்றுமை ஏற்படாது. இருவேமும் 'ஓரம்' பேசுகிறோம். நீங்கள் அவரை வெறுக்கிறீர்கள்; நான் விரும்புகிறேன். அவரே இங்கு வரும்வரை, நம்மிடையே கருத்தொற்றுமை நிகழாது."

"நானொன்றும் வெறுப்பால் 'ஓரம்' பேசவில்லை. அவனைப்பற்றி நான் திங்களுக்கொருமுறை கூட நினைப்பதில்லை."

ஜார்ஜ் சீற்றத்தோடு பேசினாராதலின் எம்மா உடனே பேச்சினை மாற்றினாள். ஆயினும் அவரது சீற்றத்துக்குக் காரணம் விளங்காதவளாய்க் குழம்பினாள்.

ஒருநாட் காலையில் எம்மாவும் ஹேரியட்டும் உலவிக் கொண்டிருந்தார்கள். எம்மா விரும்பியதனை விட அதிகமாகவே எல்டனைப் பற்றிய பேச்சு நிகழ்ந்தது. அவள் பேச்சினை மாற்றப் பெரும்பாடு பட்டாள். குளிர்காலத்தில் எளியவர் படுந்

துன்பத்தை விளக்கினாள். உடனேயே, "எல்டான் எளியவரிடத்தில் எத்தனை இரக்கங் காட்டுவார்!", என்றாள் ஹேரியட்.

அப்போது அவர்கள் பேட்ஸ் அம்மையின் இல்லத்தை நெருங்கினர். அவ்வீட்டிற்குள் போனால், அவர்களது உதவி தனக்குக் கிட்டுமேயென்றெண்ணினாள், எம்மா. அவ்வம்மையும் அவள் மகளும் மற்றவர்கள் அடிக்கடி தம்மை வந்துபார்க்க வேண்டுமென விரும்பக்கூடியவர்கள். எம்மாவே அத்துறையில் குறைபாடுடையவள். ஜார்ஜ் பலமுறை இக்குறைபாட்டினைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அவளது மனமே இதை உணர்ந்து தானிருந்தது. போய்ப் பார்ப்பது பிடிக்காத ஒன்று. 'காலம் வீண். கிழவியும் அவள் மகளும் சளசளவெனப் பேசுவர். இரண்டாந்தர, மூன்றாந்தரக் குடிமக்களையெல்லாம் அங்குக் காண நேரலாம்' - இத்தகைய கருத்தினாலேயே அவள் அவ்வீட்டிற்கு அரிதாகவே சென்றாள். இப்போதோ போய்ப் பார்ப்பதென்று முடிவு செய்தாள்.

விருந்தினர் ஆர்வத்தோடும் நன்றியோடும் வரவேற்கப்பட்டனர். கிழவி, எம்மா இருப்பதற்கெனத் தன் இருக்கையையே வழங்க முற்பட்டாள். அவள் மகள் அன்பினையும் நன்றியையும் ஆர்வத்தையும் சொற்களாற் கொட்டினாள். இடையே எல்டானைப் பற்றிய பேச்சு எழுமென்று எம்மா எதிர்பார்த்தவள் தான். ஆதலின் பொறுமையாய் ஏற்றுக் கொண்டாள். தொடர்ந்து ஜேனைப்பற்றிப் பேச்சு நிகழுமென அவள் எதிர்பார்த்திலள். பேட்ஸ் அம்மையின்

மகள் எல்டானை விரைவில் தள்ளிவிட்டு, ஜேனின் கடிதத்திற்குத் தாவினாள். சளசளவென அவள் பேசியவற்றினிடையே, ஜேன் ஒரு கிழமைக்குள் ஊருக்குத் திரும்புகிறாள் என்பதும், கர்னல் கேம்ப்பெல்லின் மகளோடும் மருமகன் டிக்சானோடும் அவள் அயர்லாந்திற்குச் செல்லவில்லையென்பதும் வெளிப்பட்டன.

எம்மாவுக்குத் திடீரென ஓர் ஐயம் பிறந்து ஊக்கமளித்தது. 'ஜேன் – அழகன் டிக்சான் - அயர்லாந்துக்குப் போகாமை - ஏதேனும் தொடர்புண்டோ?' என்றையுற்றாள் அவள்.

கர்னல் மகளின் திருமண முதலே ஜேனுக்கு உடல்நலம் இல்லையென்றும் தேறுவதற்காகவே ஊருக்குத் திரும்புகிறாள் என்றும் பேட்ஸ் அம்மையின் மகள் தெரிவித்தாள்.

தந்தை தேடுவாரென்று விடைபெற்று எம்மா, தன் தோழியோடு புறப்பட்டாள். ஜேனின் கடிதத்தைக் கண்ணுற் பார்க்கவில்லையே தவிரச் செய்தி முழுதினையும் கேட்பதிலிருந்து தப்பமுடியவில்லை என நினைத்தாள் அவள்.

பேட்ஸ் அம்மையின் இளைய மகளுக்குப் பெண்ணாய்ப் பிறந்தவள், ஜேன். காலாட்படையில் அலுவலராய் விளங்கிய அவள் தந்தை போர்க்களத்தில் இறந்தார். தாயார் அத் துன்பத்தைத் தாங்காதவராய் விரைவிலேயே உயிர் நீத்தார். எனவே தன் மூன்றாம் ஆண்டினிலேயே ஜேன் தன் பெரியம்மா, பாட்டி ஆகிய இருவரது பொறுப்பினில் வளர வேண்டியவளானாள். ஹைபரியிலேயே

வாழ்ந்தும் இருப்பாள். அவள் தந்தையின் நண்பரொருவரது இரக்கத்தால் அவளது தலைவிதி மாறிற்று. கர்னல் கேம்ப்பெல், ஜேனின் தந்தையைச் சிறந்த அலுவலரென மதித்தார். அவராலேயே தாம் ஒருமுறை கொடிய சுரத்திலிருந்து பிழைத்ததாகவும் உணர்ந்தார். ஆதலின் சில ஆண்டுகளுக்குப்பின் தாய்நாடு திரும்பியபோது, ஜேனைப் பேணலானார். அவருக்கு ஜேனையொத்த பருவத்தினளாய் மகளொருத்தியும் உண்டு. எனவே ஜேன் ஒன்பதாம் ஆண்டு முதல் கர்னலின் குடும்பத்தோடு தங்கிக் கல்வி பயிலலானாள். அவ்வப்போது பாட்டியைக் காண ஊருக்கு வருவாள்.

ஜேன் பயின்று, மற்றவர்களைப் பயிற்றுவிக்க வேண்டுமென்பதுதான் திட்டம். பத்தொன்பதாண்டினை எட்டிப்பிடித்த அவள் இப்போது ஆசிரியைத் தொழிலுக்குத் தகுதியுடையவளே. ஆயினும் அக்குடும்பத்தினர் அவளைப் பிரிதற்கு வருந்தினர். ஆதலின் அத்துன்ப நாள் தள்ளிவைக்கப்பட்டது. ஜேனும் அவர் மகளைப் போல் அங்கு வாழ்ந்தாள். அணிமையில் திருமணம் நிகழும்வரை, கர்னல் மகள் ஜேனின் இணைபிரியாத் தோழியாய் விளங்கினாள். இப்போது ஜேன் தன் எதிர்காலத்தைப் பற்றிக் கருத வேண்டிய நிலை ஏற்பட்டது. இருபத்தோராண்டினை எய்தியவுடன் தன் கடமை வாழ்விற் புகுவதென அவள் முடிவு செய்தாள். இம்முடிவினைக் கர்னலின் உள்ளம் ஏற்றிலதாயினும், அறிவு ஒப்புக் கொண்டது. அவரும் மனைவியும் அவளைத் தம்முடன் வைத்திருக்கவே விரும்பி

யிருப்பர். அது தந்நலமாகி விடுமே! இறுதியிலொரு நாள் நிகழப்போவது, இப்போதே நிகழ்ந்து விடலாமே!

'பெரியம்மா' எம்மாவிடம் தெரிவித்தது போன்று, உடலைத் தேற்றுவதற்காகவே ஜேன் தன் ஊருக்குத் திரும்பினாள். மற்றொரு நோக்கமும் உண்டு. உரிமைவாழ்வின் இறுதிச் சில திங்களையேனும் தன் அன்பு உறவினருடன் அவள் கழிக்கக் கருதினாள்.

கழிந்த மூன்று திங்களாகத் தான் விரும்பாத ஒருத்தியிடம் சிரித்துப் பேச நேர்வது பற்றி எம்மா வருந்தினாள். அவள் ஜேனை ஏன் வெறுத்தாள் என்ற கேள்விக்கு எளிதில் விடை சொல்வதியலாது. ஒருமுறை ஜார்ஜ் அவளிடம் "உன்னை மற்றவர் எத்தகு நிறைவுடை இளம்பெண்ணாய் மதிக்கவேண்டுமென நீ விரும்புகிறாயோ அத்தகு பெண்ணாய் அவள் திகழ்கிறாள். அதுதான் உன் வெறுப்பிற்குக் காரணம்" என்றார். அப்போது அவள் அக்குற்றச்சாட்டினை மனவெழுச்சியோடு மறுத்தாள். சில சமயம், அவளது மனச்சான்று அவள் குற்றவாளியேயென்று இடித்துரைத்தது.

இரண்டாண்டுகளுக்குப் பின் ஊர்திரும்பிய ஜேனைப் போய்ப் பார்ப்பது முறையன்றோ! எம்மா அவளைப் பார்த்தபோது, இரண்டாண்டு காலமாகத் தான் பழித்த அவளது தோற்றமும் போக்குமே தன்னைக் கவர்தலை உணரலானாள். இனிமேலும் அவளை வெறுத்தலாகாதென உறுதி பூண்டாள்.

ஜேன் டிக்சானை அவர் மனைவியிடமிருந்து பிரித்த குற்றத்தையோ, இது போன்று எம்மா தான் கற்பனை செய்த பிற குற்றங்களையோ மறக்கவும் ஆயத்தமானாள். 'அப்படியே காதலென்றாலும், ஒரு தரப்பினதாகவே—ஜேனின் உள்ளத்தில் மட்டுமே—நிகழ்ந்திருக்கும். இப்போது அவள் தலை சிறந்த நோக்கத்தோடு—தன்னை அவரிடமிருந்து பிரிக்க வேண்டுமென்பதற்காகவே— அயர்லாந்தினைக் காண ஆவலுடையவளாயிருந்தும் சொந்த ஊருக்குத் திரும்பியிருக்கிறாள். விரைவிலேயே கடமையை நிறைவேற்றப் பாடுபடப் போகிறாள்!'

மொத்தத்தில், ஜேனிடம் விடைபெற்றுக் கிளம்பியபோது, எம்மா நல்லுணர்வுகளுடையவளாயினாள். 'ஹைபரியில் ஜேனுக்குத் தக்கவனாகச் செல்வ இளைஞன் எவனும் இல்லையே! இருந்தால் ஒரு திட்டம் வகுக்கலாமே' என்று வருந்தவுஞ் செய்தாள்.

•

இவை உயரிய உணர்வுகள் தாம். ஐயோ! நெடு நாள் நிலைத்திலவே! ஒரு நாள் மாலை ஜேன் தன் பெரியம்மாவோடும் பாட்டியொடும் ஹார்ட்ஃபீல் டுக்குப் போந்தாள். எல்லாம் பழைய நிலைக்குத் திரும்பின. பெரியம்மா வழக்கம் போல் 'சளசள'த் தாள். ஜேன் எம்மாவின் மதிப்பினில் இழிந்து விட்டாள். அம்மட்டோ! எதனிலும் அவள் எச்சரிக்கையாக விட்டுக் கொடாமற் பேசினாள். அவளது உண்மைக் கருத்தினை அறியவே முடிய வில்லை. அதனிலும் கொடுமை, அவள் வேமத் பற்றியோ டிக்சானைப் பற்றியோ விரிவாய் ஏதும்

சொல்லாமல் ஒதுக்கினாள். ஏதோ வஞ்சனை உள்ள தென நினைத்த எம்மா மறுபடியும் முன்னை ஐயப் பாடுகளில் மூழ்கினாள். 'ஒரு கால் டிக்சான், தோழி யரில் ஒருத்தியை ஒதுக்கி மற்றவளை ஏற்கும் நிலைக்கே சென்றாரோ! எதிர்காலத்தில் பன்னிரண்டாயிரம் பவுன் கிட்டுமென்பதனை நினைத்துத்தான் கர்னலின் மகளைக் கைவிடாமலிருக்கிறாரோ!'

வேறுசில செய்திகளையும் ஜேன் இவ்வாறே பட்டும் படாமலும் பேசினாள். அவளும் ஃபிராங்கும் ஒரே காலத்தில்தான் வேமத்துக்குப் போயிருக்கின் றனர். ஓரளவு அவர்கள் பழகியவர்களென்பதும் தெரிந்தது. எனினும் ஃபிராங்க் எத்தகையவரென ஒரு சொல்லேனும் அவளிடமிருந்து வரவழைக்க முடியவில்லை. எம்மா அவளை எப்படி மன்னித்தல் கூடும்?

---

18. அதிர்ச்சியைத் தாங்குதல்

எம்மா ஜேனை மன்னிக்கவில்லை. ஜார்ஜும் போந்திருந்தார். அவரது கண்ணில் பெண்டிர் இருவரும் சினந்ததோ வெறுத்ததோ படவில்லை. மறுநாட்காலையிலும் அவர் ஹென்றியை ஓர் அலுவலை முன்னிட்டுக் காணப்போந்தார். எம்மா ஜேனிடம் முறையின்றிச் சீறுவதாய்க் கருதிய அவர், இப்போது—முதல் நாள் மாலையில்—அவளிடம் தென்பட்ட முன்னேற்றத்தை மகிழ்ச்சியுடன் பாராட்டினார்.

"ஜேன் பெரிய அழுத்தக்காரி" என்றாள் எம்மா.

"அவள் ஓரளவு கூச்சப்படுபவள் என்று முன்பே சொன்னேனே! நாணத்தால் வரும் கூச்சத்தைத் தவிர மற்றதையெல்லாம் நீ போக்கி விடலாம்."

பேட்ஸ் குடும்பத்தை நினைத்தவராய் ஹென்றி சொன்னார்: "அளியர்! அவர்கள் சூழ்நிலையால் இப்படி யடங்கிக்கிடக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். இன்று ஒரு பன்றி யடித்தோம். அவர்களுக்குத் தொடையோ காலோ அனுப்பலாமென எம்மா கருதுகிறாள்."

"அருமை அப்பா! பின் பகுதி முழுதுமே யனுப்பிவிட்டேன்."

ஜார்ஜ் திடீரென, "எம்மா! உனக்கு ஒரு செய்தி. செய்தி யென்றால் ஆவலோடு கேட்பாயே!" என்றார்.

"செய்தியா! ஆமாம் எனக்குச் செய்திகள் பிடிக்கும். என்ன செய்தி? ஏன் சிரிக்கிறீர்கள் ரண்டால் மாளிகையிற் கிடைத்த செய்தியா?"

"இல்லை இல்லை. நான் அங்குப் போகவேயில்லை' என்று அவர் சொல்லி முடித்த கணமே, கதவு திறந்தது. பேட்ஸ் அம்மையின் மகளும், ஜேனும் அறைக்குள் நுழைந்தனர். அவ்வம்மை நன்றிப் பெருக்கும், செய்திப் பெருக்குமாய்ப் போந்து எதனை வெளியிடுவதென அறியாதவளாய் நின்றாள். 'வாய்ப்பு நழுவிவிட்டது. இனித் தாம் ஒரு சொல்லேனும் பேசுவதற்கிடமில்லை' என்றுணர்ந்தார் ஜார்ஜ்.

"ஐயா! இன்று காலையில் எப்படியிருக்கிறீர்கள்? அருமை எம்மா! எனக்கு வாயடைத்து விட்டது. என்ன அருமையான பன்றியிறைச்சி! இருந்தாலும் உன் வண்மை மிகப் பெரிதுதான்! உனக்குச் செய்தி தெரியுமா! எல்டான் மணக்கப் போகிறார்."

எம்மா திடுக்கிட்டு நடுங்குமளவு பெருவியப் பெய்தினாள். தன் செயலால் நாணமும் கொண்டாள்.

ஜார்ஜ் புன்முறுவலுடன், "இதோ என் செய்தி! இஃது உனக்கு ஊக்கமளிக்குமென நினைத்தேன்" என்றார்.

ஜேனின் பெரியம்மாள் வியப்புற்றாள்: "நீங்கள் எங்கே கேள்விப்பட்டீர்கள்? எப்படி யறிந்திருக்க முடியும்? **கோல்** அம்மையின் கடிதம் ஐந்து நிமிடத்துக்கு முன்னரே எனக்குக் கிடைத்தது. சே... ஐந்து நிமிடத்துக்கு மேலிராது. ஒருவேளை பத்து

நிமிடமிருக்கலாம். அப்போதுதான் வெளியே கிளம்பு வதற்கு ஆயத்தமாய்த் தொப்பியை மாட்டினேன். பன்றியிறைச்சி பற்றிச் சமையற்காரியிடம் சொல் வதற்காக இறங்கினேன். ஜேன் வழியில் நின்ருள். இல்லையா, ஜேன்! பெரிய வாணலி இல்லையே என்று அம்மா சொல்லிக்கொண்டிருந்தாள். கீழே போய்ப் பார்க்கிறேன் என்று கிளம்பினேன். 'சமையலறையை இப்போதுதான் கழுவிவிட்டிருக்கிருள். உங்களுக்கு ஏற்கெனவே சிறிது சளி பிடித்திருக்கிறது. நான் போய்ப் பார்க்கிறேனே!' என்ருள் ஜேன். 'சரி யம்மா' என்றேன். அப்போதுதான் கடிதம் வந்தது. யாரோ அகஸ்டாவாம். அவ்வளவே அறிவேன். பாத் நகரமாம். ஆமாம், ஜார்ஜ்! நீங்கள் எப்படி யறிந்தீர்கள்? கோல் தன் மனைவியிடம் சொன்ன வுடனேயே அவள் உட்கார்ந்து எனக்குக் கடிதம் எழுதிவிட்டாள். யாரோ ஓர் அகஸ்டா..."

"அரைமணி நேரத்துக்குமுன் ஓரலுவல் காரண மாகக் கோலைக் கண்டு பேசினேன். அவர் அப்போது தான் எல்டானின் கடிதத்தைப் படித்து முடித் திருந்தார். நேரே என் கையிற் கொடுத்தார்' என்ருர் ஜார்ஜ்.

பேசுந்திறன் பெற்றதும் எம்மா சொன்ஞள்: "எல்டானுக்குத் திருமணமா! எல்லாருமே அவரை வாழ்த்துவார்கள்."

"ஜேன்! நீ எல்டானைப் பார்த்ததே யில்லையே! இதனுல் தான் அவரைப் பார்க்கத் துடிக்கிருய்" என்ருள் 'பெரியம்மா.'

O111, 3LAU, E
31N66

ஜேனின் துடிப்பு அவ்வளவு மிகுதியில்லை போலும். வெளியிற் சிறிதேனும் புலப்படவில்லை. "நான் அவரைப் பார்த்ததில்லை. அவர்—நெட்டையா யிருப்பாரா?"

எம்மா சொன்ஞள்: "எவரே விடைசொல்ல வல்லார்? அப்பாவைக் கேட்டால் ஆமென்பார். ஜார்ஜ் இல்லையென்பார். உன் பெரியம்மாவும் நானும் நடுத்தரமென்போம். எல்டான் இவ்வூரிலேயே உருவிலும் உள்ளத்திலும் முழுமையின் அளவு கோலாய்க் கருதப்படுபவர். இவ்வுண்மை இன்னுஞ் சிறிது காலம் நீ இவ்வூரிலிருந்தால் புலப்படும்." தொடர்ந்து, "அகஸ்டா யார்? எப்படிப் பட்டவள்? அவருக்கும் அவளுக்கும் எத்தனை நாள் பழக்கம்? இவையெல்லாம் யாருக்கும் தெரியாதா? நெடுநாட் பழக்கமாய் இருக்கமுடியாது. அவர்போய் ஒரு திங்கள் தானே இருக்கும்?" என்ருள்.

யாரும் அவளுக்கு விடை சொல்ல அறிந்திலர்.

"ஆமாம். அவர்போய் நேற்ரோடு ஒரு திங்கள் தான் ஆயிற்று. அகஸ்டா!—இவ்வட்டாரத்திலேயே ஒருத்தி வருவாளெனவே நினைத்தேன். நான் ஒரு போதும்...கோல் அம்மைதான் ஒருமுறை முணு முணுத்தாள்...உடனேயே சொல்லிவிட்டேன். 'இராது! எல்டான் உயர்குணமுடையர் இல்லை...' என்றேன். அத்தகைய செய்திகளை யெல்லாம் உடனுக்குடன் கண்டுணரும் வல்லமை எனக்கில்லை. இருப்பதாகவும் நடிக்க மாட்டேன். எதிரில் இருப்பதனைக் காண்பேன் நான் பேசுவதற்கு எம்மா மகிழ்ச்சியோடு விட்டுவிடுகிருள். உலகில் யாரையும்

111581

புண்படுத்த மாட்டேன் என்று அவள் அறிவாள். ஹேரியட் எப்படியிருக்கிறாள்? இப்போது நன்கு தேறிவிட்டாள் போலிருக்கிறதே!... இசபெல்லாவிடமிருந்து அணிமையில் செய்தியுண்டா? அடடா! எத்தகு அருமையான குழந்தைகள்!"— ஜேனின் பெரியம்மா இறுதியில் ஒருவாறு விடைபெற்றுச் சென்றாள்.

எம்மா தன் தந்தையின் பணிவிடையிற் பாதியும் தான் கேட்ட செய்திகளிற் பாதியுமாக உள்ளத்தைச் செலுத்தினாள். எல்டான் நெடுநாள் வருந்தினாரல்லர் என்பதனை இச்செய்தி அறிவித்தது. எம்மாவைப் பொறுத்தவரை இது வரவேற்கத் தக்க இன்பச் செய்தியே. ஹேரியட்டை நினைத்துத்தான் எம்மா கவலைப்பட்டாள். மற்றவர்கள் திடீரென அவளிடம் இதனைச் சொல்லி விடாமல் தடுப்பதற்கு ஒரே வழி, தானே அவளிடம் சொல்வதுதான் என்றெண்ணினாள். வழக்கமாய் ஹேரியட் எம்மாவைப் பார்க்க வரும் நேரமன்றோ இது! வழியில் ஜேனின் பெரியம்மாவைப் பார்த்து விடுவாளோ! நல்லகாலம். மழைபெய்யத் தொடங்கி விட்டது! ஹேரியட் கிளம்பியிராள்!

மழை கொட்டுக்கொட்டென்று கொட்டியது: சிறிது நேரமே நீடித்தது. ஓய்ந்து ஐந்து நிமிடத்திற்குள் ஹேரியட் ஓடோடிப் போந்தாள். அவளது பதற்றத் தோற்றமே, ஏதோ சொல்லத் துடிக்கிறாளென்பதனை உணர்த்திற்று. "அருமை எம்மா! யாது நிகழ்ந்ததென நினைக்கிறீர்கள்" எனத் தொடங்கிய பேச்சும், 'இடி விழுந்து விட்டது.

இருவரும் குடைவாங்குவதில் ஈடுபட்டனர்

என்பதனைக் காட்டிற்று. எம்மா வாய்திறவாமற் கேட்பதே பேரன்பினைப் புலப்படுத்தும் என்றெண்ணியவளாய்ச் செவிமடுக்கலானாள். வீட்டை விட்டுக் கிளம்பிய ஹேரியட் மழைக்காக ஒரு கடையில் ஒதுங்கினாள். அக்கடைக்குள் தற்செயலாய் ராபர்ட்டும் அவர் தங்கை எலிசபெத்தும் நுழைந்தனர். எலிசபெத் முதலிலேயே கண்டு கொண்டாள். அவர் கண்டிலர். இருவரும் மறுமுனையில் ஒரு குடை வாங்குவதில் ஈடுபட்டனர். பின் இருவரும் ஏதோ பேசிக் கொண்டனர். எலிசபெத் அவளை யணுகி உரையாடினாள். மழை ஓய்ந்தபின் ஹேரியட் கிளம்பினாள். ராபர்ட் ஓடோடி அவளையணுகி வழக்கமாய் ஹார்ட்ஃபீல்டு செல்லும் வழியில் தெருவெல்லாம் மழைநீர் தேங்கியிருக்குமென்றும் வேறு வழியாகச் செல்லுமாறும் கூறினார். அவள் அவருக்கு நன்றி தெரிவித்தாள். “அருமை ” எம்மா! பேசுங்களேன். எனக்கு ஆறுதல் கூறுங்களேன்” என முடித்தாள் ஹேரியட்.

எம்மாவும் பேச வேண்டுமென்றுதான் விரும்பினாள். வாய் ஓடவில்லை. அவள் நினைவிலாழ்ந்தாள். இளைஞரும் அவர் தங்கையும் நடந்த முறை, உண்மை யன்பினைக் காட்டுவதாய்த் தோன்றிற்று. அவள் அவர்கள்மீது இரக்கங் கொண்டாள். அதுபற்றி வருந்துவது மடமை யன்றோ? அவர் ஹேரியட்டை இழப்பதற்கு வருந்தியிருப்பார். அவர்கள் எல்லாருமே வருந்தியிருப்பர். ஹேரியட் தொடர்பினால் தங்களை உயர்த்திக் கொள்ளலாமென நம்பியிருப்பர். ஆயின் ஹேரியட்டின் புகழுரைக்குப் பொருள் யாது?

“இப்போதைக்கு இந்நிகழ்ச்சி கவலையளிக்கலாம். ஆயின் நீ நன்முறையில் நடந்து கொண்டாய். முடிந்து விட்டது. ‘முதல் முறை’ யாய்க் காண்பது ஓய்ந்தது. இனி இதுபற்றி நினைக்க வேண்டா” என்றாள் எம்மா.

ஹேரியட் “உண்மைதான். நினைக்கமாட்டேன்” என்றாளாயினும் இதுபற்றியே பேசினாள்; வேறெதனையும் பேச முடியாதவளானாள். ராபர்ட்டின் நினைவை மாற்றுவதற்காக, எம்மா எல்டானின் செய்தியை விரைவாய்க் கூற வேண்டியவளானாள்.

செய்தி கேட்டவுடன், முதல்நாள் கேட்டிருந்தால் எப்படி உருகி யிருப்பாளோ, அப்படி உருகினாளல்லள், ஹேரியட். ஆயினும் செய்தியின் துன்பம் விரைவிற் பெருகிற்று. அவள் வியப்பும் ஆர்வமும் வருத்தமும் தோன்றப் பேசலானாள்.

அவள் ராபர்ட்டைக் கண்டதும் நன்மைக்கே என்றெண்ணி எம்மா மகிழ்ந்தாள். அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்வதற்கு அது பயன்பட்டது. எனினும் தடுமாறச் செய்யுமளவு நிலைத்து நிற்கவில்லை.

19. தடுமாற்றங்கள்

விந்தை நிலையிலிருப்பவர்களை யெல்லாம் போற்றுவதே மனித இயல்பாயுள்ளது. இளைஞனொருவன் மணம் புரிந்தாலும், மரணமடைந்தாலும் பலரது அன்புப் பேச்சிற்குப் பொருளாகிறான்.

ஹைபரியில் அகஸ்டாவின் பெயரடிபடத் தொடங்கிய ஒரு கிழமைக் குள்ளாகவே அவள் உருவிலும் திருவிலும் சிறந்தவளெனப் பலராலும் பாராட்டப்பெற்றாள். ஊர் திரும்பிய எல்டான் அவளது புகழைப் பரப்பத் தேவையில்லாமலே போயிற்று. அவர் காதலில் தோல்வியுற்றவராய் நொந்து போய் ஊரைவிட்டுச் சென்றார். மன நிறைவோடு மகிழ்ந்து திரும்பினார். எம்மாவைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட்டிலர்; ஹேரியட்டை நினைத்தும் பார்த்திலர்.

அழகும் உயர்நிலையும் வாய்ந்த அகஸ்டா வழக்கமான சிறப்புக்களே யன்றி ஏறத்தாழப் பத்தாயிரம் பவுன் மதிப்புள்ள சொத்துரிமையும் பெற்றிருந்தாள். மணமக்கள் தவிர வேறெவரும் உறவினர் இலராதலின் திருமண நாள் மிகத் தொலைவில் இல்லை யென்பது விளங்கிற்று. தேவையான ஏற்பாடுகளாலேயே காலந்தாழ்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே எல்டான் மறுபடியும் 'பாத்' துக்குக் கிளம்பிய போது, அவர் மீளுங்கால் மனைவியுடன் வருவார் என ஊரெல்லாம் எதிர் பார்த்தனர்.

எல்டான் ஊரில் தங்கிய குறுகிய காலத்தில் எம்மா அவரை அரிதாகவே கண்டாள். முதற்காட்சி முடிந்ததென நினைக்குமளவே அது நிகழ்ந்தது. இப்போது அவரது தோற்றத்தில் போலித்தனமும் எரிச்சலுமே பரவியிருப்பதாகவும் முன்னேற்றமேதுமில்லை யென்றும் அவள் கருதினாள். அவர் இனிய இயல்பினர் என்று முன்னே தான் எவ்வாறு கருத முடிந்தது என்று கூட வியப்புற்றாள். தன் மனத்துக்கு நன்மைதருகிற தோல்வியை—நல்லதொரு பாடத்தைக் கற்பித்தவர் எனும் முறையில் அவரை மதித்தாளே தவிர, அவரை மறுபடியும் கண்ணுறக் காணவும் நேராமற் போயிருந்தால் பெரிதும் மகிழ்ந்திருப்பாள். 'மணமகளை'ப்பற்றி எம்மா சிறிதளவே கருதினாள். அவள் எல்டானுக்குப் பொருத்தமானவள் என்பதில் ஐயமின்று. பத்தாயிரம் பவுன் நீங்கலாய், அவ்ள் எவ்வகையிலும் ஹேரியட்டை விட உயர்ந்தவளாய்த் தோன்றவில்லை. இவ்வுணர்வுகளை யெல்லாம் ஹேரியட்டுக்குப் புலப்படுத்தல் கூடுமோ? எம்மாவின் பேச்சினாலேயே ஹேரியட் காதலிக்கத் தொடங்கினாள்! ஐயோ! எம்மா தன் பேச்சினால் அக்காதலைப் போக்க முடியவில்லையே!

ஹேரியட்டின் உள்ளம், எல்டானையடுத்து மற்றொருவனை நாடலாம்! குறைந்தது, ஒரு ராபர்ட்டே போதும்! ஆயின் வேறெதுவும் அவளது காதல் நோயைத் தீர்க்க முடியாது போன்றிருக்கிறதே! சிலர் காதலிக்கத் தொடங்கி விட்டால், எப்போதும் காதலிப்பார்கள். ஹேரியட் அவ்வகையைச் சேர்ந்தவளோ? எல்டான் திரும்பி வந்ததனால், அவள் பெருமளவு துன்புற்றாள். ஓரிடமின்றேல்

மற்றோரிடத்தில் அவள் அவரைக் காணல் நேர்ந்தது. ஹார்ட்ஃபீல்டு மாளிகை தவிர மற்றெல்லா இடங்களிலும் அவரைப்பற்றிப் பேசுவதில் மக்கள் பேரின்பங் கண்டனர். அத்தகையோர் நடுவே அவள் இருத்தல் நேர்ந்தது. அவரைப் பற்றிய பாராட்டுரைகள் அவள் அவர்பாற் கொண்ட மதிப்பினை வலியுறுத்தின; துன்பப் புண்ணைக் கிளறின.

பலரும் ஒப்பக்கூடிய பொழுதுபோக்கு எனலாமாயின், தன் தோழிக்கு வருத்தமும், தனக்கு இடித்துரையுமாக இல்லையாயின், ஹேரியட்டின் மனத்தடுமாற்றங்கள் எம்மாவுக்குக் கிளுகிளுப்பூட்டியிருக்கும். ஹேரியட்டின் உள்ளத்தே சில வேளை எல்டானும், சிலவேளை ராபர்ட்டும், ஒருவர் மற்றவரது நினைவை யடக்குங் கருவிகளாய் மேலோங்கி நின்றனர். ராபர்ட்டை நேரிற் கண்டதால் ஏற்பட்ட துடிப்பினை, எல்டானின் திருமணச் செய்தி போக்கிற்று. அத் திருமணச் செய்தியால் நேர்ந்த துன்பத்தை எலிசபெத் அவளைக் காணப் போந்து, அவளில்லாததால் எழுதிவைத்துச் சென்ற கடிதம் போக்கிற்று. எல்டான் திரும்பிவரும் வரை அக் கடிதத்தைப் பற்றியே அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். அதற்குப் பதிலாக யாது செய்யலாமெனக் கருதினள். வெளிப்பட ஒப்புக்கொள்ளக் கூடியவற்றினும் மிக அதிகமாகவே செய்ய விழைந்தாள். எல்டான் ஊர் திரும்பியது, இத்தகைய கவலைகளைப் போக்கிற்று. அவர் தங்கியதுவரை ராபர்ட்டும் தங்கையரும் மறக்கப்பட்டனர். அவர் பாத்துக்குப் புறப்பட்ட அந்நாட்காலையிலேயே, அவளை எலிசபெத்தைப் போய்ப் பார்த்து வருமாறு

அனுப்புவதுதான் அவளது துன்பத்துக்கு மருந்தென எம்மா கண்டாள். தன் வண்டியிலேயே அழைத்துச் செல்வது, அவளை இறக்கிவிட்டுச் சிறிது நேரத்தில் மீண்டுப் போந்து ஏற்றிக் கொள்வது, இவ்வாறாகக் கழிந்த கால நினைவுகளும் செயல்களும் மீண்டும் தலைதூக்காவாறு காப்பது என எம்மா முடிவு செய்தாள். இதனினும் சிறந்த வழியேதும் புலப்பட்டிலது. இதனிற் கூட எம்மாவின் உளமொப்பாத யாதோ ஒன்று—செய்ந்நன்றி மறந்தது போன்ற ஒன்று—இருப்பதாகவே தோன்றியது. எனினும் இப்படித்தான் செய்தாக வேண்டும். இல்லையேல் ஹேரியட்டின் நிலை யாதாகுமோ!

20. வாராதவன் வந்தான்!

எம்மா அழைத்துச் செல்வதற்கு அரைமணி நேர முன்னரேயே, ஹேரியட் தான் காணத்தகாத ஒன்றினைக் கண்டாள். தீய கோள்களின் சேர்க்கை போலும்! 'மறைத்திரு ஃபிலிப் எல்டான், பாத்நகரம்' என எழுதி ஒட்டப்பெற்றிருந்ததொரு பெட்டியை அவள் காணல் நேர்ந்தது. விளைவாய்ப் பெட்டியும் அத்திசையும் ஒழிந்த பிறவெல்லாம் அவளுக்கு வெறுமையாய்ப் போயின. எனினும் அவள் தன் தோழியுடன் புறப்பட்டாள்.

தோழியர் ராபர்ட்டின் இல்லத்தை யடைந்தனர். வீட்டு முன்புறத் தோட்டத்திற் புகுந்தபோது ஒவ்வொரு பொருளும் கழிந்த ஆண்டின் இளவேனிற் காலத்து நினைவுகளை ஹேரியட்டின் உள்ளத்தே தோற்றுவித்தது. அவள் தயங்கித்தயங்கிச் செல்வது கண்ட எம்மா, பதினைந்தே நிமிடங்களில் அவளைத் திரும்ப அழைத்துச் செல்ல வந்துவிட வேண்டுமென முடிவு செய்தாள். எம்மா அவ்விடைவேளையில் தன் பழைய வேலைக்காரி யொருத்தியைக் காணச் சென்றாள்.

சரியாகக் கால்மணி நேரத்துக்குப்பின் எம்மா மீண்டு போந்தாள். அவள் விளித்ததும் காலந் தாழ்த்தாமல் ஹேரியட் வெளிப் போந்து அவளோடு சேர்ந்துகொண்டாள். நடுக்குறுத்தும் வகையில் இளைஞன் எவனும் ஹேரியட்டுடன் வழியனுப்பப் போந்தானல்லன்.

உணர்ச்சி வயப்பட்டமையால் ஹேரியட் எதனையுந் தெளிவாய்ச் சொல்லமுடியாதவளானாள். இறுதியில் ஒருவாறாக அவளிடமிருந்து அங்கு நிகழ்ந்தவைகளையும் அதனால் விளைந்த துன்பத்தையும் அறிந்து கொண்டாள். ராபர்ட்டின் தாயையும் தங்கைகளையுமே அவள் கண்டுபேசினாள். இருதரப்பிலும் ஐயப்பாடும் கலக்கமும் இருந்தனவாதலின் பொதுப்படையான சிறு செய்திகளே அடிபட்டன. பேச்சுப் போக்கினில் ஹேரியட் முன்னைவிட வளர்ந்திருப்பதாய் ராபர்ட்டின் தாய் கூறினாள். உயரத்தை அளந்து பார்க்க முற்பட்டனர். முன்னையாண்டினில் ஒவ்வொருவரது உயரத்தையும் ராபர்ட் அளந்து குறித்தது, அதையொட்டிய நிகழ்ச்சிகள் ஆகியன அவர்களது நினைவிலெழுந்தன. அந்நேரத்தில்தான் எம்மாவின் அழைப்பு வந்தது. எல்லாரது மனநிலையும் மாறிவிட்டது. ஆறு திங்களுக்கு முன் ஆறு கிழமைகள் அவர்களுடன் தங்கியிருந்தாள், ஹேரியட். இப்போது பதினைந்தே நிமிடங்கள் தங்கினாள்!

அவர்கள் இன்னுஞ் சிறிது உயர்நிலை பெறுதற்குத் தகுதியுடையவர்கள்! எம்மா வேறு யாது செய்வாள்? நடவாது! எம்மா தன் செயலுக்கு இரங்குதல் இயலாது! அவர்களைப் பிரித்துத்தான் ஆக வேண்டும்! இப்பணியில்தான் எத்தனை துன்பம்! ஆறுதலை நாடிய எம்மா வழியில் ரண்டால் மாளிகைக்குச் சென்றாள்.

அங்கு "முதலாளியும் இல்லை. அம்மாவும் இல்லை. இருவரும் ஹார்ட்ஃபீல்டுக்குத்தான் சென்றிருப்பார்கள்" என்றான், பணிமகன் ஒருவன். எம்மா

பெருத்த ஏமாற்றமடைந்தாள். வண்டியின் ஒரு மூலையிற் சாய்ந்தாள். திடீரென வண்டி நின்றது. எம்மா ஏறெடுத்து நோக்கினாள். வெஸ்டானும் அன்னாவும் எதிரே நின்றனர். வெஸ்டான் ஆர்வத்தோடு பேசலானார். "எப்படியிருக்கிறாய்? நலந்தானே! இவ்வளவு நேரம் உன் அப்பாவோடு தான் பேசிக்கொண்டிருந்தோம். நாளை ஃபிராங்க் வருகிறான். இன்று காலையில்தான் கடிதம் வந்தது. நாளை மாலைக்குள் உறுதியாய் வந்துவிடுவான்."

இச்செய்தியை வரவேற்காமலிருக்க வாய்ப்பேது? வெஸ்டானின் மகிழ்ச்சி பொங்கிய முகத்தின் ஆற்றலைத்தான் விலக்க முடியுமோ? அன்னாவின் தோற்றமும் பேச்சும் இச் செய்தியை வலியுறுத்தின. பிரிந்து சென்றபோது, "நாளை மாலை நாலுமணியளவில் என்னை நினைத்துக் கொள், எம்மா" என்று கட்டளையிட்டாள், அவள்.

வெஸ்டான் குறுக்கிட்டுத் 'திருத்தம்' வழங்கினார்' "நாலுமணியா! மூன்று மணிக்கே வந்து விடுவான் என்பது உறுதி."

எம்மாவின் உணர்வுகள் மகிழ்ச்சியை எட்டின. கண்ணிற் பட்டனவெல்லாம் புதிய தோற்றம் நல்கின. வண்டியுங் குதிரைகளுங்கூட முன்போற் சோம்பேறிகளாய்த் தோற்றமளிக்க வில்லை.

இன்ப நாளின் காலைப்போது வந்தது. அலீஷியாவின் உண்மை மாணவி பத்து, பதினொன்று, பன்னிரண்டு மணியிலெல்லாம் கூடத் தன் ஆசிரியை நாலு மணிக்கு நினைத்துக் கொள்ள வேண்டுமென்பதை மறந்திலள். பன்னிரண்டு மணியளவில்

அவள் தாழ்வாரத்துள் புகுந்தபோது, தன் தந்தையுடன் ஆடவரிருவர் உரையாடியிருத்தலைக் கண்ணுற்றாள். வெஸ்டானும் அவர் மகனும்தாம்! சில நிமிடங்களுக்கு முன்னரே அவர்கள் போந்திருந்தனர். அவள் தந்தை அவர்களை வரவேற்று வாழ்த்து வழங்கினார். அப்போதுதான் எம்மா அங்குத் தோன்றி வியப்பும் மகிழ்வும் எய்தி நின்றாள்.

நெடுங் காலமாய்ப் பேசப்பட்டு வந்த, ஆர்வத்தோடு எதிர்பார்க்கப்பட்ட ஃபிராங்க் உள்ளபடியே அவளெதிரில் நின்றான். அறிமுகங்கள் நடந்தேறின. அவனைப்பற்றிய புகழுரைகள் மிகையல்ல என்றெண்ணினாள் அவள்.

"பயணத்தில் 'ஊர்ந்து செல்' வதனை எவர்தாம் விரும்புவர்! திட்டமிட்டதிலும் விரைவாய்ச் செல்வதற்கு எவரும் தடை சொல்லமாட்டார். எதிர்பார்த்தல் தொடங்குமுன்பே, நண்பரிடையே சேர்தல் தனி மகிழ்ச்சியைக் கொடுக்கும்" என்றார் வெஸ்டான்.

"அப்படி எல்லா வீடுகளுக்கும் போக முடியுமா! சொந்த வீட்டிற்கு வருவதற்கு எது வேண்டுமாயினும் செய்யலாம்" என்றான் ஃபிராங்க்.

சொந்த வீடென்றதும் அவனுடைய தந்தையின் முகம் மலர்ந்தது. அவன் மற்றவர்களை மகிழ்விப்பதில் கைதேர்ந்தவன் என்று அப்போதே எம்மா தெளிவாயுணர்ந்தாள். அவ்வுணர்வு அதன்பின் நிகழ்ந்த உரையாடலாலும் வலுப்பட்டது.

முதன் முறையாய்ப் பழகுபவர்களிடையே நிகழ்வது போன்ற பொதுப்படையான உரையாடலே

நடைபெற்றது. படிப்படியாய் அவர்கள் பழக்கம் முன்னேறியபோது அவன் தன் சிற்றன்னையைப் பற்றிப் பேச்செடுத்தான். அந்நேரத்தில் தந்தைமார் இருவரும் வேறேதோ பேச்சில் மூழ்கியிருந்தனர். அவன் தன் சிற்றன்னையைப் பலபடப் பாராட்டினான்.

"சித்தி இத்தனை அழகுடைய இளம்பெண்ணாயிருப்பாள் என்று நான் நினைக்கவேயில்லை" என்றான்.

"இப்படி அழகிய இளம் பெண்ணென்று நீங்கள் பேசியதாக அவள் அறிந்து கொள்ளாமலிருக்க வேண்டும்" என்றாள் எம்மா.

"சே! அவளிடம் பேசும்போது யாரைப் பாராட்டுவது, மிகைபடக் கூறாமலே எப்படிப் பாராட்டுவது என்பதை அறிவேன்."

எம்மா வியப்புற்றாள். தனக்கு ஏற்பட்ட ஐயப்பாடே அவனுள்ளத்திலும் எழுமோ என்றெண்ணினாள்.

வெஸ்டான் எதைப்பற்றி அடிக்கடி நினைத்தார் என்பது அவள் அறியாதது அன்று. அவர் மகிழ்ச்சியோடு மீண்டும் மீண்டும் தன்னையும் ஃபிராங்கையும் ஓரக்கண்ணால் பார்த்தலை அவள் கண்டாள். அப்படியே தங்களைப் பார்க்கக் கூடாது என்று அவர் இருந்த சமயங்களில் கூடத் தாங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார் என்று அவள் உறுதியாய் உணர்ந்தாள். தன் தந்தைக்கு இவ்வகை எண்ணம் எதுவும் அறவே ஏற்படாது என்றும், எவ்வகை ஐயப்பாடும் அவரது ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என்றும் அவள் அறிந்திருந்தாள்.

வெஸ்டான் புறப்படத் தொடங்கினார். நன்முறையில் வளர்க்கப் பெற்ற அவருடைய மகன் அவரது குறிப்புப்படி தானும் கிளம்பினான்.

"நீங்கள் கடைத்தெருவுக்குப் போகிற நேரத்தில் நானும் போய்ப்பார்க்க வேண்டிய ஒருவரைப் பார்ப்பேன் (எம்மாவிடம்) உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள ஒருத்தியை அறிவேன். ஏதோ ஃபேர்ஃபேக்ஸ் எனப் பெயர். அது குடும்பப்பெயர் அன்று; பார்ன்ஸ் என்றோ பேட்ஸ் என்றோ குடும்பப்பெயர் என்றான் அவன்.

ஹென்றி குறுக்கிட்டுச் சொன்னார்: "ஆமாம் ஆமாம். அவளை நீ வேமத்திலேயே கண்டிருக்கின்றாயன்றோ! மிக நல்ல பெண். கண்டிப்பாக அவளைப் போய்ப்பார்!"

"அவள் மிக அழகிய இளம்பெண். ஆயின் அவளுடைய பெரியம்மா நாவடக்கமே அறியாதவள். ஜேனின் பேச்சையே நீங்கள் கேட்பது இயலாது" என்றாள் எம்மா.

"வழி காட்டுவதற்கு என் வேலைக்காரர்களுள் ஒருவனை யனுப்புகிறேன்" என்றார் ஹென்றி.

ஃபிராங்க் மறுத்துவிட்டான். தந்தையும் மகனும் மட்டும் புறப்பட்டனர். எம்மா புதிய பழக்கத் தொடக்கத்தால் மிகவும் மகிழ்ந்தவளாய் விளங்கினாள்.

---

21. இரண்டாம் சந்திப்பு

மறுநாட்காலையில் ஃபிராங்க் மறுபடியும் தன் சிற்றன்னையுடன் வந்தான். இருவரும் உலவ முடிவு செய்தனர். அவன் ஹைபரிக்குப் போவதென உடனேயே சொன்னான்.

அதற்கு அரைநிமிட முன்பே போந்திருந்த வெஸ்டான் அவர்கள் வருவதுபற்றி ஏதும் அறிந்தவரல்லர்; சொன்னவரும் அல்லர். ஆகவே அவர்களிருவரும் வீட்டுக்குள் புகுந்தபோது எம்மா வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தாள். உண்மையில் அவள் அவனை மறுபடியும் காணவிரும்பினாள். அதுவும் அவன் சிற்றன்னையோடு எப்படிப் பழகுகிறான் என்று காண ஆவல் கொண்டாள். அதையொட்டியே அவனைச் சரியாக மதிப்பிடலாமென நினைத்தாள். அன்று முற்பகல் முழுதுமே அவர்கள் ஒருங்கிருக்க நேர்ந்தது. ஆகவே எம்மா அவனை நன்கு மதிப்பிடுவதற்குப் போதிய வாய்ப்புக் கிட்டிற்று. மூவரும் ஏறத்தாழ இரண்டுமணி நேரம் உலவச் சென்றனர்.

அவன் வேண்டுமென்றே ஹைபரிக்கு வராமல் இருந்தவனல்லன் என்று தான் கண்டவற்றாலும் கேட்டவற்றாலும் எம்மா முடிவு செய்தாள். ஜார்ஜ் அவனைப்பற்றி உரைத்தவை முற்றிலும் தக்கவையே என்றும் உணர்ந்தாள்.

அவர்கள் கிரௌன் விடுதிக்கு முன் சிறிது நேரம் நின்றனர். அதனமைப்பு ஆடல் மன்றத்துக்குப் பொருத்தமானது என்றெண்ணிய அவன் பலநிமிடம்

நின்று நோக்கலானான். அவர்கள் குறிப்பிட்ட குறை எதனையும் அவன் ஒப்புக்கொள்ளவில்லை. பதினைந்து நாளுக்கொரு முறை அங்கு ஆடல் நிகழ வேண்டுமென்றான்.

அவர்கள் கிரௌன் விடுதி முன் சிறிதுநேரம் நின்றனர்.

ஆடலில் மிக்க ஆர்வமுடைய இளைஞனைப் போல் அவன் சொல்லாடினான். இறுதியில் ஒருவாறு அங்கிருந்து நகர்வதற்கு இணங்கினான். எம்மா, முதல் நாள் அவன் கூறியதனை நினைத்துக் கொண்டவளாய், அவன் ஜேனைப் போய்ப் பார்த்தானா என வினவினாள்.

“ஆமாம் ஆமாம். அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றுதான் நினைத்தேன். மகளிர் மூவரையுமே பார்த்தேன். நீ குறிப்பாய்ச் சொன்னது மிகவும் நல்லதாயிற்று. உனக்கு நன்றி செலுத்தக்

கடமைப்பட்டுள்ளேன். இல்லையேல் 'பெரியம்மா'வின் ஓயாப்பேச்சு என்னை வியப்பிலாழ்த்திக் கொண்டிருக்கும்.''

''ஜேனின் தோற்றத்தைப்பற்றி யாது நினைக்கிறீர்கள்?''

''அவள் மிகவும் வெளிறியிருக்கிறாள். ஏதோ நோயுற்றவள்போலத் தோன்றுகிறாள்.''

எம்மா இதனை ஏற்காமல், ஜேனின் நிறத்தைப் பாராட்டிப் பேசினாள். பின் ''அவளை வேமத்தில் அடிக்கடி பார்ப்பீர்களா?'' என்றாள்.

அக்கணத்தில் அவர்கள் புகழ்பெற்ற ஃபோர்டு கடையெதிரே நின்றனர். ''இக்கடையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் புகுகின்றனரென என் தந்தை அடிக்கடி சொல்வார். நானும் இங்கு ஏதேனும் வாங்கவேண்டும். இவர்கள் கையுறை விற்பார்களோ?'' என்றான் அவன்.

அவர்கள் உள்ளே நுழைந்தனர். சற்றுப்பின்னே, ''மன்னித்துக்கொள், ஏதோ சொல்லத் தொடங்கினாயே?'' என்றான் அவன்.

''வேமத்தில் ஜேனையும் அவள் குழுவினரையும் நன்கறிவீர்களா என்றுதான் வினவினேன்.''

''பழக்கத்தின் அளவை வரையறுப்பது பெண்ணின் உரிமையே; அவள் ஏற்கெனவே இதுபற்றி உன்னிடம் சொல்லியிருப்பாளே!''

''அவள் பெரும் அழுத்தக்காரி. அவள் சொல்லியவற்றைவிட, உய்த்துணர வேண்டியவையே மிகுதி''

''அப்படியானால் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நான் அவளை அடிக்கடி வேமத்தில் பார்ப்பேன். கர்னல் குடும்பத்தை ஓரளவு அறிவேன். அவ்வூரில் நாங்களெல்லாம் ஒரே வட்டாரத்தினர்.''

''ஜேன் எதிர்காலத்தில் எப்படியிருக்கப் போகிறாள் என்றும் அறிந்திருப்பீர்களே!''

அவன் தயங்கி 'ஆம்'' என்றான். கையுறை வாங்கியபின் அவர்கள் கடையிலிருந்து புறப்பட்டனர். ''அவள் பியானோ வாசித்துக்கேட்டிருக்கிறாயா?'' என்றான் அவன்.

''எங்கள் வாழ்நாள் தொடக்கத்திலிருந்து ஒவ்வோராண்டும் கேட்டிருக்கிறேன். அழகாய் வாசிப்பாளே!''

''அவள் நன்கு வாசிப்பாள் என்பதற்கு ஒரு சான்றினை அறிவேன். ஒருவன் - இசையில் ஈடுபாடுடையவன் - வேறொருத்தியைக் காதலித்தவன் - அவளை மணக்க உறுதி செய்தவன் - இவள் வாசிக்க முற்படுவாளாயின் ஒரு போதும் தன் காதலியை வாசிக்குமாறு கேட்க மாட்டான்.''

''அளியள் கர்னலின் மகள்! நான் மட்டும் கர்னலின் மகளாயிருந்தால், இதற்கு இணங்கியிருக்க மாட்டேன். எந்த மனிதனும் காதலைவிட இசையைப் பெரிதெனநாடுதலை மன்னிக்கவும் மாட்டேன். டிக்சான் கேட்டுக் கொண்ட போதெல்லாம், ஹேரியட் வாசித்தாளாயினும், எவரும் தமக்குத் தோன்றியதையெல்லாம் கற்பனை செய்து கொள்ளலாமே!''

"பிள்ளைப்பருவமுதலே ஜேனை அறிந்த நீ, அவளது நடத்தையை நன்கு அறிந்திருப்பாயே!"

"நாங்கள் நெருங்கிய தோழிகளென எதிர்பார்த்தல் இயற்கையே. உண்மையில் அப்படியில்லை. அவள் ஒதுங்கிச் செல்பவள். அத்தகையவளோடு நெருங்கிப் பழகுவது என்னால் இயலாத ஒன்று."

"ஆமாம் ஆமாம். அஃது அருவருப்பூட்டும் இயல்புதான். பல சமயங்களில் அவ்வியல்பு கைகொடுக்கலாம். ஒரு சமயத்திலேனும் இன்பமூட்டாது."

நெடுநேரம் அவளோடு உலவிய பின், இருவர் கருத்தும் ஒன்றுபட்டிருத்தலை யறிந்தபின், எம்மா அவளோடு நன்கு பழகிவிட்டதாய் நினைத்தாள். அதுதான் தங்கள் இரண்டாம் சந்திப்பு என்பதனைக்கூட நம்பமுடியாதவளானாள்.

22. ஐயங்கள் முளைத்தன!

எம்மா ஃபிராங்க் மீது கொண்ட நல்லெண்ணம் மறுநாளிற் சற்றே ஆட்டங்கண்டது. அவன் முடி வெட்டிக்கொள்வதற்கென மெனக்கெட்டு லண்டனுக்குப் போனானம்! எனினும் அவளது உள்ளத்தே அவன் பெற்ற தனிச்சிறப்பு மாறிவிடவில்லை. அவன் தன்னை உள்ளபடியே காதலித்திலன் எனினும் கிட்டத்தட்ட அங்கிலேயிலேயே இருந்தான் என்று நம்பினாள் அவள். ஒருபோதும் மணமே புரியக் கூடாதென்ற தனது கருத்தினால்தான் தான் தப்பியதாய் அவள் நினைத்தாள்.

செய்தியைக் கேட்டபோது ஜார்ஜ் ஒருவர்தாம் "உம்...நான் நினைத்தவாறே கிறுக்கனயிருக்கிறானே!" என்றார்.

அன்று வெஸ்டனும் அன்னவும் ஹார்ட்ஃபீல்டு மாளிகைக்குப் போந்தனர். கோல் குடும்பத்தினரைப் பற்றிய நினைவில் மூழ்கியிருந்தாள் எம்மா. அவர்கள் நல்லவரே; நெடுங்காலம் அவ்வூரில் வாழ்ந்தவரே. எனினும் தொழிலாலும் பிறப்பாலும் அத்துணை உயர்ந்தவரல்லர். எளியராய் வாழத்தொடங்கிய அவர்கள் இப்போதுதான் செல்வச்செழிப்பினைக் காணத் தொடங்கினர். அணிமைக் காலத்தில்தான் சில விருந்துகள் நடாத்தினர். அவர்கள் அழைப்பினும் எக்காரணத்தை முன்னிட்டும் தான் செல்லலாகாது என முடிவுசெய்திருந்தாள் எம்மா. அவர்கள் தம்மினும் உயர் குடும்பத்தினரை விருப்பம்போல்

அழைப்பதா? அவர்களுக்குப் பாடங்கற்பித்தல் வேண்டுமே! ஊரிலேயே அவள் ஒருத்திதானே அதனைச் செய்ய முடியும்!

விருந்திற்கான அழைப்பு பிற உயர்மாளிகைகளுக்குச் சென்றது. ஹார்ட்ஃபீல்டுக்கு வரவில்லை. எம்மாவின் மனம் புண்பட்டது. "ஒருகால் உன் தந்தை வீட்டை விட்டு வெளியிலெங்கும், இரவில் உண்ணார் என்பதனை உணர்ந்தே அவர்கள் அழைத்திருக்க மாட்டார்கள்" என்றாள் அன்னா. இதனாலும் எம்மாவின் மனம் நிறைவுறவில்லை. தன்னால் அருமையாய் மதிக்கப்பெற்ற குடும்பத்தினரெல்லாம் அங்குக் குழுமுவரே என்று அடிக்கடி எண்ணிய எம்மா, ஒருகால் அழைப்பு வரின் ஏற்கலாமென்றுகூடக் கருதலானாள்.

அவ்வழைப்பு வந்து சேர்ந்த நேரத்தில்தான் வெஸ்டனும் அன்னாவும் அங்குப் போந்தனர். எம்மா அவர்களது அறிவுரையை நாடினாள். போவதே தக்கதென்று அவர்கள் கூறியதும், உடனே இணங்கினாள். கோல் குடும்பத்தினர் எத்தனைக் கருத்தாயும் பொருத்தமாயும் எழுதியுள்ளனர்! அவள் தந்தையிடத்தில்தான் எத்தனை மதிப்புக் காட்டியுள்ளனர்!

எம்மா போய் வருவதற்கு ஹென்றியும் ஒப்புதலளித்தார். அவர் போதற்கு அவள் விரும்பினாளல்லள். இரவில் நெடுநேரமாகலாமே! விருந்தினர் பெருங்கூட்டமாயிருப்பரே! அவர் அம்முடிவை வேறுவழியின்றி ஏற்றுக் கொண்டார்.

விருந்திற்கான நாளும் வந்தது. ஃபிராங்கை மறுபடியும் நெடுநேரங் காணலாமே என மகிழ்ந்தாள் எம்மா. அவளது வண்டி, கோல் மாளிகையின் முன்னே, ஜார்ஜின் வண்டிக்குப் பின் நின்றது. அவர் குதிரை வைத்துக் கொள்பவரல்லர். தம் தகுதிக்கேற்ப வண்டியில் போயிறங்குபவருமல்லர். எனவே அவரைக் கண்டதும், எம்மா தன் மகிழ்ச்சியினையும் பாராட்டினையும் தெரிவித்தாள். "குறும்புக்காரி" என்றார் அவர், கடுமையேதுமில்லாமலே.

அத்தொடக்கத்தைப் போலவே விருந்து முழுவதும் எம்மாவுக்கு இன்பம் தந்தது. அனைவரும் அவளை மதித்து வரவேற்றனர். வெஸ்டனும் அவர் மனைவியும் வந்தபோது, அன்புப்பார்வையையும் பெரும்பாராட்டினையும் வழங்கினர். அவர்கள் மகனோ அவளே தன் கருத்திற்குரிய பொருள் என்பவனைப் போல் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் அவளிடம் உரையாடினான். அவளருகிலேயே அமர்ந்தான். மற்றவர்கள் அரசியலைப்பற்றியும் எல்டனைப் பற்றியும் உரையாடியபோது எம்மா அவனுடன் சிறுசிறு செய்திகளைக் குறித்து மகிழ்வாய்ப் பேசினாள். ஜேனின் பெயர் அடிபட்டபோதுதான் அவளது கருத்து மற்றவர்கள்பால் சென்றது. கோலின் மனைவி ஜேனைப் பற்றிக் கூறியவை, எம்மாவின் மிகச் சிறந்த பகுதியைக்—கற்பனையை — வளப்படுத்தின. அவ்வம்மை ஜேனின் பெரியம்மாவைக் காணச் சென்றாள். அவர்களது வீட்டிற் சிறிய 'பியானோ' புதிதாய்க் காட்சியளித்தது. முதல்நாளில் அது வந்திறங்கிய போது பெரியம்மாவும் மகளும் வியந்தனர். அவர்கள் எதிர்பார்த்தவரேயல்லர். எவர்

அனுப்பியிருப்பரென்று ஜேன்கூட உய்த்துணர முடியவில்லை. கர்னல் கேம்ப்பெல்தாம் அனுப்பியிருப்பரென இறுதியில் அவர்கள் முடிவு செய்தனர்.

எம்மா ஃபிராங்கை நோக்கினாள். "ஏன் முறுவலிக்கிறீர்கள்?" என்றாள்.

"நீ ஏன் முறுவலிக்கிறாய்?"

"நானா! கர்னலின் கொடைத் திறனால் ஏற்பட்ட மகிழ்ச்சியே காரணம்...ஆமாம். அவர் ஏன் முன்பே கொடுத்திலர்?"

"ஜேன் இதற்கு முன் இவ்வூரில் நெடுங்காலம் தங்கியிராள்."

"அவ்வீட்டுப் பியானோவையே வழங்கியிருக்கலாமே?"

"அது பேட்ஸ் அம்மை வீட்டிற்குள் புகாத அளவு பெரிதாயிருக்கலாம்."

"நீங்கள் வெளிப்பேச்சிற்கு யாது கூறினாலும், என்னைப் போலவே உள்ளத்துள் கருதுகிறீர்கள் என்பது உறுதி. நான் டிக்சானையோ ஜேனையோ இழிந்த நோக்கமுடையவர் என்று சொல்கின்றிலேன். ஆயினும் டிக்சான் ஜேனின் தோழியை மணக்க உறுதி செய்த பிறகு, ஜேனைக் காதலிக்கிற துன்ப நிலைக்காளாகியிருப்பார். அன்றேல், அவள் தன்மீது அன்பு கொண்டிருத்தலை உணர்ந்திருப்பார். இல்லாவிடில், அவள் அயர்லாந்திற்கு அவர்களுடன் செல்லாமல் இங்கே ஏன் வரவேண்டும்?"

"ஆமாம் ஆமாம். நீ சொல்வதிலும் நியாயம் இருக்கிறது."

"அவர் அவளுயிரைக் காத்தாராமே! அவள் ஏதோ ஒருமுறை படகினின்று விழவிருந்தபோது, அவர்தாம் அவளைப் பிடித்தாராம்."

"ஆமாம். நானும் அங்கிருந்தேன்."

"இந்தப் பியானோவே திட்டவட்டமாய்க் காட்டுகிறதே!"

"நீ எடுத்துக் கூறும் காரணங்கள் என் கருத்தினைக் கவர்ந்திழுக்கின்றன. இது காதற் பரிசன்றி வேறில்லையென்பது நன்கு விளங்குகிறது."

எம்மா அதற்குமேலும் வற்புறுத்தத் தேவை ஏற்படவில்லை. பேச்சின் போக்கு மாறிற்று. உண்டலும் ஒருவாறு கழிந்தது. மகளிர் பலர் அணி அணியாய்ப் போந்தனர். அவர்களுள் ஜேனும் ஒருத்தி. அத்துணைப் பெரிய விருந்தினில், அவளை யணுகிப் பேச வேண்டிய தேவையில்லையென முடிவு செய்தாள் எம்மா.

சற்றுப் பொறுத்து அவ்வறைக்குள் ஆடவர் வரத் தலைப்பட்டனர். முதலிற் போந்தவருள் முன்னின்றவன் ஃபிராங்க். எம்மா அவனைத் தன் தோழி ஹேரியட்டுக்கு அறிமுகப்படுத்தினாள். "அவரது தோற்றத்தின் சிற்சில கூறுகள் மறைத்திரு எல்டானுடையவைபோலச் சிறிதளவு தென்படுகின்றன" என்றாள் ஹேரியட். எம்மா தன் சீற்றத்தை யடக்கிக் கொண்டு, வாய்திறவாமல் வேறு புறந் திரும்ப வேண்டியவளானாள்.

சிறிது நேரங் கழிந்தது. ஆடவர் பிறரும் போந்தனர். ஃபிராங்க் அறையின் மறுகோடியில்

வீற்றிருந்த ஜேனைக் கூர்ந்து நோக்குதலைக் கண்ணுற்ற எம்மா, "என்ன செய்தி?" என்றாள்.

அவன் திடுக்கிட்டான். "நன்றி...நான் சற்று முரட்டுத்தனமாக நடந்துவிட்டேன். உள்ளபடியே ஜேன் புதுமுறையில் கூந்தலை யணி செய்துள்ளாள். அஃது அயர்லாந்து நாட்டு வழக்கமோ? நான் அவளையே கேட்கப்போகிறேன். அவள் நாணுகிறாளா இல்லையா என்பதைப்பார்" என்றவாறே அவன் எதிர்ப்புறஞ் சென்றான். ஜேனின் நேர் எதிரில் நின்றதால் அவனது முகத்தோற்றமே எம்மாவின் கண்ணிற் படவில்லை.

அவன் விட்டுச் சென்ற இடத்தில் அன்னா போந்து அமர்ந்தாள். "எம்மா! நானும் உன்னைப் போலவே புதிய கண்டுபிடிப்புக்களையும், திட்டங்களையும் பெற்றுள்ளேன். கருத்துப் புதியதாயிருக்கையிலேயே உன்னிடம் சொல்வேன். பேட்ஸ் அம்மையும் அவள் மகளும் எப்படிப் போந்தனர் என அறிவாயோ?"

"அழைக்கப்பட்டனரல்லரோ?"

"ஆமாம்—எம்முறையில் போந்தனர்?"

"நடந்துவந்திருப்பர். வேறெவ்வாறு போதருவர்?"

"உடல் நலமில்லா ஜேன்மீது இரக்கங்கொண்ட நான், எங்கள் வண்டியில் கொண்டு விடுவதாய் அவ்வம்மையிடம் கூறினேன். ஜார்ஜின் வண்டியில் அழைத்து வரப்பெற்றதாகவும், அவ்வண்டியிலேயே திரும்பப் போவதாகவும் அவள் கூறினாள். நான் பெரிதும் வியப்புற்றேன்."

"இதனில் என்ன வியப்பு! ஜார்ஜ் இப்படித்தான் நல்ல மனத்தோடு பிறருக்கு உதவுவார். அவர் பிறரிடத்தில் இரக்க முடையவர்."

"நீ இரக்கமென்றும், உதவியென்றும் கருதுகிறாய். என் உள்ளத்தே ஓர் ஐயப்பாடு திடீரென நிகழ்ந்தது. சுருங்கச் சொன்னால், ஜார்ஜுக்கும் ஜேனுக்கும் நான் 'முடிச்சுப்போட்டு' விட்டேன்."

"ஜார்ஜும் ஜேனுமா! அட! என் அருமை அன்னா! ஜார்ஜ் மணக்கவே கூடாது. சிறுவன் ஹென்றியிடமிருந்து டான்வெல் மாளிகையைப் பறிக்கப் பார்க்கிறாயா?"

"அட எம்மா! நானும் இவ்விணையை விரும்புகின்றிலேன். அருமைச் சிறுவன் ஹென்றிக்குத் தீங்கு சூழ்தலுமில்லேன். உள்ளபடியே ஜார்ஜ் மணக்க விரும்பினால், ஒன்றுமேயறியா ஆறாண்டுச் சிறுவன் ஹென்றியைக் காட்டித் தடுத்துவிடுவாயோ?"

"தடுப்பேன். இத்தகைய கருத்து எப்போதுமே ஏற்பட்டதில்லை. இனியும் ஏற்படாது. இருந்திருந்தும் பெண்களுள் எல்லாம் ஜேனா வாய்த்தாள்!"

"அவருக் கேற்றவளா இல்லையா என்பது கேள்வியில்லை. அவர் விரும்புகிறாரா இல்லையா? அவர் விரும்புகிறார் என்றே சொல்வேன். அவர் ஜேனை மிகச் சிறப்பாகப் பாராட்டுகிறார். இந்தப் 'பியானோ' கூட அவர் அனுப்பியதாகவே யிருக்கும்."

"ஜார்ஜ் எதனையும் ஒளித்துச் செய்யமாட்டார்."

இவ்வாறாகவே அவர்களிடையே சொல்லாடல் சிறிது நேரம் நிகழ்ந்தது. அறையுள் சலசலப்பு ஏற்

பட்டது. கோல் எம்மாவைப் பியானோ வாசிக்குமாறு வேண்டினார். ஃபிராங்கும் அவர் பின்னேயே போந்து, வற்புறுத்தினான். எதனிலும் முதலில் நிற்பதனை விரும்பிய எம்மா, பொருத்தமான முறையில் இணங்கினாள். தன் ஆற்றலின் எல்லையை நன்குணர்ந்திருந்த அவள், தனக்குப் பெருமையளிக்காத எதனையும் வாசிக்க முற்பட்டிலள். அவள் பாடியபோது ஃபிராங்கும் உடன் பாடினான். அவள் வியப்புற்றாள். மறுமுறையும் அவ்விருவரும் இணைந்து பாடினர். பின் எம்மா, ஜேனுக்கு வாய்ப்பளிக்க வேண்டியவளானாள். ஜேனின் குரலிசையும் கருவியாளுந் திறனும் தன்னைவிடப் பன்மடங்கு உயர்ந்தவை என்பது எம்மா அறியாததன்று.

இப்போதும் ஃபிராங்க் இணைந்து பாடினான். அவ்விருவரும் ஏற்கெனவே வேமத்தில் ஓரிரு முறை இணைந்து பாடியவர்தாம். ஜார்ஜ் ஈடுபாட்டுடன் இசை பருகிக் கொண்டிருந்தார். அன்னாவின் ஐயப்பாடுகள் எம்மாவின் உள்ளத்தே நினைவுத்தொடரை எழுப்பின. ஜார்ஜின் திருமணத்தைப் பொறுத்தவரை அவளது எதிர்ப்புணர்ச்சி சிறிதும் குறைந்திலது. அத்திருமணம் ஜானுக்கும் இசபெல்லாவுக்கும் பெருத்த ஏமாற்றமாகுமே! குழந்தைகளுக்குப் பெருந்தீங்கன்றோ! டான்வெல் மாளிகையுள் ஜேன் அடியெடுத்து வைத்தலை எம்மா தான் பொறுத்துக் கொள்ள முடியுமோ!

அக்கணமே ஜார்ஜ் எழுந்து எம்மா அருகிற் போந்தமர்ந்தார். அவள் அவரது இரக்கத்தை-ஜேனையும் அவள் பெரியம்மாவையும் வண்டியிலழைத்து

வந்த செயலைப்—பாராட்டத் தொடங்கினாள். அவர் எப்போதும் போலப் பாராட்டினை விரும்பாதவராய் அப்பேச்சினை மாற்றினார். ஊக்கம் பெற்ற எம்மா, "கர்னல் குடும்பத்தார்தாம் எத்தனை அன்போடு இப் பியானோவை வழங்கியுள்ளனர்!" என்றாள்.

"ஆமாம். ஆயின் முன்னதாகவே அவளுக்குச் செய்தியனுப்பியிருக்க வேண்டும். திகைப்புறச் செய்வது மடமை. அதனால் மகிழ்ச்சி மிகுவதில்லை. தொல்லைதான் குறிப்பிடத்தக்க அளவு பெருகுகிறது."

அக்கண முதல், ஜார்ஜுக்கும் அப்'பியானோ'வுக்கும் எத்தகைய தொடர்புமில்லையென்று சூளுரைக்க ஆயத்தமாயிருந்தாள் எம்மா.

பாடலுக்குப்பின் இடமொழிக்கப் பெற்றது. ஆடலுக்கு ஏற்பாடு தொடங்கிற்று. ஃபிராங்க் பெருமிதந்தோன்ற அணுகி எம்மாவைத் தன்னோடு நடனமாட அழைத்தான். பிற இணைகளும் கூடுதற் பொருட்டுக் காத்திருந்த நேரத்தில், எம்மா ஜார்ஜின் நிலை யாதெனக் கூர்ந்து நோக்கலானாள். அவர் ஜேனோடு ஆடுதற்கு ஆர்வங் காட்டியிருப்பாரேல், ஏதேனும் உள்நோக்கமிருத்தல் கூடும். ஆயின் அவர் ஆடலைப்பற்றியே கவலைப்படாதவராய்க் கோலின் மனைவியோடு உரையாடிக் கொண்டிருந்தார். வேறெவரோ ஜேனை ஆட அழைத்த போது அவர் கவலைப்பட்டிலர்.

சிறுவன் ஹென்றியைப் பற்றி இனி எம்மா கவலைப்பட வேண்டியதில்லை! ஆகவே அவள் உண்மையான ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் ஆடலானாள்.

எ.—9

எனினும் இருமுறை ஆடியபின், விருந்தினர் கலைய வேண்டிய வராயினர். ஜேனின் பெரியம்மா தன் 'அம்மா'வைப் பற்றிக் கவலைப் பட்டவளாய் ஜேனுடன் கிளம்பினாள்.

எம்மாவை அவளது வண்டிவரை சென்று வழியனுப்பிய போது, ஃபிராங்க் சொன்னான்: "இதுவும் நன்மைக்கே. உனக்குப் பின் ஜேனை ஆட அழைத்திருப்பேனாயின், அவளது சோர்வு எனக்கு ஒத்து வந்திராது."

23. மகிழ்வித்த பண்

கோல் மாளிகை விருந்தின் விளைவாய், மறுநாள் எம்மா பல இன்ப நினைவுகளில் மூழ்கினாள். எனினும் இருசெய்திகள் மட்டுமே அவளைப் படபடக்கச் செய்தன. ஜேனைப்பற்றிய தன் ஐயப்பாடுகளை ஃபிராங்கிடம் தெரிவித்தது, ஒருபெண் மற்றொரு பெண்ணுக்கு ஆற்றவேண்டிய கடமையில் தவறியதாகுமோ என மயங்கினாள். இரண்டாஞ் செய்தியும் ஜேனைக் குறித்ததே. எம்மா 'பியானோ' வாசித்தலிலும் பாடுதலிலும் அவளைவிடத் தாழ்ந்தவள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே தன் பிள்ளைப்பருவச் சோம்பலை யெண்ணி அவள் இரங்கினாள். முழுமூச்சாய் ஒன்றரைமணி நேரம் இசை பயிலலானாள்.

ஹேரியட்டின் வருகையால் பயிற்சி தடைப்பட்டது. தோழியின் புகழுரையே மனநிறைவு அளிக்கப் போதுமெனில், எம்மா அப்போதே ஆறுதல் பெற்றிருப்பாள். அப்படிப்புகழ்ந்தாள் அவள். காக்ஸ் என்பாரில்லத்துக்கு ராபர்ட் விருந்தாய்ப் போந்தனன்; காக்ஸின் மகள் "நீ அடுத்த கோடை விடுமுறையில் மறுபடியும் ராபர்ட்டின் இல்லத்திற்குப் போவாயா?" என வினவினாள்—இவைதாம் தோழியிடமிருந்து எம்மா அறிந்தவை. இத்தகைய சூழ்நிலையில் அவளைத்தனியே கடைத் தெருவுக்கு அனுப்பலாகாதெனக் கருதிய எம்மா, தானும் உடன் சென்றாள். கடையில்

ஹேரியட் துணிவகைகளில் எதனைத் தெரிந்தெடுப்ப தெனத் தடுமாறினாள். எம்மா வாயிலில் நின்று தெருவிற் பார்வையைச் செலுத்தினாள்.

தொலைவில் அன்னாவும் ஃபிராங்கும் வந்து கொண்டிருந்தனர். ஹார்ட்ஃபீல்டுக்குத்தான் புறப் பட்டிருப்பர்! வழியில் பேட்ஸ் அம்மை வீட்டு முன் நின்றனர். கதவைத்தட்ட முனைந்த நேரத்தில், எம்மாவைக் கண்டனர். உடனேயே தெருவைக் கடந்து அவளை யணுகினர். "புதிய 'பியானோ'வின் இசையைக் கேட்கவே அவ்வம்மையின் இல்லத்துக் குப் போகிறோம்" என்றாள் அன்னா.

"சித்தி! அவர்களோடு பேசிக்கொண்டிருக்கும் வரை நான் உங்களோடு சேர்ந்து ஹார்ட்ஃபீல்டுக்குச் செல்லலாமென நினைக்கிறேன். தடையில்லையே?" என்றான் ஃபிராங்க். அன்னா ஏமாற்றமடைந்தாள்.

"நானும் என் வேலையாய் வந்திலேன், தோழிக் காகவே காத்து நிற்கிறேன். நீங்களும் சித்தியோடு போய் இசையைக் கேட்டு மகிழுங்கள்" என்றாள் எம்மா.

அன்னா வற்புறுத்தினாள். "உனக்கு அப்படி யொன்றும் கசப்பில்லையெனில் என்னோடு வா. நெடுநேரந் தங்கவேண்டா. பிறகு ஹார்ட்ஃபீல்டுக்குப் போவோம்."

அதன் மேலும் அவன் ஏதும் கூற முடியாதவ னானான். சித்தியுடன் பேட்ஸ் அம்மை வீட்டை நோக்கிச் சென்றான். எம்மா கடைக்குள் நுழைந்து தன் தோழியின் குழப்பத்தை ஒருவாறு தீர்த்தாள்.

விரைவிலேயே கடையில் குரல்கள் எழுந்தன. தவறு, ஒருகுரல் எழுந்தது; இருபெண்கள் புகுந்தனர். அன்னாவும் ஜேனின் பெரியம்மாவுந்தாம் போந்தனர். இசை கேட்பதற்கு எம்மாவும் வரவேண்டுமென்று 'பெரியம்மா' பெரிதும் வற்புறுத்தினாள். ஒருவாறு அவர்கள் கடையிலிருந்து புறப்பட்டனர்.

பேட்ஸ் அம்மையில்லத்து வரவேற்பறையில் அமைதி நிலவிற்று. அவ்வம்மை தணலருகே அமர்ந் திருந்தாள். அணிமையில் ஓரிடத்தில் அவளது மூக்குக்கண்ணாடியைச் செப்பனிட்டவாறு ஃபிராங்க் அமர்ந்திருந்தான்.

'பியானோ' அருகே ஜேன் நின்றாள். எப்படியோ எம்மா தன்னருகில் உட்காருமாறு ஃபிராங்க் ஏற்பாடு செய்துவிட்டான். ஜேன் 'பியானோ' வாசிக்க ஆயத்தமாகும் வரை, அவன் எம்மாவுக்கு ஒரு நல்ல ஆப்பிளைத் தெரிந்தெடுப்பதிற் பொழுது போக்கினான். ஜேன் அணிமையில்தான் அப் 'பியானோ'வைப் பெற்றவளாதலின் இன்னும் அதனை வாசிக்குமளவு உணர்ச்சிகளை யடக்கக் கற்றனளல்லள் என்பது விளங்கிற்று. இறுதியில் ஒருவாறு அவள் தொடங்கியபோதும், முதலிற் சில 'கட்டை'களைப் பட்டும் படாமலேயே தொட்டாள். போகப் போக முழுத்திறமையோடு வாசித்தாள். அன்னா பெருமகிழ்ச்சியோடு பாராட்டிய போது எம்மாவும் இணைந்து கொண்டாள்.

ஃபிராங்க் எம்மாவைப் பார்த்துப் புன்னகை செய்தவாறே "கர்னல் எவரை அனுப்பினாரோ! நன்கு தெரிந்தெடுத்த பின்னரே அனுப்பியிருக்கிறார்!

ஃபிராங்க் மூக்குக் கண்ணடியைச் செப்பனிட்டவாறு அமர்ந்திருத்தல்

அல்லது ஒரு வேளை கடைக்காரருக்கே எழுதினரோ என்னவோ! ஜேன், நீ யாது கருதுகிருய்!" என்ருன்.

ஜேன் திரும்பாமலேயே அன்னவுடன் உரையாடினள்.

"சே! இது முறையன்று. நான் ஏதோ குருட்டுப் போக்கினில் சொன்னேன். அவளைத் துன்புறுத்தாதீர்கள்" என்ருள் எம்மா, தணிந்த குரலில்.

அவன் புன்முறுவலோடு தலையை யாட்டினன். எனினும் சிறிதேனும் இரக்கமில்லாதவனையொப்பத் தொடர்ந்து பேசலானன்: "ஜேன்! அயர்லாந்தி லுள்ள உன் நண்பர்கள் இந்நேரத்தை யெண்ணி எத்தனை மகிழ்ச்சியடைவர்! இஃது உன் கைக்கு எந்நாளில், எந்நேரத்தில் கிடைக்குமென்றெல்லாம் உன்னைப் பற்றியே நினைத்திருப்பர்...பாட்டி! உங்கள் மூக்குக் கண்ணடியை இப்போதைக்குக் குணப் படுத்தி விட்டேன்"

பேட்ஸ் அம்மையும் அவள் மகளும் அவனுக்கு நன்றியும் பாராட்டும் வழங்கலாயினர். அவர்களிட மிருந்து தப்புவதற்காக அவன் எழுந்து 'பியானே' அருகிற் சென்ருன். மேலும் சில பண்களை வாசிக்கு மாறு ஜேனை வேண்டினன்.

அவள் ஒரு பண் வாசித்தாள்.

"தன்னை ஒருமுறை மகிழ்வித்த பண்ணை மீட்டும் கேட்பதில்தான் எத்தனை இன்பம்! இப்பண்ணுக்கே வேமத்தில் நடனமாடியதாய் நினைக்கிறேன்" என்ருன் அவன்.

அவள் ஒருகணந் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். முகஞ்சிவந்தது. வேறொரு பண்ணை வாசிக்கலானாள். அவன் எம்மாவை நோக்கியவாறே மீட்டும் கர்னலின் வள்ளன்மையைப் பாராட்டத் தொடங்கினான். இவ்வாறு நேரடியாகப் பேசுவதை நிறுத்தமாட்டானா என நினைத்தாள், எம்மா. ஆயினும் அப்பேச்சினால் மகிழ்ச்சியே எய்தினாள்.

சிறிது நேரத்திற்குப்பின், சாளரம் வழியே நோக்கிய'பெரியம்மா' ஜார்ஜ் குதிரைமீது செல்லக் கண்டாள். சாளரத்தைத் திறந்தால் எல்லோருக்கும் வாடைக்காற்றடிக்குமே என்றவளாய் அவள் பக்கத்தறைக்குச் சென்று, அங்கிருந்த சாளரம் வழியே அவருடன் பேசலானாள். அவ்விருவரும் உரையாடியது அத்தனையும் மற்றவர்கள் செவியிற் படாமற் போகவில்லை.

"நலமா! நலமா! உள்ளே வாருங்களேன்.நண்பர் சிலர் இங்குள்ளனர்."

"நீங்கள் நலமா? உங்கள் மகள் எப்படியிருக்கிறாள்? நேற்றிரவு நீர்க்கோவையேதும் அவளைப் பற்றவில்லையே?"

கேட்டிருந்தவருள் அன்னா பொருள் பொதிந்த புன்னகையோடு எம்மாவைப் பார்த்தாள். எம்மா நம்பாதவளாய்த் தலையை யசைத்து மறுத்தாள்.

"நான் கிங்ஸ்டனுக்குப் போகிறேன். உங்களுக்கு ஏதேனும் வாங்கிவரவேண்டுமா?"

"கோல் வீட்டில் ஏதோ வேண்டுமென்றனர்.

"அவர்கள் தங்கள் வேலைக்காரர்களை அனுப்பிக் கொள்வார்களாக;உங்களுக்குஏதேனும் வேண்டுமா?"

"வேண்டா; நன்றி. இங்கே யாரெல்லாம் இருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? எம்மா, ஹேரியட்..."

"சரி,ஐந்து நிமிடம் வேண்டுமானால் தங்கலாம்."

"அன்னாவும் ஃபிராங்குங்கூட வந்திருக்கிறார்கள்."

"இப்போது வருவதற்கு நேரமில்லை. விரைவில் கிங்ஸ்டனுக்குப் போகவேண்டும். மற்றொரு நாள் வருகிறேன்."

அவர் வீட்டிற்குள் வராமலேயேபோய்விட்டார். நேரமாகி விட்டதனையுணர்ந்த எம்மா தன் தோழியுடன் கிளம்பினாள். அன்னாவும் ஃபிராங்கும் அவ்விளம் பெண்களை ஹார்ட்ஃபீல்டு மாளிகை வாயிலில் விட்டுவிட்டுத் தம் மாளிகைக்குச் சென்றனர்.

24. நல்லூழ் இல்லாதவள்

ஒருமுறை ஹைபரியில் நடனமாடிய ஃபிராங்க் மறுபடியும் ஆடத்துடித்தான். ஒருநாள் மாலை ஹென்றியும் எம்மாவும் ரண்டால் மாளிகைக்குப் போயிருந்தனர். அப்போது அரைமணி நேரத்துக்கும் மேலாக 'நடன நிகழ்ச்சி' பற்றியே இளைஞர் திட்டமிடலாயினர். ஃபிராங்க் தொடங்கிவைத்ததோடு,விடாப்பிடியாய்த் தொடர்ந்து பேசவுந், திட்டமிடவுஞ் செய்தான். நடைமுறையில் உள்ள இடையூறுகளை யுணர்ந்து தயங்கினாள். எனினும் எம்மா அத்திட்டத்தை வரவேற்றாள். நடனமொன்றிலாவது ஜேனோடு தன்னையொப்பிடுதற்கு அவள் நாண வேண்டியதில்லையே!

முதல் ஆடல் நிகழ்ந்த கோல் இல்லத்திலேயே இறுதியாடலும் இடம்பெற வேண்டுமென்றான், ஃபிராங்க். ஆயினும் பின்னர் ரண்டால் மாளிகையிலேயே இதற்கு ஏற்பாடு செய்யத் திட்டமிட்டனர்.

மறுநாள் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் ஃபிராங்க் ஹார்ட்ஃபீல்டுக்குப் போந்தான். ஏதோ புதிய மாறுதலொன்றினைத் தெரிவிக்கவே போந்தனன் என்பது விளங்கிற்று. "கிரௌண் விடுதியில் நிகழவிருக்கும நடன விருந்தில் முதலிரு முறையும் என்னோடு ஆடுவாயா?" என்றான் அவன்.

"கிரௌண் விடுதியிலா!...அப்பா! இச்சிறந்த மாறுதலைப்பற்றி யாது கருதுகிறீர்கள்?"

ஹென்றி இருமுறை திட்டத்தை விளக்கமாய்ச் செவிமடுத்த பிறகே புரிந்துகொண்டார். பின்னும் "எப்போதேனும் ஒருநாள் காலை உன் அப்பாவும் அம்மாவும் இங்கு வருவராயின், அவர்களோடு உரையாடி இதுபற்றி முடிவு செய்யலாமே!" என்றார் அவர், ஃபிராங்கிடம்.

"என் செய்வது? நான் அதிகநாள் இங்குத் தங்க முடியாதே! இப்போதுகூட அவர்கள் விடுதியில்தான் உள்ளனர். எம்மா! உன் அறிவுரையைக் கேட்பதற்கு, உன்னை அழைத்து வருமாறு அவர்கள் ஏவியதாலேயே போந்தேன்."

அறிவுரை வழங்குவதற்கு எம்மா மகிழ்ச்சியோடு இணங்கினாள். இளைஞர் இருவரும் தாழ்ச்சியின்றி விடுதிக்குப் புறப்பட்டனர். வெஸ்டனும் அன்னாவும் எம்மாவை அன்போடும் களிப்போடும் வரவேற்றனர். நடன அறை பெரிதாகவே இருந்தது. அதனையொட்டி இருந்த அறை சீட்டாடுதற்கே ஏற்ற சிற்றறை. உண்ணுமிடமாதற்குப் போதியதன்று. பின்புறத்தறையில் உணவருந்தலாமெனில் இடையே திறந்த தாழ்வாரம்! இவ்வாறு அவர்கள் குழம்பி நின்றனர். "விருந்தினர்க்குப் பொதுவாய் எது சிறந்ததென அறிய இயலுமாயின் நன்றாயிருக்கும்" என்றாள் அன்னா.

"மற்றவர்களது கருத்தினையும் அறியவேண்டும். அவ்வளவுதானே! நான் போய்ப் பேட்ஸ் அம்மையின் மகளை அழைத்து வருகிறேன்" என்றான் ஃபிராங்க்.

"அவள் களிப்பும் நன்றியும் கொட்டுவாள், ஏதும் பயனுடையதாய்ச் சொல்லமாட்டாள்" என்ருள் எம்மா.

"போ, அவனை அழைத்துவா. இருவரையுமே அழைத்து வா" என்ருர் வெஸ்டான்.

"இருவருமா? கிழவி ஏதாவது........"

"கிழவியா! ஜேனையும் அவள் பெரியம்மாவையும்தான் குறிப்பிட்டேன். இதுகூடத் தெரியாத முட்டாளா நீ?"

"மன்னியுங்கள். மறந்துவிட்டேன்." அவன் விரைவாய் ஓடினுன். நொடியில் ஜேனுேடும் அவள் பெரியம்மாவோடும் போந்தான். இதற்குள்ளாகவே அன்னு அத்தாழ்வாரம் தான் நினைத்த அளவு கொடியதன்று என முடிவு செய்துவிட்டாள்.

ஃபிராங்க் தனக்கு வழங்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்கு மேலேயுஞ் சிலநாள் தங்குதற்கு ஒப்புதல் கேட்டுத் தன் அத்தைக்கு ஏற்கெனவே கடிதமெழுதிவிட்டான். களிப்பூட்டும் நடன நிகழ்ச்சியாகவே அமையவிருந்தது.

எம்மாவுக்கு ஓரளவு மனக்குறையுண்டு. எங்கே ஃபிராங்க் பதினைந்து நாட்களுக்குமேல் ஒருநாள் கூடத் தங்கக்கூடாதென அத்தை எழுதிவிடுவாளோ என அஞ்சினுள். அத்தை இரக்கமுடையாள்தான். அவன் தங்குவது அவளுக்குப் பிடிக்கவில்லை யெனினும் அவள் தடுத்தெழுதினுளல்லள். இவ்வாறு நடனவிருந்து உறுதிப்பட்டுவிடவே, எம்மாவின் சீற்றம் ஜார்ஜிடம் திரும்பியது. அவர் இந்நடனத்தினைப் பற்றிச் சிறிதளவும் கவலைப்பட்டிலர், அக்கறையாகவும் பேசினுரல்லர். ஜேன் காரணமாகவே அவர் இவ்வாறு புறக்கணித்தார் என்றும் சொல்லமுடியாது. ஜேன் இந்நடன விருந்தைப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்ருளே! சே! அன்றுவின் ஐயப்பாடு அடிப்படையற்றதுதான்! அவரோடு சண்டை போடவும் எம்மாவுக்கு ஓய்வில்லை.

இருநாட் களிப்பினைப் பின்னிகழ்ந்த ஒன்று வேரோடு பறித்துவிட்டது. சர்ச்சில் தம் மருமகனுக்கு ஒரு கடிதம் எழுதினுர். அத்தைக்கு உடல் நலமில்லையெனவும், ஃபிராங்க் உடனே புறப்பட்டு வரவேண்டுமெனவும் எழுதியிருந்தார். கடிதங் கிடைத்தவுடனேயே, அதன் சாரத்தை எம்மாவுக்கு எழுதியனுப்பிவிட்டாள் அன்னு. ஃபிராங்க் புறப்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. எம்மா, ஏங்குவதன்றி வேறேதும் செய்ய வியலாதவளானுள்.

ஃபிராங்க் விடை பெற வருவான் என எதிர்பார்த்தாளாதலின் வந்தபோது அவள் ஆயத்தமாகவே யிருந்தாள். பிரிவின் கொடுமையையெண்ணியுருகினுனதலின் அவன் சில நிமிடம்வரை ஏதும் சொல்லமுடியாதவனுய் நின்ருன். பின் ஒருவாறு தேறி விடை பெற்றுச் செல்வதுதான் கொடியவற்றுள் எல்லாம் கொடியது எனத் தொடங்கினுன்.

பேச்சினிடையே எம்மா வினவினுள்: "உங்கள் நண்பர்கள் ஜேனையும் அவள் பெரியம்மாவையும் பார்த்துப் பேசுதற்கு ஐந்து நிமிடங்கூடக் கிடைக்கவில்லையா?"

"அங்கே போய்விட்டுத்தான் வந்தேன். பெரியம்மா இல்லை. அவள் வரும்வரை காத்திருக்க நேர்ந்தது....அப்போது போய்ப் பார்த்ததே நல்லதாயிற்று...." அவன் தயங்கினான். எழுந்து சாளரத்தருகே நின்றான். "வளர்ப்பானேன்? ஒருவேளை, எம்மா—உனக்குச் சிறிதேனும் ஐயம் ஏற்படாமல் இராது என்று நான் நம்புகின்றிலேன்."

அவளது உள்ளக் கிடக்கையையறிய விழைந்தவனைப்போல் அவளைக் கூர்ந்து நோக்கினான். ஏதோ பெரும்பேச்சிற்கு அடிப்படையென்றுணர்ந்த எம்மா யாது கூறுவதென்றறியாதவளாய், "நீங்கள் செய்தது சரிதான். அப்போது போய்ப் பார்த்தது இயற்கைதானே!' என்றாள்.

அவன் ஊமையானான். அவள் தலைகுனிந்தாளாயினும் அவன் தன்னையே உற்று நோக்குகிறான் என நம்பினாள். அவன் பெருமூச்செறிதலைக் கேட்டாள். சில நொடிகள் மணிகளாய்க் கழிந்தன. நல்ல காலம்! வெஸ்டான் மகனை அழைத்துச்செல்ல அறைக்குள் புகுந்தார். எம்மாவின் தந்தையும் அவருடன் வந்தார். அவர்கள் விடைபெற்றுச் சென்றனர்.

ஃபிராங்க் திடீரெனப் போந்தான்; குறுகிய நேரமே தங்கினான்; பிரிந்து சென்றுவிட்டான். எம்மா அப்பிரிவுக்கு வருந்தினாள். தன் கருத்து வேறாகவே இருப்பினும், தான் அவனை ஓரளவு காதலித்திருக்க வேண்டுமென உணர்ந்தாள். 'உம், சிலருக்குத் தீமையாவதே பலருக்கு நன்மையாகிறது. நடன விருந்திற்காக என்னைப்போல் இரங்குபவர்

வேறு பலருமிருப்பர். ஆயினும் ஜார்ஜ் உறுதியாய் மகிழ்வார் என்றெண்ணினாள் அவள்.

நல்ல காலம்! வெஸ்டானும் ஹென்றியும் போந்தனர்

எனினும் ஜார்ஜ் வெற்றியோ களிப்போ பெற்றதாயுணர்ந்தவரல்லர். அவர் தம்மைப் பொறுத்தவரை வருந்தியிரார்; வருந்தியதாய்க் கூறியிருப்பின், அவரது களித்த நோக்கே அக்கூற்றினைப் பொய்ப்பித்திருக்கும். மற்றவர்களது ஏமாற்றத்தைக் கருதியே அவர் வருந்ினார். "எம்மா! உனக்கு அரிதாகவே நடனமாட வாய்ப்புக் கிட்டுகிறது. நீ உள்ளபடியே நல்லூழில்லாதவள்" என்றார் அவர்.

எம்மா சில நாட்களுக்குப்பின்னரே ஜேனைக் கண்டாள். அவள் தலைவலியால் வாடி, உடல் நலமின்றியிருந்தாள். அத்தளர்ச்சியால்தானோ என்னவோ அவள் எம்மாவிடம் 'பாராமுக'மாய் நடந்துகொண்டாள்.

25. பாதிரியின் மனைவி

தான் காதலிப்பதாகவே எம்மா தொடர்ந்து நினைத்தாள். எவ்வளவு என்பதில்தான் கருத்துக்கள் மாறுப்பட்டன. பெருமளவு எனத் தொடக்கத்தில் நினைத்தாளேனும் சிறிதளவே எனப் பின்னாளில் நினைக்கலானாள். தங்கள் தொடர்பின் வளர்ச்சிக்கும் நெருக்கத்துக்குமுரிய ஆயிரமாயிரம் திட்டங்களைச் சீர்தூக்கியவாறே அவள் தன் அன்றாட வேலைகளிலீடுபட்டாள். அவன் தன் காதலை எச்சொற்களில் எடுத்துரைப்பான் என்பதனைக்கூடக் கற்பனை செய்தாள். ஆயின் இக்கற்பனைகளின் முடிவெல்லாம் ஒன்றுதான். அவள் அவனை ஏற்க மறுத்துப் பேசுவாள். அவர்கள் அன்பெல்லாம் நட்பிலேயே அடங்கிவிடும். அவர்கள் பிரிவு உருக்கமாகவும் அரியதாகவும் இருக்கும்; எனினும் அவர்கள் பிரிவர். இவ்வாறே தன் கற்பனையெல்லாம் முடிவுறுதலை யுணர்ந்த போதுதான் அவள் தன் காதல் மிகுதியில்லை யென முடிவு செய்தாள். தந்தையைப் பிரிவதில்லையெனவும் திருமணமே புரிவதில்லையெனவும் ஏற்கெனவே உறுதிபூண்ட தான் வென்றதாய் மதித்தாள்.

'அவர் என்னைப் பெரிதும் காதலிக்கிறார் இஃது உறுதி. மறுமுறை இங்கு வருவாராயின்—அவரது காதல்—நிலைத்து நிற்குமாயின் நான் அதனை ஊக்குவிக்கும் வகையில் நடந்துகொள்ளக்கூடாது; விழிப்பாயிருக்கவேண்டும்...அவர் மிக்க அன்புடையவரே; அடிக்கடி மனநிலை மாறுபவர். மொத்தத்தில் நான்

அதிகஞ் சிக்கவில்லையாதலின் என் இன்பத்துக்குக் குறைவில்லை' யென்றெண்ணினாள் அவள்.

ஊர் போய்ச் சேர்ந்ததும் ஃபிராங்க் தன் சிற்றன்னைக்கு ஒரு கடிதம் எழுதினான். அதனைப் பெற்றவுடனேயே அவள் எம்மாவுக்கும் காண்பித்தாள். அந்நெடுங் கடிதம், அவனது பயணம், உணர்வுகள் முதலியவற்றை நன்குவிளக்கிற்று. எம்மாவின் பெயர் பலமுறை இடம் பெற்றிருந்தது. எம்மாவின் தோழி யென்ற முறையில்—அப்படித்தான் எம்மா நினைத்தாள்—ஹேரியட் கூட அக்கடிதத்தில் ஓரிடம் பெற்றாள். "எம்மாவின் அழகிய இன்பத் தோழி" எனும் அத்தொடரைப் படித்தவுடன், எம்மாவின் உள்ளத்தே ஒரு கருத்து முகிழ்த்தது அவனது அன்பினைப் பொறுத்தவரை அவன் தன் இடத்தை ஹேரியட்டுக்கு வழங்கலாமே! நடவாத ஒன்றா! இல்லையே! பகுத்தறிவில் அவள் அவனைவிட மிகவுந் தாழ்ந்தவள்தான். ஆயின் அவளுடைய அழகிய முகமும், எளிய பாங்கும் அவனைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றனவே!....இவ்வாறு மனப்பால் குடிப்பது இக்கட்டினில் முடியலாம்! ஏன், இதைவிட விந்தையானவை நிகழ்ந்துள்ளனவே!'

ஹேரியட்டின் நன்மைக்காக இப்படியொரு திட்டம் வைத்திருப்பது நல்லதே! நிலைமை ஓரளவு சீர்கெட்டுக் கொண்டிருந்தது. எல்டானின் திருமணம் உறுதிசெய்யப் பெற்றவுடனேயே ஃபிராங்க் வந்து ஹைபரியின் பேச்சுப் பொருளானான். இப்போது ஃபிராங்க் போய்விடவே, எல்டானைப்பற்றிய பேச்சு அடக்கமுடியாத உருவில் எழுந்தது. அவரது திரு

மண நாள் குறிக்கப்பெற்றது. விரைவிலேயே அவர் தம் மனைவியுடன் ஊர்திரும்ப இருந்தார். ஆகவே எம்மா தன் முழுக் கருத்தினையும் அறிவினையும் பயன்படுத்தி ஹேரியட்டைத் தேற்ற வேண்டியவளானாள். அவள் தோழி அவ்வளவு துன்பத்தில் ஆழ்ந்திருந்தாள்.

“எல்டானைப் பற்றி இவ்வாறு நீ கவலைப்படுவது என்னைக் கடுமையாய்த் திட்டுவதாகும்” என்றாள் எம்மா.

ஹேரியட் திடுக்கிட்டாள்.

எம்மா தொடர்ந்து சொன்னாள்: “எனக்காக நீ ஏதும் கவலைப்படவேண்டா. உனக்காகவேனும் உன் கவலைகளை விட்டுவிடு.”

“நீங்கள்தாம் எனக்குக் கிடைத்த ஓரே ஒரு சிறந்த தோழி. உங்களுக்கு எவரே இணை! உங்களிடமா எனக்கு நன்றியில்லையென்கிறீர்கள்!” என்றாள் ஹேரியட்.

இளகிய மனமும், கரவற்ற பேச்சும் மிகச்சிறந்த மூளையைக்கூடக் கவர்ச்சியில் வென்றிடுமே! ஹேரியட் தன்னைவிட இத்துறையிற் சிறந்தவள் என மதிக்கத் தொடங்கினாள் எம்மா.

முதன் முதலாய் அகஸ்டா—எல்டானின்மனைவி—தேவாலயத்தில் காட்சியளித்தாள். மணக்கோலத்தில் நின்ற அவள் உள்ளபடியே சிறந்த அழகியா, சுமார்தானா அல்லது அழகியேயல்லளா என்பதை வழிபாடுகளுக்கிடையே காண முடியுமோ? பின்னாளில் போய்வந்துதான் தெரிந்துகொள்ள வேண்டும்!

எல்டானின் இல்லத்துக்குச் சென்றபோது, ஹேரியட்டையும் அழைத்துக்கொண்டுதான் எம்மா சென்றாள். செய்து தொலைக்க வேண்டியதைக் காலாகாலத்தில் செய்து விடுவது நல்லதுதானே! எல்டானை வரவேற்பறையில் கண்டபோது, அவரது நிலையை யெண்ணி எம்மா இரக்கப்பட்டாள். அண்மையில் அவர் மணந்தபெண், மணக்கவிரும்பிய பெண், மணப்பார் என எதிர்பார்த்த பெண் ஆகிய மூவரோடும் அவர் இருக்க நேர்ந்தபோது அசடாகக் காட்சியளித்ததில் வியப்பேது!



மணந்த பெண், மணக்க விரும்பிய பெண்

பதிலுக்கு எல்டானும் அவர் மனைவியும் ஹார்ட்ஃபீல்டுக்கு வந்தபோதுதான், அகஸ்டா எத்தகையவள் என எம்மா முடிவு செய்தாள். ஹேரியட் அப்

போது அங்கில்லை. எல்டானும் ஹென்றியும் உரையாடினர்; விளைவாய் எம்மா அகஸ்டாவுடன் பழகிய கால்மணி நேரத்திலேயே, அவள் பகட்டுக்காரி - தானென்ற அகம் உடையவள் - நாகரிகமாய் நடிப்பவளெனினும் நல்ல குடியிற் பழகாதவள் எனத் திடமாகக் கருதலானாள். ஹேரியட் எத்தகைய அரிய மனைவியாய்த் திகழ்ந்திருப்பாள்!

"வெளியுலகப் பழக்கமேயில்லாமல் வீட்டிற்குள் மக்கள் அடைபட்டுக் கிடப்பது மிகவும் கேடு தருவது...எம்மா! உன் நிலையை நன்கறிவேன். உன் தந்தையின் உடல் நிலை பெரிய தடை. அவர் பாத் நகரஞ் செல்லலாமே! நான் அங்குத் தங்கியிருந்த வீட்டுக்காரி எனக்கு மிகவும் வேண்டியவள். நான் ஒரு வரி எழுதித் தருகிறேன். உன்னை அணி அணியாய் நண்பர் சூழ்ந்து கொள்வர்."

"நாங்கள் ரண்டாலுக்குப் போயிருந்தோம். அன்று உள்ளபடியே நல்லவளாய்த்தான் தோன்றுகிறாள். அவள் தானே உனக்குச் செவிலியாய் விளங்கினாள்?"

"நாங்கள் அங்கிருந்தபோது எவர் வந்தாரென நினைக்கிறாய்? ஜார்ஜ்!...ஜார்ஜேதான்." இவை அகஸ்டா வாயோயாமற் பேசிய அரிய கருத்துரைகளிற் சில. அவர்கள் போன பிறகுதான் எம்மாவுக்கு மூச்சு வந்தது. அவள் நினைத்தாள்: 'நான் நினைத்ததை விட மோசம்! சிறிதளவேனும் தாங்கிக் கொள்ள வியலாது. இவள் அறிமுகப்படுத்தி, இவளின் தோழியோடு நான் உயர் வட்டத்திற் புகவேண்டுமாமே! இவளது வாடகைப் பணத்தால் 'வயிற்றைக் கழுவிய' இவள் தோழி எப்படியிருப்பாள்! எவளோ இழிசினளாய்த் துணிச்சலுடைய கைம்பெண்ணாய்த்தான் இருப்பாள்!....என்னை வளர்த்த செவிலி உயர் குடியினளாயிருப்பதைப் பார்த்து வியப்பேற்பட்டதாமே! என்ன கொடுமை!...ஜார்ஜாம்! அவரை இதற்குமுன் பார்த்துமிருக்கமாட்டாள். மதிப்பின்றி ஜார்ஜ் என அழைக்கிறாளே! அவர் உயர் குடியினராகவே காணப்படுகிறாராமே!.... சே. சே... ஃபிராங்க் இங்கிருப்பாராயின், இவளிடம் யாது சொல்வார்! எத்தனை சீற்றங் கொள்வார்!... அட! அவரது நினைவே முன் நிற்கிறதே!'

---

26. ஓர் ஐயந் தெளிதல்

அகஸ்டாவைப் பற்றித் தான் கொண்டிருந்த தாழ்ந்த கருத்தினை மாற்றிக் கொள்ளத் தேவையேது மில்லை யெனவே எம்மா அதன்பின்னும் கண்டாள். அவள் கருத்து மிகவும் சரியாகவே இருந்தது. மனைவியின் மாறுபட்டு எல்டான் சிறிதேனும் நினைத்தவரல்லர் என்பதும் விளங்கிற்று. அவர் தம் மனைவியைக் குறித்து மகிழ்ச்சியே யன்றிப் பெருமிதமும் கொண்டவராய்த் தோற்றமளித்தார்.

எம்மா நினைத்ததைவிட மோசமாக அகஸ்டா ஒரேயொரு வகையில் மட்டும் நடக்கலானாள். அவள் எம்மா மீது கொண்ட நல்லெண்ணம் அடியோடு மாறிற்று. தான் நெருங்கிப் பழகுதற்கு இடமளிக்காமல் எம்மா விலகியது கண்டு அவள் வெறுப்புற்றாளோ என்னவோ! படிப்படியாய் அவள் எம்மாவை விட்டு விலகிச் செல்லலானாள். இந்நிலைமை எம்மாவுக்கு மகிழ்ச்சியளித்தது. ஆயினும் இதற்குக் காரணமான தீயெண்ணம் எம்மாவின் வெறுப்பிற்கிரையாயிற்று. அகஸ்டாவும் எல்டானும் ஹேரியட்டிடம் பாராமுகமாய் நடந்து கொண்டனர்; அல்லது பகடி செய்தனர். 'இதுவும் நன்மைக்கே. ஹேரியட்டின் காதல் நோய் தீர்ந்து விடும்' என நம்பினாள் எம்மா. உண்மையில் எம்மாதான் அவர்களது வெறுப்பிற்கு இலக்கானாள். வெளிப்படையாய் அப்பகைமையைக் காட்டிக் கொள்ள முடியாதவர்களாய் அவர்கள் ஹேரியட்டை இழிவுபடுத்துதலில் மனநிறைவு கண்டனர்.

அகஸ்டா தொடக்கமுதலே ஜேனிடம் 'உருகிப் பாய்ந்தாள்.' ஒருத்தியோடு பூசலிடுவதால் மற்றொருத்தியோடு நெருங்கிப் பழகுவது போலன்றித், தொடக்க முதலே ஜேனை நாடினாள். இயல்பாகவும் முறையாகவும் அவளைப் பாராட்டுவதோடு நில்லாமல், அழைப்போ வேண்டுதலோ இல்லாமலேயே அவளுக்கு உதவினாள்; நட்புக் கொண்டாள். ஜேன் இவற்றை யேற்றுக்கொண்டதுதான் எம்மாவுக்கு வியப்பளித்தது. அவள் எப்படித்தான் அகஸ்டாவைப் பொறுத்துக் கொள்கிறாளோ! அவள் எப்போதுமே ஒரு புதிர்தான்! திங்கட் கணக்கில் இங்குத் தனிமையில் வாழ்கிறாளே!

ஜேன் மூன்று திங்கள் மட்டுமே தங்கப் போவதாய்ச் சொல்லிக் கொண்டுதான் ஹைபரிக்குப் போந்தாள். கர்னல் குடும்பத்தினர் அயர்லாந்தில் மூன்று திங்களே தங்கக் கருதினர்; இப்போதோ மேலுஞ் சில திங்கள் தங்க முடிவு செய்தனர். ஜேனுக்குப் புதிதாக அழைப்பு வந்தது. கர்னலின் மகள் வற்புறுத்தி வருமாறு எழுதியிருந்தாள். ஆயினும் ஜேன் ஏனோ போக மறுத்து விட்டாள். இவற்றையெல்லாம் ஜேனின் 'பெரியம்மா' வழியே அறிந்திருந்த எம்மா, 'அவள் போக மறுப்பதற்கு யாதோ காரணமிருக்கும். ஆயின் எல்டான் குடும்பத்தோடு பழகுதற்கு ஒப்புகிறாளே! இதற்குக் காரணம் யாது?' என வியந்தாள்.

மிகச் சிலரே எம்மா அகஸ்டாவைப்பற்றிக் கொண்ட கருத்தினை யறிவர். அச்சிலர் முன் அவள் இவ்வியப்பினை வெளியிட்டபோது, அன்று ஒரு

காரணம் சொன்னாள்: "எப்போதும் வீட்டுக்குள் கிடத்தலைவிட இது நல்லதன்றோ! அவள் பெரியம்மா நல்லவள்தான். ஆயின் எப்போதும் அவ்வம்மையின் பேச்சினைக் கேட்டிருப்பது அலுப்புத்தட்டுமே!"

ஜார்ஜ் வழிமொழிந்தார்: "அன்னா சொல்வது சரிதான். தான் எவரோடு பழகுவதென்பதனை அவளே தெரிந்தெடுத்தல் கூடுமாயின், அவள் அகஸ்டாவை நாடியிராள். (எம்மாவைக் கண்டிப்பவர் போற் பார்த்தவாறே) அவளை மற்றவர்கள் கண் காணிப்பதில்லை; அகஸ்டாதான் பேணுகிறாள்."

எம்மா சற்றே நாணங்கொண்டாள்

ஜார்ஜ் தொடர்ந்தார்: "மற்றொன்றினையும் கருத வேண்டும். உள்ளத்தாலும் செயலாலும் தன்னைவிட மேம்பட்டு நிற்கும் ஜேனை அகஸ்டா பெரிதும் மதிக்கிறாள். நேரிற் பழகும்போது பணிவுடனேயே பழகுகிறாள்."

எம்மாவின் உள்ளத்தே மைந்தன் ஹென்றியின் நினைவெழுந்தது. குழப்பமுற்றவளாய், "நீங்கள் ஜேனை எத்துணை உயர்வாய் மதிக்கிறீர்கள் என்பதனை அறிவேன்" என்றாள். தயங்கினாள்; பின் எப்படியாவது முடிவு வெளிப்படிற் சரியென மதித்தவளாய் விரைந்து சொன்னாள்: "ஒருகால் உங்களை யறியாமலேயே இத்துணை உயர்வாய் மதிப்பீர்கள். என்றேனும் ஒரு நாள் அம் மதிப்பு உங்களை அதிர வைக்கும்."

ஜார்ஜ் குனிந்தவாறே சட்டைப் பொத்தானைத் திருகினார். அவ்வுழைப்பினாலோ வேறு காரணத்தினாலோ அவரது முகஞ் சிவந்தது. "ஐயோ எம்மா! நீ மிகமிகப் பின்தங்கி விட்டாய். ஆறு கிழமைகளுக்கு முன்பே திரு. கோல் என்னிடம் 'சாடை'யாய்ச் சொன்னார்."

எம்மாவின் காலை அன்னாவின் கால் பொருள்பட மிதித்தது.

ஜார்ஜ் ஒரு நொடியில் மீண்டும் பேசத்தொடங்கினார்: "ஒரு போதும் அது நடவாது. உறுதியாய்ச் சொல்கிறேன். நான் வேண்டினாலும் ஜேன் என்னை ஏற்கமாட்டாள். நானே அவளை ஒருபோதும் வேண்ட மாட்டேன்."

எம்மா இப்போது பதிலுக்கு மிதித்தாள்-மகிழ்ச்சியோடு.

"இல்லை, எம்மா! நான் ஒரு நாளும் அவளைப் பற்றி அம்முறையில் நினைத்ததில்லை. ஜேன் சிறந்த அழகியே. ஆயின் அவளும் ஒரு குறையுடையவளே. எம்மனிதனும் தன் மனைவியிடத்தில் எதிர்பார்க்கிறபடி, மனம்விட்டுப் பேசுகிறவளல்லள், அவள்" என முடித்தார் ஜார்ஜ்.

அவர் போன பிறகு, எம்மா வெற்றிப் பெருமிதத்தோடு, "அன்னா, இப்போது என்ன சொல்கிறாய்? ஜார்ஜ் ஜேனை மணப்பாரா?" என்றாள்.

"அருமை எம்மா! அவர் தாம் அவளைக் காதலிக்கவில்லையென அடிக்கடி நினைத்து நினைத்தே, காதலிக்கத் தொடங்கி விடுவாரோ என்று அஞ்சுகிறேன்" என்றாள் அவள்!

27. அஞ்சற் சிறப்பு

புதுமணமக்களுக்கு ஹைபரியில் பல குடும்பத்தினர் மாலை விருந்துகளும் இரவு விருந்துகளும் அளித்தனர். ஹார்ட்ஃபீல்டிலும் அவர்களுக்கு ஒரு விருந்தளிக்காவிட்டால் நன்றாயிராதென எம்மா கூறினாள். ஹென்றியும் இணங்கினார். எவரையெல்லாம் அழைப்பதென நெடுநேரம் சிந்திக்கத் தேவையேயில்லை. எல்டனும் மனைவியும், வெஸ்டனும் மனைவியும், ஜார்ஜும் கண்டிப்பாக இடம் பெறுவர். எட்டாவதாய் ஹேரியட் இடம்பெறுதலைத் தவிர்க்க முடியாது. அவளை வேண்டாவிருப்பாகவே எம்மா அழைத்தாள். ஆகவே அவள் வர மறுத்தபோது எம்மா மகிழ்ந்தாள். அவளுக்குப் பதில், எம்மா உண்மையிலேயே அழைக்க விரும்பிய ஜேனை அழைக்கலாமன்றோ! ஜார்ஜின் சொற்கள் அவள் செவியில் ஒலித்தன. மற்றவர்கள் ஒதுக்கியதாலேயே அவள் அகஸ்டாவொடு நெருங்கிப் பழகுகிறாள் என்றாரே!

அழைப்புக்களெல்லாம் ஏற்கப்பட்டன. அவர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு வர இணங்கினர். ஓர் எதிர்பாராத நிகழ்ச்சிதான் குறுக்கிட்டது. இசபெல்லாவின் மக்களிருவர் தம் தாத்தாவைப் பார்ப்பதற்கு வருவதாய் ஒரு திட்டமிருந்தது. அவர்களையழைத்துக் கொண்டு ஜான் வரப் போவதாய்க் குறித்த நாள் விருந்திற்குரிய நாளாகவே அமைந்தது. எட்டுப்பேர் கூடுவதைத்தான் தம்மாற் பொறுக்க முடியுமென்று கருதினார் ஹென்றி. இப்போது

ஒன்பதாமவர் வருகிறாரே! எவ்வாறோ ஜான் ஹார்ட்ஃபீல்டுக்கு வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு விருந்து நடந்து விடுகிறதே!

எம்மா தன் தந்தையைத் தேற்றுவதில் ஒருவாறு வெற்றி பெற்றாள். தன்னைத் தான் தேற்ற முடியாதவளானாள். விருந்து நிகழ்ச்சிகளும் ஹென்றிக்கு வாய்ப்பாகவே அமைந்தன. ஜான் போந்தார். ஆயின் எதிர்பாராத வகையில் வெஸ்டான் லண்டனுக்கு ஓரலுவல் காரணமாய்ச் செல்ல நேர்ந்தது.

குறித்த நேரத்தில் விருந்தினர் குழுமினர். ஜான் வழக்கம்போல் தம் அண்ணனோடு ஒதுங்கியிராமல், கலகலப்பாய்ப் பேசிப் பழகினார். ஜேனோடு உரையாடுதலில் ஈடுபட்டார். அன்று காலையில் உலவும் வழியில் அவர் அவளைக் கண்டார். அப்போதுதான் மழை பெய்யத் தொடங்கிற்று. அதை நினைவிற் கொண்டவராய் "நெடுந் தொலைவு சென்றிருந்தால் நனைந்திருப்பாயே!" என்றார்.

"அஞ்சல் நிலையம் வரையிலேயே சென்றேன். மழைக்கு முன்பே வீடு திரும்பிவிட்டேன். என் அன்றாடப் பணிகளில் அஃதொன்று. வெளியே உலவுதற்கு அஃதொரு சாக்கு."

"வாழ்க்கையில் ஒரு பருவத்தில் அஞ்சல் நிலையம் கவர்ச்சி மிக்குடையதாய்த் திகழ்கிறது. நீயும் என்னையொத்த பருவமெய்தி விட்டால், மழையிற் போய்ப் பெறுமளவு எக்கடிதமும் சிறப்புடையதன்று என உணர்வாய்."

அவள் நாணி நின்றாள்.

அவர் மேலுங் கூறினார்: "அன்றாடம் பழகுபவர்களைத் தவிர மற்றவர் எவரோடு கொள்ளும் தொடர்பும் காலப் போக்கிற் கவர்ச்சியற்றுப் போய் விடுகிறது. உன்னினும் மூத்தவன் என்ற முறையிற் சொல்கிறேன். இன்னும் பத்தாண்டுகளுக்குப் பிறகும் இப்போது எத்தனை செய்திகளில் ஆர்வமுடையவளாயிருக்கிறாயோ அத்தனையிலும் அப்படியே இருத்தல் வேண்டும்."

அவர் புண்படுத்தும் நோக்கமேதுமின்றி அன்பாகவே சொன்னார். அவள் நாணினாள்; உதடு நடுங்கிற்று; கண்களினின்றும் ஒரு நீர்த்துளி உருண்டது. ஏனோ அவள் வருந்தினாள்! நொடிப் போதில் ஹென்றி அவளோடு உரையாடத் தலைப் பட்டார். இதற்கிடையில் அவள் மழையிற் சென்றது அகஸ்டாவின் செவிக்கு எட்டி விட்டது. அவள் அன்போடு கடிந்துரைக்கலானாள்; "நான் அவரோடு பேசி ஏற்பாடு செய்கிறேன். எங்கள் கடிதங்களை அன்றாடம் கொண்டு வருபவன் எங்கள் வேலையாட்களுள் ஒருவன் (அவன் பெயரை மறந்தேன்)—உன் கடிதங்களையும் கொண்டுவர ஏற்பாடு செய்கிறேன்" என்றாள்.

ஜேன் மறுத்துவிட்டாள்: "உங்கள் பேரன்பினை மதிக்கிறேன். காலையில் உலவுதலைக் கைவிடேன். எங்கேனும் உலவுதல் வேண்டும். அஞ்சல் நிலையம் பயனுள்ள இடம். உங்கள் பணிமகனுக்கு என்றால் ஏன் வீண் தொல்லை?" தொடர்ந்து அவள் ஜானிடம் அஞ்சல் துறையினரின் அரும்பணிபற்றி உரையாடலானாள். பலவகைக் கையெழுத்துக்கள் பற்றிப்

பேச்செழுந்தது. "நான் கண்ட ஆடவர் கையெழுத்துக்களுள் அழகிய ஒன்று ஃபிராங்கினுடையது" என்றாள் எம்மா.

ஜார்ஜ் சொன்னார்: "நான் அதனைப் பாராட்ட மாட்டேன். நுணுக்கமாய் எழுதுகிறான். பெண்களுக்குள்ள எழுத்துப்போல் உள்ளது."

எம்மாவும் அன்னாவும் மறுக்கத் தலைப்பட்டனர். அடுத்த அறைக்குச் சென்றால், தக்க சான்றுடன்—அவனது கடிதத்துடன்—நிறுவிக் காட்ட முடியுமென்றாள் எம்மா. அவன் எப்போதோ தன் சிற்றன்னைக்குப் பதிலாக எம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான்.

"ஃபிராங்கைப் போன்ற இளைஞன் எம்மாவை யொத்த அழகிக்கு எழுதும்போது தன் திறமையை யெல்லாம் பயன்படுத்தாமலிருப்பானா?" என்றார் ஜார்ஜ்.

இதற்குள் உணவு படைக்கப்பட்டது. எனவே அனைவரும் உண்ணத் தலைப்பட்டனர். ஜேன் தானே நேரிற் சென்று கடிதங்களைப் பெற்றுவந்தாள் என்பதனை எம்மா மறந்திலள். அன்று காலையில் மழையில் நனைந்ததற்கு அவள் ஏதேனும் பயன் பெற்றாளா! பெற்றிருப்பாள்! வழக்கத்துக்கு மாறான மகிழ்ச்சியோடும் மனவெழுச்சியோடும் காணப் படுகிறாளே! அவளது மனத்தைப் புண்படுத்தக் கூடிய ஒரு சொல்லையேனும் சொல்லக் கூடாதென எம்மா முடிவு செய்திருந்தாள். இல்லையேல், அயர்லாந்துக் கடிதங்கள் விரைவில் கிடைக்கின்றனவா,

செலவு எவ்வளவாகும் என்பன போன்ற கேள்வி களைக் கேட்டிருப்பாள்.

உண்டபின் மகளிரனைவரும் ஓரறையிற் கூடினர். அவர்கள் இருகுழுவினராய்ப் பிரிதலைத் தடுக்க முடியாதென்று கண்டாள் எம்மா. அகஸ்டாவும் ஜேனும் ஓரிடத்தில் அமர்ந்து ஏதோ உரையாடினர். பெரும்பாலும் தணிந்தகுரலிலேயே பேசினரேனும் அஞ்சல் நிலையம், சளிபிடித்தல், கடிதங்களைக் கொணர்தல், நட்பு—இத்தகைய செய்திகளையே வழங்கினர் என்பது விளங்கிற்று. இவற்றைத் தொடர்ந்து ஜேனுக்குப் பிடிக்காத மற்றொன்றும் அடிபட்டது. "ஜூன் நெருங்குகிறதே! ஏதேனும் வேலை கிடைத்ததா?" என்று உசாவியதோடு நில்லாமல், தானே அவளுக்கு ஒரு வேலை தேடித் தருவதாகவும் முன்வந்தாள், அகஸ்டா. ஜேன் மறுத்தாள்.

இதற்குள் ஆடவரும் அவ்வறைக்குள் போந்தனர். லண்டனிலிருந்து திரும்பிவந்து வீட்டிலேயே உண்டு முடித்தவராய் வெஸ்டானும் அவர்களோடு போந் தார். 'பகலெல்லாம் பயணத்திலும் தொழிலிலும் ஈடுபட்ட ஒருவர், படுக்கப் போகாமல் இப்படி அரட்டையடிக்கப் புறப்பட்டாரே!' என்றெண்ணி ஜான் வியப்புற்றார். மற்றவர்கள் மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றனர்.

வெஸ்டான் தம் மனைவியிடம் ஏதோ குடும்பச் செய்தியைச் சொல்லத் தலைப்பட்டார். அவளை விளித்தே பேசினாரேனும், அறையிலுள்ளாரனை வரும் கேட்டு மகிழ்வரென்பது அவர் அறிந்த ஒன்றே.

அவளுக்கு வந்த ஒரு கடிதத்தை அவர் வீட்டிலிருந்து கொணர்ந்திருந்தார். ஏற்கெனவே பிரித்துப்படித்த அவர், "படி. இன்பச் செய்திதான். சில வரிகளே யுள்ளன. எம்மாவுக்குப் படித்துக் காட்டு" என்றார்.

மகளிர் இருவரும் அதைப் படித்துக் கொண் டிருக்கையிலேயே, அவர் வாய் ஓயாமற் பேசலானார். "பார்த்தாயா! அவன் வரப் போகிறான். அதிகமாய்ப் போனால் ஒரு கிழமை. அடுத்த கிழமை இங் கிருப்பான்..." கடைசியில் ஏற்கெனவே செவிமடுத் திருந்த மற்றவர்களிடமும் இச் செய்தியை அறிவிக்க அவர் புறப்பட்டார். அனைவரும் செய்திகேட்டு மகிழ் வாரென அவர் திண்ணமாய் நம்பினார். இல்லையேல் ஹென்றியோ, ஜார்ஜோ அத்தனை மகிழ்ச்சியடைந் திலர் என்பதனை அவர் கண்டிருப்பார்.

தேநீர் வழங்கப்பட்டது. தாம் சொல்லவிரும்பிய வற்றைச் சொல்லி முடித்தவராய் வெஸ்டான் இருக்கையிலமர்ந்தார். அவரும், அன்னவும் எல்டா னும் ஹென்றியோடு சீட்டாடமுற்பட்டனர். ஜார்ஜ் ஏனோ உரையாடலில் சிறிதேனும் ஈடுபாடில்லாத வராய் அமர்ந்திருந்தார். அகஸ்டா தன்னை அனைவரும் பாராட்டித் தன்னோடு பேச வேண்டுமென விரும்பின ளாயினும் எவரும் பேச முற்படாமையினால் தனியே இருந்தாள்.

ஜான் ஒருவர்தாம் உரையாட முற்பட்டார். "முன்னாள் ஒழுக்கத்துக்கு மாறாக அணிமைக் காலத்தில் நீ நண்பர் குழாத்தைப் பெரிதும் நாடு கிறாய் என்பதில் ஐயமின்று. ஒருநாள் தங்கலா மென்று வந்தேன். இன்றுகூட விருந்திற்கு ஏற்பாடு

செய்துள்ளாய்! கோல் வீட்டில் விருந்து! கிரௌண் விடுதியில் நடனம்! ரண்டால் மாளிகை மட்டுமே உன் போக்கினில் எத்துணை பெரிய மாறுதலை விளைவித்துளது!''

அவருடைய அண்ணனும் ஒத்துப்பாடினர். ''ஆமாம். ரண்டால்தான் யாவற்றுக்கும் காரணம்.''

''சரி...எப்போதாவது இவ்விரு பிள்ளைகளும் உனக்கு இடைஞ்சலாயிருக்கிறார்கள் என நினைப்பாயாயின், உடனேயே அவர்களை வீட்டிற்கு அனுப்பி விடு'' என்றார் ஜான்.

''அவர்களை அங்கு ஏன் அனுப்பவேண்டும்? அவர்களை என் வீட்டிற்கு அனுப்புவாளாக. எனக்கு நிறைய ஓய்வுண்டு'' என்றார் ஜார்ஜ்.

''உங்கள் பேச்சு வேடிக்கைதான். நான் கலந்துகொண்ட எந்த விருந்திலேனும் நீங்கள் பங்கு கொள்ளாமலிருந்தீர்களா? எனக்குமட்டும் பிள்ளைகளைப் பேணுதற்கு ஓய்வில்லையென்று எப்படிச் சொல்கிறீர்கள்? இவர்கள் சித்தியாவது ஒருநாளில் ஒரு மணி நேரந்தான் வெளியில் போகிறாள். பெரியப்பாவோ ஐந்துமணி நேரம் வீட்டில் இருக்க மாட்டாரே! அப்படியே வீட்டிலிருக்கும்போதும், ஏதேனும் படித்துக் கொண்டிருப்பார். இல்லாவிடில் கணக்கு எழுதிக் கொண்டிருப்பார்'' என்றாள் எம்மா.

ஜார்ஜ் தம் சிரிப்பினை யடக்க முயன்றார். அகஸ்டா அவரோடு பேச முற்பட்டதனால் முயற்சியில் வெற்றியும் பெற்றார்.

---

28. நடன விருந்து

சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தித்தபோது, ஃபிராங்கின் வருகையை யறிந்ததனால் தனக்கு ஏற்பட்ட மனத்துடிப்பு எத்தகையதென எம்மா உணர்ந்தாள். தனக்கு நேரிட்ட அச்சமும், தயக்கமும் தன் பொருட்டாகவல்ல; அவனுக்காகவே தோன்றின என உறுதி செய்தாள். இரு திங்களாய்ப் பிரிந்து வாழ்ந்ததனால், அவனது ஆர்வந் தணியவில்லையெனில், இடையூறும் தீமையும் நேரிடக் கூடும். 'அவன் காதற் சூளுரையேதும் வழங்காமல் தடுத்துவிட வேண்டும். அத்தகைய ஒன்று நிகழத் தான் போகிறது' என நம்பினாள் அவள்.

வெஸ்டான் எதிர்பார்த்ததனைவிடச் சற்றுக் காலந்தாழ்த்த பிறகேயாயினும் மொத்தத்தில் விரைவில் ஃபிராங்க் ஹைபரிக்கு வந்து சேர்ந்தான். அவனும் எம்மாவும் நண்பர்களாகவே கண்டு பேசினர். அவள் அவனைக் கூர்ந்து நோக்கினாள். முன்னைவிட அவனது காதல் குறைந்துவிட்டதென்பது புலப்பட்டது. கால்மணிநேரமே தங்கிய அவன், மற்றை நண்பர்களைக் காணப் புறப்பட்டான். இதனால் அவளது கருத்து மேலும் வலுப்பட்டது. ஒருகால் தன்னோடு நெடுநேரந் தங்கினால் பழைய காதலாற்றல் மேலோங்கிவிடுமென அவன் அஞ்சுகிறான் போலும் என்றெண்ணினாள் அவள்.

பத்து நாட்களில் இவ்வொருமுறைதான் அவன் அவளைக் காணப்போந்தான். பலமுறை வரக்

கருதினான்; தடுக்கப் பெற்றான். அவனுடைய அத்தை அவனை விடவில்லை. அவளது உடல்நிலைக்கு லண்டன் ஏற்றதன்று என்பது விரைவில் புலப்பட்டது. ஆகவே அவர்கள் உடனடியாய் ரிச்மாண்ட் எனுமிடத்துக்குச் சென்றனர். அங்கு இரு திங்கள் தங்கப் போவதாகவும் இனி விரும்பியபோதெல்லாம் ஊருக்கு வரமுடியுமென அவன் தன் பெற்றோருக்கு எழுதினான்.

வெஸ்டானின் கருத்து எம்மா அறியாததன்று. அவள்தான் தம் மகனது மகிழ்ச்சிக் கெல்லாம் காரணம் என அவர் நினைத்தார். அவளோ அவ்வாறு நேரலாகாதென விரும்பினாள். இருதிங்கட் காலந் தான் எவர் கருத்துச் சரியெனக் காட்டவேண்டும்.

ஒரு நற்காரியம் மட்டும் விரைவில் உறுதியாயிற்று. கிரௌண் விடுதியில் விருந்துதான், அது. அத்தை ஓரளவு தேறிவிட்டதனால், எப்போதேனும் ஒருமுறை தொடர்ந்து இருபத்துநான்கு மணிநேரம் தான் ஹைபரியில் தங்க முடியுமென ஃபிராங்க் எழுதினான். உடனேயே அவர்கள் விருந்திற்கு ஒரு நாளைக் குறித்தனர்.

அந்நாளில் ஹென்றிக்குப் பேச்சுத் துணையாக இருத்தற்குப் பேட்ஸ் அம்மை இணங்கினாள். சித்தி வீட்டில் இல்லாதபோது, சிறு பிள்ளைகள் இருவரையும் குறையேதுமின்றிப் பேணுதற்குப் பணிமகன் ஒருவனும் அமர்த்தப்பட்டான்.

விருந்தினைக் கலைப்பதற்கு எவ்விடையூறும் நேரவில்லை. மாலைக் காலத்திலேயே ஃபிராங்க் வந்து சேர்ந்தான். அவனும் எம்மாவும் மறுபடி இன்னும்

கண்டு பேசினரல்லர். முன்னரே விடுதிக்குப் போந்து, ஏற்பாடுகளையெல்லாம் மேற்பார்ப்பதில் உதவ வேண்டுமென வெஸ்டான் எம்மாவை வற்புறுத்தினார். மற்றவர்கள் வருமுன், அவள் சிறிது நேரம் அவனோடு கழிக்க நேரலாம். அவள் ஹாரியட்டோடு விடுதியை யடைந்தாள்.

எவரது வரவையோ எதிர்பார்த்தவனைப்போல் ஃபிராங்க் காட்சியளித்தான். சற்று நேரத்தில் வெஸ்டானின் உறவினர் பிறரும் போந்தனர். ஏற்பாடுகளை மேற்பார்ப்பதற்கே அவர்களும் முன்னதாகப் போந்தனர். தன் அறிவுரையை மட்டுமே வெஸ்டான் நம்பியிருந்தவரல்லர் எனக் கண்டாள் எம்மா. ஃபிராங்க் அவளருகே நின்றான். ஏனோ பதற்றமும் துடிப்புமுடையவனாய் விளங்கினான். அடிக்கடி வாயிலுக்குச் சென்றான்; வண்டியொலி வருகிறதா எனக் கூர்ந்து கேட்டான். அகஸ்டா பற்றிய பேச்செழுந்தது. அப்போதே ஒரு வண்டி வந்துநின்றது. அவன் வாயிலுக்கு விரைந்தான். "அவளோடு ஏற்கெனவே அறிமுகமாகவில்லை யென்பதை மறந்தேனே!" என்றவாறு திரும்பினான்.

எல்டானும் அகஸ்டாவும் வந்து தோன்றினர். "ஜேனையும் அவள் பெரியம்மாவையும் நீங்கள் அழைத்து வருவீர்கள் என்று சொன்னார்களே!" என்றார் வெஸ்டான்.

மறதி சிறிதே. வண்டி உடனே அனுப்பப் பெற்றது; சில நிமிடங்களில் மீண்டது. எவரோ மழை யென்றனர். "குடையுளதா எனப் பார்க்கிறேன் அப்பா" என்றவாறே ஃபிராங்க் விரைந்தான்.

வெஸ்டானும் பின் தொடர்ந்தார். அவரை அகஸ்டா தடுத்து நிறுத்தினாள். அவர் மகனைப் பற்றிப் புகழ் மாரி பொழியலானாள். பின் தன் அண்ணனது பெருமையை விரித்துரைக்க முற்பட்டாள். மகளிரை வரவேற்கத் தாம் செல்லவேண்டுமென நினைவு வரப்பெற்றவராய் வெஸ்டான் புன் முறுவலோடு கிளம்பினார்.

ஜேனும் பெரியம்மாவும் அறைக்குள் புகுந்தனர். ஃபிராங்கும் வெஸ்டானும் அழைத்து வந்தனர். ஃபிராங்க் எம்மாவினருகில் வந்தமர்ந்தான். அகஸ்டாவும் ஜேனும் வம்பளக்கலாயினர். ஃபிராங்க் நினைவுகளில் மூழ்கினான்.

"அகஸ்டாவைப் பற்றி யாது கருதுகிறீர்கள்?" என்றாள் எம்மா.

"கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை."

"நீங்கள் நன்றியற்றவர்கள்."

"நன்றியற்றவனா! யாது சொல்கிறாய்?—வேண்டா...சொல்லாதே. விளக்கங் கேட்க விரும்புகின்றிலேன்—அப்பா எங்கே? நடனம் எப்போது தொடங்குவது?"

அவன் தந்தையைத் தேடிச் சென்றான். எம்மா அவன் போக்கினைப் புரிய முடியாதவளானாள். நடனத்தைத் தொடங்கி வைக்குமாறு அகஸ்டாவையே கேட்டுக்கொள்ள வேண்டுமென்பதனை அன்று திடீரென உணர்ந்தாள். அகஸ்டா அதனையே ஆவலோடு எதிர்நோக்கியிருப்பாள். உண்மையில் தன் தோழி எம்மாவுக்கே அச் சிறப்பினை வழங்கக் கருதினாள் அன்று. எம்மா துணிச்சலோடு தனக்கு நேர்ந்த துன்பத்தைத் தாங்கிக் கொண்டாள். அகஸ்டாவுக்கு முதலிடத்தை விட்டுக் கொடுக்க வேண்டியவளானாள். இது காரணமாகத் 'திருமணஞ் செய்து கொண்டாலென்ன!' என்று கூட நினைக்கத் தலைப்பட்டாள்.

"அவளோடு இணைந்து எவர் நடனமாடுவர்? ஃபிராங்க் தன்னை யழைக்கவேண்டுமென்றே அவள் எதிர்பார்ப்பாள்" என்றார் வெஸ்டான்.

அக்கணமே ஃபிராங்க் எம்மாவை யணுகி அவளது உறுதி மொழியை நினைவூட்டினான்; தன்னோடு ஆட வருமாறு வேண்டினான். வெஸ்டான் அகஸ்டாவுடன் நடனமாடுவதே தக்கதென்றாள் அன்று. நடனந் தொடங்கிற்று. விலகி நின்று வேடிக்கை பார்ப்பவர் நடுவே ஜார்ஜ் நின்றது எம்மாவுக்குத் துன்பமளித்தது. அவரும் நடனமாட வேண்டுமென விரும்பினாள், அவள். இருவர் கண்பார்வையும் ஒத்தபோதெல்லாம், அவர் முறுவலிக்குமாறு செய்தாள், அவள். மொத்தத்தில் அவர் வருத்த முற்றவர் போலவே காட்சி நல்கினார். எம்மாவுக்கும் அவளது ஆடலிணைக்குமிடையே எத்தகைய புன்மைக் காமச் செயலேதும் நிகழவில்லை. இருவரும் 'இன்களி மகிழ் நகை' நண்பராகவே தோன்றினர். அவன் முன் போல மிகுதியாய் அவளிடம் அன்பு பாராட்டினனல்லன் என்பது தெளிவாய் விளங்கிற்று.

நடனம் களிப்பு மிக்கதாகவே நிகழ்ந்தது. இறுதி யிரண்டு ஆடல்களில், தனக்கு இணையொருவரும் கிட்டாமையால், ஹேரியட் தனித்து நின்றாள். எல்

டான் அங்குமிங்கும் திரிந்தார். சீட்டாட்ட அறைக்குத் தப்பியோடி விடுவாரென எதிர்பார்த்தாள் எம்மா. ஆயின் தப்பியோடுவது அவர் திட்டமன்று. அவர் சில வேளைகளில் ஹேரியட்டுக்கு நேர் எதிரே நின்றார். அவளையொட்டி நிற்பவர்களிடம் உரையாடினார். அவரும் அவர் மனைவியும் பொருள் பொதிந்த பார்வைகளைப் பரிமாறிக்கொண்டனர். இளகிய மனம் படைத்த அன்னா, அவரை ஹேரியட்டுடன் நடனமாடுமாறு வேண்டினாள். அவர் மறுத்து ஒதுங்கிவிட்டார். ஹேரியட் எத்துணை மனவருத்தத்தோடு இருக்கையில் அமர்வாள் என்பது எம்மா உணராததன்று. எல்டானும் அவர் மனைவியும் களிவெறியுடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

நொடிப் போதில் மற்றோர் இன்பக்காட்சியினை எம்மா கண்டாள். ஜார்ஜ் ஹேரியட்டை அழைத்துக்கொண்டு நடனமாடப் புகுந்தார். எம்மாவின் மகிழ்ச்சிக்கும் நன்றியுணர்ச்சிக்கும் அளவேயில்லை. தொலைவில் நின்றாளாதலின் பேசவில்லையே தவிரப் பார்வையால் தன் நன்றிப் பெருக்கினை அவள் அவர்க்கு உணர்த்தினாள்.

ஃபிராங்கிடம் தன் நன்றியுணர்வினை ஓரளவு வெளியிட்டாள். "அளியள் ஹேரியட்! ஜார்ஜ் அவர்மீது இரக்கங் கொண்டார். எத்தனை நல்லவர்!"

உணவு பரிமாறப்பட்டது. உண்டபிறகே எம்மா ஜார்ஜுடன் உரையாட வாய்ப்புப் பெற்றாள்.

ஜார்ஜ் தொடங்கினார்: "அவர்கள் ஹேரியட்டைப் புண்படுத்தவே திட்டமிட்டார்கள்... எம்மா! அவர்கள் ஏன் உன் பகைவர்களாய் விளங்குகிறார்கள்?"

குறுநகையோடு அவளைக் கூர்ந்து நோக்கினார். மறுமொழியேதும் பெறாதவராய்த் தொடர்ந்து சொன்னார்: "அவர் எப்படியிருப்பினும், அவள் உன் மீது சீறுதற்குக் காரணம் இல்லையே! ஒப்புக்கொள், எம்மா! அவர் ஹேரியட்டை மணக்க வேண்டுமென நீ எதிர்பார்த்தாய்!"

"ஆமாம், அதனால்தான் அவர்கள் என்னை மன்னித்திலர். எல்டனைப் பொறுத்தவரை என் கருத்துக்கள் பிழைபட்டவை என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவரிடம் யாதோ ஒரு சிறுமைக் குணமுளது. நீங்கள் முன்பே கண்டுபிடித்தீர்கள். நான் அறிந்திலேன். அவர் ஹேரியட்டைக் காதலிப்பதாய் நம்பினேன். அத்தனையும் தவறான கருத்துக் கோவை."

"இவ்வளவு ஒப்புக்கொண்டாயே! பதிலுக்கு ஒன்று சொல்வேன். அவர் தமக்குத் தெரிந்தெடுத்தவளைவிட நீ அவருக்குத் தெரிந்தெடுத்தவள் மேலானவள் தாம்."

எம்மாவின் மனமெல்லாம் நிறைவுற்றது. வெஸ்டன் எல்லோரையும் மறுபடியும் ஆடுமாறு வேண்டினார்.

"யாரோடு நடனமாடப் போகிறாய்?" என வினவினார் ஜார்ஜ்.

அவள் ஒருகணம் தயங்கினாள். பின் சொன்னாள்: "உங்களோடு—நீங்கள் அழைப்பீர்களாயின்."

அவர் தம் கையை நீட்டியவாறே, "ஆடுவாயா?" என்றார்.

"உறுதியாக உங்களுக்கும் ஆடத் தெரியுமென நிறுவிவிட்டீர்கள். பார்க்கப்போனால் அத்தானும் கொழுந்தியுமாகவா பழகுகிறோம்."

"இல்லை, அத்தானும் கொழுந்தியுமில்லை."

29. அழகும் ஆண்மையும்

ஜார்ஜோடு மனம் விட்டுப் பேசியது எம்மாவுக்குச் சிறந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. எல்டானையும் அவர் மனைவியையும் பற்றித் தங்களிருவரிடையே கருத்தொற்றுமையிருத்தலை யுணர்ந்து அவள் பெரிதும் இன்புற்றாள். அவர் ஹேரியட்டைப் பாராட்டியதும் சிறந்த ஆறுதலை யளித்தது. மற்றொரு நன்மையும் நிகழுமென அவள் எதிர்பார்த்தாள். ஹேரியட்டின் மதிமயக்கந் தெளிந்துவிடாதா! அவள் கண்கள் திறந்திருக்குமே! அவள் நம்பிய அளவு எல்டான் அத்துணைச் சிறந்தவரல்லர் எனக் கண்டிருப்பாளே! இத்தகைய சூழ்நிலையில், கோடைக் காலம் இன்பமாய்க் கழியுமென உணர்ந்தாள் எம்மா.

வாயிற் கதவு திறந்தது. அவள் சிறிதும் எதிர் பாராத இருவர் புகுந்தனர். ஃபிராங்கும், அவன் தோளிற் சாய்ந்தவாறே ஹேரியட்டும்! ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என ஒரு நொடியிலறிந்தாள் எம்மா. ஹேரியட் வெளிறி நடுங்கிக் கொண்டிருந்தாள். சில நிமிடங்களில் முழுக்கதையையும் எம்மா அறிந்தாள். ஹேரியட்டும் அவள் தோழி யொருத்தியும் உலவச் சென்றனர். ஹைபரிக்கு அரைக்கல் வெளியே காட்டின் நடுவே அமைதியான இடத்தில் அவர்கள் சென்றபோது, நாடோடிப் பிச்சைக்காரக் கூட்டமொன்று எதிர்ப்பட்டது. தோழி அஞ்சி ஊருக்குத் திரும்பியோடலானாள். அத்துணை விரைவாய் ஓட முடியாத ஹேரியட்டைப் பிச்சைக் காரர் சூழ்ந்தனர். அவள் ஒரு 'ஷில்லிங்' வழங்கிய

பிறகும் போக மறுத்தனர். ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாய்ப் பலர் மேலும் பொருள் கேட்டுத் தொல்லை கொடுத்தனர். தற்செயலாய் அவ்வழியிற் போந்த ஃபிராங்க் அவளைக் காப்பாற்றி யழைத்து வந்தான். அவன் ஏற்கெனவே காலங்கடந்து விட்டதனால் உடனேயே ரிச்மாண்ட் செல்ல வேண்டுமென்றான். எம்மா தன் சார்பிலும் தோழி சார்பிலும் நன்றியும் வாழ்த்து முரைத்தாள். அவன் புறப்பட்டுச் சென்றான்.

இத்தகைய தீரச்செயல்—ஆண்மைமிக்க இளைஞனையும் அழகுமிக்க இளம் பெண்ணையும் சேர்த்து வைத்த தீரச்செயல் சில கற்பனைகளைத் தோற்றுவிப்பது இயல்பே யன்றோ? மொழிநூலாரும் இலக்கண நூலாரும், கணித நூலாருங்கூட இந்நிகழ்ச்சியினின்று பல முடிவுகளை மேற்கொண்டிருப்பாரெனில் கற்பனை வளமுடைய எம்மா திட்டமிடத் தொடங்கியதில் வியப்பேது! காலத்தால் நிகழ்ந்த விந்தையன்றோ அது! அவன் இப்போதுதான் எம்மாவின் தொடர்பினைக் குறைக்க விரும்பினான்! ஹேரியட் எல்டான் வெறியினின்று இப்போதுதான் தெளிந்திருக்கிறாள்! ஆகவே இந்நிகழ்ச்சி இன்ப விளைவுகளைத் தோற்றுவிக்காமற் கழியுமோ!

சில நாட்களுக்குப் பின் ஹேரியட் ஒரு பொட்டலத்துடன் எம்மாவிடம் வந்தாள். எப்போதோ ஒரு முறை எல்டானது விரலிற் போட்டதுபோக எஞ்சிய 'பிளாஸ்திரி', அவர் ஒருமுறை பயன்படுத்திய பென்சில்-இவைதாம் அதனுள் இருந்தன. அவைகளை நெருப்பில் விட்டெறிந்து ஹேரியட் சொன்னாள்:

“இவற்றையெல்லாம் நான் தொலைத்தாக வேண்டும். இதோ தொலைந்தன. எல்டானது நினைவும் முடிவுற்றது.”

‘ஃபிராங்கின் நினைவு எப்போது தொடங்கும்?’ என நினைத்தாள் எம்மா. ஏற்கெனவே தொடங்கி விட்டதென நம்புதற்கு இடமுண்டு என்று அவள் கண்டாள்.

தொடர்ந்து பேசுகையில் “ஹேரியட்! நீ எப்போதாவது மணப்பாயாயின் எவ்வகையில் என நான் சொல்கிறேன்” என்றாள் எம்மா.

ஹேரியட் உறுதியான குரலில் “நான் மணக்கவே மாட்டேன்” என்றாள்.

“எல்டான் காரணமாகவா?”

“சே எல்டானா! இல்லை. அவரைவிட மேலானவர்.”

எம்மா நெடுநேரம் சிந்தனையிலாழ்ந்தாள். நாடோடிப் பிச்சைக்காரரிடமிருந்து காப்பாற்றியதால் அவள் ஃபிராங்கைப் போற்றுவதாய் எம்மா நினைத்தாள். வெளிப்படையாக அப்போற்றுதலைத் தாண்டிவிடுவதற்கு அஞ்சியவளாய் “ஹேரியட்! உன் கருத்து விளங்குகிறது. மணப்பதேயில்லை என நீ முடிவு செய்ததற்குக் காரணம் உன் அன்பிற்கு உரியவர் உன்னைவிடத் தரத்தில் பலமடங்கு உயர்ந்தவர் என நீ நினைப்பதுதானே?” என்றாள்.

ஹேரியட் விடையிறுத்தாள்: “எம்மா! என்னை நம்புங்கள். அவ்வளவு பைத்தியக்காரியல்லேன். அவரை எட்ட இருந்து பாராட்டி மகிழ்வேன்.

அடையலாமென நினைக்கவும் இயலாது என்பதனை நன்கு அறிவேன்.”

“முன்னொரு முறை நாம் தப்புக்கணக்குப் போட்டோம். இப்போது விழிப்பாயிருப்போம். அவர் உன்னைவிடப் பன்மடங்கு உயர்ந்தவரே. பல கொடிய தடைகளும் எதிர்ப்புக்களும் உண்டென்பதில் ஐயமில்லை. ஆயினும் இதைவிட விந்தையானவை நிகழ்ந்துள்ளன. இஃது எவ்வாறு முடிவுறினும் ஒன்று மட்டும் உறுதி. அவரை நினைக்குமளவு உன் எண்ணம் உயர்வடைந்துள்ளது. இதுவே நல்ல முன்னேற்றம்.”

ஹேரியட் நன்றிப்பெருக்குடையவளாய்த் தன் தோழியின் கையில் முத்தமிட்டாள்.

30. தொடர்பு யாது?

ஜூன் பிறந்தது. பொதுவாக ஹைபரியில் குறிப்பிடத்தக்க மாறுதலேதும் நிகழவில்லை. ஜேன் இன்னும் பாட்டிவீட்டினில்தான் இருந்தாள். கர்னல் குடும்பத்தினர் ஆகஸ்ட் வரை அயர்லாந்திலேயே தங்க முடிவுசெய்துவிட்டனர். ஆதலின் ஜேன்—அகஸ்டாவின் உதவிகளுக்குத் தப்பினால்—மேலும் இருதிங்கள் அவ்வூரிலேயே இருப்பாள். அகஸ்டாவின் அண்ணனும் அண்ணியும் எதிர்பார்த்தபடி வந்திலர். அவள் ஜேனை எப்படியாவது ஓர் அலுவலில் ஈடுபடுத்தப் பாடுபட்டாள்.

தொடக்க முதலே யாது காரணம் பற்றியோ ஃபிராங்கை வெறுத்தார், ஜார்ஜ். நாளுக்கு நாள் அவ்வெறுப்புக் கூடிற்று. அவன் எம்மாவோடு பழகுவதெல்லாம் ஒருவகை இரண்டகமே யென அவர் மதித்தார். எம்மாவே அவன் விருப்பத்திற்குரியவள் எனப் பலருங் கூறினர். அவனது போக்கேயன்றி, அவன் தந்தையின் குறிப்பு மொழிகளும், சிற்றன்னையின் வாய்வாளாமையும் ஆகிய எல்லாமே இக்கருத்தினை வலியுறுத்தின. எல்லோரும் அவனையும் எம்மாவையும் இணைத்தனர். எம்மா அவனை ஹேரியட்டிடம் தள்ளினாள். ஜார்ஜோ அவனுக்கும் ஜேனுக்கும் யாதோ தொடர்பிருப்பதாய்க் கருதினார். யாதென்பது விளங்கவில்லை. ஒருநாள் அவர் வெஸ்டான் குடும்பத்தோடும், ஜேனோடும் எல்டான் வீட்டினில் விருந்துண்டார். எம்மா அப்போது

அங்கு இல்லை. எம்மாவின் காதலன் எனும் நிலைமைக்குப் பொருந்தாத வகையில், அவன் ஜேனைப் பலமுறை ஒருவகையாய் நோக்கினான். அவ் விருவருக்குள்ளும் ஏதோ ஒரு விருப்பம்—ஓர் உடன்பாடு—இருத்தல் உறுதியெனக் கருதினார் ஜார்ஜ்.

மற்றொருநாள் மாலையில் அவர் ஹார்ட்ஃபீல்டுக்கு வந்து கொண்டிருந்தார். உலவக் கிளம்பிய எம்மாவும் ஹேரியட்டும் எதிர்ப்பட்டனர். அவரும் அவர்களோடு உலவ முற்பட்டார். எதிரே வெஸ்டனும், அன்னாவும் ஃபிராங்கும், ஜேனும் அவள் பெரியம்மாவும் ஒரு குழுவாய்ப் போந்தனர். பின்னை இருவரும் தற்செயலாய் முன்னை மூவரைக் கண்டவரே. அனைவரும் ஒருங்கே நடக்கலாயினர். இத்தகைய குழுவினைத் தந்தை பெரிதும் விரும்புவார் என்றெண்ணிய எம்மா, அவர்களைத் தன் வீட்டிற்குள் வருமாறு அழைத்தாள். வெஸ்டன் குடும்பத்தினர் உடனே இணங்கினர். சிலரே செவிமடுத்த நீண்டதொரு பேச்சிற்குப்பின் ஜேனின் பெரியம்மாவும் அவ்வழைப்பினை ஏற்றாள்.

அப்போது மருத்துவர் பெர்ரி தற்செயலாய்க் குதிரைமீது அவர்களைக் கடந்து சென்றார்.

"ஆமாம். மருத்துவர் பெட்டிவண்டி வைத்துக் கொள்ளும் திட்டம் என்னவாயிற்று?" என்றான் ஃபிராங்க், தன் சிற்றன்னையிடம்.

அன்னா வியப்புற்றவளாய், "அவர் அப்படியொரு திட்டமுடையவர் என்பதனையே அறியேன்" என்றாள்.

"நீங்கள் தாமே மூன்று திங்களுக்குமுன் எழுதினீர்கள்?"

"அட கடவுளே! இப்போதுதான் நான் அச்செய்தியையே கேள்விப் படுகிறேன்!"

"அப்படியா!... பின்னே எப்படியறிந்தேன்?... ஒருகால் கனாக் கண்டிருப்பேன்—ஹேரியட்! பெரிதும் களைப்புற்றவளைப் போல் நடக்கிறாயே! வீட்டையடைவதற்குப் பெரிதும் மகிழ்வாய்."

"ஈதென்ன சேதி? மருத்துவர் பெட்டிவண்டி வாங்கப் போகிறாரா! அவரே உனக்கு எழுதினாரா?" என்றார் வெஸ்டன்.

"இல்லை, யாருமே எழுதவில்லை யென்பதே தோன்றுகிறது. ஏதோ கனவு போலும்! நான் மிகுதியுங் கனாக் காண்பவன்" என்றான் ஃபிராங்க்.

"நீ இங்கில்லாத போதும், இவ்வூரைப் பற்றியே நினைப்பாய் என்று உன் கனவு தெளிவாக்குகிறது... எம்மா! நீயும் மிகுதியாய்க் கனாக் காண்பாயல்லவா?" என்றார் வெஸ்டன்.

அவரது குறிப்புமொழி எட்டுவதற்குள் அவள் ஏற்கெனவே வீட்டிற்குள் புகுந்துவிட்டாள்.

ஜேனின் பெரியம்மா, சிறிது நேரமாகவே பேச முயன்று தோற்றவள், இப்போது பேசலானாள்: "இதுபற்றி நான் ஏதாவது சொல்லலாமா? ஃபிராங்க் கனாக் கண்டிருக்கலாம் — மறுக்கின்றிலேன் — சில வேளை நானே மிக விந்தையான கனாக்களைக் கண்டுள்ளேன்—இப்படியொரு கருத்துக், கழிந்த இளவேனிலில் உலவிற்று. மருத்துவர் மனைவியே என்

தாயிடம் கூறினாள். வேறெவரும் அறியார். மூன்றே நாள்தான் இக்கருத்து நிலைத்தது. ஜேன்! உனக்கு நினைவில்லை. பாட்டிதானே நாம் வெளியிலிருந்து வந்தவுடன் சொன்னாள்? எங்கோ போய்விட்டு வந்தோமே!...''

ஜார்ஜின் பார்வை ஜேனிடம் சென்றது. ஏற்கெனவே ஃபிராங்கின் முகத்தில் குழப்பம் தென்படுவதையும், அவன் அதைச் சிரித்து மறைக்க முயலுவதையும் அவர் கண்டார். அவன் ஜேனின் பார்வையைக் கவர முயன்றான். அவளோ அவனையும் ஜார்ஜையும் நிமிர்ந்தும் பாராதவளாய் வீட்டினுள் புகுந்தாள். வேறேதும் சொல்வதற்கோ விளக்குதற்கோ நேரமில்லை.

உட்கார்ந்தபோது, ''உன் அக்கா பிள்ளைகள் விளையாடுதற்கென எழுத்துக் கட்டைகள் கிடந்தனவே? எங்கே'' என்றான், ஃபிராங்க். சொல்லடுக்கி விளையாடுதல் அமைதியானதாதலின் தந்தை மகிழ்வார் எனக் கருதிய எம்மா கட்டைகளைக் கொணர்ந்தாள். மேசையில் ஒருபுறம் ஃபிராங்கும் எம்மாவும் மறுபுறம் ஜேனும் அமர்ந்திருந்தனர். நிகழ்பவற்றை நன்கு காணக்கூடிய நிலையில் சற்றுத் தள்ளி ஜார்ஜ் அமர்ந்திருந்தார். ஃபிராங்க் ஏதோ ஒரு சொல்லையடுக்கி ஜேன் முன் வைத்தான். அவள் சுற்றுமுற்றும் பார்த்தவாறே அச் சொல்லை நிரப்பினாள். முறுவலித்தவாறே, அவ்வடுக்கினை அப்பால் நகர்த்தினாள். ஹேரியட் அச்சொல்லைப் படித்தாள்: ''பெருந்தவறு''. ஏனோ ஜேனின் கன்னஞ் சிவந்தது.

'இச் சிறு பிள்ளைவிளையாட்டினில் ஃபிராங்க் ஈடுபட்டதற்கு உள்நோக்கம் யாதோ இருத்தல் வேண்டும். சொல்லைக் கேட்டவுடன் ஜேன் ஏன் நாணினாள்?' —இவ்வாறு கருதிய ஜார்ஜ் கூர்ந்து நோக்கலானார்.

அடுத்து ஒரு சிறு சொல்லை எம்மா முன் வைத்தான், ஃபிராங்க். வெட்கக்கேடு என்றவாறே அவள் தடுத்துங் கேளாமல், அவன் அதனை ஜேனிடம் காண்பித்தான். ஜார்ஜ் அச்சொல் ''டிக்சான்'' எனக் கண்டார். ஜேனுக்கு அது மகிழ்ச்சியளிக்கவில்லை. மற்றவர் தன்னையே நோக்குதலையுணர்ந்த அவள் முன்னினும் நாணமுற்றாள். ''இனியும் இவ்விளையாட்டில் ஈடுபடமாட்டேன்'' என்றாள். அவள் பெரியம்மா ''நானும் அதைத்தான் சொல்லக் கருதினேன். நேரமாயிற்று. போவோம், வா'' என்றாள்.

ஜேன் உடனேயே கிளம்பிவிட்டாள். மற்றொரு சொல்லடுக்கினை ஃபிராங்க் அவள் முன் வைத்தான். அதனை ஏறெடுத்தும் பாராமல் அவள் நகர்த்தினாள். இருள் பரவத் தொடங்கிற்று. ஆதலின் அவர்கள் எவ்வாறு பிரிந்தனர் என ஜார்ஜ் கண்டிலர்.

மற்றவர்கள் சென்ற பிறகும் நினைவுகளில் மூழ்கியவராய் ஜார்ஜ் தங்கினார். நண்பரென்ற முறையில் அவர் தாம் கண்டவற்றைக் குறிப்பாகவேனும் எம்மாவிடம் சொல்லத்தானே வேண்டும்? அவளிடம் ஓரிரு வினாக்களேனும் கேட்காமலிருக்கலாமா?

"எம்மா! உனக்கும் ஜேனுக்கும் சுருக்கெனத் தைக்கின்ற வகையில் அக் கடைசிச் சொல்லிற் பொதிந்துள்ள வரலாறுதான் யாது?" என்றார் அவர்.

எம்மா பெரிதும் குழம்பினள். உண்மை விளக்கத்தைச் சொல்லத் துணிந்திலள். அவளது ஐயப்பாடு இன்னும் விலகவில்லை யெனினும், அதனை வெளியிற் சொல்ல நாணினள். ஏற்கெனவே ஒருவனிடம் சொன்னதற்கும் வருந்தினள். இறுதியில் "ஒன்றுமில்லை. எங்களுக்குள் ஒரு வேடிக்கை" என்றாள்.

அவளது குழப்பம், தங்களைத் தனியே பிரித்துப் பேசியது ஆகியவற்றைக் கண்ட அவர் அவள் காதல் கொண்டாள் என்றெண்ணினர். எனினும் தமக்குத் தோன்றியதனைச் சொல்வது கடமையென மதித்தார். "எம்மா! அவ்விருவருக்குமுள்ள தொடர்பின் அளவினை நன்கறிவாயா? அவர்களுக்குள் ஏதோ ஒரு தொடர்புள்ளது என அணிமைக்கால நிகழ்ச்சிகள் சிலவற்றால் அறிந்தேன்."

"உங்கள் பேச்சு வேடிக்கையாயுள்ளது. நான் உறுதியாய்ச் சொல்கிறேன். அவர்களுக்குள் எவ்வகைப் பிடிப்பும் இல்லை. நீங்கள் கண்ட புறத்தோற்றமெல்லாம் ஒரு வியத்தகு சூழ்நிலையின் விளைவே. அவள் எப்படியோ! அவரைப் பொறுத்த வரை சிறிதளவு தொடர்புமில்லை யென உறுதி கூறுவேன்."

அவளது பேச்சினில் தென்பட்ட நம்பிக்கை அவரைத் தடுமாறச் செய்தது; நிறைவோ ஊமை யாக்கிற்று. வாய்திறக்க முடியாத அளவு தாம் எரிச்சலுற்றதனை உணர்ந்தவராய், அவர் விரைவிலேயே விடைபெற்றுப் புறப்பட்டார்.

---

31. பழத்தோட்டம்

அகஸ்டாவின் அண்ணனும் அண்ணியும் இப்போதைக்கு வரவில்லையென்பதும் அன்னா கருவுற்றிருக்கிறாள் என்பதும் இப்போது ஊரவர் பேச்சுப் பொருளாயின.

அண்ணனும் அண்ணியும் வரவில்லை யெனினும், தாங்கள் பாக்ஸ் ஹில்லுக்குச் சுற்றுலாப் போவதென அகஸ்டா முடிவு செய்தாள். எம்மா அம்மலையைப் பார்த்தறியாள். அவள் வெஸ்டான் குடும்பத்துடன் ஆரவாரமின்றி ஒருநாள் போய்வரத் திட்டமிட்டாள். இந்நிலையில் ஒருநாள், தாம் அகஸ்டாவையும் அழைத்ததாகவும் அவள் ஒப்புக்கொண்டதாகவும் இரு குழுவினரும் ஒரு குழுவாய் மலைக்குப்போய் வரலாமெனவும் வெஸ்டான் கூறியபோது எம்மா வியப்பும் வருத்தமும் பெற்றாள். "கூட்டமாய்ச் செல்வதிலும் ஒரு தனியின்பம் உண்டு. பார்க்கப் போனால் அவளும் நல்லவள்தான். அவளை விட்டுச் செல்ல முடியுமா?" என்றார் அவர். எம்மா அவர் முன் எதனையும் மறுத்திலள்; தன்னுள் எதனையும் ஏற்றதுமிலள்

எதிர்பாராத வகையில் அகஸ்டாவின் குதிரைகளுள் ஒன்று முடமாயிற்று. அது குணமாவதற்குச் சில கிழமைகள் பிடிக்குமெனத் தோன்றிற்று. "எத்தகு அரிய காலம்! இப்போது பார்த்தா இந்நிலை ஏற்பட வேண்டும்! எரிச்சல் வருகிறது, ஜார்ஜ்" என்றாள் அகஸ்டா.

"டான்வெல்லுக்கு வாருங்கள், குதிரைகளே தேவையில்லை. என் தோட்டம் பழவகைக்குப் பெயர்பெற்றது" என்றார் ஜார்ஜ்.

அவர் யாது நினைத்துக் கூறினாரோ! அத்திட்டத்தை அவள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டாள். பிறரை அழைக்கும் பொறுப்பினைத் தன்னிடமே விடுமாறு வேண்டினாள். அவர் மறுத்துவிட்டார். முடிவில் "ஜேனையும் அவள் பெரியம்மாவையும் மட்டும் நான் அழைக்கிறேன். மற்றவர்களை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றாள் அவள்.

ஜார்ஜ் ஹென்றியை வற்புறுத்து அழைத்தார் அவரும் இணங்கினார். அவர் டான்வெல்லுக்குப் போய் இரண்டாண்டுகளுக்கு மேலிருக்கும். இவ்வாறே அழைக்கப் பெற்றவரனைவரும் தயக்கமின்றி வருவதற்கு உடன்பட்டனர். முடியுமானால் தம் மகனையும் அழைத்துவரலாமா என வினவினார் வெஸ்டன். மகிழ்ச்சியென்றார் ஜார்ஜ். வேறு யாது கூறுவார்! அளியர்!

இதற்கிடையில் குதிரையின் முடமும் நீங்கிற்று. ஆகவே முதல் நாள் டான்வெல்லுக்கும் மறுநாள் பாக்ஸ்ஹில்லுக்கும் செல்வதென முடிவு செய்தனர்.

ஒருநாட் பகலில் ஹென்றி தம் பெட்டிவண்டியிற் சென்று, நலமே டான்வெல்லில் இறங்கினார். வேண்டுமென்றே நடந்து சென்று, களைப்புற்ற அன்னா அவரருகே யமர்ந்து பேச்சுத் துணையாய் விளங்கினாள்.

எம்மா அம்மாளிகையை நெடுங்காலத்துக்கு முன்பு பார்த்தவளாதலின், தந்தை நலமாய் அமர்ந்த

தும், சுற்றிப் பார்க்கப் புறப்பட்டாள். உலவியபின் எல்லாருங் கூடிப் பழத் தோட்டத்துக்குப் புறப்படவே அவளும் சேர்ந்துகொண்டாள். அகஸ்டா தலைமையேற்று நடாத்திச் சென்றாள். வாயோயாமல் பேசினாள். அரைமணி நேரங் கழிந்தது. மகன் வந்துவிட்டானா எனக் காணும் பொருட்டு அன்னா வெளிப் போந்ததாலேயே அகஸ்டாவின் பேச்சுத் தடைபட்டது. ஃபிராங்க் இன்னும் வந்திலன்.

அனைவரும் நிழலில் அமர்ந்தனர். அகஸ்டாவும் ஜேனும் உரையாடலில் மூழ்கினர். எம்மா விரும்பாமலேயே அப்பேச்சு அவள் செவியிற் பட்டது. ஏதோ ஓர் அலுவலையேற்குமாறு அகஸ்டா வற்புறுத்தினாள். ஜேன் மறுத்தாள். நெடுநேரம் இச்சொல்லாடல் நிகழ்ந்தது. ஜேன் சினங்கொண்டவள் போல் பேச்சினை நிறுத்திவிட்டு எழுந்தாள். உலவக் கிளம்பினாள்.

தோட்டத்திற் சிறிது நேரம் உலவிய பிறகு அவர்கள் சிறுசிறு குழுக்களாய்ப் பிரிந்து சென்றனரேனும், ஒன்றன்பின் ஒன்றாகவே குழுக்கள் எலுமிச்சைத் தோப்பினூடே நகர்ந்தன. வழியில் ஹேரியட்டும் ஜார்ஜும் ஏதோ உரையாடியவாறே செல்லக் கண்டாள் எம்மா. அக்காட்சி மகிழ்ச்சியே யளித்தது. முன்னொரு காலமெனில் ஹேரியட் டான்வெல் மாளிகையில் இடம்பெறுவாளோ என்று எம்மா அஞ்சியிருப்பாள். இப்போது அவ்வச்சம் சிறிதுமில்லையே!

அடுத்து அனைவரும் உண்ணும் பொருட்டு மாளிகையினுட் புகுந்தனர். இப்போதும் ஃபிராங்க்

ஹேரியட்டும் ஜார்ஜும் உரையாடிச் செல்லக் கண்டாள்

வந்திலன். உண்டு முடித்தபின், இதுகாறும் பாராத பகுதிகளைப் பார்க்கக் கிளம்பினர். எம்மா தன் தந்தைக்குத் துணையாய் மாளிகையில் தங்கி விட்டாள். அன்று சிறிது நேரமேனும் உலவ வேண்டாவா! அவளுக்கு உடற் பயிற்சியும் பொழுது போக்கும் தேவையல்லவா!

சிறிது நேரங் கழிந்தது. எம்மா வாயிலில் நின்று சுற்றுப் புறத்தை நோக்கினாள். ஜேன் தோட்டத்திலிருந்து தப்பியோடி வருபவளைப்போல் திடீரென விரைவாய்ப் போந்தாள். எம்மாவைக் காணவே போந்தனளாயினும் எதிர்பாராத நிலையிற் கண்டதால் திடுக்கிட்டாள். ஒருவாறு திகைப்படங்கியபின் சொன்னாள்: "சிறு உதவி செய்வீர்களா? என்னை எவரேனும் தேடினால், வீட்டிற்குப் போய்விட்டேன் என்று சொல்லுங்கள். இப்போதே போகிறேன். நெடு நேரம் ஆகிவிட்டது. நான் நேரே வீட்டிற்குப் போகிறேன்."

எம்மா வண்டியையோ, வேலைக்காரனையோ அனுப்புவதாய்க் கூறினாள். அவள் மறுத்துவிட்டாள். போகும்போது, "சிறிது நேரமாவது தனிமையிலிருப்பதுதான் எத்தனை ஆறுதல்!" என்றாள். எம்மா அவள்மீது இரக்கங்கொண்டாள்.

ஜேன் போய்க் கால்மணி நேரங் கழிந்திராது. ஃபிராங்க் அறைக்குள் புகுந்தான். எம்மா அவனை நினைக்கவும் மறந்தாள். ஆயினும் கண்டபோது மகிழ்ந்தாள். அன்று இப்போது அமைதியுறுவாளே!

"உட்காருங்கள் வெப்பந்தணியும்."

"தணிந்தபின் மறுபடியும் வெயிலிற் போக வேண்டும். நீங்களும் புறப்படுவீர்களே!...வழியில் ஒருத்தியைப் பார்த்தேன்! பைத்தியக்காரத்தனம். இந்த வெயிலில்...!"

'சிலர் வெயிலிற் சென்று வரின் எரிச்சலடைவர். அவனும் அத்தகையவன் போலும். நல்லகாலம். நான் அவனைக் காதலிக்க முற்பட்டிலேன். வெயிலிற் சிறிது போய் வந்தால் குணம் மாறுகிற ஒருவரை நான் எப்படி விரும்புவேன்! ஹேரியட்டின் இனிய இயல்பு இக்குறையைப் பெரிதாக மதியாது' என்றெண்ணினுள் எம்மா.

அவன் வீட்டிற்குள் சென்று திரும்பினுன். உண்டு முடித்தனன் போலும். எனினும் அவனது மனநிலை சிறக்கவில்லை. எரிச்சலை யடக்கப் போராடினுன்.

"பாக்ஸ்ஹில்லுக்கு நாங்கள் நாளைக்குச் செல்கிறோம். நீயும் எங்களோடு வா" என்றுர் ஹென்றி. அவன் மறுத்தான்.

மற்றவர் இப்போது திரும்பலாயினர். ஃபிராங்கைக் கண்டதும் சிலர் பெருங்களிப்பினில் மூழ்கினர். மற்றவரோ அமைதியாய் ஏற்றனர். ஆயின் அனைவரும் ஜேன் சென்றதறிந்து துன்பமும் கவலையும் எய்தினர். மறுநாளைக்கான திட்டங்களை வகுத்தபின், எல்லாருமே கிளம்பலாயினர். போகும்போது கடைசியாய் ஃபிராங்க் எம்மாவிடம் சொன்னுன்: "நீ சொன்னுல், இன்று தங்கி, நாளை உங்கள் குழுவிற் சேர்ந்து கொள்வேன்."

அவளது முறுவலே விடையாயிற்று.

32. மலைப் பயணம்

பாக்ஸ்ஹில் பயண ஏற்பாடுகள் வெஸ்டானின் மேற்பார்வையில் செவ்வையாய் முடிந்தன. எம்மாவும் ஹேரியட்டும் முதல் வண்டியிற் சென்றனர். ஜேனும் அவள் பெரியம்மாவும் எல்டானின் வண்டியில் போயினர். அன்னுவும் ஹென்றியும் மூன்றுவதிற் பயணப்பட்டனர். பிற ஆடவர்கள் குதிரைமேற் சென்றனர்.

ஏழு கல் தொலைவும் விரைவில் கழிந்தது. மலைப் பகுதியில் இறங்கியபோது எல்லாருமே அவ்விடச் சிறப்பினைப் பாராட்டினர். அவர்கள் சிறுகுழுக்களாய்ப் பிரிந்தனர். எல்டானும் மனைவியும் ஒருபுறம் உலவினர். ஜேனையும் அவள் பெரியம்மாவையும் ஜார்ஜ் உலவ அழைத்துச் சென்றுர். எம்மாவும் ஹேரியட்டும் ஃபிராங்கின் பொறுப்பினில் விடப்பட்டனர். எல்லாரையும் ஓரிடத்திற் சேர்க்க வெஸ்டான் எவ்வளவோ முயன்றுர்; பலனில்லை.

தொடக்கத்தில் எல்லாமே வெறுப்பூட்டுவனவாய் எம்மா உணர்ந்தாள். ஃபிராங்க் இப்படி ஊமையாகவும் மந்தமாகவும் இருப்பான் என அவள் ஒருபோதும் எதிர்பார்த்தவளல்லள். அவனே மந்தமாக அமர்ந்த போது ஹேரியட்டும் சோர்ந்திருந்ததில் வியப்பில்லை.

மீண்டும் அனைவரும் திரண்டு ஒருங்கமர்ந்த போதுதான் நிலைமை சீர்பட்டது. ஃபிராங்க் ஆர்வத்தோடு உரையாடலானுன். எம்மாவை மகிழ்விப்ப

தும், அவளது பாராட்டினைப் பெறுவதுமே தன் நோக்கம் என்பவனைப்போல் அவன் நடந்து கொண்டான். புகழ்மொழியையும் மனவெழுச்சியை யும் எம்மா விரும்பாதவளல்லள். அவ்விருவரும் பேசிய முறைகண்ட எவரும் அவர்களைக் 'கருத் தொருமித்த காதலர்' எனவே மதித்திருப்பர். ஒருத்தி பாத் நகரத்துக்கும் மற்றொருத்தி அயர்லாந்துக்கும் அப்படியே கடிதம் எழுதியுமிருப்பர். உள்ளத்தி லூறிய இன்பத்தால் மகிழ்ச்சியாயும் தன்னை மறந்தவளாயும் எம்மா பேசியவளல்லள்; தான் எதிர்பார்த்த அளவு இன்பம் கிட்டவில்லையே என்ற ஏக்கத்தில் அவள் போலி மகிழ்ச்சி காட்டினாள்.

"எம்மா! நான் உனக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன். நீதானே என்னை இன்று வரச் சொன்னாய்!"

"ஆமாம். நேற்று நீங்கள் ஓரே எரிச்சலாயிருந்தீர் கள்."

"எரிச்சல் என்று சொல்லாதே. களைப்பு. வெயில் என்னை யடக்கிவிட்டது."

"இன்று அதனினும் கொடிய வெயில்."

"என் உணர்விற்கில்லை. இன்று முற்றிலும் வளமாகவே இருக்கிறேன்."

"காரணம் ஆணைக்குப் படிந்துள்ளீர்கள்."

"ஆமாம், உன் ஆணைக்குத்தானே?"

"நான் எப்போதும் உங்களருகே யிருத்தல் நடவாது. உங்கள் ஆணைக்கே நீங்கள் கட்டுப்பட்டாற் போதும்."

"எவ்வகை நோக்கமுமின்றி என்னை நானே கட்டுப்படுத்தல் இயலாது. நீ பேசினாலும், பேசா விட்டாலும் எனக்கு ஆணையிடுகிறாய். எப்போதும் என்னுடனேயே இருக்கிறாய்."

"நேற்றுப் பிற்பகல் மூன்றுமணி முதல்."

"அப்படி நீ சொல்கிறாய். உன்னை முதன்முத லாய்ப் பெப்ருவரியிலன்றோ பார்த்தேன்!"

"உங்களிடம் எவள் பேசுவாள்" என்ற எம்மா குரலைத் தணித்து, "நம்மைத் தவிர எவரும் பேச வில்லை. மற்றை எழுவர் பொழுது போக்கிற்காக நாம் உளறிக் கொட்டுவதா!" என்றாள்.

அவன் சிறிதும் வெட்கமின்றி உரத்த குரலில் "நாணத்தக்கது எதையும் நான் சொல்லமாட்டேன். மலையிலுள்ளார் அனைவரும் கேட்பார்களாக. உன்னை முதலில் பெப்ருவரியிற் பார்த்தேன்" என்றான். பின் தணிந்த குரலில் "நம் நண்பரனைவரும் வெறும் மந்தம்; அவர்களை எப்படியாவது பேச வைப்பேன்" என்றான். தொடர்ந்து உரத்தகுரலில், "பெரியோர்களே பெருமாட்டிகளே! எம்மாவின் ஆணைப்படி கேட்கி றேன். நீங்கள் இப்போது என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதனைச் சொல்லுங்கள்" என்றான்.

சிலர் நகைத்தனர். ஜார்ஜ் வினவினார்: "உள்ள படியே நாங்கள் எதைப்பற்றி நினைக்கிறோம் என்பதனைக் கேட்க எம்மா விரும்புகிறாளா?"

"சே சே இல்லை யில்லை" என்றாள் எம்மா.

"பெரியோர்களே! பெருமாட்டிகளே! எம்மாவின் ஆணைப்படி சொல்கிறேன். உங்கள் நினைவையறியும் உரிமையை அவள் விட்டுக் கொடுக்கிருள். ஆயின் உங்களில் ஒவ்வொருவரும் நன்கு சிரிக்க வைக்கும் செய்தி ஒன்றினை—உரை நடையோ பாட்டோ, சொந்தமோ இரவலோ—சொல்ல வேண்டும். அல்லது ஓரளவு சிரிக்கவைக்கும் இரு செய்திகளைச் சொல்லவேண்டும். மந்தமானதெனில் மூன்று சொல்லவேண்டும்" என்ருன் ஃபிராங்க்.

"மந்தமானவை மூன்ரு! எனக்குப் பொருத்தந்தான். நான் வாயைத் திறந்தவுடனேயே மந்தமானவை மூன்று வருமே!" என்ருள் ஜேனின் பெரியம்மா.

எம்மா பதிலடி கொடுப்பதற்குப் பின் வாங்க முடியவில்லை: "ஓர் இடையூறு உண்டு, அம்மா! மன்னியுங்கள்... எண்ணிக்கைக் கட்டுப்பாட்டினை நீங்கள் மீறலாகாது. ஒரு நேரத்துக்கு மூன்றுதான்."

எம்மா பணிவாய்ப் பேசியதனுல் ஏமாந்தாளாயினும் அவ்வம்மை அப்பேச்சின் உட்பொருளை விரைவில் உணர்ந்தாள்; சீற்றங் கொண்டிலளேனும், உளம் நொந்தவளாய் நாணினுள்.

இத்திட்டமும் வெற்றியளித்திலது. விரைவிலேயே அகஸ்டா தன் கணவரோடெழுந்து, உலவப் புறப்பட்டாள். அவர்கள் போவதையே பார்த்திருந்த ஃபிராங்க் சொன்னுன்: "ஒருவருக்கொருவர் எத்துணைப் பொருத்தமானவர்! அவர்கள் பாத்நகரில் சில கிழமைகளே பழகினர் என நினைக்கிறேன். சிறிது நேரப் பழக்கத்துக்கு அடிமையாகி ஒரு

மனிதன் தன் வாழ்நாளெல்லாம் எண்ணிப் புலம்புகிருனே!"

இதற்குமுன் அரிதாகவே வாய்திறந்த ஜேன், இப்போது மறுமொழி புகன்ருள்: "இத்தகையவை நிகழத்தான் செய்கின்றன." இருமல் அவளது பேச்சினைத் தடுத்து நிறுத்திற்று.

ஃபிராங்க் அவளிடம் திரும்பி, "யாதோ கூறினுயே!" என்ருன்.

அவள் தொடர்ந்தாள்: "இத்தகைய துன்பச் சூழ்நிலைகள் மிக அருமையாகவே ஆடவர்க்கும் மகளிர்க்கும் வாய்க்கின்றன. அறிவுக்கொவ்வாத் திடீர் உறவுகள் தோன்றலாம். பொதுவாக அவற்றிலிருந்து விடுபடுதற்குப் பின்னுளில் வாய்ப்புக் கிட்டுகிறது. உள்ளத் திண்மையில்லாத கோழைகளே, பொருத்தமற்ற உறவினைத் தொல்லையாகவும் வாழ்நாளெல்லாம் அடிமைத்தளையாகவும் ஆக்கிக் கொள்கிருர்கள்."

அவன் விடை பகர்ந்திலன். வெறித்துப் பார்த்தான்; தலையை யாட்டினுன். தொடர்ந்து ஊக்கத்தோடு பேசலானுன்: "என் அறிவில் எனக்கே நம்பிக்கையில்லை. எப்போதேனும் மணப்பேறுயின், மற்றொருவர்தாம் எனக்காக ஒரு மனைவியைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். எம்மா! நீ தேர்ந்தெடுத்துத் தருவாயா? ஓரிரண்டாண்டுகள் வெளிநாடு சென்று மீள்வேன். உன்னிடம் வந்துதான் கேட்பேன். மறவாதே."

மறதி ஏற்படாதென எம்மா உணர்ந்தாள். ஹேரியட்டை இரண்டாண்டுகளுக்குள் ஆயத்தப் படுத்திவிட முடியாதா!

ஜேன் தன் பெரியம்மாவோடு எழுந்து, அகஸ்டா சென்ற திசையில் நடக்கலானாள். அவர்கள் பின்னே ஜார்ஜும் சென்றார். வெஸ்டானும் அவர் மகனும் எம்மாவும் ஹேரியட்டும்தாம் எஞ்சினர். இளைஞனது களிவெறி அளவின்றிப் பெருகிக், கேட்பார்க்குத் துன்பமாயிற்று. எனவே பணிமக்கள் போந்து, பெட்டிவண்டிகள் ஆயத்தமாயுள்ளதனை யறிவித்தது களிப்பிற்குரிய செய்தியாயிற்று.

வண்டியிலேறக் காத்திருந்தபோது, ஜார்ஜ் எம்மாவின் அருகே போந்தார். சுற்றுமுற்றும் பார்த்து எவரும் அணிமையில் இல்லையென்றறிந்த பிறகு அவர் சொன்னார்: ''நான் கூறுவன உனக்குப் பிடிக்குமோ, என்னவோ! பொறுமையாய்க் கேட்கிறாய். அத்துணிச்சலில் ஒன்றினைச் சொல்வேன். நீ தவறிழைக்கும்போது, சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. ஜேனின் பெரியம்மாவிடம் இரக்கமின்றிப் பேச நீ எவ்வாறு துணிந்தாய்? நான் எதிர்பார்க்கவேயில்லை''

எம்மா நாணங்கொண்டாள். சிரித்து மழுப்ப முயன்றாள்.

''அவள் உணர்ந்து வருந்தினாள். பலரிடமும் அது பற்றியே பேசுகிறாள். அவள் மகளும், மற்றவர்களும் இருக்கையில் அவர்களெதிரே அவளை நீ பகடி செய்திருக்கலாகாது. இவ்வாறு நான் பேசுவது உனக்கும் பிடிக்கவில்லை; எனக்கும் பிடிக்கவில்லை.

எனினும் உண்மையெனப்பட்டதை இயன்றவரை சொல்வேன். உன் நலனுக்காக அறிவுரை வழங்கும் நண்பன் என்ற முறையில் துணிந்து சொல்வேன். என்றேனும் ஒருநாள் நீ என் பெருமையை உணர்வாய் என நம்புகிறேன்.''

அவள் ஏதும் பேசுதற்குள், அவர் கைகொடுத்து அவளை வண்டியிலேற்றினார். அவள் தன் மீதே சினமுற்றவளாய்த் தலைகவிழ்ந்து ஊமையாய் அமர்ந்தாள். சற்றுப் பின்னரே, தான் அவரிடம் விடை பெறவுமில்லையென்பதனை உணர்ந்தாள். சாளரம் வழியே எட்டிப்பார்த்தாள். அதற்குள் அவர் திரும்பிச் சென்றுவிட்டார்.

33. உதவியும் மறுப்பும்

வீடு திரும்பிய பின்னும் பாக்ஸ் ஹில் நிகழ்ச்சியை யெண்ணி எம்மா நொந்தாள். எதிர்காலத் தொண்டு இறந்தகாலக் கொடுமையைப் போக்குமேல், அவள் தன்னாலியன்றவெல்லாம் செய்யக் கருதினாள். மறுநாட் காலையிற் றொடங்கி அடிக்கடி பேட்ஸ் அம்மையின் இல்லத்துக்குச் சென்று, அவர்களோடு உறவாடுவதென முடிவு செய்தாள்.

வேறெதுவும் குறுக்கிடுமுன், மறுநாள் அதிகாலையிலேயே அவள் புறப்பட்டாள். வழியில் ஒருகால் ஜார்ஜைக் காணலாமென எதிர்பார்த்தாள். அவர் தென்பட்டிலர். "மகளிர் அனைவரும் வீட்டில்தாம் உள்ளனர்" என்று கேள்வியுற்றதும் எம்மா மகிழ்ச்சியுடன் படியேறினாள். உள்ளே ஏதோ சலசலப்பு எழுந்தது. பெரியம்மாவும் ஜேனும் பக்கத்தறைக்குள் பாய்ந்து செல்லக் கண்டாள் எம்மா. பெரியம்மா, "நீ படுத்த படுக்கையாய்க் கிடக்கிறாய் என்று சொல்லி விடுகிறேன். நீயும் உடல்நலமின்றித் தானே இருக்கிறாய்!" எனச் சொல்லியது தெளிவாய்க் கேட்டது.

பாட்டி அளியள்! தன்னைச் சுற்றி நிகழ்பவைகளைச் சிறிதும் உணராதவளாய், வழக்கமான பணிவோடும் அன்போடும் எம்மாவை வரவேற்றாள். ஒருகால் பெரியம்மாவும் தன் கண்ணிற்படாமல் ஒளிந்து கொள்வாளோ என்றஞ்சினாள், எம்மா. ஆயின் விரைவிலேயே அவ்வம்மை 'மகிழ்ச்சி'யாயும்

'கடமைப்பட்டவளா'யும் வந்து சேர்ந்தாள். அவள் முன்போல மிகுதியாய்ப் பேசவில்லை என எம்மாவின் மனச்சான்று உணர்த்திற்று. ஜேனைப் பற்றி அன்போடு உசாவினால், பழையநிலை திரும்பிவிடுமெனக் கருதினாள் எம்மா. அது நல்ல பலனை உடனே தந்தது.

"அருமை எம்மா! உனக்குத்தான் எத்தனையன்பு! செய்தியைக் கேள்விப்பட்டு எங்களுக்கு ஆறுதல் கூறவே வந்திருப்பாய். (கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டு) அவளைப் பிரிவது எங்களுக்கெல்லாம் அரிய செயல்தான். அதிலும் இப்போது அவளுக்குக் கடுந்தலைவலி. காலையிலிருந்து எழுதிக்கொண்டேயிருக்கிறாள். எத்தனை நீண்ட கடிதங்கள்! கர்னலுக்கும்—அவர் மகளுக்கும் எழுதாமலிருக்க முடியுமா!..."

அவ்வம்மை பேசிக்கொண்டேயிருந்தாள். எம்மா உன்னிப்பாய்க் கேட்கலானாள். அவளுள்ளத்தே ஜேன்மீது இரக்கம் பெருகிற்று. அவளது துன்பநிலை கேட்டதும், பழைய ஐயங்களெல்லாம் விலகின; இரக்கத்தையன்றி வேறேதும் தோன்றவில்லை.

"ஜேன் எங்கே போகிறாள்?" என வினவினாள் எம்மா.

"யாரோ ஸ்மால்ரிட்ஜ் அம்மையாம். மிகவும் நல்லவள். உயர்ந்த குடும்பம்........"

"அகஸ்டாவின் உதவியெனவே நினைக்கிறேன்."

"ஆமாம் அவள் ஏற்பாடுதான். எத்தனை நல்லவள்! சலிப்பேயில்லாத மிகச் சிறந்த தோழி!...நாங்கள் அங்குப் போயிருந்தபோதுதான் எல்டான் திரும்பி வந்தார். ஃபிராங்கை ரிச்மாண்டுக்கு அழைத்துச் செல்ல வண்டியொன்று ரண்டாலுக்குச் செல்வதாய்த் தெரிவித்தார்."

சர்ச்சிலின் மனைவியது உடல்நலம் வழக்கம் போலவே இருந்தது. அவர் தம் மருமகனுக்குச் சில வரிகள் எழுதியிருந்தார். ஃபிராங்க் மறுநாட் காலையில் வந்து சேர வேண்டுமென்பதே அவரது விருப்பம். அக்கடிதப்படி ஃபிராங்க் புறப்பட்டான்.

இச்செய்திகளையெல்லாம் கேட்டபோது, எம்மாவுக்குத் திகைப்போ ஆர்வமோ எழுந்திலது. சர்ச்சிலின் மனைவிக்கும் ஜேனுக்கும் உலகியல் நிலையிலுள்ள வேறுபாடுதான் அவளைச் சிந்திக்கச் செய்தது. ஒருத்தி எல்லாம் பெற்றவள்! மற்றொருத்தி ஏதும் பெறாதவள்! எம்மாவின் சிந்தனையைப் 'பெரியம்மா'வின் சொற்கள் கலைத்தன.

"'பியானோ'வைப் பற்றித்தானே நினைக்கிறாய்! கர்னல் திரும்பி வரும்வரை, அதற்கு இங்கே இடங் கொடுங்கள் என்று ஜேன் வேண்டினாள். இன்று வரை அது கர்னலின் பரிசா, அவர்மகள் பரிசா என்பதனை அவளே அறியாள்."

இப்போதுதான் எம்மா 'பியானோ'வைப்பற்றி நினைக்கவேண்டியவளானாள். முன்னாளில் அவள் கொண்ட தவறான கற்பனைகளும், முறையற்ற ஐயங்களும் அவளது நினைவிலெழுந்தன. வினைவாய்த்

தான் நெடுநேரம் தங்கிவிட்டதாய்க் கருதிய எம்மா விடை பெற்றுப் புறப்பட்டாள்.

எம்மா நடந்து தன் மாளிகையை யடைந்த போது, உள்ளே ஜார்ஜும் ஹேரியட்டும் தன் தந்தையோடு உரையாடியிருத்தலைக் கண்டாள். அவளைக் கண்ணுற்றதும் ஜார்ஜ் எழுந்தார்: "உன்னைப் பார்க்காமல் போக முடியாதென நினைத்தேன். நேரமில்லை. லண்டனுக்குப் போகிறேன். தம்பி வீட்டிற் சில நாட்கள் தங்குவேன். ஏதாவது கொண்டு போகவோ, சொல்லவோ வேண்டுமா?" என்றார்.

"ஏதுமில்லை. ஏது திடீரென இப்படித் திட்டமிட்டீர்கள்?"

"ஆமாம் ... வந்து...ஏற்கெனவே சில காலமாகவே நினைத்தேன்."

அவர் அவராகவே தோற்றமளித்திலர். தன்னை மன்னித்திலர் எனவும் எம்மா உணர்ந்தாள். அவர் போகக் கருதியவராய் எழுந்தார். போகாமலே நின்றார். ஹென்றி தம் மகளிடம் வினவினார்: "என் பழைய தோழியும் அவள் மகளும் எப்படியிருக்கிறார்கள்?...ஜார்ஜ்!...அருமை எம்மா, பேட்ஸ் அம்மையின் வீட்டிற்குப் போயிருந்தாள். அவர்களிடம் அவளுக்கு எப்போதுமே அக்கறை!"

தனக்குத் தகுதியற்ற இப்புகழுரையால் எம்மா நாணினாள். ஜார்ஜை நோக்கினாள். அக்கணமே அவர் அவளை உயர்வாய் மதித்தார் என்பது விளங்கிற்று. அவர் மதிப்பினை யுமிழும் கண்களால் அவளைப் பார்த்தார். அவளது கையைப்பற்றி அழுத்தி

ளுர்; உயர்த்தித் தம் வாயருகே கொண்டுபோகவுஞ் செய்தார். என்ன நினைத்தாரோ! திடீரென அக் கையை விட்டுவிட்டார். சற்று நேரத்திற் புறப்பட்டுச் சென்ருர்.

அவரது முகத்தோற்றம்—அரைகுறையாய்ச் செய்து முடித்த அன்புச் செயல்—இவையெல்லாம் பொய்யா? இவையெல்லாம் அவள் மீண்டும் அவரது நல்லெண்ணத்தைப் பெற்றனள் என்பதனை உறுதிப் படுத்தவில்லையா! நேரமில்லையென்றவர் அரைமணி நேரந் தங்கினுரே! அவள் சற்று முன்னுகத் திரும்பாமற் போனுளே!

மறுநாட்காலையில் ரிச்மாண்டினின்று போந்த செய்தி மற்றெல்லாவற்றையும் பின்னணிக்குத் தள்ளி விட்டது. ஃபிராங்கின் அத்தை காலமாளுள்! அவன் அங்குச் சென்றபின் முப்பத்தாறுமணி நேரங் கூட அவள் உயிர் வாழ்ந்திலள். புலவர் **கோல்டுஸ்மித்** கூறினுர்: “ அழகிய பெண் ஏதேனும் முட்டாள் தனமாகச் செய்துவிடில் சாவதுதான் அவள் செய்யத் தக்கது; அவளே பலரது வெறுப்பிற்கிரையாவாளாயின், பழிதுடைக்கும் மருந்தாய்ச் சாவுதான் அமையும்.” இருபத்தைந்தாண்டுகளாகப் பலராலும் வெறுக்கப்பட்ட திருவாட்டி சர்ச்சில் இப்போது இரக்கத்துடன் பேசப்பட்டாள்!

இது ஃபிராங்கின் நிலையை எவ்வாறு மாற்றுமென்பதுதான் எம்மாவுக்கேற்பட்ட முதல் நினைவு. அவனுக்கு நன்மையும் விடுதலையும் கிட்டுமா! நன்மையாகவே யமையுமென அவள் கருதினுள். இனி ஹேரி

யட்டின் உறவுக்குத் தடையிராது. மனைவியை யிழந்த சர்ச்சிலுக்கு எவரும் அஞ்சமாட்டார்.

ஹேரியட் இச்சூழ்நிலையில் நன்முறையிலேயே நடந்துகொண்டாள். அவளது நம்பிக்கை பெருகிற்றென உணர்ந்தாளோ என்னவோ! ஏதும் வெளிக் காட்டினுளல்லள்.

ஃபிராங்கிடமிருந்து அவ்வப்போது நிலைமையை எடுத்துக் கூறும் சிறுசிறு கடிதங்கள் ரண்டால் மாளிகைக்குப் போந்தன. இறுதிச் சடங்கிற்குப் பின், மாமாவும் அவனும் யார்க்ஷையருக்குச் செல்வராம். ஆகவே இப்போதைக்கு ஹேரியட்டிற்காக ஏதும் செய்வதியலாது என உணர்ந்தாள் எம்மா.

விரைவிலேயே பிரிந்து செல்லவிருந்த ஜேனைத் தான் மிகுதியும் பேணுதல் வேண்டுமெனக் கருதினுள் எம்மா; அவளுக்கு உதவவும் தன் பாராட்டினையும் ஈடுபாட்டினையும் நிறுவிக்காட்டவும் விரும்பினுள். அவளை ஹார்ட்ஃபீல்டில் ஒருநாள் தங்குமாறு அழைப்பதென முடிவு செய்தாள். அவ்வாறே ஒரு கடிதம் அனுப்பினுள். அழைப்பினை மறுப்பதாய் வாய்ச்சொல்தான் வந்தது. “எழுதுமளவுக்குக்கூட ஜேன் உடல் நலமின்றி யிருக்கிருள்.”

அன்று, காலையிலேயே, மருத்துவர் பெர்ரி ஹார்ட்ஃபீல்டுக்குப் போந்தார். ‘ஜேனுக்குக் கடுமையான தலைவலி, ஓரளவு சுரமும் உண்டு. குறித்த காலத்தில் அவள் ஸ்மால்ரிட்ஜ் அம்மை மாளிகைக்குப் புறப்பட முடியுமா என்பதே ஐயப்பாடுதான்’— இவைதாம் அவர் சொல்லிய செய்திகளின் சுருக்கம். எம்மா உன்னிப்பாய்க் கேட்டாள். ஜேனுக்காக

மேலும் மேலும் உருகினாள். எவ்வகையில் அவளுக்கு உதவுவதென ஆராய்ந்தாள்.

மறுநாட் காலையில், மிக உருக்கமாக ஒரு கடிதம் எழுதியனுப்பினாள். ஜேன் குறிப்பிடுகிற எந்த நேரத்திலும் பெட்டி வண்டியோடு போந்து அவளை உலவ அழைத்துச் செல்வதாய்த் தெரிவித்தாள். இதற்கு விடையாய் ஒரு சிறு குறிப்பே வந்தது: "நன்றி. வணக்கம். இப்போது உலவும் நிலையில் இல்லை."

இவ்விடையைப் பெற்றும் தயங்காதவளாய், எம்மா தன் வண்டியை வரவழைத்துப் பேட்ஸ் அம்மையின் இல்லத்துக்குச் சென்றாள். எப்படியேனும் ஜேனை வற்புறுத்தி வெளியில் அழைத்துச் செல்லலாமென நம்பினாள். பெரியம்மாதான் வண்டிக் கதவருகிலேயே நன்றியே யுருவாய் வந்து நின்று பேசினாள். ஜேன் சிறிதும் இடங்கொடுத்திலளாம். வெளியிற் போகும் பேச்செடுத்தாலே அவளது நோய் மிகுகிறதாம். எம்மா தானே நேரிற் சென்று வற்புறுத்த விரும்பினாள். இக்கருத்தினைக் கேட்டவுடன், பெரியம்மா சொல்லிவிட்டாள்: "எக்காரணங் கொண்டும் உன்னை உள்ளே விடுவதில்லை என அவளுக்கு உறுதியளித்திருக்கிறேன். உண்மையில் ஜேன் யாரையும் பார்ப்பதேயில்லை. அகஸ்டா ஒருத்தி-அவளைத் தடுக்க முடியாது..."

எம்மா தன்னை அகஸ்டாக்களோடு சேர்த்துக் கொள்ள விரும்பாதவளாய் வேறொரு செய்தியைப் பேசலானாள்; ஜேனின் உணவு பற்றி உசாவினாள்

பெரியம்மா கவலையேயுருவாய்த் தன் மகள் எதனையும் தொடுவதில்லையெனப் பலபட எடுத்துரைத்தாள்.

வீடு திரும்பியதும் முதல் வேலையாய் எம்மா மிக உயர்ந்த தரமுடைய 'ஏழிலைக் கிழங்குமா'வை அனுப்பி வைத்தாள். 'பெரியம்மா'வுக்கு அன்புக் கடிதமொன்றும் விரைந்தது. அரைமணி நேரத்தில் மாவு 'ஆயிரம் நன்றி'யுடன் திரும்பி வந்தது. "ஜேன் திருப்பியனுப்பினாலொழிய ஆறுதலடையமாட்டாள். அவள் உட்கொள்ளாதவற்றுள் இதுவும் ஒன்று."

அன்றுதான் ஹைபரிக்குச் சற்றுத் தொலைவில் ஒரு புல்வெளியில் ஜேன் உலவினாள் என்பது பின்னரே எம்மாவுக்குத் தெரிய வந்தது. நிகழ்ந்த வற்றையெல்லாம் ஒருங்கே நினைத்துப்பார்க்கையில், ஜேன் தன்னிடமிருந்து எவ்வகை யன்பினையும் ஏற்க மறுத்தலே நோக்கமாய்க் கொண்டதனை எம்மா தெளிவாய் அறிந்தாள். அவள் வருந்தினாள். பெரிதும் வருந்தினாள். தன் நோக்கம் நல்லதென்று ஆறுதல் கொண்டாள். ஜார்ஜ் மட்டும் தன் முயற்சிகளை அறிவராயின்—தன் இதயத்தைக் கண்டிருப்பராயின்—தன்னைக் குறைகூற எதனையும் கண்டிரார் என அவள் தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்.

34. உண்மை வெளிப்படல்

பத்து நாட்கள் கழிந்தன. 'வெஸ்டான் அவளோடு பேச விரும்புகிறார்; ஐந்து நிமிடங்கூடத் தங்க முடியாதென்கிறார்' என்று கேள்வியுற்றதும் எம்மா மாடியினின்று இறங்கினாள். அவளைக் கண்டவுடனேயே அவர் பேசத் தொடங்கினார். "அன்னா உன்னை உடனே பார்க்க வேண்டுமாம் இப்போதே வருகிறாயா!" என்றார். அவளுக்கு உடல்நலக் குறையேதுமில்லை யென்றார். அழைப்பின் காரணத்தை வெளியிட மறுத்தார். "உரிய காலத்தில் அறிவாய்" என்றார். அவர்கள் உடனேயே கிளம்பினர். வாயிலைத் தாண்டியபோது, ஒருகால் லண்டனில் அக்கா வீட்டில் ஏதேனும் நிகழ்ந்ததோ என வினவினாள், அவள். "செய்தி அவர்களுள் யாரைப்பற்றியதுமன்று" என்றார் அவர்.

அவர்கள் விரைவாய் நடந்து ரண்டால் மாளிகையை அடைந்தனர். அவளை அன்னாவின் முன் நிறுத்தி, "அழைத்து வந்துள்ளேன். சொன்ன சொல்லைக் காப்பாற்றிவிட்டேன். சிறிதேனும் காரணத்தை யறியாள்" என்றபின் அவர் அறையின் நீங்கினார்.

அன்னா நோய்வாய்ப்பட்டவள் போலவும், பெரிதுங் குழப்பமுற்றவளாயுங் காட்சியளித்தாள். எம்மா பதற்றத்தோடு வினவினாள்: "யாது செய்தி? ஏதோ துன்ப நிகழ்ச்சியா! உடனே சொல்."

அன்னா நடுங்குங் குரலில் "அருமை எம்மா! உன்னால் உய்த்துணர முடியவில்லையா?" என்றாள்.

"ஏதோ ஃபிராங்கைப் பற்றியது என்று மட்டுமே உணர்கிறேன்."

"சரியாகச் சொன்னாய். உடனேயே சொல்லிவிடுகிறேன். அவன் இன்று காலையில் ஒரு வியத்தகு அலுவல் காரணமாய் இங்குப் போந்தான். அவன் தன் காதலைத் தந்தையிடம் கூறவே போந்தான்."

அவள் மூச்சு வாங்க நிறுத்தினாள். எம்மா முதலில் தன்னையும் பின் ஹேரியட்டையும் நினைத்தாள்.

"காதலினும் ஒருபடிமேல். திருமணமே உறுதியாகி விட்டதாம். நீதான் யாது சொல்வாய்! மற்றவர்கள் ஏது சொல்வர்! ஃபிராங்கிற்கும் ஜேனுக்கும் திருமணம் ஏற்கெனவே உறுதி செய்யப்பெற்றுளதாம். நெடுங்காலத்துக்கு முன்பே இது நிகழ்ந்ததாம்."

எம்மாகூட வியப்பால் துள்ளினாள். திடுக்கிட்டவளாய் இரைந்தாள்: "ஜேனா! அட கடவுளே! பகடி பேசுகிறாயா! உண்மையாகவா?"

அன்னா அவளை நிமிர்ந்து பாராமலேயே பேசினாள்: "நீ வியப்புறுதல் முறையே. ஆயினும் உண்மை அதுதான். கழிந்த அக்டோபரிலேயே வேமத்தில் அவர்கள் உறுதி செய்துவிட்டார்கள். பிறர் அறியாமல் இத்தனை நாள் மறைத்து வைத்தார்கள். கர்னல் குடும்பமோ எங்கள் குடும்பமோ

எவரிடமும் சொல்லாமல் தங்களுக்குள்ளேயே வைத்துக்கொண்டனர்.''

எம்மா அவள் பேச்சினை அரிதாகவே கேட்டாள். அவள் உள்ளம் இரு கருத்துக்களில் பிரிந்து நின்றது. அவள் அவனிடம் ஜேனைப் பற்றி உரையாடிய வைகளை ஒரு புறமும் ஹேரியட்டை மற்றொரு புறமும் நினைத்துக் கொண்டாள்.

"இச் செய்தியால் எனக்குப் பெருங்கவலை. அவன் அப்பாவுக்கும் அப்படியே. அவன் நடத்தை யில் ஒருபகுதியை நாங்கள் மன்னிக்கவே முடியாது.''

எம்மா ஒரு கணம் சிந்தித்தாள். பின் விடை யளித்தாள்: "நீ சொல்வது விளங்காதது போன்று நான் பாசாங்கு செய்யமாட்டேன். என்னால் இயன்ற மட்டும் உங்களுக்கு ஆறுதல் வழங்குவேன். நீங்கள் அஞ்சுகிற அளவு அவர் நடத்தையால் எங்களிடையே ஆழ்ந்த அன்பு ஏற்பட்டு விடவில்லை.''

அன்னா நம்பமுடியாதவளாய் நிமிர்ந்துபார்த்தாள். எம்மா மேலும் சொன்னாள்: "தொடக்க காலத்தில் நான் அவரை விரும்பினேன். காதலிக்கவும் தொடங்கியிருப்பேன். எப்படி அந்நிலை மாறியது என்பதுதான் வியப்பிற்குரியது. என்னை நம்பு. இது தான் உண்மை.''

அன்னா இன்பக் கண்ணீர் பெருக்கியவாறே தன் தோழியைத் தழுவிக் கொண்டாள். "என்னைப் போலவே அவரும் ஆறுதலடைவார். இவ்வொரு செய்திதான் எங்களைக் கவலையில் ஆழ்த்தியது. உண்மையில் நீயும் அவனும் நெருங்கிப் பழகவேண்டு மென்பதுதான் எங்கள் விருப்பம். பழகினீர்கள்

என்றே நம்பினோம். எங்களுக்கு எத்தகைய அதிர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும் என்று பார்த்துக் கொள்.''

"முழுக்குற்றமும் உங்கள் மகனுடையதே. அவர் எப்படி ஒளித்து வைக்கலாம்? ஒருத்திக்கு உரியவராய் இருந்து கொண்டு, மற்றொருத்தியினை மகிழ்விக்க எவ்வாறு பாடுபடலாம்?''

"அவன் சொன்னதைப் பார்த்தால்...நான் வேறாகவன்றோ நினைத்தேன்.''

"அவள் இந்நடத்தையை எவ்வாறு பொறுப்பாள்! அவள் முகத்தெதிரேயே அவர் மற்றொருத்தியிடம் கருத்துச் செலுத்துவதனைக் கண்டும், வருந்தாமல் இருந்திருப்பாளோ!''

"அவர்களுக்குள் மனத்தாங்கல் ஏற்படத்தான் செய்தது. அவன் விளக்கமாய்ச் சொல்லுதற்கு நேரமில்லை. கால்மணி நேரந்தான் இங்கே தங்கினான். அம்மனத்தாங்கலின் விளைவாகவே இத் திடீர் அறிவிப்பு ஏற்பட்டது.''

"ஜேன் செவிலியாகப் பொறுப்பேற்க முற்பட் டாளே! அவர் பாராமுகமாய் இருந்தது கொடுமை யன்றோ?''

"அச்செய்தியை அவன் அறிந்திலன். அவனுக்கு அறிவிக்காமல் அவள் தானாகவே மேற்கொண்ட முடிவு, அது. எப்படியோ அதனை அறிந்தவுடன் தான், அவன் வெளிப்படுத்த முன்வந்தான்.''

எம்மா இப்போது கூர்ந்து கேட்கலானாள்.

"விரைவிலேயே கடிதம் எழுதுவதாய்ச் சொல் லிச் சென்றான். அக்கடிதம் வரும்வரை காத்திருப்

போம். விளக்கம் பெறுதல் கூடும்'' என்ருள் அன்ன.

"சர்ச்சில் இதனை எவ்வாறு ஏற்ருர்?''

"அவர் மருமகன் பக்கம்தான். சிறிதேனும் தயங்காமல் ஒப்புதல் அளித்தார்.''

ஹேரியட்டாக இருப்பினும் இப்படித்தானே ஏற்றுக்கொண்டிருப்பார் என நினைத்தாள் எம்மா. வெளிப்படையாய் "என்ன இருந்தாலும் இப்படி மறைத்துவைத்தல் கூடாது. ஒருவரிடம் சொல்வதனை மற்றவர் அறியார் என்றெண்ணி ஏதேதோ நாம் சொல்லிவிடுகிருேமே!'' என்ருள்.

"அவ்வகையில் எனக்குக் கவலையில்லை. இருவரும் அறியலாகாத எதனையும் நான் அவர்களுள் யாரிடமும் சொல்லவில்லை.''

"நீ கெட்டிக்காரி. என்னிடம்மட்டுமே சொன்னய். அவனை நம் நண்பருள் ஒருவர் காதலிப்பதாய்க் கற்பனை செய்தாயே!''

அந்நேரத்தில் வெஸ்டான் வந்து கொண்டிருந்தலைச் சாளரம் வழியே அன்ன கண்டாள். அவரை உள்ளே வருமாறு அழைத்தாள். அவர் வாயிலில் நுழைந்தபோதே எம்மா எதிர்கொண்டு புன்முறுவலோடு வரவேற்ருள்: "நல்ல வேடிக்கை செய்தீர்கள். என் அறிவை எடைபோட விரும்பினீர்களோ? நான் நடுங்கி விட்டேன். வருத்தத்திற் குரியதாகவன்றி, வாழ்த்துக்குரிய செய்தியாகவே ஆகிவிட்டது. என் வாழ்த்துக்கள். இந்நாட்டிலேயே மிகச் சிறந்த

அழகியும், திறமைசாலியுமான மருமகளைப் பெறவிருக்கிறீர்கள்'' என்ருள்.

அவர்தம் மனைவியைப் பார்த்தார். எல்லாம் நல்ல படி முடிந்தன எனத் தேறினர். அதனல் அவர் பெற்ற மகிழ்ச்சி உடனேயே வெளிப்பட்டது. நெடுநேரம் திரும்பவும் இச் செய்திகளையே பேசிய பின், எம்மா வெஸ்டானின் துணையோடு வீடு திரும்பினள்.

35. தன்னை யுணர்ந்தாள்!

அளியள் ஹேரியட்! எம்மாவின் தவருன கருத்துக்களுக்கும் புகழுரைக்கும் இரண்டாந்தடவையாய் ஏமாளியாகி விட்டாளே! ஜார்ஜ் முன்னுணர்ந்தவர் போற்கூறினுரே! "எம்மா! நீ ஹேரியட்டுக்கு உண்மைத் தோழியில்லை" என்ருரே! இம்முறை எம்மா முன்போற் குற்றப் பொறுப்புடையளல்லள் என்பது உண்மையே. அவள் சிறு குறிப்புக்கூட வழங்குவதற்கு முன்னுலேயே ஹேரியட் ஃபிராங்கின் புகழைப் பாடத் தொடங்கிவிட்டாள். ஆயினும் எம்மா தான் அடக்கியிருக்க வேண்டியதனை வளர விட்டாளே! அது குற்றந்தானே!

எம்மா தன்மீதே சீற்றமுற்ருள். இப்போதைக்கு ஜேனைக் குறித்து இரக்கப்படுதல் வேண்டா. ஜேனின் தொல்லைகளுக்கும் நலக்கேட்டிற்கும் காதலே காரணம். இப்போது அவை தீர்ந்திருக்கும். தன் உதவிகளையெல்லாம் ஜேன் ஒதுக்கியதற்கான காரணத்தையும் எம்மா அறிந்தாள். பொருமையே காரணம். ஜேனின் கண்களில் அவள் ஓர் எதிரி. ஆயின் வேறெவர் மீதும் இரக்கப் படுதலைவிட ஹேரியட் மீதே முழு இரக்கங் காட்டவேண்டும். ஃபிராங்கின் செய்தியை வெளியிடலாகாதென வெஸ்டான் இறுதியில் ஒரு தடை விதித்தார். எம்மாவும் உறுதியளித்தாள். ஹேரியட்டிடம் சொல்வித்தானே யாக வேண்டும்! அஃது அவள் தலையாய கடமையன்ருே!

அன்று தன்னிடம் செய்தியைக் கூறியபோது எத்துணை வருத்தமும் நாணமும் அடைந்தாளோ அத்துணை தானும் இப்போது ஹேரியட்டிடம் தெரிவிக்கும்போது அடைதல் நேருமே! ஹேரியட்டின் குரலையுங் காலடியோசையையும் கேட்டு எம்மாவின் இதயத்துடிப்பே நின்றுவிடுவது போன்றுயிற்று.

ஹேரியட் நுழையும் போதே ஆர்வத்தோடு பேசினுள்: "எம்மா! இதைப்போன்ற வியத்தகு செய்தியை எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா?"

"எச்செய்தியைச் சொல்கிருய்?"

"ஜேனைப் பற்றியதுதான்...அட! ஒப்புக்கொள்ளத் தயங்காதீர்கள். வெஸ்டானே என்னிடம் கூறினுர்."

"வெஸ்டான் யாது கூறினுர்?" என்ருள் எம்மா, —இன்னும் குழப்பம் தீராதவளாய்.

"எல்லாவற்றையும் கூறினுர். ஜேனும் ஃபிராங்கும் மணக்கப் போகின்றனர். ஏற்கெனவே நெடுங்காலமாய் இத் திருமணம் உறுதி செய்யப் பெற்றிருந்தது. என்ன விந்தை!"

உள்ளபடியே விந்தைதான். ஹேரியட்டின் போக்கு மிகப் பெரிய விந்தையே. எம்மா புரிந்து கொள்ள முடியாதவளானுள்.

"அவர் அவளைக் காதலித்தார் என நினைத்திருப்பீர்களா? ஒருகால் நீங்கள் நினைத்திருப்பீர்கள். (நாணத்தோடு) நீங்கள் எல்லாரது உள்ளத்தையும் கண்டு கொள்வீர்களே!"

"ஆணையிட்டுச் சொல்கிறேன். அத்தகைய திறமையேதும் எனக்கு உண்டா எனும் ஐயம் பிறக்கிறது. உன் உணர்வுகளை அவர் பால் திருப்புவதற்கு மறைமுகமாக வேனும் தூண்டிய நான், அதே நேரத்தில் அவர் மற்றொருத்தியிடம் அன்பு செலுத்துவார் என நினைத்திருப்பேன் என எப்படித் துணிந்து நம்புகிறாய்? அப்படி நினைத்தேனாயின் ஏற்கெனவே உன்னை எச்சரித்திருப்பேனே!"

"என்னையா!" என்றாள் ஹேரியட் வியப்புடன். அவள் முகஞ் சிவந்தது. தொடர்ந்து சொன்னாள்: "என்னை ஏன் எச்சரிக்க வேண்டும்? ஃபிராங்கைப் பற்றி எனக்கென்ன கவலை?"

"நீ இவ்வாறு திண்ணமாய்ப் பேசுவது கேட்டு மகிழ்கிறேன். ஆயின் நீ அவரைப் பற்றிக் கவலைப் பட்ட காலமே யில்லையென மறுப்பாயா?"

"அவரையா! இல்லவே யில்லை. எம்மா! நீங்கள் கூடவா என்னைத் தவறாகக் கருதுகிறீர்கள்?" என்ற ஹேரியட் துன்புற்றவளாய் வேறுபுறம் முகத்தைத் திருப்பினாள்.

"அட கடவுளே! யாது சொல்கிறாய்? தவறாகக் கருதுகிறேனா? அவ்வாறாயின்..."

"நீங்கள் தவறாகக் கருதுவீர்களென நான் நினைத்ததுமிலேன். அவர் பெயரை வெளியிடுவதில்லையென முடிவுகட்டினோம். அவர் மற்றவர்களினும் எவ்வளவு சிறந்தவர் என்பதைக் கருதுங்கால் நான் வேறெவரையும் குறித்தேன் என்பதற்கே இடமிராதே. அவரோடு ஒப்பிடின், ஃபிராங்க்

ஏறெடுத்துப் பார்ப்பதற்கும் தகுதியற்றவர். 'இதைவிட விந்தையானவை நிகழ்ந்துள்ளன' என்று நீங்கள் தாமே சொன்னீர்கள்? அவரோடு நன்கு பழகிய நீங்களே அப்படிச் சொல்லியிராவிடில் இது நடக்கக் கூடியதென நான் நம்பியிருக்கவே மாட்டேன்."

"மேலும் தவறுநிகழ இடமில்லாதவாறு, இப் போதாவது ஒருவரை யொருவர் புரிந்து கொள் வோம். நீ ஜார்ஜைப் பற்றித் தானே சொல்கிறாய்?"

"ஆமாம். வேறெவரைப்பற்றியும் எப்போதும் கருதியிருக்க மாட்டேன். நீங்களும் அறிவீர்களென நினைத்தேன். அவரைப் பற்றி நாம் பேசியபோதே, இது மிகத் தெளிவாய்ப் புலப்பட்டிருக்குமே!"

எம்மா தன்னை யடக்கிக் கொண்டு "இல்லையே! அப்போது நீ பேசியதெல்லாம் வேறொருவரைக் குறிப்பதாகவே எனக்குப் பட்டது. அவர் உனக்கு ஆற்றிய உதவியைக் கருதுங்கால், உன் அன்பு இயற்கையானதே என்றேன்."

"இப்போது விளங்குகிறது. நீங்கள் அவ்வாறு கூறியபோது நான் முற்றிலும் வேறுபட்டதொன் றினைக் கருதினேன். நாடோடிகளையோ ஃபிராங் கையோ நான் நினைத்திலேன். எல்டான் எழ முற்படாதபோது, ஜார்ஜ் என்னை நடனமாட அழைத்தாரே! அவ்வரிய சூழ்நிலையையே எண்ணி னேன்."

எம்மா தயக்கத்தோடு வினவினாள்: "ஜார்ஜா உன்னைக் காதலிக்கிறாரெனக் கருதுகிறாயா?"

ஹேரியட் நாணத்தோடேயாயினும் உறுதியாய்ச் சொன்னாள்: "ஆமாம். உறுதியாக."

எம்மாவின் கண்கள் நிலத்தை நோக்கின. சில நிமிடங்கள் அவள் சிந்தனையிலீடுபட்டாள். ஹேரியட் ஃபிராங்கைக் காதலித்தாள் என்பதைவிட, ஜார்ஜைக் காதலித்தாள் என்பது ஏன் கொடியதாய்த் தோன்றுகிறது? அவரும் காதலிக்கிறாரென அவள் நம்புவதால் அக்கொடுமை ஏன் மிகுதிப்படுகிறது? அப்போதுதான் உண்மை எம்மாவின் உள்ளத்திற் கணைபோல் தைத்தது. ஜார்ஜ் எம்மாவைத் தவிர வேறெவளையும் மணத்தலாகாது!

அச் சில நிமிடங்களில், எம்மா தன் நடத்தையையும் உள்ளத்தையும் நன்கு கண்டாள். முன் எப்போதும் காணாத அளவு தெளிவாய்க் கண்டாள். அவள் ஹேரியட்டிடம் எத்துணைத் தகாத முறையில் நடந்துகொண்டாள்! இத்துணைக் குறைபாடுகளுக்கிடையிலும் அவளது தன்மதிப்புக் குறைந்திலது; அவள் தன் தோழிக்குச் செய்ய வேண்டிய கடமையையும் மறந்திலள். ஜார்ஜ் தன்னைக் காதலிப்பதாய் நம்பிய ஒரு பெண்மீது இரக்கப்பட வேண்டிய தேவையில்லைதான். இப்போது விறைப்பாக நடப்பதன் மூலம் அவளைத் துன்பத்திற்காளாக்கலாமோ? எம்மா மேலுக்கு அன்போடு அமைதியாய்த் தன் தோழி கூறுபவற்றையெல்லாங் கேட்பது என முடிவு செய்தாள். உரையாடல் மீண்டும் வளர்ந்தது. ஆயின் அதற்கு அடிப்படைக்காரணமான ஜேனின் கதை அறவே மறக்கப்பெற்றது.

தோழியர் இருவரும் ஜார்ஜையும் தம்மையும் தவிர வேறெதனையும் நினைத்திலர்.

ஹேரியட் தன் நம்பிக்கையின் வரலாற்றினை மகிழ்ச்சியுடன் சொல்வதற்கு, யாராவது கேட்க மாட்டார்களா என்றிருந்தவள்தான். ஆகவே தனக்கு நம்பிக்கையூட்டுவனவாய் அணிமையில் நிகழ்ந்த இரு நிகழ்ச்சிகளை அவள் எடுத்துரைத்தாள். அவ்விரண்டினையும் ஓரளவு எம்மா அறிந்தவளே. முதல் நிகழ்ச்சி, ஜார்ஜ் டான்வெல்லில் எலுமிச்சைத் தோப்பினில் அவளோடு தனியே உலவியது. அப்போது அவர் அவளிடம் "நீ எவர்மீதேனும் அன்பு கொண்டுள்ளாயா?" என வினவினார். எம்மா தங்களை யணுகுவது தெரிந்தவுடன், பேச்சினை மாற்றிவிட்டார். இரண்டாம் நிகழ்ச்சி, அவர் ஹார்ட்ஃபீல்டுக்குக் கடைசி முறையாய்ப் போந்தநாளில், எம்மா வெளியிலிருந்து வருமுன், அரைமணி நேரம் அவர் ஹேரியட்டோடு உரையாடிக் கொண்டிருந்தது.

சற்றே சிந்தித்தபின், எம்மா துணிந்து முதல் நிகழ்ச்சி பற்றி ஒரு கேள்வி தொடுத்தாள்: "உன் அன்பினைப் பற்றி அவர் உசாவியபோது ஒருகால் அவர் ராபர்ட்டைப் பற்றியே குறிப்பிட்டிருத்தல் கூடுமே?"

"ராபர்ட்டா! அவரைப் பற்றிச் சிறிதேனும் குறிப்பிடவில்லை. அவரைப் பற்றி இன்னும் நினைப்பதற்கு நானென்ன முட்டாளா!"

ஹேரியட் தன் சான்றுகளையெல்லாம் நிறுவிய பின், "நம்புதற்கு நல்ல வாய்ப்புளதா? இல்லையா? நீங்களே சொல்லுங்கள்" என்றாள்.

இம்மொழியால் விளைந்த கொடிய துன்ப உணர்வுகளையெல்லாம் அடக்கிக் கொண்டு, எம்மா எச்சரிக்கையுடன் விடையளித்தாள். "ஹேரியட்! ஒன்று மட்டும் துணிந்து சொல்வேன்; தாம் உள்ள படியே விரும்புதலைவிட மிகுதியாய் விரும்புவதாய் எந்தப் பெண்ணும் நினைப்பதற்கு இடங்கொடுக்கக் கூடிய ஆடவரல்லர், அவர்."

இவ்வரிய சொற்றொடருக்காகத் தன் தோழியை வணங்கவும் ஆயத்தமாயிருப்பவளைப்போல ஹேரியட் தோற்றமளித்தாள். தன் தந்தையின் காலடியோசை எழுந்ததால், எம்மா தப்பினுள். அவரை நேரிற்காண் பதற்கும் இயலாத அளவு மிக்க பதற்றத்துடன் ஹேரியட் விளங்கினுள்; ஆகவே வேருெரு வாயில் வழியாய் வெளியேறினுள். அவள் போனபின், எம்மாவின் உள்ளத்தே இயல்பாயெழுந்த நினைவு ஒன்றுதான் : 'கடவுளே ! நான் இவளை யென்றென் றும் காணுமலே இருந்திருக்க மாட்டேனு !'

அன்றும், மறுநாளும் அவள் இடையருது சிந் தித்தாள். கழிந்த சில மணி நேரத்தில் திடீரென நேர்ந்தவை அவளைக் குழப்பத்திலும் திகைப்பிலும் ஆழ்த்தின. அவள் தன்னையே ஏமாற்றி வாழ்ந்ததனை எவ்வாறு புரிந்து கொள்வாள்! அவளது அறிவும் அன்பும் குருடாகிச் செய்த பிழைகள்தாம் எத்தனை!

அவள் தன் உள்ளத்தையே முற்றிலும் புரிந்து கொள்வதுதான் முதல் முயற்சியாயிற்று. இப்போது அவளது ஒவ்வோர் உணர்வும் பறைசாற்றுவது போன்று, ஜார்ஜ் அவளது பேரன்பிற்குரியவராய் எந்நாள் முதல் திகழ்கிருர்? ஃபிராங்க் அவளதன்பில் ஒரு காலத்தில் - சில நாட்கள் மட்டுமே - பெற்றிருந்த இடத்தை அவர் எப்போது பிடித்துக் கொண்டார்? அவள் நினைத்துப் பார்த்தாள். இருவரையும் ஒப்பிட் டுணர்ந்தாள். ஜார்ஜ் வரம்பிலாச் சிறப்புடையவர் என்றே, அவர் தன்னை மதித்தல் தான் அளவற்ற சிறப்புடையதென்றே, அவள் கருதாத காலமே இருந்ததில்லை என வுணர்ந்தாள். அதற்கு மாறுபடக் கருதியதோ, செய்ததோ அனைத்தும் மயக்க நிலையே. அவள் தன் உள்ளத்தைச் சிறிதேனும் உணராமை யால் நேர்ந்ததே! சுருங்கக் கூறின் அவள் ஒரு போதும் ஃபிராங்கைப் பற்றிக் கவலைப்பட்டவளே யல்லள்! இத்தகைய உணர்வுகளால் அவள் ஜார்ஜ் மீது கொண்ட அன்பு நீங்கலாய்ப் பிற உணர்வுகளைக் குறித்து நாணினுள்.

பொறுக்கவியலாப் பகட்டின் விளைவாய் அவள் மற்றிறல்லார் உள்ளத்தையும் அறிந்ததாய் நம்பி ஞள். மன்னிக்கவியலா இறுமாப்புடன் மற்றெல லாரது எதிர்காலத்தையும் திட்டமிடக் கருதினுள். ஜார்ஜூம் ஹேரியட்டும் சிறிதேனும் பொருத்த மற்றவர்கள். அவர்களிடையே உறவு ஏற்படுமாயின், அதனைத் தொடங்கி வைத்த குற்றம் அவளையே சாரும். ஜார்ஜூம் ஹேரியட்டும்! விந்தைகளையெல் லாம் விஞ்சுகிற இணையன்றே அது! அவள் ஹேரியட்டை முன்னுக்குக் கொணராதிருந்தாளா! அப்பெண்ணுக்குரிய இடத்தில் - அவர் அவளுக்குரிய தென்ற இடத்தில் - விட்டுவைத்தாளா! எந்நாவும் சொல்வதற்கியலாத மடமை காரணமாக, அவள் தானே அப்பெண், அவ்விளைஞனை மணக்கவொட்டா மல் தடுத்தாள்! அவன் அவளுக்கு மகிழ்ச்சியையும்,

அவளுக்குரிய வாழ்க்கைத் தரத்தையும் வழங்கியிருப்பானே! ஒன்றும் கெட்டிராதே! இக்கொடிய விளைவுகளில் எதுவுமே நேர்ந்திராதே!

ஹேரியட் ஜார்ஜை நினைக்க எவ்வாறு துணிந்தாள்! அடங்கிக் கிடந்த அவள், வீண் பெருமை கொள்பவளாய் மாறினள் எனில் அதற்கும் எம்மாவின் செயல் தானே காரணம்!

36. தவிப்பு

இழப்புப் பற்றிய அச்சம் தோன்றுகிறவரை, எம்மா, தன் மகிழ்ச்சியெல்லாம் ஜார்ஜின் அன்பினில் முதலிடம் பெறுவதிலேயே அடங்கியுள்ளதென உணர்ந்திலள். கழிந்த பல்லாண்டுகளிலெல்லாம், அவள்தான் அவருள்ளத்தே முதலிடம் பெற்றனள். அவள் அதற்குத் தகுதியற்றவளே. அடிக்கடி அவரது அறிவுரையைப் புறக்கணித்திருக்கிருள். வேண்டுமென்றே அவரை எதிர்த்திருக்கிருள். அவரது மதிப்பிற் பாதியையும் உணராதவளாய் அவரோடு பூசலிட்டிருக்கிருள். இருப்பினும், குடும்பத் தொடர்பாலும் பழக்கத்தாலும் தமது உயர்ந்த மனப்பான்மையாலும், அவர் அவளைக் காதலிக்கிருர். அவள் சிறுமியாய்த் திகழ்ந்த நாள் முதலே கண்காணித்திருக்கிருர். அவளைத் திருத்துவதற்குப் பாடுபட்டுள்ளார். அவளின் குறைபாடுகளையெல்லாம் மறந்து, அன்பு செலுத்தியுள்ளார்—இத்தனையும் அவள் உணர்ந்தாள். அவர் ஒருபோதும் திருமணமே புரியமாட்டார் என்பது திண்ணமாய்ப் புலப்படுமாயின், அவள் மனநிறைவு எய்தியிருப்பாள். திருமணம் அவளுக்கு ஏற்புடையதன்று! அவளைத் தந்தையிடமிருந்து எதுவும் பிரிக்க முடியாது! ஜார்ஜே கெஞ்சினுலும் அவள் மணக்க மாட்டாள்!

ஹேரியட் ஏமாற்றமடைய வேண்டுமென்பது தான் எம்மாவின் தணியா ஆவல். அதற்கான வாய்ப்பு உளதா என மறுமுறை அவர்கள் எப்போ

தேனும் ஒருங்கிருக்கும்போது கண்டறிய முடியுமென அவள் நம்பினாள். அவர் எந்நாளிலும் ஊர் திரும்புவாரெனப் பேசிக்கொண்டனர். இடைக் காலத்தில், ஹேரியட்டைப் பார்த்தலாகாதென அவள் உறுதி பூண்டாள். அவ்வாறே ஹேரியட்டுக்கும் அன்போடும் - உறுதியோடும் - அவள் இப்போதைக்கு ஹார்ட்ஃபீல்டுக்கு வரவேண்டா எனவும் குறிப்பிட்டதொரு பொருள் பற்றி மனம் விட்டுப் பேசுதலைத் தவிர்க்க வேண்டுமெனவும் கடிதம் எழுதினாள். ஹேரியட் பணிவோடு இணங்கினாள். நன்றியுந் தெரிவித்தாள்.

இந்நிலையில்தான் எம்மாவின் நினைவினை வேறொன்றினில் ஓரளவு திருப்பக்கூடிய வகையில் அன்னா போந்தாள். தன் எதிர்கால மருமகளைப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பும் வழியில் அவள் ஹார்ட்ஃபீல்டுக்குள் புகுந்தாள்.

எம்மா அத்துணை யார்வமுடையவளாய் இருந்திலள். எனினும் தன் தோழி கூறியவற்றைக் கருத்தாய்க் கேட்டாள். "'களவு மணம் நிகழ்ந்தது முதல் மகிழ்ச்சியே ஒருகணங்கூட ஏற்பட்டிலது எனச் சொல்லவியலாது. ஆயினும் ஒரு மணி நேரமேனும் மன அமைதி கிட்டவில்லை' என ஜேன் தன் பேச்சினிடையே குறிப்பிட்டாள்" என்றாள் 'மாமியார்'

"அளியள்! தன் தவற்றினை உணர்கிறாள் போலும்"

"அவள் தன்னைப் பழிக்கிற அளவு வேறெவரும் பழித்தல் இயலாது!"

"அளவு மீறிய காதலாலேயே அவள் இதற்கு இணங்கியிருப்பாள். அவள் அடிக்கடி துன்புற்றதற்கு நானும் காரணமாகிவிட்டேன்"

"உன்னைப் பொறுத்தமட்டில், அறியாமையால் நேர்ந்த பிழை. அவளும் ஒருகால் இத்தகைய ஐயப்பாடுடையவளாய் இருந்திருப்பாள். அவன் தங்களுக்குள் ஏதோ தகராறு என்று சொன்னானே! இதைத்தான் குறிப்பிட்டிருப்பான்... இப்போது அவள் உன்னைப் பற்றி மதிப்புடனே பேசுகிறாள். அவள் நோயுற்றிருந்தபோது நீ காட்டிய பரிவினைச் சிறப்பாகப் பாராட்டினாள். வாய்ப்புக் கிட்டுமாயின் அவளது சார்பினில் நன்றியுரைக்குமாறு என்னை வேண்டினாள்."

"நான் ஜேனுக்குச் செய்த நன்மை தீமையிரண்டினையும் 'கணக்கிட்டுப் பார்த்தால் - உம் - அதையெல்லாம் மறந்துவிட வேண்டும். சிறந்த பண்புகளெல்லாம் அவளிடம் உள்ளன. உங்கள் மகன் கொடுத்து வைத்தவர்."

தன் மகனை எல்லாத் துறையிலும் சிறந்தவனென மதித்த அன்னா காரணங்கள் காட்டிச் சொல்லாடலானாள். முடிவில் விடை பெற்றுச் செல்லுங்கால், "ஏன், எம்மா! இப்படியிருக்கிறாய்? உடல்நலமில்லையா?" என்றாள்.

"இல்லையே! எப்போதும் நலந்தான்."

அன்னா உரைத்த செய்திகள் எம்மாவின் துன்ப நினைவுகளையே மேலும் வளர்த்தன. அவள் ஜேன்

மீதுகொண்ட மதிப்பும், இரக்கமும் பன்மடங்கு பெருகின. எம்மா ஜார்ஜின் விருப்பப்படி நடந் திருப்பாளாயின் - ஜேனை அவள் தகுதிக்குரிய முறை யில் மதித்துப் பழகியிருப்பாளாயின் - ஹேரியட்டுக் குப் பதில் அவளைத் தோழியாய்க் கொண்டிருப்பா ளாயின் - இப்போது வருத்துகிற துன்பம் எதுவும் அவளை யணுகியிராதே! ஜேனை நன்கறிந்திருப்பின் அவள் டிக்சானிடம் பொருந்தா அன்பு கொண்ட தாய் அருவருக்கத் தக்க ஐயப்பாடு கொண்டிராள். தன்னுள் அவ்வையத்தை வளர்த்ததோடு நில்லாது, மன்னிக்கத் தகாத முறையில் பிறரிடமும் பரப்பி யிராள். ஹைபரிக்குப் போந்தது முதல் ஜேனின் துன்பச் சூழ்நிலைக்கான காரணங்களில் எல்லாம், எம்மாதான் மிகக் கொடிய காரணமாயிருந்திருப் பாள். அவள் ஜேனின் நிலையான பகையாகவே கரு தப்பட்டிருப்பாள். மூவரும் ஒருங்கிருந்தபோதெல் லாம் எம்மா ஜேனை ஆயிரம் வகைகளிற் குத்திக் காட்டாத நேரமேயில்லை. பாக்ஸ்ஹில் நிகழ்ச்சிகள் தாம் மேலும் தாங்கொணாத மனத்துடிப்பினை வழங்கியிருக்கும்.

அந்நாள் மாலைப்போது மிக நீண்டதாயும், வருத்தமளிப்பதாயும் விளங்கிற்று. 'பேய்மழை' பெய் தது. காலநிலை ஹென்றியின் மனநிலையையும் உடல் நிலையையும் சீர்குலைத்தது. எம்மா அவரருகேயே யமர்ந்து அவரைத் தேற்றலானாள். அந்நாள் - முன் னொரு முறை - அன்னாவின் மணநாளன்று - அவளும் தந்தையும் தனித்துச் சோர்ந்திருந்ததனை நினைவூட் டிற்று அன்றோ ஜார்ஜ் மாலையிற் போந்து துன்ப நினைவுகளையெல்லாம் போக்கினார். இனி மாலைக்

காலத்தே அவர் ஆறுதலை நாடி அங்கு வருவாரோ! ஹேரியட்டின் கூட்டுறவிலேயே தமக்குத் தேவை யானவற்றையெல்லாம் பெற்றுக் கொள்வாரே! இவையெல்லாம் தன் செயலால் விளைந்தவையே எனும் ஒருணர்வே எம்மாவின் துன்பத்தைப் பெருக்குமே!

37. பொன்னான அரைமணி

மறுநாட்காலையிலும் மழை ஓய்ந்திலது. அதே தனிமையும் அதே கவலையும் ஹார்ட்ஃபீல்டில் அரசோச்சின. பிற்பகலில் வானம் தெளிந்தது. எம்மா இயன்றமட்டும் விரைவாய் வெளிக்கிளம்பலானாள். முன்புறத் தோட்டத்தில் சில அடி செல்வதற்குள் அவள், ஜார்ஜ் தன்னை நோக்கி வரக்கண்டாள். லண்டனிலிருந்து அவர் மீண்டார் என்பதனை அப்போது தான் முதன் முறையாய் அவள் அறிந்தாள். அரைநிமிடத்தில் இருவரும் நெருங்கினர். 'நலமா?'க்கள் அமைதியாய் நிகழ்ந்தன. இரு தரப்பிலுமே அடக்கம் மேலோங்கியது. இருவருக்கும் உறவினராய சிலரைப் பற்றி அவள் உசாவினாள். அவர்களெல்லோரும் நலம். எப்போது அவர் புறப்பட்டார்? அந்நாட்காலைதான். வழியில் மழையில் நனைந்திருப்பாரே? ஆமாம்.

அவர் தன்னோடு உலவக் கருதினார் என அவள் உணர்ந்தாள். அவ்வாறே இருவரும் உலவினர். அவர் வாய்திறந்தனரல்லர். அடிக்கடி அவர் தன்னை உற்று நோக்கியதாய் அவள் நம்பினாள். இதனால் ஓர் அச்சம் எழுந்தது. ஒருகால் அவர் ஹேரியட்டைப் பற்றி அவளிடம் பேசக் கருதினாரோ? தொடங்குதற்கு வாய்ப்பினை எதிர்நோக்கினாரோ? அவளா இத்தகைய பேச்சு எதற்கும் இடங் கொடுப்பாள்! அவரே தொடங்குவாராக. எனினும் அவரது வாய் வாளாமையை அவள் பொறுத்துக்கொள்ள

வியலாதவளானாள். அவரது இயற்கைக்கு அது முரணாயிற்றே! அவள் சிந்தித்தாள், முடிவுசெய்தாள்; முறுவலோடு தொடங்கினாள்: "ஒரு செய்தியைக் கேள்விப்படில் நீங்கள் பெரிதும் வியப்புறுவீர்கள்!"

"ஜேனையும் ஃபிராங்கையும் பற்றியதுதானே! ஏற்கனவே கேள்விப்பட்டேன்"

"எப்படி?" என வியந்தாள் எம்மா. ஒருகால் வழியில் காடார்ட் அம்மையின் வீட்டிற்குப் போயிருப்பாரோ?

"இன்று காலையில் தொழில் முறையில் வெஸ்டனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதனிறுதியில் அவர் நிகழ்ந்தவற்றைச் சுருக்கமாய் எழுதியிருந்தார்."

எம்மாவின் மனச் சுமை நீங்கிற்று. "வேறெவரையும் விட நீங்கள் இது கேட்டுப் பெரிதும் வியப்புற்றிருக்க மாட்டீர்கள். ஏற்கெனவே ஐயுற்றீர்களே! என்னைக் கூட எச்சரிக்க முயன்றீர்களே! நான் மறந்திலேன். (பெருமூச்சுடன்) நான் அதனைப் பொருட் படுத்தி யிருந்தேனாயின்...! உம்...குருடாவதே என் தலைவிதி போலும்" என்றாள்.

ஓரிரு கணம்வரை உரையெதுவும் நிகழவில்லை. பின் அவர் அவளது கையைப் பற்றியெடுத்துத் தம் மார்பினில் சேர்த்துத், தழுதழுத்த குரலிற் பேசலானார். "அருமை எம்மா! காலம் புண்ணைக் குணப்படுத்தும். உன் சிறந்த அறிவு—தந்தைக்காக நீ ஏற்கும் தொல்லைகள்—நீ இடங்கொடுக்க மாட்டாய் என அறிவேன்...நெருங்கிய நண்பனும்!

அருவருக்கத் தக்க கயவன்! விரைவிலேயே தொலைந்து போவான்....அவனை நினைத்து வருந்துகிறேன். இதைவிடச் சிறந்த வாழ்விற்குரியவள் அவள்."

அவரது கருத்தினை எம்மா புரிந்துகொண்டவளாய் விடையளித்தாள். "உங்கள் எண்ணம் பிழைபட்டது. அத்தகைய இரக்கம் எதுவும் எனக்குத் தேவையில்லை. என் குருட்டுத் தன்மையால், என்றென்றும் நாணத்தக்க வகையில் அவர்களிடம் நடந்துகொண்டேன். அறிவின்மையால் சொல்லத் தகாத பலவற்றைச் சொல்லிவிட்டேன். மற்றப்படி எவ்வகை வருத்தமும் எனக்கில்லை."

அவர் வியப்புடன் அவளை நோக்கியவாறு சொன்னார். "உண்மையாகவா, எம்மா!...ஆமாம் உன்னையறிவேன். மன்னித்துக் கொள், இவ்வளவாவது சொன்னாயே! மகிழ்கிறேன்."

எம்மா உள்ளுக்குள் குழம்பியவளாய், வெளியே மகிழ்ச்சியுடையாள் போற் பேசினாள்: "என் நிலை மிகவும் விந்தையானது. உங்கள் பிழைபட்ட கருத்தினைப் போக்கிட வேண்டும். அவரிடம் ஒருபோதும் பற்று வைத்திலேன் என ஒப்புக்கொள்வது கூட நாணத்தை யளிக்கிறது. உண்மை அதுவே."

அவர் அமைதியாய்க் கேட்டார். ஏதேனும் சொல்வாரென அவள் எதிர்பார்த்தாள். சொல்லாமற் போகவே அவள் மேலும் சொன்னாள்: "இப்போது தான் அவரது போக்கினை ஓரளவு தெளிவாய் உணர்கிறேன். அவர் ஒருநாளேனும் என் உறவினை விரும்பியவரல்லர். மற்றொருத்தியிடம் கொண்ட

காதலை மறைக்க, என்னை அவர் திரையாகப் பயன்படுத்தினார். அவ்வளவே."

இறுதியில் ஜார்ஜ் ஒருவாறு வாய்திறந்தார்: "நான் ஃபிராங்கை ஒருபோதும் உயர்வாகக் கருதியவனல்லேன். ஒருகால் அவனைக் குறைத்து மதிப்பிட்டுமிருப்பேன். இனிமேல் அவன் நல்லவனாதலுங் கூடும். ஜேனையொத்த நல்ல பெண்மணியால், அவன் திருந்த வாய்ப்புண்டு."

"அவ்விருவரும் இன்புற்று வாழ்வர் என்பதில் ஐயமின்று."

"யாவும் அவனுக்கு நன்மையாகவே முடிகின்றன. அவன் உள்ளபடியே நல்லூழினன்தான்."

"அவர்மீது பொறாமையுற்றவர்போற் பேசுகிறீர்களே!"

"ஒருவகையில் அவன் மீது பொறாமைப் படுகிறேன்."

எம்மா வேறேதுஞ் சொல்லவியலாதவளானாள். இனி ஒரு தொடர் சொல்லுமுன், ஹேரியட் பற்றிப் பேச்செழுமே! இயன்றவரை அதனைத் தடுக்க வேண்டாவோ! ஜார்ஜ் தொடர்ந்து கூறியது, அவளைத் திடுக்கிட வைத்தது: "பொறாமைக்குரிய காரணம் யாதென நீ வினவமாட்டாய். தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை யடக்குவதென முடிவு செய்துள்ளாய் போலும். வெளியிட்ட மறுகணமே நான் இரங்குவேனாயினும், நீ கேளாது விடுத்ததனை நான் வெளியிட்டே தீர வேண்டும்."

"பின்பு இரங்குவீர்களாயின், வெளியிடல் வேண்டா. சற்றே சிந்தியுங்கள். சிக்கிக் கொள்ளாதீர்கள்."

"நன்றி" என்றார் அவர். குரல்மட்டும் ஏனோ, புண்பட்டவர் குரலாய்த் திகழ்ந்தது. ஒரு சொல்லேனும் அதன்பின் பேசினரல்லர். அவரது துன்பத்தைத் தாங்க முடியாதவளானாள், எம்மா. அவர் அவளிடம் மனம்விட்டுச் சொல்ல முற்பட்டாரே! ஒருகால் அவளது கருத்துரையை நாடியிருப்பாரோ?

இதற்கிடையில் அவர்கள் மாளிகையை அணுகினர். "உள்ளே போய் விடுவாய். இல்லையா?" என்றார் அவர்.

அவரது பேச்சினில் தென்பட்ட கவலையை நன்குணர்ந்த எம்மா, "இல்லை. இன்னொரு சுற்றுச் சுற்றலாமென விரும்புகிறேன்" என்றாள். சில அடி நடந்தபின் தொடர்ந்து சொன்னாள்: "சற்றுமுன் இரக்கமின்றி உங்கள் பேச்சினைத் தடுத்தேன். உங்கள் உள்ளத்தைப் புண்படுத்திவிட்டேன். நண்பரெனும் முறையில் என்னிடம் மனம்விட்டுப் பேச விரும்புவீர்களாயின், உங்கள் சொற்படி நடப்பேன்"

"நண்பரென்ற முறையிலா! எம்மா! அச்சொல் அத்துணை......வேண்டா...பொறு...சரி, ஏன் தயங்க வேண்டும்? ஏற்கனவே பெரும்பகுதி வெளியாயிற்று. இனியும் மறைப்பது ஏன்? சொல்...எனக்கு வெற்றி கிட்டும் வாய்ப்பேயில்லையா?"

அவர் பேச்சினை நிறுத்தி அவளைப் பார்த்தார். அப்பார்வையின் ஆற்றல் அவளை வென்றது. "என்

அருமை எம்மா! என்றென்றும் நீ எனக்கு அருமையானவளே! என் அன்பிற்குரிய எம்மா! உடனே சொல். உன் விருப்பம் அதுவாயின் 'மாட்டேன்' என்றாயினுஞ் சொல்." அவள் ஏதுஞ் சொல்லுந் திறனற்றுப் போனாள். "நீ வாளாவிருக்கிறாய். இதைத்தவிர வேறேதும் இப்போதைக்கு வேண்டேன்" என்றார் அவர்.

அக்கணத்தில் நேர்ந்த மனத்துடிப்பினால் எம்மாவின் கால்கள் தளர்ந்தன.

விரைவில் அவர் தம் பேச்சினைத் தொடங்கினார்: "நான் சொற்பொழிவாற்ற வல்லேனல்லேன். ஒருவேளை, உன்மீது நான் கொண்டுள்ள காதல் குறைவாயிருக்குமாயின், அதைப்பற்றி நிறையப் பேசியிருப்பேன். எதனையுஞ் சொல்லமாட்டேன். உன்மீது குற்றஞ் சாட்டியுள்ளேன். உனக்கு நீண்ட அறிவுரைகளை வழங்கியுள்ளேன். இவற்றையெல்லாம் வேறெப்பெண்ணாயினும் பொறுத்துக் கொள்ளாள். நீ ஏற்றுக் கொண்டாய். இப்போது நான் சொல்லப் புகும் உண்மைகளையும் ஏற்றுக் கொள். சொல்லும்முறை சொல்லப்படுவதன் சிறப்பினைச் சிறிதேனும் எடுத்துக்காட்டாமற் போகலாம். காதலில் நான் அசட்டையாயிருந்து விட்டேன். என்னை நீ நன்கறிவாய். இப்போது உன்குரலைச் செவிமடுப்பது தவிர வேறெதனையும் வேண்டுகின்றிலேன்"

அவர் பேசியபோதெல்லாம் எம்மாவின் மனம் சுறுசுறுப்பாய் இயங்கிற்று. ஹேரியட்டின் நம்பிக்கையெல்லாம் அறவே அடிப்படையற்றவை! அவரைப்

பொறுத்தமட்டில் ஹேரியட் ஒரு பொருட்டல்லள்! எம்மாதான் எல்லாம்! நல்ல காலம்! ஹேரியட்டின் கருத்தினை அவள் அறிந்துகொண்டாள்! தன்னைவிட ஹேரியட் பன்மடங்கு சிறந்தவள்; தன்னையன்றி அவளையே அவர் காதலிக்க வேண்டுமென அவரிடம் கெஞ்சிக் கேட்குமளவு அவள் வீரம் பெற்றவளல்லள். இருவரையும் அவர் மணத்தல் இயலாதாகலின், தான் அவரை ஏற்க மறுத்தாலேனும், அவர் அவளை மணப்பாரே என்று கருதிக், காரணமேதுஞ் சொல்லாமலே மறுத்துரைக்கும் அளவுகூட அவள் அஞ்சா நெஞ்சினளல்லள். அவள் தன் தோழியின் கருத்துப் பிழைபடுமாறு செய்திருக்கிறாள். அதனையெண்ணி வாழ்நாள்முழுதும் வருந்துவாள். ஆயினும் அவர் அத்தோழியை மணப்பது அறவே பொருந்தாதே! அவர்க்கு இழிவினைத் தருமே! உள்ளமும் அறிவும் ஒருங்கே கூறுகின்றனவே! அவள் செய்யத்தக்கது துன்பக்கலப்புடையதே யாயினும் தெளிவாய் விளங்கிற்று. அவர் வற்புறுத்திக் கேட்டமையால் அவள் பேசினாள். யாது கூறினாள்? எதனைக் கூறுவாள்! எதனைக் கூற வேண்டுமோ, அதனைத்தான் கூறினாள். ஒருபெண் எப்போதும் அவ்வாறு கூறிடத் தவற மாட்டாள். அவர் நம்பிக்கை யிழக்கத் தேவையில்லை என்றுணர்த்துமளவு அவள் கூறினாள். அதற்குமேல் அவரே பேசுமாறு விட்டுவிட்டாள்.

ஃபிராங்கின் திருமணச் செய்தியை எம்மா எவ்வாறு பொறுக்கிறாள் என்று கண்டறியும் ஆர்வத்தோடேயே ஜார்ஜ் போந்தார். வேறெந்நோக்கமும்—தந்நலநோக்கம்—அறவே உடையவரல்லர். அவள் வாய்ப்பளித்தால், அவளைத் தேற்றவும், அறிவுரை

வழங்கவுமே கருதினார். எஞ்சிய அனைத்தும் சூழ்நிலையால் விளைந்தன. அரைமணி நேரத்துக்குள் அவரது மனம், முற்றிலும் துன்புற்ற நிலையினின்று, முழு நிறைவான இன்பநிலையை எட்டியது. அவளது நிலையும் அத்தகையதே. இவ்வரைமணி நேரத்தில், ஒருவர் மற்றவரது காதலுறுதியை யுணர்ந்தனர்; அறியாமை, பொறாமை, நம்பிக்கையின்மை ஆகியன தெளியப் பெற்றனர்.

அவர் எம்மாவைக் காதலித்தவராதலின் ஃபிராங்க் மீது பொறாமையுற்றார். அதனாலேயே லண்டனுக்குச் சென்றார். பாக்ஸ்ஹில் நிகழ்ச்சிகள் தாம் அவ்வாறு செல்லுதற்கு ஏவின. இப்போதோ, ஃபிராங்கை என்றுமே காதலித்திலள் என்பதனை அவளே திண்ணமாய்க் கூறிவிட்டாள். என்றென்றும் சொல்லாலும் செயலாலும் அவள் அவருடைய எம்மாவே. கைகோத்தவாறே அவர்கள் மாளிகையினுட் புகுந்தனர். ஃபிராங்கைப்பற்றி அவர் அப்போது நினைத்திருப்பாராயின், நல்லவனெனவே மதித்திருப்பார்.

———

38 மாற்றுத் திட்டம்

வீட்டினின்று எம்மா கிளம்பும்போது இருந்த மனநிலைக்கும் மீண்டபோது இருந்த மனநிலைக்கும் எத்துணை முரண்பாடு! அவளும் ஜார்ஜும் ஹென்றியும் தேநீர் அருந்த ஒருங்கமர்ந்தனர். வழக்கமான காட்சிதான்! ஒருபோதேனும் இத்தனை களிப்பு ஏற்பட்டதில்லையே!

அளியர் ஹென்றி! தம்மால் அன்போடு வரவேற்கப்பட்ட ஆடவரின் உள்ளத்தே, தமக்கெதிரான வஞ்சனை உருவாதலைச் சிறிதேனும் அறிந்திலர்.

ஜார்ஜ் தங்கியிருந்தவரை எம்மாவின் சுரம் தணிந்திலது. அவர் போனபின் அவள் ஓரளவு அமைதிபெற்றாள். ஆயினும் இரவெல்லாம் உறக்கமின்றிக் கழித்தாள். இருவர்பற்றிய சிக்கல்கள் அவளது சிந்தனைக் குரியவாயின. அவள் தந்தையும் ஹேரியட்டும்! தந்தையைப் பொறுத்தமட்டில் சிக்கலை எளிதில் தீர்க்கலாம். தம்மை மணக்குமாறு ஜார்ஜ் எப்போது வேண்டுவாரோ! தந்தையை ஒருபோதும் பிரியலாகாது என அவளது உள்ளம் திடமாய்க் கூறிற்று. அவர் வாழும்வரை, திருமணம், உறுதி செய்யப்பெற்ற நிலையிலேயே இருக்கும். ஒருகால் அவள் பிரியமாட்டாள் என்ற உறுதி பெறின், தந்தை இத்திருமணச் செய்திகேட்டு ஆறுதலடைதலுங் கூடும். ஹேரியட்டுக்கு எப்படி நல்லது செய்வது? கழுவாயாக எதனைச் செய்வது? இறுதியில்

எம்மா ஒரு முடிவிற்கு வந்தாள். இனி, ஹேரியட்டை நேரிற் கண்டு பேசுதலாகாது; கடித வழியே தொடர்புகொள்ளல் வேண்டும். அவளது உள்ளத்தே மற்றொரு திட்டமும் உருவாயிற்று. இசபெல்லாவுக்கு ஹேரியட்டைப் பிடித்திருந்தது. சில கிழமைகளேனும் ஹேரியட்டை லண்டனுக்கு அனுப்பிவைக்கலாமே!

மறுநாட் காலையிலேயே எழுந்து, எம்மா ஹேரியட்டுக்குக் கடிதம் எழுதினாள். இம்முயற்சியின் விளைவாய் அவளது உள்ளஞ் சோர்வுற்றது. ஜார்ஜின் வருகையால்தான் அவள் தேறினாள். அவர் புறப்பட்டுச் சென்று, சிறிது நேரமே கழிந்திருக்கும். ரண்டால் மாளிகையினின்று ஒரு கடிதம் வந்தது. மிகப்பளுவான அக்கடிதச் செய்தி யாதாயிருக்குமென அவள் அறிந்தாள். படிப்பதற்கே ஆர்வம் எழுந்திலது. எனினும் புரட்டிப் பார்க்காமல் இருத்தலாகுமா?

ஃபிராங்க் தன் சிற்றன்னைக்கு எழுதிய கடிதத்துடன், அவளும் ஒரு துண்டுக் கடிதம் எழுதி அனுப்பியிருந்தாள். ஃபிராங்கின் கடிதம் மிக நீண்டது. அதன் சிலபகுதிகள் வருமாறு:—

“மறைத்து வைப்பது எனக்கு மிகவும் இன்றியமையாதது. அதனால் நான் எம்மாவுடன் மிக நெருங்கிப் பழகுவதுபோற் காட்டிக்கொண்டேன். அவள் என்னைச் சிறிதேனும் பொருட்படுத்தியவளல்லள் என்பதனைத் தெளிவாய் உணர்ந்தமையாலேயே நான் இவ்வாறு செய்தேன். ஒருகால் எம்மா எங்கள் தொடர்பு முழுதினையும் அறிந்திரா

விடினும், பெரும் பகுதியைத் தன் கூரிய அறிவுத்திறனால் உய்த்துணர்ந்திருப்பாள். அவளை என்னுடன் பிறவாத் தங்கையெனவே மதிக்கிறேன்......

“பலரது பேச்சிற்கும் பொருளாகிய ‘பியானோ’வைப்பற்றி ஓரளவு சொல்வது போதும். நான் அதை வாங்கியனுப்பப்போகிறேன் என்பதனை ஜேன் அறவே அறியாள். அறிந்திருப்பாளாயின், இணங்கியிருக்கவே மாட்டாள்...

“நான் எம்மாவோடு பழகியமுறை குற்றச்சாட்டிற்குரியதே. ஜேன் அம்முறையை வெறுத்தாள். அப்போதேனும் நான் நிறுத்தியிருக்க வேண்டும். உண்மையை மறைப்பதற்கே இந்நடவடிக்கை என வாதிட்டேன். அவள் அதனைத் தக்க காரணமென ஏற்றிலள். அவள் குறைகூறினாள். நான் முறையற்ற பேச்சு என்றேன். நாங்கள் பூசலிட்டோம். டான்வெல்லுக்கு நான் காலந்தாழ்த்தே போந்தேன். வழியில் அவள் வீடுதிரும்புதலைக் கண்டேன். அவளோடு வழி நடப்பதாய்க் கூறினேன். அவள் இடங்கொடுக்க மறுத்தாள். உலகத்தின் கண்களில் எங்கள் களவொழுக்கம் படலாகாது என்பதற்காக, நான் மற்றொருத்தியோடு நெருங்கிப் பழகுவதுபோற் காட்சியளிக்க முயன்றேனே! அவளோடு ஒருங்கே வழிப்பட்டால் முன்னைய எச்சரிக்கையெல்லாம் வீணாகாதோ! அவள் எவ்வாறு இடமளிப்பாள்! ஏனினும் நான் சீற்றம் கொண்டேன். மறுநாள் பாக்ஸ்ஹில்லில் என் ஐயம் வளர்ந்தது. அவளது சீற்றத்தைத் தூண்டிவிட்டவன் நான்தான். வெளிப்பார்வைக்கு எம்மாவிடம் பேரன்புடையவன்போல நடந்து கொண்டேன். ஜேனை அறவே புறக்கணித்தேன். அவள் தன் வருத்தத்தை வெளியிட்டாள். எனக்குமட்டுமே நன்கு விளங்குகிற வகையில் சொற்களைப் பயன்படுத்தினாள். சுருங்கச் சொன்னால், பூசலுக்கு அவள் சிறிதும் காரணமாகாள். அன்றே நான் ரிச்மாண்டுக்குப் போய் விட்டேன். நான் சென்றதனையறிந்தவுடனேயே அவள் அகஸ்டாவின் திட்டத்தை ஏற்றுக்கொண்டாள். திருமணவுறுதி இருவருக்குமே கழிவிரக்கத்தையும் கவலையையும் அளிப்பதாய் எண்ணினாள். அவ்வுறுதியைக் கலைக்க முற்பட்டாள். அவளது கடிதம் எனக்குக் கிடைத்த அன்றுதான் அத்தை காலமானாள். எனினும் உடனே பதில் எழுதினேன். அஞ்சலிற் சேர்த்த நினைவாகவே இருந்துவிட்டேன். அவளிடமிருந்து பதிலே வராமையாற் குழம்பினேன். ஒருகால் வேலை மிகுதி போலும் என நினைத்தேன். நானும் மாமாவும் விண்ட்சருக்கும் சென்றோம். இருநாட்களுக்குப்பின், நான் எழுதிய கடிதங்களையெல்லாம் மூட்டை கட்டி அவள் எனக்கு அனுப்பிவைத்தபோதுதான் திடுக்கிட்டேன். அவள் எனக்கு எழுதிய கடிதங்களையும் உடனே அனுப்புவதாயின் ஹைபரிக்கும், காலத்தாழ்ச்சி நேருமாயின் பிரிஸ்டலுக்கும் அனுப்பிவைக்குமாறு எழுதியிருந்தாள். அப்போதுதான் அவள் வேலையேற்கப் போகும் திட்டத்தையே அறிந்தேன். யாது செய்வது? ஒன்றுதான் செய்தல் கூடும். மாமாவிடம் பேசினேன். சூழ்நிலை எனக்கு நல்வாய்ப்பாயிற்று. ஹைபரிக்குப் புறப்பட்டேன். அவள் தனித்திருக்கும் நேரம்பார்த்து அவளது வீட்டிற்குச் சென்றேன். அவளது முறையான சீற்றத்தையெல்லாம் மாற்றினேன். எங்களிடையே பிணக்குத் தீர்ந்தது.”

எம்மா கருதியதனைவிடக் குறைவாகவே அவன் தவறிழைத்திருந்தான்; பிழைக்கு வருந்தினான்; ஏற்கெனவே துன்பப்பட்டு விட்டான். அவன் அப்போதுமட்டும் அவளெதிரே போந்திருப்பானாயின், மகிழ்ச்சியோடு அவனது கையைப் பற்றிக் குலுக்கியிருப்பாள்.

அக் கடிதத்தை அவள் உயர்வாக மதித்தாளாதலின், ஜார்ஜ் போந்தபோது அவரையும் படிக்குமாறு வேண்டினாள். வீட்டிற்கு எடுத்துச் சென்று பிறகு படிப்பதாய் அவர் சொன்னார். அவளோடு உரையாடியிருக்கவே விரும்பினார். அவளது வற்புறுத்தலாலேயே படிக்கத் தொடங்கினார். இடையிடையே தம் கருத்துரைகளையும் வழங்கினார்.

படித்துமுடித்தபோது எம்மா வினவினாள்: "இக் கடிதம் எனக்களித்த அளவு உங்களுக்கு மனநிறைவு வழங்கவில்லை போன்றிருக்கிறதே! அவர்மீது உங்களுக்குச் சிறிதேனும் நல்லெண்ணம் ஏற்படவில்லையா?"

"ஏற்படுகிறது. அவன் பெருந்தவறுகள் செய்தவன். இத்துணை இன்பமெய்துதற்குத் தகுதியற்றவன். எனினும் அவளோடு இடையறாது பழகுவதன்மூலம், அவனது குணம் சிறப்புறும் என நம்புகிறேன். ...சரி இப்போது வேறுசெய்தி பேசுவோம். வேறொருத்தியின் நலனே இப்போது என் நெஞ்சினில் நிறைந்துளது. ஃபிராங்கைப் பற்றி நினைக்கவே இடமில்லை. இன்றுகாலையில் உன்னைப் பிரிந்ததுமுதல், ஒரேயொரு பொருளில்தான் என் உள்ளம் ஈடுபட்டுள்ளது."

அப்பொருள் யாதென்பது வெளிப்பட்டது: எளிய, பகட்டற்ற, ஆடவர்க்குரிய மொழியில் அவர் பேசினார். அவளுடைய தந்தையின் மகிழ்ச்சிக்குக் குறை நேராதவண்ணம், அவள் தம்மை மணக்குமாறு வேண்டுவது எவ்வாறென்றார். எம்மா முதற் சொல்லைச் செவியிலேற்றவுடனேயே விடையளித்தாள். அருமைத் தந்தை உயிர்வாழும்வரை தன்னிலையில் மாற்றமேதும் நடவாது என்றாள். விடையின் முற்பகுதியை அவர் ஒப்புக்கொண்டார். நிலையில் மாற்றமேதும் நடவாதென்பதனை ஏற்க மறுத்தார். ஹென்றியையும் டான்வெல்லுக்கு அழைத்துச் செல்லலாமெனவே அவர் முதலிற் கருதினார். ஆயின் இடமாற்றமெதுவும் ஹென்றியின் நலனுக்கு ஒவ்வாதென உணர்ந்தமையால் அக்கருத்தினைக் கைவிட்டார். ஹென்றியின் மகிழ்ச்சிக்காக அவர் உயிர்வாழும்வரை - தாமும் ஹார்ட்ஃபீல்டிலேயே திருமணத்துக்குப்பின் தங்குவதென முடிவு செய்தார்.

எல்லாரும் டான்வெல்லுக்குப் போய்விடலாமென எம்மாவும் ஏற்கெனவே நினைத்துப் பார்த்து, நடவாதென விட்டுவிட்டாள். இத்தகையதொரு மாற்றுத் திட்டம் அவள் உள்ளத்திற் பட்டிலது. டான்வெல்லைவிட்டு வெளியேறுவது ஜார்ஜைப் பொறுத்தமட்டினில் எத்தனைபெரிய தியாகமென்பதனை அவள் உணர்ந்தாள். அத்திட்டத்தைப்பற்றி நன்கு சிந்திப்பதாய் அவரிடம் தெரிவித்தாள்.

சிந்திக்கச் சிந்திக்க அத்திட்டம் அவளுக்கு மகிழ்ச்சியேயளித்தது. ஹேரியட்டின் நினைவுமட்டும் எழுந்திலதாயின், அவளது மகிழ்ச்சி எல்லைமீறிப்

போயிருக்கும். இனி ஹேரியட் ஹார்ட்ஃபீல்டினின்று விலக்கப்பட வேண்டியவளே! காலப்போக்கினில் ஜார்ஜ் மறக்கப்படலாம்! அவரிடத்தை மற்றொருவர் பிடிக்கலாம்! ஆயினும் இஃது அணிமையில் நிகழாதே! ஹேரியட்தான் என்றாலும், ஓரே ஆண்டிற்குள் மூவரைக் காதலிப்பாள் என்றெதிர்பார்க்க முடியுமோ!

---

39. செய்தி பரவுதல்

தன்னையொப்பவே ஹேரியட்டும் நேரிற் காண்பதனைத் தவிர்ப்பது அறிந்து எம்மா பெரிதும் ஆறுதலடைந்தாள். கடிதவழித் தொடர்பே பெருந்துன்பமாய்ப்பட்டது. அவ்விருவரும் நேரிற் பேசுவாராயின் எத்துணைத் துன்பம் விளையும்!

இசபெல்லா ஹேரியட்டை அழைக்குமாறு செய்வது எளிதாயிற்று. ஹேரியட் இன்னலேதுமின்றி லண்டன்போய்ச் சேர்ந்தாள்.

எம்மா முடிக்கவேண்டிய கடமை மற்றொன்றிருந்தது. அவளைத்தவிர வேறெவரும் அதனை முடித்தற்குரியவராகார். திருமண உறுதியை அவள்தானே தந்தைக்கு உணர்த்தவேண்டும்! அன்று 'பெற்றுப் பிழைக்கிற'வரை வெளியிடுவதில்லையென எம்மா முடிவுசெய்தாள்.

இன்னொரு கடமையையும் நிறைவேற்றிட எம்மா முனைந்தாள். அஃது இன்பமூட்டுஞ் செயலே. ஒருநாள் அவள் ஜேனைக் காணச் சென்றாள். ஜேனே படிக்கட்டினில் நின்று எதிர்கொண்டு வரவேற்றாள். அந்நேரத்தில் அகஸ்டாவும் அவ்வீட்டிற்குள் இருந்தாளாதலின், எம்மா தான் நினைத்தவற்றைப் பேசவியலாதலானாள். சற்றுப்பின்னகை, எல்டானும் அங்குப் போந்தார். ஜார்ஜைக் காணும் நோக்கத்துடன், அவர் நடந்தே டான்வெல்லுக்குப் போனாராம். ஜார்ஜுக்கு ஏற்கெனவே எழுதியிருந்துங்கூட, அவர் எங்கோ வெளியே போய்விட்டாராம். வெயிலில்

நடந்தது வீணாயிற்றே என எல்டான் வருந்தினார். ஒருகால் ஜார்ஜ் தனக்காக ஹார்ட்ஃபீல்டில் காத்திருப்பாரோ என்றஞ்சிய எம்மா விடைபெற்றுக் கிளம்பினாள். ஜேன் வாயில்வரை போந்து வழியனுப்பினாள். அப்போது இருவரும் மனம்விட்டுப் பேசினர்; மன்னிப்பு வழங்கினர்; நண்பராய்ப் பிரிந்தனர்.

நாட்கள் நகர்ந்தன. அன்னா 'பெற்றுப் பிழைத்தது' பற்றி அனைவரும் மகிழ்ந்தனர். அவளோ பெண் பிறந்ததற்குக் களிப்புற்றாள். இசபெல்லாவின் மைந்தருள் ஒருவனுக்கும் தன் மகளுக்கும் 'முடிச்சுப் போட' அப்போதே அவள் திட்டமிட்டாளோ!

எம்மா ஜார்ஜிடம் இதுபற்றிப் பேசுகையிற் கூறினாள். "அவள் என்னை வளர்த்துப் பழக்கம் பெற்றவள். தன்மகளுக்குச் சிறந்த கல்வி புகட்டுவாள்"

"உனக்குக் கொடுத்ததைவிட அதிகச் 'செல்லங்' கொடுப்பாள். அவ்வளவுதான் வேறுபாடு."

"அப்படியானால் அப்பெண் வளரும்போது எப்படியிருப்பாளோ!"

"எப்படியிருப்பாள்! ஆயிரமாயிரம் பேரையொப்பவே யிருப்பாள். பிள்ளைப் பருவத்தே 'அடம் பிடி'ப்பாள்; வளர வளரத் திருந்துவாள். 'செல்லத்'தாற் கெட்டழிந்த பிள்ளைகள்மீது ஒரு காலத்தில் எரிச்சலுற்றேன். இப்போது அதனை அடியோடு கைவிட்டேன். எம்மா! என் இன்பத்துக்கெல்லாம் காரணம் நீயே யன்றோ? இந்நிலையில் அவர்களைக் கண்டிப்பது நன்றிகொன்றதாகாதோ!"

எம்மா நகைத்தாள். பேச்சினிடையே அவர் தம் தம்பி எழுதிய கடிதத்தை அவளிடம் காண்பித்தார்.

அண்ணன் திருமணக் கருத்தினை வெளியிட்டதற்கு மகிழ்ந்து, தம்பி அதனை எழுதியிருந்தார்.

தந்தையிடமும் மற்றவர்களிடமும் செய்தியை அறிவித்தற்குரிய வேலை நெருங்கிற்று. தந்தையை ஆயத்தப்படுத்தும் முறையில் முன்னுரையாகப் பலவற்றைச் சொல்லியபின், அவள் தன் கருத்தினைச் சில சொற்களில் வெளியிட்டாள்: அவருக்குத் தடையில்லையெனில்-அவர் ஏற்பாராயின் - எல்லோருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய வகையில் அவள் ஜார்ஜை மணக்கக் கருதினாள். தம் மக்களுக்கும் அன்னாவுக்கும் அடுத்தபடி அவர் ஜார்ஜின் கூட்டுறவையே பெரிதும் விரும்புபவரல்லரோ? ஒப்புதலளிப்பதிற் சிறிதும் தடையிராதே!

அளியர்! இச்செய்திகேட்டு ஹென்றி முதலில் அதிர்ச்சியுற்றார். பின் அவளது கருத்தினைக் கலைக்க ஆவலோடு முயன்றார். ஏற்கெனவே திருமணஞ் செய்யப்போவதில்லை எனப் பலமுறை கூறினாளே! தனி வாழ்க்கைதான் அவளுக்குச் சிறப்பளிக்கும். இசபெல்லாவையும் அன்னாவையும் அவள் மறந்தாளா?

எம்மாவா விட்டுக்கொடுப்பாள்! முறுவலோடு பலபட வலியுறுத்திப் பேசினாள். ஜார்ஜூம் வேண்டுகோள் விடுத்தார்; உறுதியளித்தார். இசபெல்லாவும் கடிதவழி இவர்கள் தரப்பில் தந்தையோடு வாதாடினாள். அன்னாவோ நடைமுறைக் கண்ணோட்டத்தில் கருத்துரை வழங்கினாள். இத்திருமணம் ஏற்கெனவே முடிந்துபோன செயல்போலவும், நல்ல பொருத்தமெனவும் எடுத்துரைத்தாள். இவ்விரு கூற்றுக்களும் ஹென்றியின் உள்ளத்தைத் தொடுமென அவள்

அறிவாள். இவ்வாறாக அவர் எவ்வெவரது அறிவுரையை நாடுவாரோ, அவர்களெல்லாரும் இத் திருமணம் அவருக்கு நலமே விளைவிக்குமென்றனர். அவரது உள்ளுணர்வும் இக்கருத்தினையே கூறிற்று. எப்போதாவது ஒருசமயம்—இன்னும் ஓரிரண்டாண்டுகளில்—நிகழுமாயின் அத்துணை மோசமன்று என அவர் நினைக்கத் தொடங்கினர்.

செய்தி பரவிய இடமெல்லாம் வியப்பும் பரவிற்று. மொத்தத்தில் எல்டானையும் அவர் மனைவியையும் தவிர வேறெவரும் எதிர்ப்புத் தெரிவித்தனரல்லர்; "முடியுமாயின், ஜார்ஜைப் பிடித்துக் கொள்ளவேண்டுமென்றுதானே அவள் அடிநாள் தொட்டுத் திட்டமிட்டாள்!" என்றார், எல்டான். "அளியர் ஜார்ஜ்! சற்றே கிறுக்குத்தனம் உண்டெனினும், ஆயிரம் நல்லியல்புகளுடையவர். அவர் எப்படி மசிந்தார்!" என்றாள் அகஸ்டா.

40. திருமணங்கள்

காலங் கழிந்தது. இன்னுஞ் சில நாட்களில் லண்டன் குழுவினர் வந்துவிடுவர். ஒருநாட் காலையில் அது பற்றிச் சிந்தித்தவாறே எம்மா அமர்ந்திருந்தாள். ஜார்ஜ் அங்கு வரவே, துன்ப நினைவுகள் ஒதுங்கின. தொடக்கத்து உசாவுதல்களுக்குப் பிறகு, அவர் சற்றே அமைதியாயிருந்தார். பின் வருத்தம் நிறைந்த குரலில் தொடங்கினர்: "எம்மா! உன்னிடம் ஒரு செய்தி சொல்லவேண்டும்."

"நல்லதா? கெட்டதா?"

"எவ்வகையைச் சார்ந்ததென்றே சொல்ல அறிகிலேன்."

"நல்லதாய்த்தான் இருக்கும். உங்கள் முகத் தோற்றமே சொல்கிறது. சிரிப்பினை அடக்கப் பார்க்கிறீர்கள்."

"கேள்விப்படின், நீ சிரிக்கமாட்டாய்."

"ஏன் அப்படி? உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிற எதுவும் எனக்கு மகிழ்ச்சியளிக்காமற் போய் விடுமா?"

"ஒன்றினில் மட்டும் நம்மிடையே கருத்தொற்றுமை யில்லையென நினைக்கிறேன். இன்னும் விளங்கவில்லையா? ஹேரியட்..."

எம்மாவின் கன்னங்கள் சிவந்தன. யாதோ ஓர் அச்சம் அவளைப் பற்றியது.

அவர் தொடர்ந்தார்: "ஹேரியட் ராபர்ட்டை மணக்கப் போகிருள்."

எம்மா திடுக்கிட்டாள். அகலத் திறந்த கண்களோடு அவரை ஏறிட்டு நோக்கிஞள். 'இருக்கவே இருக்காது' எனச் சொல்லக் கருதிஞள். உதடுகள் பிரிய மறுத்தன.

"உண்மைதான். ராபர்ட்டே என்னிடம் கூறிஞன். அவன் சென்று, அரைமணி நேரங்கூடக் கழிந்திலது."

"ஹேரியட் ராபர்ட்டை ஏற்றுக்கொண்டாள் என்ரு சொல்கிறீர்கள்? தம்மை மணக்குமாறு அவர் அவளை மறுபடியும் கேட்டாரா? ஒருகால், கேட்கக் கருதியிருப்பார். கேட்டுவிட்டாரென்று நீங்கள் நினைத்திருப்பீர்கள்."

"இல்லை. அவனுங் கேட்டான். அவளும் இணங்கிஞள்."

"அட கடவுளே! எனக்கு விளங்கும்படியாய்ச் சொல்லுங்கள். எவ்வாறு? எங்கே? எப்போது? எல்லாவற்றையும் சொல்லுங்கள்."

"மிகச் சிறிய கதைதான். அவன் மூன்று நாட்களுக்கு முன் லண்டனுக்குச் சென்ருன். என் தம்பியிடம் சேர்க்குமாறு அவனிடம் சில தாள்களைக் கொடுத்தனுப்பினேன். என் தம்பியை அலுவலகத்திற்கண்டு, அவன் அவற்றைக் கொடுத்தான். அன்று மாலையில் ஓரிடத்தில் நிகழ்ந்த விருந்திற்குத் தன்ஞேடு வருமாறு என் தம்பி அழைத்தான். விளைவாய் என் தம்பி, உன் தமக்கை, சிறுவர்கள், ஹேரியட் ஆகியோருடன் ராபர்ட்டும் சென்ருன். மறுநாள் என் தம்பி அவனை உண்ணவருமாறு வீட்டிற்கழைத்தான். அவனுஞ் சென்ருன். ஹேரியட்டிடம் தனியே பேசுதற்கு வாய்ப்புப் பெற்ருன். பேச்சுப் பலனற்றுப் போகவில்லை. அவள் ஏற்றதால் அவன் களிப்புற்ருன். நேற்றிரவு ஊருக்குத் திரும்பிஞன். இன்று காலையில் என்னைக் கண்டு, முதலில் என்வேலை முடிந்ததனையும், பிறகு தன் வேலை முடிந்ததனையும் எடுத்துரைத்தான். இவ்வளவே."

அவர் நிறுத்திஞர். உடனே விடையேதுஞ் சொல்வதற்குக்கூட எம்மா தன் நாவினை நம்பிஞளல்லள். நெடுநேரத்துக்குப் பின்னரே வாய்திறந்தாள்: "எனக்கு மெத்த மகிழ்ச்சி. அவர்கள் இன்புற்றுவாழவே, மனமார விரும்புகிறேன்."

"முன்ஞெருமுறை இதுபற்றி நாம் பேசிஞேமே! அதற்குப்பின் நீ மிகவும் மாறிவிட்டாய்."

"அப்படியே யிருக்குமாக. அப்போது நான் அறிவிலி."

அவர்களது உரையாடல் ஹென்றியின் வருகையால் தடைப்பட்டது. எம்மா கவலைப்பட்டிலள்; தனிமையையே நாடிஞள். நாள்தோறும் ரண்டால் மாளிகைக்குச் செல்வது இப்போது தந்தைக்கும் மகளுக்கும் வழக்கமாயிற்று. மகளை அழைத்துச் செல்லவே அவர் போந்தார். ஜார்ஜிடமிருந்து உடனே விடைபெற்றுச் செல்வதற்கு எம்மா நல்வாய்ப்புப் பெற்ருள்.

அவளது உள்ளத்தே களிப்பும், நன்றியும் நிறைந்தன. அவளுக்கிருந்த ஒரே வருத்தம்—

தடை—இவ்வாறு நீங்கிவிட்டது. இனிக் களிப்பிற்கு எல்லையுண்டோ? இருவரும் ரண்டாலை யடைந்தனர். அன்று தனியாகவே யிருந்தாள். ஆயின் குழந்தையைப் பற்றிச் சிறிது பேசுதற்குள்ளாகவே, ஃபிராங்கும் ஜேனும் அவ்வறையினுட் புகுந்தனர். அவன் அன்று காலையில்தான் ஊர் திரும்பினான். அவள் ஒரு கிழமையாகவே அம்மாளிகையில்தான் தங்கி வந்தாள்.

"எம்மா! உனக்கு நன்றி. சித்தியின் கடிதமொன்றின் வாயிலாய் நீ என்னை மன்னித்ததாய் அறிந்தேன்" என்றான் அவன்.

"உங்களைப் பார்ப்பதில் மகிழ்ச்சி. நேரில் என் வாழ்த்தினைத் தெரிவிக்கவே விரும்புகிறேன்" என்றாள் எம்மா.

இருவரும் நெடுநேரம்வரை, கழிந்தகாலக் குழப்பங்களைக் குறித்துப் பகடிபேசி மகிழ்ந்தனர். அங்கிருந்து புறப்பட்டபோது, எம்மா ஃபிராங்கையும் ஜார்ஜையும் ஒப்பிட்டு நினைக்க முற்பட்டது இயல்பேயன்றோ! ஜார்ஜின் தலைசிறந்த பண்பு நலனை எம்மா அப்போதுதான் உணர்ந்தாள்.

சில நாட்களுக்குப்பின் லண்டன் குழுவினர் வந்து சேர்ந்தனர். தனியே பேச வாய்ப்புக் கிட்டியவுடனேயே, எம்மா ஹேரியட்டுடன் ஒருமணிநேரம் உரையாடினாள். ஹேரியட்டின் உள்ளத்தே ஜார்ஜ் முன்பு பெற்றிருந்த இடத்தை, இப்போது ராபர்ட் முற்றிலும் பறித்துக் கொண்டதனை யறிந்து எம்மா மனநிறைவெய்தினாள். ஹேரியட் எப்போதுமே ராபர்ட்டைத்தான் விரும்பினாள். அவனும் அவள்

மீது கொண்ட காதலைக் கைவிடாமற்போகவே, அவள் மறுத்துப் பேசுதற்கே இடமில்லாமற் போயிற்று. இவ்வுண்மைகளை எம்மா உணர்ந்தாள்.

ஹேரியட்டின் பெற்றோர் யாவர் என்பதும் விரைவிலேயே தெரிய வந்தது. அவள் தந்தை ஒரு வணிகர். தம் மகளை ஒரு குறையுமின்றி விடுதியில் விட்டு வைக்குமளவு அவர் செல்வமுடையவர். தம் புறவொழுக்கத்தால் அவள் பிறந்தவள் என்பதனை மறைத்து வைக்குமளவு நல்லியல்புடையவர். சீ! எம்மா ஜார்ஜுக்கு—ஒருகாலத்தில் எல்டனுக்குந்தான்—எத்தகைய மனைவியைக் கட்டிவைக்கத் திட்டமிட்டாள்! குடிப்பெருமையாலோ, செல்வத்தாலோ கழுவப்பட முடியாதநிலையில், ஹேரியட்டின் கள்ளப்பிறப்பு (அவ்விருவரைப் பொறுத்தவரை) கறையாகத்தானே விளங்கியிருக்கும்!

ஹேரியட்டின் தந்தை அவளது திருமணத்துக்குத் தடையேதும் விதித்தாரல்லர். இப்போது ஹார்ட்ஃபீல்டுக்குள் புகுதற்கு உரிமைபெற்றான், ராபர்ட். அவனோடு பழகியபோதுதான், அவனது சிறப்புத் தன்னருமைத் தோழிக்குப் பல்லாற்றானும் பொருந்துவதே என்று எம்மா உளமார உணர்ந்தாள்.

ராபர்ட்டின் குடும்பத்தோடு உறவாட நேர்ந்தமையால் ஹேரியட் முன்போல ஹார்ட்ஃபீல்டுக்கு அடிக்கடி வருவதில்லை. எம்மாவும் அதுபற்றி வருந்தியவளல்லள்.

செப்டம்பர் கழிவதற்குள், எம்மா மணப்பெண்ணின் தோழியாய்த் தேவாலயத்துள் புகுந்

ஜார்ஜ் எம்மாவின் கைத்தலம் பற்றினான்

தாள். எல்டான் சடங்குகளை நிகழ்த்துவிக்க, ராபர்ட் ஹேரியட்டின் கைத்தலம் பற்றினான்.

ஜேன் இதற்குமுன்பே ஹைபரியினின்று சென்று விட்டாள். கர்னலின் குடும்பத்தோடு லண்டனில் வாழ்ந்து வந்தாள். சர்ச்சில் குடும்பமும் அந் நகரிலேயே வதிந்தது; நவம்பர்த் திங்கள் தொடங்குதற்கே காத்திருந்தது.

இடைப்பட்ட திங்களையே—அக்டோபரையே—எம்மாவும் ஜார்ஜும் தங்கள் திருமணத்துக்குத் தெரிந்தெடுத்தனர். அத் திங்களில்தானே ஜானும் இசபெல்லாவும் ஹார்ட்ஃபீல்டில் தங்கியிருப்பார்! ஹென்றியை எவ்வாறு இணங்கச் செய்வது! முதலில் இப்பேச்சினை யெடுத்தபோது அவர் பெரிதும் துன்புற்றார். ஆகவே அவர்கள் நம்பிக்கை யிழந்தனர். இரண்டாம்முறை இதுபற்றிக் குறிப்பிட்டபோது, அவர் அவ்வளவு துன்பமுற்றிலர். 'எப்படியும் நடந்தே தீரும்; தடுக்க இயலாது' என அவர் நினைக்கலானார். எனினும் வருத்தமுற்றவராகவே தோற்றமளித்தார். எம்மா 'தென்பு' இழந்தாள்.

இந்நிலையில் ஹைபரியில் நிகழ்ந்த ஒன்று காதலர்க்கு உதவிற்று. அன்னாவின் கோழிப் பண்ணையிலிருந்த வான்கோழிகள் எல்லாம் ஓரிரவு திடீரென மறைந்தன. எவனோ ஒருவனது கைவரிசை யென்பது விளங்கிற்று. சுற்றுப்புறத்துக் கோழிப்பண்ணைகளும் இவ்வாறே இழப்பு எய்தின. இத்தகைய சிறு திருட்டுக்களைக் கூடக் கன்னக்கோலிடுதலாகவே கருதி அஞ்சும் இயல்பினர், ஹென்றி. தம் மருமக்கள் இருவரின் வலிமையையும் அறிவையுமே அவர்

நம்பினார். ஆயின் ஜான் விரைவிலேயே லண்டனுக்குப் போய்விடுவாரே! பிறகு...?

இவ்வருத்தத்தின் விளைவாகவே, அவர் தம்மகள் எதிர்பார்த்ததைவிடப் பெரிதும் மனமுவந்து, திருமணநாள் குறித்தற்கு இணங்கினார். ராபர்ட்—ஹேரியட் திருமணம் நிகழ்ந்து ஒரு திங்கள் கழிதற்குள்ளேயே எல்டான் எம்மாவையும் ஜார்ஜையும் இணைத்து வைத்தார்.

பகட்டினையோ, ஆரவாரத்தையோ நாடாத எத்திருமணத்தையும் போன்றே இத்திருமணமும் நிகழ்ந்தது. தன் கணவன் வாயிலாய் மண நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்த அகஸ்டா எல்லாமே புன்மையெனவும் தன் திருமணநிகழ்ச்சிகளைவிடப் பன்மடங்கு தாழ்ந்தவையெனவும் கருதினாள். இத்தகைய சிறு குறைகளிருந்தபோதிலும், திருமண நிகழ்ச்சியிற் கலந்து கொண்ட மிகச்சிலராய உண்மை நண்பர்கள் விரும்பியவாறே—நம்பியபடியே—மணமக்கள் கருத்தொருமித்த இன்பவாழ்வு நடாத்தினர்.

D111,3 L AU,E
3 1N66



11581

கழகப் புதிய

மொழிபெயர்ப்பு நூல்கள்

திரு. கு. பரமசிவன், எம். ஏ.

கருங்கணை (R. L. Stevenson's 'Black Arrow')	3	50
ஹக்கிள் பெரிஃபின் வீரச்செயல்கள் (Adventures of Huckleberry finn)	5	00
எம்மா (Emma)	5	00

திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிப்.

கருமணி மலர் (Alexander Dumas' 'Black Tulip')	4	50
வேக்பீல்டு பாதிரியார் (GoldSmith's 'Vicar of Wakefield')	5	00
தாயத்து (Sir Walter Scott's 'Talisman')	6	75
கடத்தப்பட்ட டேவிட் (R. L. Stevenson's 'Kidnapped')	5	50

திரு. மு. சதாசிவம், எம். ஏ.

எண்திசையும் சுற்றிவர எண்பது நாள் (Jules Verne's 'Around the World in Eighty Days')	6	75
எதிர்காலக் கனவுகள் (Charles Dickens' 'Great Expectations)	6	50

திரு. க. வ. முத்தையா, எம். ஏ.

டாம் மாமா குடில் (Harriet Beecher Stowe's 'Uncle Tom's Cabin')	3	50
டான் குவிக்சோட் (Cervants' 'Don Quixote')	3	50

திரு. என். கே. வேலன், பி. ஏ.

இருபெரு நகரங்கள் (Charles Dickens' 'A Tale of Two Cities'	4	00
சிந்துபாத் கடற்பயணம் (Sinbad the Sailor)	2	00